# G. C. E. A/L

மாதிரி வினாவிடை

[Model Paper]

GAQ. B.A., வெளிவாரி மாணவர்களுக்கும்
பயன்படக் கூடியமுறையில் எழுதப்பட்டுள்ளது.

# இந்து நாகரீகம்

## HINDU CIVILIZATION

ஏ. என். கிருஷ்ணவேணி
B. A. (Hons); M. A; M. Phil

730

New Becon வெளியீடு

(1) வேதப் பாடல்கள் கூறும் சமய நிலையையும் சிந்துவெளியில் அகழ்ந் தெடுக்கப்பட்ட புதைபொருட்கள் சுட்டுவதாகக் கூறப்படும் சமய நிலையையும் ஒப்பிட்டாராய்க.

பண்டைய இந்துமதம்பற்றிய கருத்துக்களை அறிந்துகொள்வதற்கு எமக்குக் கிடைக்கின்ற மிகப் பழைய இலக்கிய ஆதாரங்கள் வேதங்களாகும். வேதங்கள் இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நாலுவகைப்படும். இவ்வேதங்களில் இருக்குவேதம் பாடல்களிலானது. இருக்குவேதப் பாடல் களில் பெரும்பாலானவை அக்கால மக்கள் வழிபட்டு வந்த கடவுளர்களைப் புகழ்ந்துபாடும் பாடல்களாக உள்ளன. இப்பாடல்களை அடிப்படையாகக் கொண்டு அக்கால சமயநிலை, வழிபாட்டு முறைகள் பற்றித் தெளிவாகக் அறிந்துகொள்ளமுடிகிறது. வேதகாலத்திற்கு முற்பட்ட காலப்பகுதி சிந்து வெளி நாகரீகக் காலப்பகுதியாகும். சிந்துவெளி என்றுகூறும்போது அது மொஹஞ்சதாரோ, ஹரப்பா என்ற இரண்டு பிரதேசங்களையும் உள் ளடக்கியதாகும். இப்பிரதேசங்களில் இடம்பெற்ற அகழ்வாராய்ச்சிகளின் மூலம் வெளிப்பட்ட புதைபொருட் சான்றுகளை அடிப்படையாகக்கொண்டே அக்கால சமயநிலை பற்றி ஓரளவிற்கு அறிந்துகொள்ள முடிகிறது. இத்தொல் பொருட் சான்றுகளைத் தவிர வேறு தெளிவான இலக்கிய ஆதாரங்கள் கிடைக்காத காரணத்தினலும், சிந்துவெளி எழுத்தாதாரங்கள் வாசிக்கப் படாத காரணத்தினலும் அக்கால சமய நிலைபற்றித் திட்டவட்டமாக அறிந்து கொள்ள முடியவில்லை. இதனுல் சிந்துவெளி ஒரு வரலாற்றுக்கு முற்பட்ட காலமாகக் கருதப்படுகிறது. வேதப்பாடல்களை அடிப்படையாகக் கொண்டு அக்கால சமய நிலைபற்றித் திட்டவட்டமாக அறிந்துகொள்ள முடிகிறது. சிந்துவெளித் தொல்பொருட்களைத் துணைக்கொண்டு அக்கால சமயநிலைபற்றி முடிவான கருத்துக்களைத் தெரிவிக்க முடியாதுள்ளது.

வேதகாலப் பகுதியில் இயற்கை வழிபாடு இடம்பெற்றமையை வேதப் பாடல்கள் சுட்டிநிற்கின்றன. உலகில் இயல்பாகவே இடம்பெறும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் காரணமாக ஒவ்வொரு சக்தி உண்டென நம்பினர். இடி, முழக்கம், மழை, மின்னல், காற்று, நீர், நெருப்பு போன்றவற்றுக்கு ஒவ்வொரு காரணம் உண்டெனக் கருதினர். இடி, முழக்கம், மழைபோன்ற இயற்கை நிகழ்ச்சிகளுக்குப் பயந்த மக்கள் அவற்றைப் போற்றுவதன் மூல மாக, அவை விளைவிக்கும் துன்பங்களினின்றும் விடுபடமுடியுமென நம்பினர். தம்மால் கட்டுப்படுத்த முடியாத, தமக்கு அப்பாற்பட்ட இவ்வியற்கைச்சக்தி களை இயற்கைச் சக்திகளாகவே போற்றினர். காலப்போக்கில் இயற்கைச் சக்திகளுக்குத் தெய்வீகத் தன்மையைக் கொடுத்து அவை ஒவ்வொன்றையும் ஒவ்வொரு கடவுளராக உருவகித்து வழிபட்டனர். இவ்வாறு வேதகால மக்களினுல் உருவகிக்கப்பட்ட கடவுளர்கள் முப்பத்துமூன்றாகும். வேதகால சமய நிலையை விளக்க எழுந்த விமர்சகர்கள் யாஸ்கரைப் பின்பற்றி இருக்குவேதக் கடவுளர்களை விண்ணைச் சார்ந்த தெய்வங்கள், மண்ணைச் சார்ந்த தெய்வங்கள், விண்ணுக்கும் மண்ணுக்கும் இடைப்பட்ட இடைவெளி யைச் சார்ந்த தெய்வங்கள் என மூன்றுவகையாகப் பிரித்துள்ளனர். விண் ணுக்குரிய தெய்வங்களாக வருணன், சூரியன், சவிதாபூஷன், ஆதித்தன்,

தியௌ, மித்திரன், விஷ்ணு, உஷை, ராத்திரி போன்ற தெய்வங்கள் கூறப் பட்டுள்ளன. மண்ணுக்குரிய தெய்வங்களாக பிருதுவி, அக்கினி, பிருகஸ்பதி, சோமன் போன்றனவும், சிந்து, வியாட் சதுத்ரீ, சரஸ்வதி போன்ற நதிகளும் கூறப்பட்டுள்ளன. இடைவெளியைச் சார்ந்த தெய்வங்களாக இந்திரன், உருத்திரன், வாயு, பர்ஜன்யன், அப்பு எனப்படும் நீர்த்தெய்வம் போன்றன கூறப்பட்டுள்ளன. இயற்கைப் பொருட்கள் தெய்வங்களாக மாறும் நிலையை இருக்குவேதப் பாடல்கள் விளக்குகின்றன. சிந்துவெளித் தொல்பொருட்களை அடிப்படையாகக் கொண்டு அங்கு சிவவழிபாடு, இலிங்க வழிபாடு, நந்தி வழிபாடு, தரைப்பெண் வணக்கம் போன்ற பல்வேறு வழிபாடுகள் இடம் பெற்றதாக அறியமுடிகிறது. தொல்பொருட் சான்றுகளில் குறிப்பிடத்தக்கவை இலச்சினைகளாகும். அவற்றிற் காணப்பட்ட பசுபதி, நடராஜர் போன்ற உருவப் பொறிப்புகள் அக்கால உருவவழிபாட்டிற்குரிய ஆதாரங்களாகும். விலங்குகள் சூழவுள்ள கொம்புடைய தெய்வவடிவம் பசுபதி என்று கருதப்படுகிறது. இடதுகாலைத் தூக்கி ஆடும் பாவனையில் இலச்சினைகளிற் பொறிக்கப்பட்ட உருவம் நடராஜர் என்று கருதப்படுகிறது. இருக்குவேத காலப்பகுதியில் இயற்கை வழிபாடு இடம்பெற்றமையையும், சிந்துவெளியில் உருவ வழிபாடு இடம்பெற்றதாகக் கருதப்படுவதையும் நோக்குமிடத்து இவ்விருகால சமய நிலைக்கிடையேயுள்ள வேறுபாட்டினை அறிந்து கொள்ளலாம்.

இருக்குவேதகால மக்கள் பல கடவுளர்களை வழிபட்டாலும் அங்கு அடிப்படையாக நிலவியது ஒருகடவுட் கொள்கை என்பதை அறியலாம். இருக்கு வேதத்தில் 'உள்ள பொருள் ஒன்று அதனை அறிஞர்கள் பலவாறாகக் கூறுவர்'' என்ற கருத்து எல்லாவற்றுக்கும் அடிப்படையாக உள்ள சக்தி ஒன்றுதான், ஆனால் அறிஞர்கள் அதனையே இந்திரன், அக்கினி, வருணன், விஷ்ணு, உருத்திரன் என்று பல்வேறு பெயர்களினால் அழைக்கின்றார்கள் என்ற கருத்தைத் தெளிவுபடுத்து கிறது. எனவே இருக்குவேதம் முப்பத்துமூன்று பெயர்கள் பற்றிக் கூறினும் அவை ஒரு கடவுளுக்கமைந்த பலபெயர்களே என்று கூறலாம். 'பலவற்றுள் வலிமைவாய்ந்தது ஒன்று' என்ற கூற்றும் வேதகால ஒரு கடவுட் கொள்கையை உணர்த்தி நிற்கிறது. சிந்துவெளியில் சிவன், இலிங்கம், நந்தி, தரைப்பெண் போன்ற பல வழிபாடுகள் இடம்பெற்றதாகக் கருதுவதற்கு புதைபொருட்கள் ஆதாரங்களாக உள்ளன. ஆனால் அவர்கள் ஒரு கடவுட் கொள்கையுடையவர்கள் என்று கூறுவதற்கு ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

வேதகால மக்களது சமயத்தில் யாகக் கிரியைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இயற்கைத் தெய்வங்களுக்கு ஏதாவது பொருளைக் கொடுத்து அவற்றைத் திருப்திப் படுத்தினால் அவை தமக்கு ஊறுவிளைவிக்காது நன்மையைத் தரலாமென நம்பினர். நம்பிக்கையின் அடிப்படையில் அக்கினியை வளர்த்து ஆகுதிப் பொருட்களைச் சொரிந்து, தெய்வங்களின் பெயர்களைக் கூவியழைத்து "நான் உனக்கு நெய், பால் முதலிய ஆகுதிப் பொருட்களைத் தருகின்றேன், நீ எனக்கு செல்வங்கள், வீரர்களான புத்திரர்கள், பசுக்கள், மழை, நீண்ட ஆயுளைத்தா" எனக்கேட்டு வழிபாடு செய்தனர். மந்திரங்களை உச்சரித்து, இக்கிரியைகளைச் செய்து கடவுளர்களை வழிபட்டனர். சிந்துவெளி மக்கள் யாகக் கிரியைகளைச் செய்து வழிபட்டமைக்கு ஆதாரங்கள் கிடைக்கவில்லை, இவர்கள் உருவவழிபாடு

உடையவர்கள் ஆகையினால் கோவில் வழிபாடும் இடம்பெற்றிருக்கலாம் என்றே கருத இடமுண்டு. ஆனால் சிந்துவெளி அகழ்வாராய்வின்போது வெளிப்படுத்தப்பட்ட கட்டிட அழிபாடுகளில் எந்தஒரு கட்டிடமாவது கோவில் கட்டிடம் எனக் கருதக் கூடியவகையிற் கிடைக்கவில்லை. இந்நிலையில் கோவில் வழிபாடு இடம்பெற்ற தெனக் கூறமுடியாது. அத்துடன்ஆதாரங்கள் எதுவும் கிடைக்கவில்லை என்ற காரணத்திற்காக கோவில் வழிபாடே இருக்கவில்லை என்று கூறவும் முடியாது. கிடைக்கின்ற உருவவழிபாட்டு ஆதாரங்களை நோக்கும்போது கோவில் வழிபாடும் இடம்பெற்றிருக்கலாம் எனக் கருதமுடிகிறது. சிந்துவெளி மக்கள் பலிகொடுத்து வணங்கும் வழக்கங்களையும், பல்வேறு பூசைப்பொருட்களைப் படைத்து வணங்கும் வழக்கங்களையும் உடையவர்கள் என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. இலச்சினை ஒன்றில் ஒருவன் கையில் வாளேந்தி நிற்பதுபோலவும், அவனுக்கு அடியில் ஒருபெண் முழங்காற்படியிட்டு இருப்பதுபோலவும் உருவம் ஒன்று காணப்படுகிறது. இது அக்காலப்பகுதியில் நரபலிகொடுத்து வணங்கும் வழக்கத்தைக் குறித்து நிற்பதாகக் கருதப்படுகிறது. கடவுள் உருவங்களின் முன் உணவுப் பொருட்களையும், பிறவற்றையும் படைத்தல் அக்கால மக்களின் பழக்கமாக இருந்தது. சில முத்திரைகளில் பெண்கள் பலர் படைக்குந் தட்டுக்களை ஏந்தி நிற்பதாகச் சித்திரம் தீட்டப்பட்டுள்ளது என்று - என்பவர் என்ற நூலில் கூறியுள்ளார். அகழ்வாராய்ச்சிகளின் போது தண்டின்மீது பொருத்தப்பட்ட தட்டுக்கள் பல கிடைத்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வாறு சிந்துவெளி மக்கள் பலிகொடுத்தும், பல பொருட்களைப் படைத்தும் வணங்கும் வழக்கங்களை உடையவர்களாக இருந்திருக்கலாம் எனக் கருதமுடிகிறது.

வேதகால மக்களது சமயத்தில் இலிங்க வழிபாடு இடம்பெற வில்லை. சிந்துவெளி மக்கள் இலிங்க வழிபாடுடையவர்கள் என்பதை அறிவதற்கு அங்கு கண்டெடுக்கப்பட்ட இலிங்க வடிவுடைய கற்கள் சில ஆதாரங்களாகக் கருதப்படுகின்றன. இருக்குவேதத்தில் 'தாசர்கள் இலிங்கயோனி வழிபாடுடையவர்கள்' என்ற குறிப்புண்டு. தாசர்கள் என்றால் அடிமைகள் என்பது கருத்தாகும். இருக்குவேத ஆரிய மக்கள் சிந்துவெளி மக்களை தாசர்கள் என்று அழைத்திருக்கலாம். எனவே சிந்துவெளி மக்கள் இலிங்க வழிபாடுடையவர்கள் என்பதைத் திட்டவட்டமாக அறிந்துகொள்ள முடிகிறது.

வேதகால சமயத்தில் உருத்திரன் என்ற தெய்வம் விண்ணுக்கும் மண்ணுக்கும் இடைப்பட்ட தெய்வமாகக் கூறப்படுகிறான். இவன், வழிபடும் மக்களின் துன்பங்களை நீக்குபவன் என்பதனால் மங்களகரமானவன் என்ற பெயரினைப் பெறுகிறான். மங்களகரமானவன் என்பதனால் 'சிவன்' என்ற அடைமொழியையும் பெறுகிறான். சிவன் என்ற பெயரே பின் முக்கியத்துவம் பெறுகிறது. சிந்துவெளி சமயநிலையும் சைவத்தோடு தொடர்புடையதாக கூறப்படுகிறது. கொம்புடைய தெய்வ வடிவம் பொறிக்கப்பட்ட முத்திரைகளை ஆதாரமாகக் கொண்டு சேர் ஜோன்மார்ஷல் சிந்துவெளியில் சிவ வழிபாடு இடம்பெற்றதெனக் கூறினார். சிந்துவெளியில் தரைப்பெண் வணக்கம் இடம்பெற்றதாகக் கருதப்படுகிறது. இருக்குவேதத்தின் உஷ, பார்வதி, இராத்திரி போன்ற பெண் தெய்வங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இருக்குவேதத்தில் சிந்து, விபாட், சதத்ரீ போன்ற

நதிகள் மனுக்குரிய தெய்வங்களாகப் போற்றப்படுகின்றன. சிந்துவெளி முத்திரைகள் சிலவற்றில் ஆற்றோடு தொடர்புடைய முதலை, ஆமை, போன்ற வடிவங்கள் வாயில் சிறுபிள்ளைகளைக்கொண்டு இருப்பதுபோன்ற உருவங்கள் பொறிக்கப்பட்டிருப்பதை அவதானித்த அறிஞர்கள் சிந்துவெளியிலும் நதிவணக்கம் இடம்பெற்றிருக்கலாமெனக் கருதுகின்றனர்.

இவ்வாறு வேதகால சமயநிலைபற்றி வேதப் பாடல்களை ஆதாரமாகக் கொண்டு திட்டவட்டமான கருத்துக்களைக் கூறலாம். ஆனால் சிந்துவெளியிற் கிடைத்த புதைபொருட்களை ஆதாரமாகக் கொண்டு அங்கு இடம்பெற்ற சமயநிலை பற்றிய கருத்துக்களை ஊகங்களாகவேதெரிவிக்க முடிகிறது. வேதப் பாடல்கள் சுட்டும் சமயநிலைக்கும், சிந்துவெளித் தொல் பொருட்கள் சுட்டும் சமயநிலைக்குமிடையே குறிப்பிடத்தக்க வேற்றுமைகளும் சில ஒற்றுமைகளும் காணப்படுகின்றனவெனக் கூறலாம்.

(2) "உள்ள பொருள் ஒன்றே; அறிஞர் பலவாறுகக் கூறுவர்" என்றும் பொருள்தரும் இருக்குவேத வாக்கியம் இந்து சமயத்தினதும், தத்துவத் தினதும் தனிச் சிறப்பை எவ்வாறு சுட்டுகிறதென்பதை விளக்குக.

இந்துமதத்திற்கு முதல் நூல்களாகிய விளங்குபவை வேதங்களாகும். வேதம் என்ற சொல் 'வித்' என்ற வினையடியாகப் பிறந்தது. 'வித்' என்றால் அறிவு அல்லது அறிதல் எனப் பொருள்படும். எனவே வேதங்கள் அறிவுநூல்களா கும். அவை இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என நாலுவகைப்படும். இவற்றுள் காலத்தால் முற்பட்டதும், தனிச்சிறப்புடையதுமாகிய வேதம் இருக்கு வேதமாகும். இருக்கு வேதத்திலேயே 'உள்ள பொருள் ஒன்று; அறிஞர்கள் பலவாறுகக் கூறுவர்" என்ற கூற்று இடம்பெறுகிறது. அதாவது எல்லாவற்றுக்கும் அடிப்படையாக உள்ள சக்தி ஒன்று. அதனையே அறிஞர்கள் பல பெயர்களினால் அழைத்துப், பல கடவுளர்களாகக் கூறுகின்றனர் என்ற கருத்தை விளக்கி நிற்கிறது. எனவே இக்கூற்றை அடிப்படையாகக் கொண்டே இருக்குவேதகால சமயத்தின் சிறப்பியல்பை அறியமுடிகிறது. அத்துடன் இக்கூற்றை இருக்குவேத தத்துவத்தையும் எடுத்துக்காட்டுவதாயும் அமைகிறது. தத்துவம் என்றால் உண்மை என்பது கருத்து. உள்ளபொருள் ஒன்று எனக்கூறும் போது அது கடவுளையே குறித்து நிற்கிறது. எனவே கடவுள் பற்றிய தத்துவத்தை இக்கூற்றுத் தெளிவுபடுத்துவதாக உள்ளது. இந்துக்கள் ஒருகடவுட் கொள்கையுடையவர்கள் என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

புராதன இந்துமதம் பற்றிய கருத்துக்களை அறிந்துகொள்வதற்கு வேதங்கள் சிறந்த சான்றுகளாகவுள்ளது. இருக்குவேத கால மக்கள் இயற்கை வழிபாடுடையவர்கள். இயற்கைச் சக்திகளுக்குத் தெய்வீகத்தன்மை கொடுத்து அவற்றைக் கடவுள்களாக வழிபட்டனர். இந்திரன், வருணன், அக்கினி, ஜமன், பூஷன், சவிதா, உஷை, ராத்திரி, பிருஹஸ்பதி, பிரஜாபதி போன்ற பல கடவுள்களை வணங்கினமையைக் காணலாம். இவ்வாறு பல கடவுள்கள் கூறப் பட்டாலும் அங்கு ஒரு கடவுட் கொள்கையே இடம்பெறுவதனைக் காணலாம். 'உள்ளபொருள் ஒன்று; அறிஞர்கள் பலவாறுகக் கூறுவர்' என்ற கூற்று எல்லா வற்றிற்கும் அடிப்படையாக உள்ள சக்தி ஒன்று, ஆனால் அதனையே அறிஞர்கள் இந்திரன், வருணன், அக்கினி போன்ற பல்வேறு பெயர்களினால் அழைக்கின்றனர் என்ற கருத்தைத் தெளிவுபடுத்துகிறது.

வேதகால மக்கள் பல்வேறு கடவுள்களை வழிபட்டாலும் சந்தர்ப்பத்துக்கேற்ற வகையில் ஒரு கடவுளுக்கே முதன்மை கொடுப்பதைக் காணலாம். இந்திரனை வழிபடும்போது இந்திரனைப் பரம்பொருளாகக் கருதி வழிபடுவர். பின்னர் வருணனை வழிபடும்போது வருணனைப் பரம்பொருளாகக் கருதி வழிபடுவர். எச்சந்தர்ப்பத்தில் எக்கடவுளை வணங்குகிறார்களோ அக்கடவுளையே உயர்ந்த கடவுளாகக் கருதி வழிபடும் இயல்புடையவர்கள். இக்கடவுள் கொள்கையினை என்ற அறிஞர் என்ற பெயரினால் அழைக்கின்றார். என்றால் முதன்மைக்கொள்கை என்பது கருத்து. சந்தர்ப்பத்தைப் பொறுத்து வணங்கும் கடவுளுக்கு முதன்மை கொடுப்பவர்கள் இந்துக்கள் என்பதை அறியலாம். தற்கால வழிபாட்டை எடுத்துக் கொண்டாலும் சிவனை வணங்கும் சந்தர்ப்பத்தில் சிவனை மேலான தெய்வமாகக் கருதி வணங்கும் இந்துக்கள், விஷ்ணுவை வணங்கும்போது அதனைப் பரம்பொருளாகக் கருதி வழிபடும் இயல்புடையவர்கள். இந்துக்கள் ஒருகடவுட் கொள்கையுடையவர்கள் என்ற காரணத்தினாலே எவ்வடிவத்திலும் பரம்பொருளைக் கண்டு வணங்கும் ஆற்றலுடையவர்களாக விளங்குகின்றனர். இத்தகைய இந்துக்களது, ஒருகடவுட் பண்பினையே 'உள்ள பொருள் ஒன்று; அறிஞர்கள் பலவாறாகக் கூறுவர்' என்ற கூற்று உணர்த்துவதாக உள்ளது.

தத்துவம் என்றால் உண்மையெனப் பொருள்படும். உள்ள பொருள் ஒன்று; அறிஞர்கள் பலவாறாகப் கூறுவர் என்ற கூற்று கடவுள் ஒருவர் என்பதையும் ஒரு கடவுள் உண்மையையும் வெளிப்படுத்துகிறது. இவ்வாறு இருக்குவேதம் தருகின்ற 'உள்ள பொருள் ஒன்று' என்ற கூற்றை உபநிடதம் தெளிவுபடுத்தும் போது 'உள்ள பொருள் ஒன்று அதுதான் பிரமம்' எனக் கூறுகிறது. உபநிடதங்கள் கடவுளையே பிரமமாகக் கூறுகின்றன. உபநிடதக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு தோற்றம்பெற்ற வேதாந்தக் கோட்பாடுகள் கடவுள்பற்றிய தத்துவக் கருத்துக்களுக்கு முதன்மை கொடுக்கின்றன. சைவசித்தாந்தமும் 'உள்பொருள் ஒன்று' என்ற கூற்றை மூலமாகக் கொண்டு, பதி ஒருவரே; அதற்கு வேறாக இன்னொரு இறைவன் இல்லை என்று கூறுகிறது. இவ்வாறு இருக்குவேதத்தில் இடம் பெறும் 'உள்ள பொருள் ஒன்றே; அறிஞர்கள் பலவாறாகக் கூறுவர்' என்ற வாக்கியம் தத்துவக் கருத்தின் சிறப்பியல்பையும் விளக்குவதாக உள்ளது.

(3) இந்துசமய அறிவை வளர்க்கப் புராணங்கள் உதவுமாற்றினை விளக்குக?

இந்துமத வரலாற்றில் புராண இலக்கியங்கள் மிகவும் குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கின்றன. புராணம் என்றால் மிகத் தொன்மைவாய்ந்தது என்பது கருத்தாகும். 'எது தோன்றுதொட்டு இன்றுவரை வரவி வருகிறதோ அதுவே புராணம்' என்று வாயு புராணம் கூறுகிறது. அதர்வவேத காலத்திலேயே புராணங்கள் சிறந்த இலக்கியங்களாகக் கருதப்பட்டுள்ளன. புராணம் எனும் சொல் உபநிடதங்களிலும் இடம்பெறுகின்றது. மகாபாரதத்தில் புராணங்களின் பெயர்கள் கூறப்பட்டுள்ளன. கி.மு. 4ம் நூற்றாண்டில் கௌடில்யரினால் இயற்றப்பட்ட அர்த்த சாத்திரம் எனும் நூலில் அரசகுமாரர்கள் கற்கவேண்டிய நூல்களுடன் புராணமும் ஒன்றாகக் கூறப்பட்டுள்ளது. வேத காலத்துக்கு முன்னரே புராணங்கள் பழைய கதைகளாக இருந்தனவேயன்றி அவை நூல்களாக இருக்கவில்லை. புராணங்கள், மகாபுராணங்கள், உபபுராணங்கள் என இருவகைப்படும். மகாபுராணங்கள் பதினெட்டு, உபபுராணங்களும் பதினெட்டாகும். மகா புராணங்கள் புத்தருடைய காலத்துக்கு முன்னரும், ஏனைய புராணங்கள் பிற்பட்ட காலத்திலும் தோற்றம் பெற்றவை என அறிஞர்கள் கூறுகின்றனர். இந்திய இலக்கியங்களை வேதங்கள், புராண இதிகாசங்கள் எனப்பிரிக்கலாம். வேத நூல்கள் ஒரு சாராருக்குரியனவாக இருந்தமையினால்; பெரும்பாலான மக்கள் இதிகாச புராணங்களையே படித்து வந்தனர். கிராமங்களில் புராண இதிகாசங்களுக்குப் பொருள்கூறப்பட்டு வந்தது. மக்கள் அவற்றைக் கேட்டு ஒழுக்கமும் கல்வியும் பெற்றுவந்தனர். புராணங்களும் இதிகாசங்களும் மக்களின் பொதுப் பண்பாட்டிற்கும் பெரிதும் துணைசெய்து வந்தன. வேத உபநிடதங்கள் அறிவு நிலையிலுள்ள மக்களினால் மட்டுமே புரிந்துகொள்ளக்கூடிய நூல்களாக விளங்கும் போது புராணங்கள் சாதாரண மக்களினாலும் புரிந்துகொள்ளக்கூடிய சமயக் கருத்துக்களைக் கொண்டனவாக விளங்குகின்றன. புராணங்கள் மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்ற நூல்களாக விளங்குவதனால் சமயவாதிகளும் சமயப் பிரசாரங்களை மேற்கொள்வதற்கும், சமய அறிவை மக்கள் மத்தியில் பரப்புவதற்கும் புராண நூல்களையே பெரிதும் பயன்படுத்துகின்றனர்.

புராணங்களில் மகாபுராணங்கள் மிகவும் சிறப்புடையன. இவை வடமொழியில் இயற்றப்பட்ட நூல்களாகும். மகாபுராணங்கள் குறிப்பிட்ட சமயச்சார்புடையவையல்ல. சிவன், விஷ்ணு முதலான கடவுளரை வழிபடலாம் என்றே கூறுகின்றன. இவை உலகத் தோற்றம், ஒடுக்கம், கடவுளரின் பரம்பரை வரலாறு, முனிவர்களது மரபு, அரச மரபு மனுவந்தரம் போன்ற பஞ்ச லட்சணங்களை விளக்குவனவாக உள்ளன. இயம நியம நிஷ்டைகள், விரத அநுஷ்டானங்கள், திருவிழாக்கள், புண்ணிய யாத்திரைகள், மூர்த்தி, தலம், தீர்த்தம் பற்றிய விளக்கங்கள், வழிபாட்டுக்குரிய மந்திரங்கள், கிரியைகளின் விளக்கங்களையும் கொண்டுள்ளன. இந்துமதத்தின் பல்வேறு சமயப் பிரிவுகளுக்குரிய கடவுளர்கள் பற்றியும், கடவுளர்க்குரிய அற்புதச் செயல்கள் பற்றியும் புராணங்கள் விரித்துக் கூறுகின்றன. சமயக் கிரியைகள் பற்றி அறிந்து கொள்வதற்குப் புராணங்களின் அறிவு அவசியமானதாகும். சிவபிரான் திருக்கோலம் கொள்ளும் வேளை சிவனுக்கெனச் சிறப்பாகப் பொருந்தியுள்ள உருவ உறுப்புக்களின் அமைப்புக்கள், அவன்புனையும் கோலங்கள் ஆகியனவெல்லாம் புராணங்களிலேயே விளக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. புராணங்கள் கொண்டுள்ள விடயங்களை நோக்கும்போது சமய அறிவைப் பரப்புவதற்குப் புராணங்களே பெரிதும் பயன்படும் நூல்களென்பதை அறிந்து கொள்ளலாம்.

மகாபுராணம் பிரமம், பதுமம், வைணவம், வாயு, பாகவதம், பவிஷ்யம், நாரதீயம், மார்க்கண்டேயம், ஆக்கினேயம், பிரம்மகைவர்த்தம், இலிங்கம், வராகம், வாமனம், கூர்மம், மச்சயம், கருடம், ஸ்கந்தம், பிரமாண்டம் என்பனவாகும். வாயு புராணம் வாயுதேவனால் அருளப்பட்டதாகவும், சிவ வழிபாட்டின் பெருமைகளைக் கூறுவதாகவும் உள்ளது. பாகவத புராணம் தேவிபாகவதம், விஷ்ணு பாகவதம் என இருவகைப்படும். தேவிபாகவதம் தேவியின் பெருமை, விரதங்கள், காயத்திரி கவசம், காயத்திரி சகஸ்ரநாமம் போன்றவற்றைக் கூறுகிறது. விஷ்ணுபாகவதம் விஷ்ணுவின் தசாவதாரங்கள் பற்றி பற்றிக் கூறுகின்றது. கிருஷ்ணாவதாரம் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. இலிங்க புராணத்தில் சிவனது இருபத்தெட்டுவகையான தோற்றங்கள், அபிஷேகங்களினால் உண்டாகும் பலன்கள், சிவ சகஸ்ரதாமம், சிவதீட்சை, பதி, பசு, பாசம் போன்றன பற்றிக் கூறுகிறது. ஸ்கந்தபுராணம் முருகக் கடவுளது தோற்றம், அற்புதச் செயல்கள், அசுரர்களைக் கொன்று தேவர்களைச் சிறைமீட்ட செய்திகளைக் கூறுகிறது. ஆக்கினேயபுராணம் அக்கினியைப் புகழ்ந்து கூறுகிறது, பவிஷ்யபுராணம் சூரியவழிபாடு பற்றிக் கூறுகிறது. பிரமபுராணம் சூரிய உற்பத்தி சூரிய அஷ்டோத்தரநாமம் பற்றிக் கூறுகிறது. பிரம்மகைவர்த்த புராணம் உலகம் முழுவதும் பிரமத்தின் தோற்றமே என்க் கூறுவதுடன் முதலாம் காண்டத்தில் பிரமன் உலகத்தைப் படைக்கும் விதம் பற்றிக் கூறுகிறது. மூன்றாம் காண்டம் கணேச காண்டம் எனப்படும். இது கணேசரின் பெருமைகளைக் கூறுகின்றது. இவ்வாறு புராணங்கள் இந்து சமயத்தின் அறுவகைச் சமயப் பிரிவுகளுக்குமாய கடவுளர்களின் பெருமைகளை விளக்கிக் கூறுவதாக உள்ளன.

பெரும்பாலான புராணங்கள் சிவனின் பெருமைகளையும், சிவவழிபாடு பற்றியும் கூறுவனவாக உள்ளன. புராணங்களில் சிவன் உயிர்களுக்கு நன்மைவிளைவிக்கும் சாந்த வடிவினனாகவும், தீயவர்களுக்குத் தீங்கு விளைவிக்கும் உக்கிரத்தோற்றம் உடையவனாகவும் சித்திரிக்கப்படுகின்றான். இவன் மூன்று கண்களை உடையவனாகையினால் முக்கண்ணன் என்று கூறப்படுகிறான். விரிசடையை உடை உடையவன் என்பதனால் சடாதரன், சடமௌலி என்று அழைக்கப்படுகிறான். சிவனது கழுத்து நீலநிறமுடையது. எனவே நீலகண்டன் என்று போற்றப்படுகிறான். சிவனது அட்டமூர்த்தங்களும் புராணங்களிற் கூறப்படுகின்றன. சிவன் உமையை ஒரு பாகத்திலுடையவன். எனவே மாதொருபாகன், அர்த்தநாரீஸ்வரன் போன்ற பெயர்களினால் அழைக்கப்படுகின்றான். அரக்கர்களை அழிப்பதற்காக உருவந் தாங்கிய வேளை, அவன் மேற்கொண்ட தோற்றங்கள் புராணங்களில் விளக்கப் படும்போது பிநாகம் எனும் வில்லும், ஆலப்படையும் இவனுக்குச் சிறப்பாக உரியன என்று கூறப்பட்டுள்ளது. இடபக் கொடியை உடையவனாகவும், ஐந் தொழில்களைப் புரிபவனாகவும் கூறப்படுகிறான். உருத்திரன், பவன், சர்வன், ஈசான், பசுபதி, மகாதேவன், அரன், சங்கரன், சம்பு, தேவதேவன் போன்ற பெயர்களினால் அழைக்கப்படுகின்றான். இவ்வாறு புராணங்கள் கூறும் கருத்துக்களின் அடிப்படையில் இந்துமதத்தில் விக்கிரக வழிபாடு தோற்றம் பெற்றது. மக்கள் மத்தியில் சமய அறிவை வளர்க்கும் வகையிலும், கிரியைகளின் பெருமைகளை உணர்த்தும் வகையிலும் புராணங்கள் அமைகின்றன.

வேதங்களில் வேள்விக் கிரியைகள் முக்கியத்துவம் பெற்றிருந்தன. உபநிடதங்கள் கிரியைகளைவிட அறிவுக்கே முதன்மை கொடுத்தன. புறச்சமயங்களும் வேள்விக்கு எதிர்ப் பிரசாரஞ் செய்தன. எனினும் வைதீக சமய உணர்ச்சி மக்கள் மனதில் ஆழப் பதிந்து வேரூன்றியதால் கிரியைகள் மக்கள் வாழ்வில் நிரந்தரமான இடத்தைப் பெற்றுள்ளன. இக்கிரியைகள் வேள்வி, தவம், தீர்த்தம், தோத்திரம், தியானம், விரதம், பூசை போன்றனவாகும் இவை புராணங்களில் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளன.

அசுவமேதம், இராஜசூயம், சோமயாகம் பற்றிய குறிப்புக்களை புராணங்களிற் காணலாம். எனினும் புராணங்கள் தவத்தையே சிறப்பித்துப் பேசுகின்றன. தவஞ்செய்து, இம்மை, மறுமை வீடிய இருவகை இன்பங்களைப் பெறமுடியும் என்பதைப் புராணங்கள் கூறுவதுடன், அவ்வாறு தவத்தின் மூலம் பல பேறு அநுபவித்தவர்களின் வரலாற்றையும் புராணங்கள் கூறுகின்றன. 'கலியுகத்தில் தவம் ஒன்றே என்னையடையச் சிறந்த வழி' என்று சிவன் கூறியதாகப் புராணம் கூறுகிறது. தீர்த்தங்களுக்கு யாத்திரை செய்து நீராடிப் பலனைப் பெறமுடியும் என்று கூறுகின்றன. தீர்த்தங்களிற் தலைசிறந்தது வாரணாசியாகும். தோத்திரங்களினால் இறைவனைப் புகழ்ந்துபாடும் மரபும் புராணங்களில் இடம்பெறுகிறது. சிவன், சக்தி, விஷ்ணுவுக்குரிய சகஸ்ர நாமங்கள் சிறப்புடையனவாகும். தனிச்சிறப்பு வாய்ந்த வழிபாட்டுமுறையாக தியானம் உள்ளமையைக் கூர்மபுராணம் கூறுகிறது. புராணங்கள் விரதங்கள், விரதங்களில் மேற்கொள்ள வேண்டிய நியமங்கள்; வழிபடவேண்டிய முறைபற்றிப் புராணங்கள் கூறுகின்றன. சாதாரண மக்களால் பின்பற்றப்படும் வழிபாட்டு முறையாகிய விரதம் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. கோயிலில் இடம்பெறும் பூசை, பூசைக்கு வேண்டிய பொருட்கள் பற்றியும் புராணங்கள் கூறுகின்றன.

இவ்வாறு புராண நூல்கள் சமயம், கடவுள், வழிபாடு, கிரியைகள் போன்ற அனைத்தையும் சாதாரண மக்கள் புரிந்துகொள்ளும் வகையிலும், அநுஷ்டிக்கத் தக்கவகையிலும் கூறும் நூல்களாக உள்ளன. எனவே, புராணங்கள் இந்து சமய அறிவை வளர்க்கப்பயன்படும் நூல்களாக உள்ளன.

(4) சங்ககால இலக்கியங்கள் தரும் சான்றுகளைத் துணைக்கொண்டு அக்காலத்தில் நிலவிய சமய மரபினை ஆராய்க? (1980 ஆகஸ்ட், 1985 ஆகஸ்ட்).

தமிழக வரலாற்றில் 'சங்ககாலம்' குறிப்பிடத்தக்க இடத்தினைப் பெறுகிறது. இது கி.மு. 1ம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 3ம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியைக் கொண்டுள்ளது. சங்ககால மக்களின் சமய மரபினையும், நாகரீகத்தையும் அறிவதற்கு சான்றாக உள்ள இலக்கியங்கள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டுப் போன்ற நூல்களாகும். அகநானூறு, புறநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை ஆகிய தொகை நூல்கள் எட்டாகும். திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் முதலியன பத்துப்பாட்டு நூல்களாகும். இந்நூல்களில் அகத்திணை மரபில் காதலும், புறத்திணைமரபில் போரும் வீரமும் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. எனவே சங்கநூல்களில் ஆங்காங்கே காணப்படும் சில தகவல்களின் அடிப்படையில் அக்கால சமயநிலையை அமைத்துக் கூறமுயற்சிக்கலாம். சங்ககாலத்திற்குச் சிறிது பிற்பட்ட காலத்தில் தோன்றியதாகக் கருதப்படும் தொல்காப்பியம், சிலப்பதிகாரம் முதலியனவும், சங்ககால சமயநிலையினை அறிவதில் எமக்குப் பெருந்துணை புரிகின்றன.

சங்ககால நாகரீகம் பற்றிய ஆராய்ந்த அறிஞர்கள் நாகரிகத்தின் அடிப்படையில் அதனை முற்பட்ட சங்ககாலம், பிற்பட்ட சங்ககாலம் என இருவகைப்படுத்தியுள்ளனர். அதாவது தனித்தன்மை வாய்ந்த திராவிடநாகரிகம் நிலவிய காலப்பகுதியை முற்பட்ட சங்ககாலம் எனவும், ஆரியத்திராவிட நாகரிகங்கள் இரண்டும் கலந்த காலப்பகுதியினைப் பிற்பட்ட சங்ககாலம் எனவும் கூறுகின்றனர். முற்பட்ட சங்ககாலப் பகுதியில் முருகன்,

கொற்றவை போன்ற தமிழ் மக்களுக்கேயுரிய தனிப்பெரும் கடவுளர்கள் வணங்கப்பட்டமையையும், பிற்பட்ட சங்ககாலத்தில் இந்திரன், வருணன், விஷ்ணு போன்ற ஆரியக்கடவுளர்களும் வணங்கப்பட்டமையை அவதானிக்கலாம்.

சங்ககால மக்களது சமய வழிபாட்டுமுறைகளைக் கவனிக்கும் பொழுது திட்டவட்டமான முறையில் அமையாது, தனிப்பட்ட வழிபாட்டு முறைகளையே அவர்கள் பிற்பற்றி இருந்தமையைக் கவனிக்கலாம். இக்காலத் தமிழகம் நில இயற்கைக்கேற்ப ஐம்பெரும் நிலப்பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டிருந்தமையைக் காணலாம். அவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பனவாகும். மலையும் மலைசார்ந்த இடமுமாகிய நிலம் குறிஞ்சி எனவும், காடும் காடுசார்ந்த பிரதேசமும் முல்லை எனவும், வயலும் வயல்சார்ந்த நிலமும் மருதம் எனவும், கடலும் கடல்சார்ந்த நிலமும் நெய்தல் எனவும், குறிஞ்சி முல்லை முதலிய செழிப்புள்ள நிலங்களுக்கிடையே பரந்து கிடந்த வறட்சி பொருந்திய பிரதேசம் பாலை நிலம் எனவும் அழைக்கப்பட்டது. இவ்வைந்து நிலங்களுக்கும் ஐந்து கடவுளர்கள் உள்ளனர் என்பதனை தொல்காப்பிய சூத்திரம் பின்வருமாறு கூறுகிறது.

மாயோன் மேய காடுறையுலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணலுலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும்படுமே.

அதாவது முல்லைக்கு மாயோனும், குறிஞ்சிக்கு முருகனும், நெய்தலுக்கு வருணனும், மருதத்திற்கு இந்திரனும் தெய்வங்களாக வணங்கப்பட்டனர். பாலைநிலத்திற்குரிய தெய்வமாக கொற்றவை வணங்கப்பட்டமையையும், சிவன் எந்த ஒரு நிலத்திற்குரிய தெய்வமாக வணங்கப்படவில்லை என்பதையும் சங்க இலக்கியங்கள் எடுத்துக் காட்டுகின்றன.

சங்க நூல்களிற் கூறப்படும் கடவுளர்களில் முருகன் கொற்றவை போன்ற கடவுளர்கள் பற்றிய கருத்துக்கள் மிகுதியாக இடம் பெறுகின்றன. இக்கடவுளர்களோடு தமிழ்மக்களுக்கேயுரிய ஆடல்பாடல் களோடு கூடிய வழிபாட்டுமுறைகளான வெறியாட்டம், குரவைக் கூத்து, துணங்கைக் கூத்துப் போன்றனவும் கூறப்பட்டிருப்பதனைக் காணலாம்.

முருக வழிபாடு கூறப்படும் இடங்களில் எல்லாம் வெறியாட்டு விழா பற்றிய குறிப்புக்களும் காணப்படுகின்றன. இவ்வெறியாட்டு மரபினை மதுரைக்காஞ்சி நன்கு விளக்குகிறது.

"ஆடுவதன் மூலம் அரிய அச்சத்தை உண்டுபண்ணும் வேலவன் தனக்கேற்பட்ட துன்பம் முருகக் கடவுளால் வந்தது எனக் கூறித் தன்னைச் சூழ நின்றோரைச் சுற்றி வேலவன் வெறியாடுவான். அப்போது இனிய வாத்தியங்கள் இசைக்கப்படும். வேலவன் முருகக் கடவுளைத் தன் மனக்கண்முன் நிறுத்தி ஆடுவான். அப்பொழுது பெண்கள் குன்றுகள் தோறும் நின்று குரவைக்கூத்தை ஆடுவர்"

இவ்வாறு வெறியாடுபவன் கையிலே வேலேந்தி ஆடுவதன் காரணமாக வேலவன் என்று அழைக்கப்பட்டான். இவ்வழிபாடுகளில் பிராமணர்கள் அல்லது பூசாரி கள் இல்லை. இங்கு வழிபடுவோர் தம்மில் யாராவது ஒருவரில் இறைவன் தோன்றி அருள்பாலிப்பான் என நம்பினர். குறிஞ்சிநிலக் கடவுளாகிய முருகனே மக்களின் உள்ளத்தை மிகவும் கொள்ளைகொண்டவனுவான். முருகன் போரிற் சிறந்த திராவிடத் தெய்வமாகப் போற்றப்படுகிறுன். 'போரை வெல்ல வல்ல முருகன்' என மலைபடுகடாம் கூறுகிறது. வெற்றித் தெய்வமாகிய கொற்றவை அவனுடைய தாய் என்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றன. முருகனுக்குரிய கோயில்கள் பற்றி புறநானூறு, திருமுரு காற்றுப்படை, அகநானூறு போன்ற நூல்கள் கூறுகின்றன.

பாலை நிலத்திற்குரிய கொற்றவையும் வெறியாட்டுடன் வணங்கப்பட்டதாக சங்க இலக்கியங்களிலிருந்து அறியமுடிகிறது. இவளும் முருகனைப்போன்று திராவிட மக்களது வெற்றித் தெய்வமாகக் கூறப்படு கிறது. போருக்குத் தலைவனை செல்லவிடுத்த தலைவியின் தோழிமார்

தலைவன் வெற்றியுடன் திரும்ப வேண்டுமென்று வெற்றித் தெய்வமாகிய கொற்றவையை வணங்கினர் என்று குறிப்புண்டு.

பழந்தமிழ் மக்களது தனித்தன்மை வாய்ந்த வழிபாட்டு முறைகளில் குறிப்பிடத்தக்கது நடுகல்வழிபாடாகும். போர்க்களத்தில் வீரத்தோடு போர்புரிந்து உயிர்நீத்த வீரர்களைப் போற்றும் முகமாக இவ்வழிபாடு தோற்றம் பெற்றது. போரில் வீழ்ந்த வீரரைக் கல்லில் அமைத்து வழிபடும் வழக்கமே நடுகல்வழிபாடாகும். வீரரின் நினைவுக்காகக் கற்கள் நிறுத்தப்பட்டு அவற்றின் அருகில் கேடயங்களும், ஈட்டிகளும் வைக்கப்பட்டன. என்று பட்டினப்பாலை கூறுகின்றது. தொல்காப்பியம் நடுகல் வழிபாடு பற்றி கூறும்போது,

காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்தகு சிறப்பில் பெரும்படை வாழ்த்தலென்று
இருமூன்று வகையிற் கல்

என்கிறது. அதாவது கல்லைத் தெரிந்தெடுத்து அக்கல்லிலே ஓர் உருவம் செதுக்கப்படும். பின் நன்றிமித்தம் பார்த்து, அக்கல்லை நீராட்டி ஏற்ற இடத்தில் நடுவர். இக்கற் தெய்வங்களை வழிபடுவது பற்றி சங்க நூல்கள் கூறுகின்றன.

நெய்தல் நிலமக்கள்-பெண்கள் குழந்தைகள் உட்பட யாவரும் முழுநிலா நாளிலே கடற்கரையில் கூடுவர். கடற்தெய்வத்திற்கு மீனும், இறைச்சியும் படைத்து வணங்குவார்கள். கடற்தெய்வத்தின் அடையாளமாக சுறவின் கொம்பை அமைத்து வணங்குவர். இதனைப் பட்டினப்பாலை 'சிவந்த தலையை உடைய பரதவர் நிலவு நாளிற் தம் மகளிரோடு கூடிக் குடியிருப்பு நடுவிலுள்ள மனை இடத்தே சினையை உடைய சுறவின் கொம்பை நட்டு அதனிடத்தே உள்ள தெய்வத்திற்கு விழா எடுப்பர் எனக் கூறுகிறது.

இவ்வாறு சங்க இலக்கியங்கள் தரும் குறிப்புக்களில் இருந்து தமிழ் மக்களுக்கே சிறப்பாக உரிய கடவுளர்கள் பற்றியும், ஆடல்பாடல்களோடு கூடிய அவர்களது வழிபாட்டு முறைகள் பற்றியும் அறியமுடிகிறது. காலப்போக்கில் ஆரியத் தெய்வங்களுடன் இத்தெய்வங்கள் யாவும் தொடர்பு படுத்தப்பட்டு எது ஆரியத்தெய்வம் எது திராவிடத் தெய்வம் எனப் பிரித்தறிய முடியாத அளவிற்கு இறுக்கமாகக் கலந்துவிட்டன.

(5) நாயன்மார்கள் காலத்து சைவத்தின் வளர்ச்சியை விளக்குக.

தமிழ்நாட்டு வரலாற்றில் கி.பி. 6ம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 9ம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதி மிகவும் சிறப்புடையதாகும். இதனைப் பல்லவ காலம் என்று அழைப்பர். இக்காலப் பகுதியில் சமயத்தில் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாக அமைவது பக்தி இலக்கியமாகும். சமய, பௌத்த மதங்களுக்கெதிராக சைவ, வைஷ்ணவ மதங்கள் நடத்திய போராட்டமே பக்தி இயக்கம் என்று அழைக்கப்படுகிறது. இதனை நடத்திச் சென்றவர்கள் நாயன்மார்களும், ஆழ்வார்களும் ஆவர். நாயன்மார்களை அடிப்படையாகக் கொண்டு சைவமும், ஆழ்வார்களை அடிப்படையாகக்கொண்டு வைஷ்ணவமும் வளர்ச்சியடைந்தது என்று கூறலாம்.

சங்கம் மருவிய காலப்பகுதியில் ~~கரைப்~~பிர [களப்பில] மன்னர்களின் ஆதரவைப் பெற்று சமய, பௌத்த மதங்கள் நன்கு வளர்ச்சியடைந்திருந்ததனால் சைவத்தின் செல்வாக்கு மிகவும் குன்றிய நிலையிலேயே இருந்தது. சமய, பௌத்த மதங்களுக்கெதிராக சைவத்தை வளர்க்க வேண்டிய தேவை இருந்தது. சங்கம் மருவிய காலப் பிற்பகுதியில் காரைக்காலம்மையார் தோன்றி சிவன் மீது பாடல்களைப் பாடி, சிவனது பெருமைகளை விளக்கி சைவத்தைப் புத்துயிர் பெற வைத்தார். காரைக்காலம்மையாரைத்தொடர்ந்து வந்த நாயன்மார்கள் காலத்தில் சைவம் உயர்நிலையை அடைய இது வழிவகுத்தது. அப்பர், சம்பந்தர், சுந்தரர் எனும் மூவரும் தமிழ் நாட்டில் தம்காலத்திலிருந்த பல சிவன்கோயில்களுக்குச் சென்று பதிகங்களைப் பாடினர். வேதங்கள், ஆகமங்கள், இதிகாசபுராணங்களில் இடம்பெற்ற சமய உண்மைகளை அடிப்படையாக வைத்து கடவுள், வழிபாடு அதன் பலன் பற்றி மக்களுக்கு இனிய,

இசையோடு பாடல்களைப் பாடி சமயக் கருத்துக்களைப் போதித்தனர். சமண, பௌத்த நூல்கள் பொய் நூல்கள், அவற்றை நம்பாமல் சிவனை வழிபடுங்கள். தீவினையற்று நன்மையடைவீர்கள். எமது திருப்பதிகங்களைப் பாடிப் பயன்பெறுங்கள். பஞ்சாட்சரமே நல்ல துணையாகும். புலனடக்கம், மனவொருமைப்பாடு உள்ள தூயவர்களிடம் உள்ள மலங்களை இறைவன் அகற்றுவான். உடம்பாகிய வீட்டில், உள்ளமாகிய அகலில், உணர்ச்சியாகிய நெய்யைவிட்டு, உயிர் எனும் திரியிட்டு, அறிவெனும் சுடரேற்றி இறைவனது திருவடிகளைக் காணுங்கள் என்று போதித்தனர்.

நாயன்மார்கள் அளவையால் கட்டுண்டு கிடக்கும் தத்துவங்களையோ, உயிர்ப்பை ஒடுக்கும் யோக நெறியையோ, கடவுள் முன்னிலையில் தன்னையே அழித்துக்கொள்ளத் தூண்டும் உணர்ச்சி வெளியையோ பாராட்டவில்லை. கடவுளிடத்து அயராத அன்பு ஒன்றையே அவர்களுக்குப் போதித்து வந்தனர். 'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி ஓதுவார்தம்மை நன்னெறிக்கு உய்ப்பது நாதநாமம் நமச்சிவாயவே' என்று ஞானசம்பந்தர் பாடினார். கடவுள் அன்புக்குக் கட்டுப்பட்டவன். அவனிடத்தில் இடையறாத ஈடுபாடு உடையவர்களுக்கு அவனது திருவருள் தானாகவே வந்து சொரியும் என மக்களுக்கு கூறினார். நாயன்மார்கள் தம்முள் எழுந்த இறையன்பை எளிய, இனிய சொற்களில் இசையுடன் விளக்கினர். கடவுளுக்கு அஞ்சவேண்டியதில்லை. அவனிடத்தில் ஈடுபாடு கொண்டு, அகங்குழைந்து, நெஞ்சமாகிய திரையில் அவரைப்பற்றிய எண்ணங்களை அழியாமற் தீட்டிவைத்து 'நான்' எனும் செருக்கை அறுப்பார்களானால் கடவுளின் திருவருள் தானாக வந்தெய்தும் என்பது இச்சமயச் சான்றோரின் மெய்யுரைகளாகும். மறைபட்டுக் கிடந்த ஒரு பேரின்பவாயில் இவர்களால் மக்கள் முன்பு திடீரென்று திறந்து நின்றது. அவ்வாயிலுக்குள் நுழைவதற்கு நூலுணர்வு வேண்டாம். சொல்வன்மை வேண்டாம். செல்வம் வேண்டாம். காட்டுக்கும் மலைக்கும் ஓடவேண்டாம் இறைவன்மாட்டு இடையறாத வேட்கையும், எப்பொருளையும் அவன் வடிவமாகக் காணும் காட்சிப் பேறும் போதுமானவை என்ற கொள்கையை மக்கள் மத்தியில் வளர்த்தனர். உலக இயல்புகளையும், இயற்கை எழிலையும் மறக்காது, ஐந்து பூதங்களிலும் எண்ணுகின்ற எண்ணங்களிலும் இறைவன் கலந்துள்ளான் என்பதை வலியுறுத்தி எண்ணம், செயல் ஆகியவற்றில் தூய்மைகளைப் பேணவேண்டும் என்று போதித்தனர். இவர்களினது போதனையின் அடிப்படையில் சைவம் உன்னத நிலையை அடைந்தது.

திருநாவுக்கரசர் பாடிய பதிகங்களில் எஞ்சியுள்ளவை 310 பதிகங்கள் என்று திருமுறைகண்ட புராணம் கூறுகிறது. எவ்வுயிரிலும் சிவத்தையும் சக்தியையும் இணைத்துக் காணவேண்டும் என்று தத்துவம் இவரிடம் விளக்கம் பெற்றுள்ளது. கடவுளை 'இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன், இவனிறைவன் என்று எழுதிக்காட்டொணாது' என்ற உயர்ந்த தத்துவத்தை விளக்குகிறார். இவரது அற்புதங்களின் காரணமாக மகேந்திரவர்மன் சமணத்தைவிட்டு சைவத்துக்கு மதம் மாறினான். பாடலிபுரத்திலிருந்த சமணப் பள்ளிகளை இடித்து, திருவதிகையில் 'குணபதீச்சரம்' என்ற கோவிலை எழுப்பினான். அழியாத பொருட்களைப் பயன்படுத்திக் கோவில்கள் எழுப்பினான். சைவத்தை வளர்த்தான்.

திருநாவுக்கரசருடன் இணைந்து சைவத்தை வளர்த்தவர் ஞானசம்பந்தராவார். இவர் பாடிய பதிகங்களில் எஞ்சியுள்ளவை 384 பதிகங்கள் ஆகும். இவரது பாடல்களில் சமண பௌத்தர்கள் மிகவும் வன்மையாகக் கண்டிக்கப்பட்டிருப்பதைக் காணலாம். தமிழ்நாட்டில் சமணம் பௌத்தம் செல்வாக்கை இழப்பதற்குக் காரணமாக இருந்தவர் திருஞானசம்பந்தரேயாவார். சமணத்தைத் தழுவி வாழ்ந்த அரிகேசரி பராங்குசன் என்ற பாண்டிய மன்னனை, சமணருடன் வாதிட்டுச் சைவத்திற்கு மாற்றினார்.

சுந்தரரின் பாடல்களில் இறைவனிடத்தில் அவர்கொண்டிருந்த இடையறாத அன்பு மட்டுமன்றிப் பல இலக்கியச் சுவைகளைக் கண்டு இன்புறலாம். நகைச்சுவை, பிணக்கு, கொஞ்சுதல், மிஞ்சுதல், சினம் ஆகிய பல மெய்ப்பாடுகளைக் காணலாம். சுந்தரரை இறைவன் தடுத்தாட்கொண்ட நிகழ்ச்சி குறிப்பிடத்தக்கது. சுந்தரர் பின் தவநெறியை மேற்கொண்டு சிவன்கோவில்களுக்குச் சென்று பதிகங்களைப் பாடினார். நாயன்மார்கள் அறுபத்துமூவரின் பெயர்களைத் தொகுத்து 'திருத்தொண்டர் தொகை' என்ற நூலாக வெளியிட்டுள்ளார்.

மாணிக்கவாசகர் திருவாசகம், திருக்கோவையார் என்ற நூல்களைச் செய்தார். இவை எட்டாந் திருமுறைகளாகச் சேர்க்கப்பட்டு உள்ளன. இவர் கன்னிப் பெண்கள் நோன்பு நோற்பதாகக் கருதிக்கொண்டு திருவெம்பாவைப் பாடல்களைப் பாடியுள்ளார். திருவாசகப் பாடல்கள் மிக இனிமையானவை. நாயன்மார் காலத்து பக்தி உணர்வை அறியத் திருவாசகம் பெருந்துணை புரிகிறது. 'திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின் கருங்கல் மனமும் கரைந்துருகி கண்கள் தொடுமணற் கேணியில் சுரந்து நீர்பாய மெய் மயிர் பொடிப்ப விதிர் விதிப்பு எய்தி அன்பர் ஆகுநர் அன்றி மன்பதை உலகில் மற்றையர் சிலரே' என்று சிவப்பிரகாச சுவாமிகள் கூறுகின்றமை குறிப்பிடத் தக்கது.

இவ்வாறு நாயன்மார்கள் காலத்தில் சைவம் பெருவளர்ச்சி அடைந்தமையை அவரது பாடல்கள், நூல்களிலிருந்தும், அவர்களது சமயப் போதனைகளிலிருந்தும் அறிந்து கொள்ளலாம். வேதாகமங்களில் இடம்பெற்ற சைவசித்தாந்த கருத்துக்களைத் தமது பாடல்களில் தெளிவுபடுத்தி சைவசித்தாந்தத்தை வளர்த்தவர்களும் நாயன்மார்களேயாவர். இவர்கள் ஆகமங்கள் கூறிய சைவசித்தாந்தங்களை நடைமுறையிற் பின்பற்றி வாழ்ந்து காட்டினர். நாவுக்கரசர் சரியை நெறியையும், ஞானசம்பந்தர் கிரியை நெறியையும், சுந்தரர் யோக நெறியையும், மணிவாசகர் ஞான நெறியையும் பின்பற்றி, முறையே சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய முத்திகளைப் பெற்றதாக அறிய முடிகிறது. நாயன்மார்கள் அனைவரும் பற்றற்றவர்களாக விளங்கினர். இவர்களைச் சீவன் முத்தர் என்று கூறலாம். சீவன் முத்தர்கள் குரு, லிங்க, சங்கம வழிபாடுடையவர்களாக விளங்கினர், வேதாகமங்கள் கூறும் விதிமுறைகளை நடைமுறை வாழ்க்கையில் அனுஷ்டித்து அவற்றின் பயன்களை மக்களுக்குணர்த்தினர்.

நாயன்மார்களது காலத்தில் பாசுபதர், கபாலிகர், மாவிரதிகள், சித்தர்கள், பைரவர் போன்ற பல சமயப் பிரிவினர் இருந்ததாகத் தெரிகிறது. இக்காலத்தில் சைவம் நன்கு வளர்ச்சியடைந்தமையினால் இம்மதப் பிரிவுகள் வளர்ச்சியடைய முடியவில்லை. பல்வேறு சமயத் துறவிகளும் மடங்களிலிருந்து சைவத்தை வளர்த்தனர். சிறந்த ஒழுக்கமும், நிறைந்த கல்வியும் உடைய சமயத் தலைவர்கள் இம்மடங்களில் இருந்தனர். மடங்களின் தோற்றத்தினால் சைவம் மேலும் வளர்ச்சியடைய முடிந்தது என்று கூறலாம்.

(6) ஆழ்வார்கள் காலத்து வைஷ்ணவத்தின் வளர்ச்சியை வகுத்துக் காட்டுக?

தமிழ்நாட்டில் பக்தி இயக்கம் சிறப்புற்று விளங்கிய காலப்பகுதி பல்லவர் காலமாகும். பக்தி இயக்கம் சமய பௌத்த மதங்களுக்கும், சைவ வைஷ்ணவ மதங்களுக்கும் இடையே நடைபெற்ற சமயப்போராட்டமாகும். சங்கம் மருவிய காலப்பகுதியில் களப்பிரர்களது ஆட்சியில் மன்னர்களின் ஆதரவைப் பெற்று சமண பௌத்த மதங்கள் எழுச்சியடைய சைவ வைஷ்ணவ மதங்கள் அழிவுறுகின்ற நிலையில் காணப்பட்டன. இந்நிலையில் முதல் மூன்று ஆழ்வார்களும் காரைக்காலம்மையாரும் வைஷ்ணவம், சைவம் ஆகிய மதங்களை வளர்க்கப் பெருந்தொண்டாற்றினர். இவர்களினால் தோற்றுவிக்கப்பட்ட ஒரு சமய ரீதியான இயக்கம் பல்லவர்காலப் பகுதியில் தோன்றிய ஆழ்வார்களினாலும், நாயன்மார்களினாலும் சிறந்த முறையிற்கொண்டு நடத்தப்பட்டதனால் பல்லவர்காலப் பகுதியில் சைவ, வைஷ்ணவ மதங்கள் பெருவளர்ச்சி அடைந்தன. வைஷ்ணவ மதத்தை சமண பௌத்த மதங்களுக்கெதிராக எழுச்சியடையச் செய்தவர் ஆழ்வார்களாவர். ஆழ்வார்கள் பக்திநெறியின் மூலம் வைஷ்ணவ மதத்தை மக்கள் மத்தியில் பரப்பி, விஷ்ணுமீது பக்திப் பாடல்களைப் பாடி வைஷ்ணவத்தை வளர்த்தவர்களாவர்.

வைஷ்ணவத்தின் வளர்ச்சிக்குக் காரணமாக இருந்த ஆழ்வார்கள் பன்னிருவராவர். இவர்களுள் பேயாழ்வார், பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார் என்ற முதல் மூன்று ஆழ்வார்களும் சங்கம் மருவிய பிற்பகுதியில் வாழ்ந்தவர்களாவர். காரைக்காலம்மையாரைப் போன்று பக்திவைராக்கியம் உடையவர்களாக விளங்கிய முதல் மூன்று ஆழ்வார்களும் இறைவன் திருவுருவைக் கண்டனுபவித்தல், அவன் புகழ்பாடுதல் என்பனவற்றைத் தமது வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டு இருந்தனர். இவர்கள் திருமால்

இடத்துக் கொண்டிருந்த அளவற்ற அன்பினை 'என்றன் அளவன்றால் யானுடைய அன்பு' எனவும் 'ஒன்தயமரையாளீ கேள்வன் ஒருவனையே நோக்கும் உணர்வு' என்றும் 'காண் காண் எனவிரும்பும் கண்கள்' எனவும் அவர்கள் கூறும் பாடல்கள் புலப்படுத்துவனவாக உள்ளன.

இறைவனது அன்பில் ஆழ்ந்து ஈடுபட்ட ஆழ்வார்களில் திருமழிசை யாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கை யாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள், நம்மாழ்வார், மதுரகவியாழ்வார், குலசேகரவாழ்வார் என்ற ஒன்பதின்மரும் பல்லவர்காலப் பகுதியைச் சேர்ந் தவர்கள் ஆவர். இவ்வாழ்வார்கள் சமண, பௌத்த மதங்களுக்கெதிராக வைஷ்ணவத்தின் சிறப்பினையும், விஷ்ணுவின் பெருமைகளையும் மக்களுக்கு எடுத்து விளக்கி வைஷ்ணவத்தைச் சிறப்புறச் செய்தவர்களாவர். கோயில் கள்தோறுஞ் சென்று ஆழ்வார்கள் பாடிய பாடல்கள் சோழர் காலப்பகுதி யில் நாலாயிரத்திவ்யப்பிரபந்தமாகத் தொகுக்கப்பட்டது. இவர்களது பாடல்களில் இறைவனின் உண்மை, இறைவனது இயல்புகள், உருவத் திருமேனி கள், இறைவனுக்குரிய அவதாரங்கள், அருட்செயல்கள் கூறப்பட்டுள்ளன. வேதங்கள், ஆகமங்கள் அதாவது வைஷ்ணவர்களுக்குரிய ஆகமங்கள், புரா ணங்களை அடிப்படையாகக் கொண்ட கருத்துக்களை தமது பாடல்களில் விளக்கியுள்ளனர். இப்பாடல்களை ஆதாரமாகக் கொண்டு ஆழ்வார்கள் காலத்து வைஷ்ணவ நெறி பற்றி அறிந்து கொள்ளலாம்.

ஆழ்வார்களிற் சிறந்தவரான திருமழிசையாழ்வார் திருமாலிடத்து அளவுகடந்த பக்தியுடையவராய்த் திருக்குடந்தை, திருவெஃகா, திருவரங்கம், முதலிய தலங்களுக்குச் சென்று திருமாலின் புகழைப் பக்தி வைராக்கியத்துடன் பாடியுள்ளார்.

"என்றும் மறந்தறியேன் என்நெஞ்சத்தே வைத்து
நின்றும் இருந்தும் நெடுமாலை..."

என்று பாடுவதிலிருந்து அவரது பக்தி உணர்வை அறிந்துகொள்ளலாம். வீரவைஷ்ணவராகிய திருமழிசையாழ்வார், மகேந்திரவர்மனது காலப்பகுதியைச் சேர்ந்தவர், என்பது குறிப்பிடத்தக்கது. தொண்டரடிப்பொடியாழ்வார் பாடிய பிரபந்தங்கள் திருமாலை, திருப்பள்ளியெழுச்சி, என்பனவாகும். பிராமண குலத்தவராகிய தொண்டரடிப்பொடியாழ்வார் தமது திருமாலை என்னும் பிரபந்தத்தில் இறைவனது திருவுருவத்தினை,

'பச்சை மாமலைபோல் மேனி பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா அமரரேறே ஆயர்தம் கொழுந்தே'

என்று பாடியுள்ளதைக் காணலாம். மேலும்,

'குடதிசை முடியைவைத்துக் குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்புகாட்டி தென்திசை இலங்கை நோக்கி
கடல்நிறக் கடவுள் எந்தை அரவணைத் துயிலுமாகண்டு
உடலெனக் குருகுமாலோ என்செய்கேன் உலகத்தீரே'

என்று பாடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

ஏனைய ஆழ்வார்களில் சிறந்தவர் பெரியாழ்வாராவர். விஷ்ணு சித்தர், புட்டர்பிரான் என்ற பெயர்களையுடைய பெரியாழ்வார் ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதரித்துப் பாண்டிநாட்டில் வைஷ்ணவ சமயத்தை வளர்த்தவராவர். திருமால் அவதாரங்களுள் அவர் கிருஷ்ணாவதாரத்திலே சிறப்பாக ஈடுபட்டிருந்ததனால் கண்ணனைக் குழந்தையாகக் கண்டு பாடல் களைப் பாடியுள்ளார். இவரது பாடல்கள் பெரியாழ்வார் திருமொழி என்று அழைக்கப்படுகிறது. கண்ணனை 'என்னைக் குடத்தை உருட்டி இளம் பிள்ளை கிள்ளியெழுப்பிக் கண்ணைப் புரட்டி விழித்துக் கழகண்டு செய்யும் பிரானே' என்று பாடுகிறார். பெரியாழ்வார் திருப்பல்லாண்டு எனப்படும் பிரபந்தத்தையும் இயற்றினர். அரசகுலத்தைச் சேர்ந்த குலசேகரப் பெருமாள் திருமால் போற்றிப் பாடிய பிரபந்தம் பெருமாள் திருமொழி

னப்படும். இவர் இராம அவதாரத்தில் மூழ்கிப் பாடுகிறார். 'தசரதன் புலம்பல்' என்ற பதிகத்தைப் பாடும்போது தம்மைத் தசரதராகவே கருதிக் காட்டுக்குச் சென்ற இராமனை எண்ணியெண்ணிக் கண்ணீர் வடித்தனரென்றே அவர் பாக்களிலிருந்து அறியமுடிகிறது. ஆண்டாள் கண்ணனைக் காதலனாகக்கண்டு பாடிய பாடல்கள் பக்திச்சுவை மிக்கவையாகும். நாச்சியார் திருமொழி திருப்பாவை என்னும் இருநூல்களும் சிறந்தவையாகும். இறைவனிடத்தில் அடியார்கள் கொண்டுள்ள அன்பை நாயகி பாவத்தில் அமைத்துப் பாடிய பெரியார் பலருளரெனினும் பெண்ணாகப் பிறந்து, தம்மை இறைவனுக்கு நாயகியாகப் பாவித்துத் தமிழிற் பாடியவர் ஆண்டாள் ஒருவரேயாவர்.

> கற்பூரம் நாறுமோ கமலப் பூ நாறுமோ
> திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ
> மருப்பொசிந்த மாதவன்தன் வாய்ச் சுவையும் நாற்றமும்
> விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே

என்று பாடுகிறார். பக்தியின் உச்சநிலையை இப்பாடல் விளக்குகிறது. சிற்றின்பக் காதல்மூலம் பேரின்பம் காட்டப்படுகிறது. நம்மாழ்வாரது பாடல்களில் வேத உபநிடதக் கருத்துக்கள் நன்கு விளக்கப்பட்டுள்ளன. இவரது திருவாய்மொழிப் பாடல்கள் மிகச் சிறந்தவை. பல்லவர்காலப் பகுதியில் பன்னிரு ஆழ்வார்களும் பக்திநெறியின் மூலம் வைஷ்ணவத்தை வளர்த்துச் சென்றனர்.

பல்லவர் காலப்பகுதியில் வைஷ்ணவம் சைவத்தோடு இணைந்து வளரமுடிந்தது. நாயன்மார்களும் ஆழ்வார்களும் கோயில்கள்தோறும் சென்று பக்திப் பாடல்களைப் பாடி சைவ வைஷ்ணவ மதக் கருத்துக்களை யாவரும் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் எடுத்துக்கூறி மதப் பிரசாரங்களை மேற்கொண்டனர். சமண பௌத்த மதங்கள் 'கடவுள் உண்டு' என்ற கொள்கையில் நம்பிக்கையற்ற மதங்களாகும். ஆனல் சைவ வைஷ்ணவ மதங்கள் 'கடவுள் உண்டு' என்ற கொள்கையை உறுதியாகக் கடைப்பிடிக்கும் மதங்களாகும். சமணமும் பௌத்தமும் குன்றுவதற்கும் வைதீகநெறி தழைத்தோங்குவதற்கும் இது ஒரு காரணமாக அமைந்தது. சமண பௌத்தர்கள் எல்லா உயிர்களையும் பொதுப்பட நோக்கி அவற்றிடம் அன்பையும் அருளையும் காட்டுவதையே தம் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். கொல்லாமை என்ற நோன்பை வழுவாமல் நோற்றுவந்தனர். துறவுக் கொள்கைகளுக்கு முதன்மை கொடுத்தனர். வருண வேறுபாடுகளுக்கு இடம்கொடுக்கவில்லை. இவற்றை வைதீக நெறியும் தனது கொள்கைகளாக ஏற்றுக்கொண்டது. ஆழ்வார்களிற் பலரும் பல்வேறு குலப் பிரிவைச் சேர்ந்தவர்களாயினும் குலவேறுபாடுகளுக்கு இடம்கொடுக்கவில்லை. சமண பௌத்த மதங்கள் துறவுக் கொள்கைகளுக்கு இடம்கொடுத்தபோது இவர்கள் பக்திநெறி ஒன்றையே மக்களுக்குப் போதித்தனர். பக்திநெறி சாதாரண மக்களினலும் இலகுவாகப் பின்பற்றக்கூடியதாக இருந்தமையினல் சைவ வைஷ்ணவ மதங்களையே மக்கள் விரும்பி ஏற்றனர். மன்னர்களை ஆதரவாகக் கொண்டு வைதீகநெறி பல்லவர் காலப்பகுதியில் வளர்ச்சி அடைந்தது.

இவ்வாறு பல்லவர் காலப்பகுதியில் வைஷ்ணவ மதம் ஆழ்வார்கள் ஆற்றிய பெருந் தொண்டுகளினல் வளர்ச்சியடைந்தது. ஆழ்வார்களினற் பாடப்பட்ட பாடல்களிலிருந்து அக்கால வைஷ்ணவம் பற்றி அறிந்து கொள்ளலாம். பல்லவர் காலப்பகுதியில் நாயன்மார்களை அடிப்படையாகக் கொண்டு சைவம் வளர்ச்சியடைந்தது. சைவத்தோடு தொடர்புடையதாக ஆழ்வார்களினல் வைஷ்ணவம் வளர்க்கப்பட்டது.

(7.) இதிகாசங்களிற் காணப்படும் சமய மரபுகள் யாவை? இவ் இதிகாசங்கள் இந்துசமய வரலாற்றிலே எத்தகைய முக்கியத்துவத்தைப் பெற்றுவந்துள்ளன?

இந்துமத வரலாற்றில் வேத உபநிடத காலப் பகுதிகளை அடுத்து இதிகாச காலப்பகுதி முக்கியத்துவம் பெறுகிறது. இதிகாசம் என்பது இதி-ஹ-அஸ எனப் பிரித்துப் பொருள் கொள்ளப்படும். இது இப்படி முன்னிருந்தது எனப் பொருள் கொள்ளப்படும். எனவே பழைய கதைகளைக்

கூறும் நூல்களென்று அறிந்து கொள்ளலாம். இராமாயணமும், மகாபாரதமும் இதிகாசங்கள் என்று அழைக்கப்படுகின்றன. இதிகாசங்கள் மக்கள், தேவர், அரசர் முதலியோருக்கிடையே நடந்த நிகழ்ச்சிகள், கதைகள் முதலியவற்றை உரைப்பதாயிருந்தது. இதிகாசத்தில் வரும் பல கதைகளைக் கொண்டே வேதத்தில் வரும் பல மந்திரங்களுக்குப் பொருள் சொல்லவேண்டி இருந்தது. இக்காரணத்தினால் இதிகாசங்கள் வேதத்தைச் சார்ந்த பிராமணப் பகுதியில் இதிகாசவேதம் என்றே சொல்லப்பட்டிருக்கிறது. முதலில் இப்பழைய கதைகளை விளக்கும் சுருங்கிய பகுதிகளாக வேதநூல்களுக்கிடையில் இவை காணப்பட்டபோது இவற்றை இதிகாசம் என அழைத்தனர். ஆனால் பின் அப்படி வழங்கிவந்த கதைகளின் தொகுதி பெருகவே இவை தனித்ததோர் இலக்கியப் பிரிவுகளாக அமைக்கப்பெற்றன. பண்டைய அரசர்களின் வரலாறுகளெல்லாம் பாட்டில் அமைக்கப்பட்டு சூதர், மாகதர் என்போரினால் வேள்விகள் நடக்கும்போதும் மற்றச் சமயங்களிலும் பாடப்பட்டது. இக்கதைகளுக்கு ஆக்கியானங்கள் என்ற பெயர் உண்டு. இவையும் இதிகாசங்களிற் சேர்க்கப்பட்டுள்ளது. ரகுவம்சத்தில் தோன்றிய இராமனது வரலாற்றை விளக்குவது இராமாயணம் ஆகும். இது 24,000 சுலோகங்களைக் கொண்டது. வடமொழியில் வால்மீகி என்பவர் இயற்றினார். குரு வம்சக்கதைகூறும் மகாபாரதம் 100,000 சுலோகங்கள் கொண்டது. இதனை வியாசர் பதினெட்டுப் பர்வங்களாகப் பிரித்துள்ளார். இவ்விரு நூல்களும் இதிகாசங்கள் என்று அழைக்கப்பட்டாலும் அக்காலத்தில் இடம் பெற்ற சமய மரபுகளையும், நாகரீகத்தையும் விளக்கும் நூல்களாகவும் காணப்படுகின்றன. இதனால் இந்துமத வரலாற்றில் பெரிதும் முக்கியத்துவம் பெறும் நூல்களாக விளங்குகின்றன.

இதிகாசம் பிரதிபலிக்கும்மதம் பல தெய்வக் கொள்கைகளை உடையதாக விளங்கியது. வேதங்களிற் கூறப்பட்ட கடவுளர்கள் இங்கும் கூறப்பட்டாலும் பிரமா, விஷ்ணு, சிவன் ஆகிய கடவுளர்கள் முக்கியத்துவம் பெறுவதைக் காணலாம். கணேசர், பார்வதி, மாருதி, யமன், உருத்திரன், ஸ்கந்தன், மகேஸ்வரன், ஆதித்தன் போன்ற வேதங்களிற் கூறப்பட்ட தெய்வங்களும், வேதங்களிற் கூறப்படாத தெய்வங்களும் இதிகாசங்களிற் கூறப்பட்டிருப்பதனைக் காணலாம். பிரமா, விஷ்ணு சிவன் ஆகிய மும் மூர்த்திகள் முக்கியத்துவம் பெறுவதுடன், படைத்தல், காத்தல், அழித்தல் என்ற முத்தொழிலும் சிறப்புப் பெறுகிறது. இராமாயணம் சிவவழிபாடு பற்றிய பல கருத்துக்களைக் கொண்டுள்ளது. இராவணன் சிவலிங்க வழிபாடுடையவன். தான் செல்லுமிடமெங்கும் சிவலிங்கம் ஒன்றை எடுத்துச் சென்று முறைப்படி பூசித்து வழிபட்டான். அதனை 108 நாமங்களினால் அர்ச்சித்து வழிபட்டான். அவ்வாறு வழிபட்டபின் எடுத்த கருமங்கள் யாவற்றிலும் வெற்றிபெற்றான் என்று கூறப்படுகிறது. இராமாயணம் உத்தரகாண்டத்தில் சிவவழிபாடு பற்றிய பூரணமாக விளக்கம் காணப்படுகிறது. இராமன், கோசலை போன்றோர் சிவவழிபாடுடையோர் எனக் கூறப்பட்டுள்ளது. மகாபாரதத்தில் சிவன் சகஸ்ரநாமங்களினால் வணங்கப்பட்டமைக்குக் குறிப்புக்கள் உள்ளன. சிவன் தலையிற் கங்கையையும், பாம்பு, சந்திரன், முக்கண், நீலகண்டம், ஆகியவற்றை உடையவன் எனவும், மூன்றுதலை, நான்குதலை, ஐந்து தலைகளை உடையவன் எனவும், பாசுபதம், பினாகம், திரிசூலம், இடபக்கொடி ஆகியவற்றைத் தாங்கியுள்ளவன் எனவும், இடப வாகனத்தில் எழுந்தருளுபவன் எனவும் பாரதம் கூறுவதிலிருந்து உருவ வழிபாடு பற்றி அறியமுடிகிறது. மேலும் மகாதேவனே மிகச் சிறந்த தெய்வம். அனைத்திற்கும் மூலகாரணி. அவனே முடிபுமானவன். அவனது இடது பக்கத்திலிருந்து பிரமாவும், வலது பக்கத்திலிருந்து விஷ்ணுவும் தோன்றி படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று தொழில்களைச் செய்வதாக பாரதம் கூறுகிறது. திரிமூர்த்திகளில் முதல்வனாக சிவன் போற்றப்படுகின்றான். இவ்வாறு இதிகாசங்கள் தரும் குறிப்புக்களில் இருந்து அக்காலச் சைவமரபு பற்றி அறிந்துகொள்ள முடிகிறது.

இதிகாசங்களிற் சைவத்தைப்போன்று வைஷ்ணவமும் சிறப்புற்று இருந்தது. இராமாயணம் விஷ்ணுவின் அவதாரமான இராமனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டுள்ளது. விஷ்ணு சகஸ்ரநாமங்களினால் வணங்கப்பட்டமையை இதிகாசங்களிலிருந்து தெரிந்துகொள்ளலாம். திருமால், நரசிம்மன், கிருஷ்ணன், வாமனன், நாராயணன், மாதவன், வாசுதேவன், பலராமன், கேசவன், கோவிந்தன், ஜனார்த்தனன் போன்ற பெயர்களினால்

அழைக்கப்படுகின்றன். இராமாயணத்தில் அவதார தத்துவக் கருத்துக்கள் முக்கியத்துவம் பெறுவதைக் காணலாம். இராம வழிபாடு வளர்ச்சியடை கின்றமையைக் காணலாம். இராமனைப் பின்தொடர்ந்தால் சுவர்க்கத்தை அடையலாமென அயோத்தி மக்கள் இலக்குமணனுக்குக் கூறியுள்ளமை குறிப்பிடத் தக்கது. இராமாயணம் உத்தரகாண்டம், யுத்தகாண்டம் போன்ற பகுதி களில் இராமனை வழிபடுபவர்கள் சுவர்க்கத்தை இடைவார்கள் என்ற குறிப் புக்கள் காணப்படுகின்றன. இவ்வாறு இதிகாசங்கள் வைஷ்ணவ சமயமரபு களைப் பற்றி விளக்குவனவாகவும் உள்ளன.

இதிகாச காலப்பகுதியில் இடம்பெற்ற ஏனைய சமயமரபுகள் பற்றியும், இராமாயணம், பாரதம் போன்ற நூல்கள் கூறுகின்றன. இரா மாயணம் பாலகாண்டம் உமைவணக்கம் பற்றிக் கூறுகிறது. இராமாயணத்திலும் பாரதத்திலும் பசு வணக்கம் இடம்பெறுகிறது. வேதகாலத்தைப் போலவே இதிகாச காலப் பகுதியிலும் நதி வணக்கம் சிறப்புற்றிருந்தது. இந் நதிகளில் நீராடப்படுவதன் மூலம் பாவங்களிலிருந்து விடுபடமுடியும் என்று நம்பப்பட்டது. பாரதத்தில் அர்ச்சுனன் தீர்த்த யாத்திரை செய்தமை குறிப்பிடத்தக்கது. இராமன் இராச்சியத்தைத் திரும்ப மீளவும் பெறுவதற்கு சீதை கங்கைநதியை வணங்கினதாக இராமாயணம் கூறுகிறது. கங்கை, யமுனை, காளிந்தி, நர்மதை போன்ற நதிகள் புனித நதிகளாகக் கருதப்பட்டன. புண்ணிய நதிகளில் நீராடிய பின் தீர்த்தக் கரையில் இருக்கும் இலிங்கத்தை வணங்குதலும், தானங்கள் வழங்குதலும் அக்கால வழக்கமாக இருந்தது. மரவணக்கம் இடம்பெற்றதாகவும் அறியமுடிகிறது. சீதை சியாமா எனப் படும் ஆலமரத்தை வணங்கியமைக்குக் குறிப்புண்டு. இவ்வாறு இதிகாசங்கள் அக்காலச் சமயநிலைபற்றி அறிந்துகொள்வதற்குப் பெரிதும் பயன்படுகின்றன.

இந்துமதக் கிரியைகள் பற்றியும் இதிகாசங்கள் கூறுகின்றன. காலை மாலைகளில் தேவர்களையும், பிதரர்களையும் பூசித்தல், யாகங்கள் செய்தல், சிந்தையை அடக்கித் தியானித்தல், விரதங்கள் அனுஷ்டித்தல் என்பனவற்றை மக்கள் நியமமாகக் கொள்ள வேண்டும், எனக் கூறுகிறது. இராமனது விவாதம், முடிசூடல், அவன் அயோத்திக்குத் திரும்புதல் முதலிய சம்பவங்களின்போது சமயச் சடங்குகள் பல நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. எண்ணிய கருமத்தை எண்ணியவாறு முடிப்பதற்குத் தன்னடக்கத்தை மேற்கொள்ளல் கடவுளரை வேண்டல், துர்நிமித்தங்களின்போது தெய்வந்தொழுதல் முதலிய வற்றை நாளாந்த வாழ்க்கையில் மக்கள் கடைப்பிடித்தனரெனக் கூறுகின்றன. இக்காலப் பகுதியில் வேள்வி, தவம், தீர்த்தம், தியானம், விரதம் போன்ற கிரியை நெறிகள் மிகவும் சிறப்புற்றிருந்தன. வேதகாலப் பகுதியில் யாகம் மிக முக்கியத்துவம் பெற்றிருந்தது. இதிகாச காலப் பகுதியில் யாகமும், தவமும் ஒன்றையொன்று தழுவி முக்கியத்துவம் பெற்றமையைக் காணலாம். இராஜசூயம், அசுவமேதம் போன்ற வேள்விகள் பற்றி அறியமுடிகிறது. இராவணன் சிவனைக் குறித்துத் தவஞ்செய்தமையையும், அர்ச்சுனன் தவத்தின் மூலம் பாசுபதம் என்ற அஸ்திரத்தைப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. முனிவர்கள், ரிஷிகள் பிரமத்தை அறிந்தவர்களாகவும், வேத அத்தியயனம் செய்பவர்களாகவும், தவத்தையும், தன்னடக்கத்தையும் உடையவர்களாக வும் விளங்கினர். வேள்விக் கிரியைகளைச் செய்வதில் வல்லவர்களாகவும் காணப்பட்டனர்.

இதிகாசத்திலிருந்தே முதன்முதலாக உருவவழிபாடு இடம்பெற்ற மையை அறியமுடிகிறது. சிவன், விஷ்ணு போன்ற தெய்வங்களது உருவங்கள் கூறப்படுவதிலிருந்தும், இலிங்க வழிபாடு இடம்பெற்றதிலிருந்தும் உருவ வழிபாடு இடம் பெற்றமையை அறியமுடிகிறது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற அம்சங்கள் சிறப்புற்றிருந்தன. நதிகளில் நீராடி, நதி ஓரங்களில் மர நிழல்களில் வைக்கப்பட்ட இலிங்கங்களை வழிபடல் அக்கால வழக்கமாகும். பின்னர் அவ்விடங்களில் கோயில்கள் தோற்றம்பெற்ற போது அவ்விருட்சங்கள் தலவிருட்சங்களாகக் கொள்ளப்பட்டன. அயோத்தி கிஷ்கிந்தை, இலங்காபுரி போன்ற இடங்களிற் கோயில்கள் இருந்தமைக்கு குறிப்புக்கள் காணப்படுகின்றன. அரசர்கள் ஆலயங்களை மக்கள் வழிபா டியற்றுவதற்கு அமைத்துக் கொடுத்தனர். வீடுகளிலும், அரண்மனைகளிலும்

ஓமத் தீ வளர்ப்பதற்கெனத் தனியறைகள் ஒதுக்கப்பட்டிருந்தன. இவ்வாறு இதிகாசங்கள் தரும் குறிப்புக்களை நோக்கின் இந்துமதமும், இந்துமதவழிபாட்டு முறைகளும் நன்கு வளர்ச்சியடைந்தமையை அவதானிக்கலாம்.

இதிகாசங்களில் ஒன்றான மகாபாரதத்திற்குச் சிறப்பாக அமைந்த பகுதி பகவத்கீதையாகும். பாரதத்தில் பீஷ்மபர்வத்தில் கிருஷ்ணனுக்கும் அர்ச்சுனனுக்கும் இடையில் நடந்த சம்பாஷணை பகவத்கீதையாகும். இது பதினெட்டு அத்தியாயங்களைக் கொண்டது. பகவத்கீதை இந்து சமயத்திற்கும் இந்து தத்துவத்திற்கும் அடிப்படையாக அமைந்த பிரஸ்தானத் திரயத்துள் ஒன்றாக விளங்கும் சிறப்புடையதாகும். விஷ்ணுவின் அவதாரங்களில் மிகவும் சிறந்ததாகப் போற்றப்படுவது கிருஷ்ணவதாரமாகும். கிருஷ்ணவதாரத்தில் கீதை போதிக்கப்பட்டமை சிறந்த அம்சமாகும். கீதையில் கிருஷ்ண பகவான் 'நல்லவர்களைக் காக்கவும் தீயவர்களை அழிக்கவும் தர்மத்தைக் காக்கவும், அதர்மத்தை அழிக்கவும் யுகத்துக்கு யுகம் பிறவி எடுப்பதாக' கூறியுள்ளமை அவதார தத்துவத்தின் அடிப்படைக் கருத்தினை விளக்குவதாக அமைகிறது. பகவத்கீதை ஆன்மாக்களின் உண்மை, துக்கம், துக்கஉற்பத்தி, துக்கநிவாரணம், துக்கநிவாரண மார்க்கம் பற்றியும் விளக்குகிறது. துக்கம் பிறப்பாகவும், துக்க உற்பத்தி பிறப்புக்குக் காரணமாக உள்ள பற்றுறு கர்மம் எனவும், துக்க நிவாரணம் பிறவியினின்றும் விடுபடல் எனவும், , துக்க நிவாரண மார்க்கம் கர்மம், பக்தி, ஞானம் என்ற மூவகை யோகநெறிகள் எனவும் கூறப்பட்டுள்ளது, யோகநெறிகளின் மூலம் பிறவியினின்றும் விடுபட்ட ஆன்மாக்கள் பரம்பொருளோடு அணைந்துவிடமுடியும் எனக்கூறும் கீதை பரம்பொருள் இலக்கணம் பற்றியும் கூறியுள்ளது. சமயம், தத்துவம் ஆகியவற்றுடன், தர்மங்களையும் கீதை விளக்குகிறது. இத்தகைய கீதையை உள்ளடக்கியது பாரதம் என்றவகையில் இதிகாசங்கள் இந்துமத வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகின்றது.

வேத உபநிடதக் கருத்துக்கள் இதிகாசங்களில் சாதாரண பாமரமக்களும் புரிந்துகொள்ளக் கூடிய வகையில் விளக்கப்பட்டன. வேத உபநிடதங்கள் கூறும் கருத்துக்கள் அறிவுநிலையில் உள்ள மக்களினால் மட்டுமேபுரிந்து கொள்ளக்கூடியனவாகும். இதிகாசங்கள் சமய தத்துவ உண்மைகளை அறக் கருத்துக்களை சிறிய கதைகளின் மூலமாக விளக்குகின்றன. இத்தகைய கதைகள் இதிகாசங்களில் ஆக்கியானங்களாகச் சேர்க்கப்பட்டுள்ளன. சிபி, நளன், சத்தியவான், சாவித்திரி போன்றோரது கதைகள் ஆக்கியானங்களாகும். உபநிடதக் கருத்துக்களின் சாரமாக கீதை விளங்குவதும் குறிப்பிடத் தக்கது. உபநிடதங்களைப் பசுக்களாகவும், கீதையை அதன் பாலாகவும், அதனை முதலில் சுவைத்த கன்றாக அர்ச்சுனனையும் அறிஞர்கள் உவமிப்பர். இவ்வாறு வைதீக நெறியினை சாதாரண மக்களும் புரியக்கூடிய வகையில் எளிமையான நடையில் வெளிப்படுத்தியவை இதிகாசங்கள் என்ற வகையிலும் அவை சிறந்த நூல்களாக விளங்குகின்றன.

இதிகாசங்கள் பக்திநெறியைச் சிறப்பித்துக் கூறிய நூல்களாகும். உபநிடதங்கள் ஞானமார்க்கத்தை உயர்த்திப் பேசும்போது இதிகாசங்கள் இறைவனையடைவதற்குரிய நெறியில் பக்திக்கு முதன்மை கொடுக்கின்றன. கீதையில் வருண வேறுபாடின்றி, அறிஞன், அறிவிலி என்ற வேறுபாடின்றிப் பின்பற்றக்கூடிய பிரபத்தியை கிருஷ்ணபகவான் அர்ச்சுனனுக்கும் போதிக்கின்றார். 'மனதையும் புத்தியையும் எனக்கே அர்ப்பணஞ் செய்துவிட்டு யார் என் பக்தனாகிறானோ அவனே எனது அன்பனாவான்' எனக் கூறுகிறார். இராமாயணம் 'இராமன் பக்தர்களுக்குப் அனுகூலன் எனவும், பக்தர்களுக்கு புகலிடம் என்வும், பக்தர்களுக்குத் தெய்வ அருள் கிடைக்கிறது—அவர்கள் தெய்வத்தைச் சரணாகதி அடைவர்' எனவும் கூறுகிறது. இவ்வாறு பக்தி நெறிக்கு முக்கியத்துவம் கொடுத்து வைதீக நெறியை வளர்த்துச் சென்றவை இதிகாசங்கள் எனலாம்.

மேற்கூறப்பட்ட கருத்துக்களை நோக்கும்போது இதிகாசங்கள் அக்கால சமய மரபுகளை விளக்குவதுடன், இந்துமத வரலாற்றிலும் குறிப்பிடத்தக்க இடத்தை வகிக்கின்ற நூல்களாக விளங்குகின்றன.

(8) சைவசித்தாந்த நூல்கள் யாவை? இவற்றில் ஏதாவதொன்றைத் தெரிவுசெய்து அந்நூல் சைவசித்தாந்த தத்துவத்தை எடுத்து விளக்கும் முறையினை ஆராய்க.

சைவ சமயத்தின் முடிந்த முடிபாக உள்ள கொள்கையே சைவ சித்தாந்தமாகும். அது பதி, பசு, பாசம் எனும் முப்பொருள் உண்மையை விளக்குகிறது. பதி என்பது ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் குறித்து நிற்கிறது. இவற்றின் உண்மைத்தன்மை இயல்புகள், இலக்கணங்கள் யாவும் சைவசித்தாந்த சாத்திரங்கள் 12ம் 13ம் நூற்றாண்டுகளில் தோற்றம்பெற்ற நூல்களாகும். இந்நூல்களிலிருந்தே சைவ சித்தாந்த தத்துவக் கருத்துக்களைத் தெளிவாக அறிந்துகொள்ளமுடிகிறது.

சைவ சித்தாந்த சாத்திரங்கள் எண்ணிக்கையில் பதினான்காகும். இப்பதினான்கு நூல்களின் பெயர்களையும் பின்வரும் பாடல் விளக்குகிறது.

"உந்தி களிறு உயர்போதம் சித்தியார்
பிந்திருபா உண்மை பிரகாசம்-வந்தவருட்
பண்புவினா போற்றிகொடி பாசமிலா நெஞ்சுவிடு
உண்மைநெறி சங்கற்ப முற்று"

இப்பாடல் குறிக்கின்ற நூல்கள் திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார், சிவஞானபோதம், சிவஞான சித்தியார், இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடு தூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்பனவாகும்.

சைவசித்தாந்த சாத்திரங்கள் பதினான்கினுள் முதல்நூலாகத் திகழ்வது சிவஞானபோதமாகும். இதனை இயற்றியவர் மெய்கண்டதேவராவார். மெய்கண்டதேவர் தாமுணர்ந்த ஞானத்தை சிவஞானபோத நூலாக வெளியிட்டார். இந்நூலில் உரைநடைப் பகுதியும், செய்யுட் பகுதியும் காணப் படுகிறது. செய்யுட்பகுதியில் 12 சூத்திரங்களும், 81 வெண்பாக்களும் இடம்பெறுகின்றன. பொது அதிகாரம், உண்மை அதிகாரமென இருபிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. பொது அதிகாரத்தில் பிரமாணவியல், இலக்கணவியல் என்ற பகுதிகளும், உண்மை அதிகாரத்தில் சாதனவியல், பயனியல் என்ற பகுதிகளும் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு பகுதிகளிலும் மும்மூன்று சூத்திரங்களாகப் பன்னிரண்டு சூத்திரங்கள் இடம்பெறுகின்றன.

சிவஞானபோதம் முதலாம் சூத்திரம் பதி உண்மையை விளக்குகிறது. அதாவது உலகினுண்மையைக் கொண்டு பதியுண்மை விளக்கப் பட்டுள்ளது. "உலகம் தோன்றுதல், நிலைபெறுதல், ஒடுங்குதல் என்ற மூன்று தொழில்களையுடைமையினால் அது ஒருவனால் தோற்றுவிக்கப்பட்ட உள்பொருள் உலகின் ஒடுக்கத்திற்குக் காரணமாக உள்ள" இறைவனை அதன் தோற்றத் திற்கும் காரணம் என்று கடவுள்மையை வலியுறுத்தியிருப்பதைக் காணலாம்.

இரண்டாவது சூத்திரத்தில் பாசங்களினுண்மை கூறப்பட்டுள்ளது. "இருவினையில் போக்குவரவு புரிய ஆணையின் நீக்கமின்றி நிற்கும் அன்றே" என்ற அடிகளில் இருவினை என்பது, நல்வினை தீவினை ஆகிய கன்மங்களைப் குறித்து நிற்கிறது. ஆன்மாக்கள் ஆணவமலத்தின் காரணமாக அறியாமைக் குட்பட்டு, கன்மங்களைச் செய்து அதன் காரணமாகப் பிறவிக்குட்படுகின்றன. பிறவி என்று கூறும்போது ஆன்மாக்கள் புதிய உடலைப் பொருந்துதல் என்று விளக்கம் கூறலாம். அவ்வுடல் மாயையில் இருந்து கிடைக்கப்பெறும். எனவே சிவஞானபோதம் 'இருவினையில் போக்குவரவு புரிய' எனக்கூறும் போது கன்ம மலத்தின் உண்மை விளக்கப்பட்டாலும் ஏனைய ஆணவம், மாயை போன்ற மலங்களைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம்.

சைவசித்தாந்திகளது ஆன்மா பற்றிய கருத்துக்களை நோக்கும் இடத்து முதலில் ஆன்மாவின் உண்மைத் தன்மை விளக்கப்படுவதைக் காணலாம். ஆன்மாவினுண்மையை சிவஞானபோதம் 3ம் சூத்திரம் விளக்கிநிற்கிறது.

"உளது இலது என்றலின், எனதுடல் என்றலின்
ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின், கண்படில்
உண்டிவினையின்மையின், உணர்த்த உணர்தலின்
மாயா இயந்திர தநுவினுள் ஆன்மா"

பௌத்தர்கள், உலகாயதர்கள் போன்றோர் ஆன்மா என ஒன்றில்லை எனக்கூறும்போது, அவ்வாறு இல்லையெனத் துணிந்து கூறுவதற்குக் காரணமாக உள்ள சக்தியே ஆன்மாவாகும். ஒருவன் எனது உடல் என்று கூறும்போது உடலுக்கு வேறாக உள்ளதே உயிர் என்பதைத் அறியலாம். மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகளும் ஐம்புலன்களை அறியுமேயன்றி, ஒரு பொறியே எல்லாவற்றையும் அறிவதில்லை. அத்துடன் ஒவ்வொரு பொறியும் ஒவ்வொரு தொழிலைச் செய்யுமேயன்றி ஒன்று இன்னொன்றின் தொழிலைச் செய்யாது. ஆனால் ஐம்பொறி புலன்களால் வரும் ஐந்து பயன்களையும் அறிகின்ற ஆன்மா, அவற்றைத் தனித்தனி அறியவும், ஐம்பொறிகளுக்கு வேறாக உள்ளது. நனவு நிலையில் ஐம்பொறிகளும் தொழிற்படுகின்றன. ஆனால் கனவு நிலையில் அறை ஒடுங்கி நிற்கும் இயல்பினையுடையவை. அக்கனவு நிலையிலும் விடயங்களை அறியும் ஆன்மா ஐம்பொறிகளுக்கும் வேறாக உள்ளதாகும். உறக்கத்தின்கண் இன்பதுன்ப நிகழ்ச்சியும், நுகர்ச்சியும், தொழிற்படும் உடம்புக்கு இல்லாமைக்கும், விழிப்பு நிலையில் அவற்றின் உண்மைக்கும் காரணமாக ஆன்மா என்பது ஒன்றுண்டு. ஆன்மாவானது உணர்த்தினால் உணரும் தன்மையுடையது. அது சிற்றறிவுடையதாகும். எனவே பேரறிவுடைய இறைவனின்றும் வேறாக ஆன்மா என ஒருபொருளுண்டு. அது மாயையின் காரியமாகிய ஒருவனது உடலினுள்ளே உளது என இப்பாடல் விளக்குகிறது.

ஆன்மாவின் உண்மைத் தன்மையை விளக்குகின்ற சைவசித்தாந்தம் ஆன்மாக்களின் இலக்கணத்தைக் கூறுமிடத்து 'அந்தக் கரணம் அவற்றுள் ஒன்றன்று' எனக் கூறுகிறது. அதாவது மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற அந்தக் கரணங்கள் நான்கினும் வேறாக உள்ளதே ஆன்மாவாகும். ஆணவமலத்தினால் உணர்வு இன்றி அமைச்சரோடு கூடிய அரசர்போல, அந்தக் கரணங்களோடு கூடி நின்று சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்ற ஐந்து அவஸ்தைகளுக்குட்படும் எனக்கூறுகிறது.

ஆன்மாக்களின் அவஸ்தைகளுக்குக் காரணம், ஆணவம், கன்மம், மாயை என்ற பாசங்களாகும். இவற்றின் இலக்கணம் ஐந்தாம் சூத்திரத்தில் விளக்கப்பட்டுள்ளது. அதாவது மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகளும் தத்தம் விடயங்களை இன்னதென்று அளவிட்டு அறிந்தும், அங்ஙனம் அறியும் தம்மையும், தம்மைச் செலுத்தி நிற்கும் உயிரையும் அறியமாட்டாது. இவ்வைம்பொறிகளைப்போல ஆன்மாக்கள் தமது உணர்விற்கு முதலாகிய இறைவனது திரோதான சக்தியினால் வினைப் பயன்களை அறிந்து, நுகர்ந்தும், தம்மையும், தம்மைச் செலுத்தி நிற்கும் திருவருளையும் அறியமாட்டாது. காந்தத்தைக் கண்ட இரும்பு அதன் முன்னிலையிற் தொழிற்படுவதுபோல, இறைவனது முன்னிலையில் உயிர்கள் ஐந்து அவஸ்தைகளினின்று வினைப் பயன்களை அறிந்து நுகரும் இயல்பினவாகும். மறைந்து நின்று உபகரிக்கும் முதல்வனது சக்தி மறைப்புச் சக்தி அல்லது திரோதான சக்தி எனப்படும். திரோதான சக்தியினால்தான் மாயை, கன்மம் எனும் பாசங்கள் காரியப்படும். இவ்வாறு திரோதான சக்தியின் இலக்கணம் விளக்கப்படுவதன் மூலம் பாசங்களின் இலக்கணம் கூறப்படுகிறது.

சைவசித்தாந்தக் கருத்துப்படி ஆன்மாக்களுக்கு மோட்சத்தை அருளுபவன் இறைவன். அவ்விறைவனுக்குரிய இலக்கணத்தை சிவஞானபோதம் ஆறுவது சூத்திரம் தெளிவுபடுத்துகிறது. அதாவது 'இறைவன் கருவி காரணங்களினால் உணரப்படும் பொருளாயின் அழியக்கூடிய அசத்துப் பொருளாகும். எவ்வாற்றானும் உணர முடியாத பொருளாயின் அது இல்பொருளாகும். ஆனால் இவ்விரண்டு இயல்புமின்றி பசு, ஞானம், பாசஞானம் ஆகியவற்றினால் அறியப்படாத , பதிஞானம் ஒன்றினால் அறியப்படும் இயல்புடைய சிவசத்து' எனக் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு பதி, பசு, பாசம் எனும் முப்பொருளுண்மையை விளக்குவதுடன் ஆன்மாக்களின் மேலான இலட்சியம் மோட்சம் என்ற கருத்தையும் வலியுறுத்துகின்றன. மோட்சத்திற்குரிய ஆன்மாக்களின் சிறப்பிலக்கணத்தை சிவஞானபோதம் ஏழாம் சூத்திரம் கூறுகிறது. சத்துப்பொருளாகிய இறைவனின் முன்னால் உலகப் பொருட்கள் யாவும் இல்பொருட்களே ஆகும். இதனால் சத்தாகிய சிவன் உலகத்தை அறிந்து அனுபவியாது அசத்தாகிய உலகப் பொருட்கள் அறிவில்லாதவை. ஆதலினால் இறைவனை அறிந்து அனுபவிக்க மாட்டாது. சத்தும் அசத்தும் ஆகிய இரண்டும் அல்லாமல் 'சதசத்து' என்று ஆன்மா அழைக்கப்படுகிறது.

சதசத்தாகிய ஆன்மாக்களுக்கு, அவை முனசெய்த புண்ணிய விசேடத்தால் இறைவன் குருவடிவாக எழுந்தருளி வந்து; ஐம்பொறிகளாகிய வேடங்களோடு சேர்ந்து அறியாமல் மயங்கித் துன்புற்றாய் என்று ஆன்மாக்களுக்கு அறிவிக்க, ஆன்மாக்கள் பொறிகளைவிட்டு நீங்கி, தமக்கும் இறைவனுக்கும் வேறுபாடின்மையை உணர்ந்து இறைவனது திருவடிகளை இணைந்து நிற்கும் என்பதை எட்டாம் சூத்திரம் விளக்குகிறது.

பாச அறிவினாலும், பசு அறிவினாலும் உணரமுடியாத பதியை அவனது திருவடி ஞானமெனும் சிவஞானத்தால் அறியும்போது பாசங்கள் நீங்க, பதியானது குளிர்ந்த நிழலாய் வெளிப்பட்டுத் தோன்றும். இந்நிகழ்ச்சி இடையறாது நிகழ்தற்பொருட்டு விதிப்படி திருவைந்தெழுத்து ஓதப்படும். திருவைந்தெழுத்தோதும் முறையை ஒன்பதாம் சூத்திரம் விளக்கி நிற்கிறது.

இறைவன் உயிர் தானேயாய நின்ற அப்பெத்தநிலை நீங்கி உயிரானது அவ்விறைவனேயாகும்படி ஒற்றுமைப்பட்டு நின்று இறைவனுக்குரிய தொண்டுகளைச் செய்து வழுவாது ஒழுகின் ஆணவம் மாயை ஆகியவற்றுடன் வலிய கன்ம மலமும் இல்லையாகிவிடும் என்று சிவஞானபோதம் பத்தாம் சூத்திரம் விள்க்குகிறது.

இவ்வாறு பாசம் நீங்கிய ஆன்மாக்கள் சிவப்பேற்றினைப் பெறும் நிலை பதினோராம் சூத்திரத்தில் விளக்கப்பட்டுள்ளது. காட்டக் காண்பதாகிய கண்ணுக்கு, உருவத்தைக் காணும்படி காட்டித், தான் காண்கின்ற உயிரைப் போல, அறிவிக்க அறிவதாகிய உயிருக்கு, பிறப்பின்றி நின்று நுகர்பொருளை அறியும்படி அறிவித்து முதல்வன் தான் அறிந்து வருவதலினால், அவ்வன்பினால் அவ்விறைவனது திருவடிகளை அணைந்து நிற்கும்.

சைவ சித்தாந்தம் கூறும் சீவன்முத்தியை சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திரம் விளக்கி நிற்கிறது.

> செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
> அம்மலம் கழீஇ, அன்பரோடு மரீஇ
> மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
> ஆலயந் தானும் அரன் எனத் தொழுமே.

இறைவனது சிவந்த தாமரை மலர்போன்ற தாங்குகின்ற திருவடிகளைச் சேரவிடாது தடுக்கின்ற இயல்பினையுடைய மலங்களின் அழுக்கினைக் கழுவி, மெய்ஞானிகளுடன் கலந்துகூடி மயக்கம் நீங்க அன்புமிக்கவர்களாகிய அடியார்களின் சிவேடத்தையும், சிவாலயத்தையும் முதல்வன் என்றே கண்டு வழிபடுபவர்கள் சீவன்முத்தர்களாவர் என்று கூறுகிறது.

இவ்வாறு சிவஞானபோதம் பன்னிரண்டு சூத்திரங்களும் சைவ சித்தாந்த தத்துவக் கருத்துக்களைச் சுருங்கிய நடையில் தெளிவுபடுத்துகின்றன. முதலாம் சூத்திரத்தில் பதியுண்மையும், இரண்டாம் சூத்திரத்தில் பாச உண்மையும், மூன்றாம் சூத்திரத்தில் பசு உண்மையும், நாலாம் சூத்திரத்தில் பசு இலக்கணமும், ஐந்தாம் சூத்திரத்தில் பாச இலக்கணமும், ஆறாம் சூத்திரத்தில் பதிஇலக்கணமும், ஏழாம் சூத்திரத்தில் மோட்சமடைவதற்குரிய ஆன்மாக்களின் சிறப்பிலக்கணமும், எட்டாம் சூத்திரத்தில் இறைவன் குருவடிவாக எழுந்தருளி வந்து உண்மையை உபதேசித்தலும், ஒன்பதாம் சூத்திரத்தில் ஐந்தெழுத்தோதலும், பத்தாம் சூத்திரத்தில் பாச நீக்கமும், பதினோராம் சூத்திரத்தில் சிவபேறும், பன்னிரண்டாம் சூத்திரத்தில் சீவன்முத்தியும் விளக்கப்பட்டுள்ளன.

(9) தென்கிழக்காசிய நாடுகளில் இந்து நாகரீகத்தின் பல்வேறு அம்சங்கள் பலவியவாற்றை விளக்கிக் கூறுக.

தென்கிழக்காசிய நாடுகளுக்கும் இந்தியாவிற்குமிடையே கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்தில் இருநதே வர்த்தக ரீதியான தொடர்புகள் இருந்து வந்தமையை அறியலாம். இதன்விளைவாக அந்நாடுகளில் இந்து நாகரீகம் பரவ முடிந்தது. தென்கிழக்காசிய நாடுகளை இருபெரும் பிரிவாகப் பிரித்து அந்த நாடுகளில் ஏற்பட்ட இந்துநாகரீகச் செல்வாக்கை அறிஞர்கள் விளக்குவர். அவை அந்தோனேசியா, இந்தோசீனு போன்றனவாகும். பர்மா, தாய்லாந்து, மலேசியா, கம்போடியா, சம்பா போன்ற நாடுகள் இந்தோசீன நாடுகள் என்றும், யாவா, சுமாத்திரா, போர்னியோ, பாலித்தீவுகளை உள்ளடக்கியது இந்தோனேசியா எனவும் கூறுவர். இப்பிரதேசங்களில் பெரும்பாலானவற்றுள் கி,மு. 2ம் நூற்றாண்டிலிருந்து கி.பி.15ம் நூற்றாண்டுவரை இந்துநாகரீகச் செல்வாக்கு இடம்பெற்றமையையும், பின்னர் இஸ்லாமியச் செல்வாக்கு ஏற்பட்டமையையும் காணலாம். இவற்றில் பாலித்தீவில் இன்றும்குறிப்பிடத்தக்க அளவில் இந்துநாகரீகம் செல்வாக்குப் பெற்று விளங்குவதைக் காணலாம்,

தென்கிழக்காசிய நாடுகள் பற்றி பாரதம், இராமாயணம் போன்ற இதிகாசங்களிலும், புராணங்களிலும், அர்த்தசாஸ்திரத்திலும் குறிப்புகள் உள்ளன. இந்நூல்கள் தென்கிழக்காசிய நாடுகள் அனைத்தையும் கூட்டாக 'சுவர்ணதீபம்' அல்லது 'சுவர்ணபூமி' என்று அழைக்கின்றன. இந்நாடுகள் செல்வவளம் மிக்க நாடுகளாக விளங்கின. பெரும்பாலும் உலோகப்பொருட்கள், இரத்தினக் கற்கள், சந்தனம், அகில் முதலிய வாசனைப்பொருட்கள் பெருமளவில் இந்நாடுகளிற் காணப்பட்டன. இப்பொருட்களுக்கும் இந்திய மக்களுக்கும் இடையே ஏற்பட்ட தொடர்பு இந்துநாகரீகம் அந்த நாடுகளில் பரவுவதற்குப் பெரும்வாய்ப்பை அளித்தது. தென்கிழக்காசிய நாடுகள் இந்தியாவுக்கு அண்மையில் இடம்பெற்றமையினலும், இவற்றின் கரையோரங்களில் இந்தியாவுடன் தொடர்புடைய வர்த்தகப் பாதைகள் ஆதிகாலந்தொட்டுக் காணப்பட்டமையினலும் அப்பிரதேசங்களை அடைய முடிந்தது. இந்தியப் பேரரசுகள் இந்நாடுகளுடன் தொடர்பு கொண்டிருந்த காலப்பகுதிகளில் கிரேக்க ரோம அரசுகள் பேரரசுகளாகத் திகழ்ந்தன. இக்கால ரோம சமூகத்தில் அமைதியும் வியாபார அபிவிருத்தியும் ஏற்பட்டமையால் சகல ஐஸ்வரியங்களும் படைத்த வகுப்பினர் தோன்றினர். ஆரம்பத்தில் போர்வீரர்களாகவும், விவசாயிகளாகவும் விளங்கிய மக்கள் இப்போது நிலச்சொந்தக்காரர்களாகவும், நிர்வாகிகளாகவும், அதிகாரிகளாகவும் விளங்கினர். எனவே, எளிமையும், வலிமையுங் கொண்ட வாழ்க்கையைவிட்டு சுகபோகங்கொண்ட ஆடம்பர வாழ்க்கையை வாழ விரும்பினர். பெண்களும், ஆடம்பரப் பொருட்களை நாடினர். இதனல் பட்டு, இரத்தினம், அகில், சந்தனம், முத்து போன்ற பொருட்களுக்கும் உலோகப் பொருட்களுக்கும் தேவை அதிகரித்தது. இப் பொருட்களைத் தென்கிழக்காசிய நாடுகளிலிருந்தும் பெறவேண்டிய தேவை இருந்தது. இந்திய மக்கள் பலர் தென்கிழக்காசிய நாடுகளுக்குச் சென்று இப்பொருட்களைப் பெற முற்பட்டனர். இவ்வாறு வர்த்தக ரீதியாகச் சென்ற மக்கள் பலர் அங்கு சென்று குடியேறினர். இத்தகைய குடியேற்றங்களினல் சுதேசிய மக்களிடத்தில் இம்மக்களின் சமுதாய அமைப்பு, சமயம், வழிபாட்டு முறைகள், பழக்க வழக்கங்கள் போன்றன செல்வாக்கை ஏற்படுத்தின. நாகரீகத்தில் பின்தங்கிய மக்களிடத்தில் மொழி, இலக்கியம் ஆட்சியியல், கலை ஆகியவற்றில் நன்கு வளர்ச்சியடைந்திருந்த இந்துநாகரீகம் தனது செல்வாக்கை ஏற்படுத்துவது இலகுவானதாக இருந்தது. மேலும் தென்கிழக்காசிய நாடுகளுக்குச் சென்று குடியேறிய மக்கள் அந்நாட்டு மக்களுடன் மண சமுதாய உறவுகளை ஏற்படுத்திக் கொண்டார்கள். இதன் காரணமாகவும் இந்து நாகரீகம் இந்நாடுகளில் செல்வாக்கைப் பெறமுடிந்தது.

பர்மாவில் மிகப் பழைய காலந்தொட்டு இந்துநாகரீகம் செல்வாக்குப் பெற்றிருந்தது, பர்மாவின் பிரசித்திபெற்ற மிகப்பழைய நகரமான              எனும் நகரத்தில் புதைபொருள் அகழ்வாராய்ச்சியை நடத்திய ஹார்வே என்பவர் 'அகழ்வுகள் பெரும்பாலும் இந்துமதச் சார்புடையவை எனவும், பிற்காலத்தில் பர்மா பௌத்தமதச் சார்புடையதாக ஆனபோதிலும், இந்துக்கள் பௌத்தர்களுடன் தமது கோவில்களுக்குச் சென்று வழிபட்டனர்' எனவும் கூறுகிறார். கி.மு.2ம் நூற்றாண்டளவில் ஆரம்பித்த பெரிய வர்த்தக இயக்கமானது இந்நாடுகளுக்குச் சென்றதன்

விளைவாகவே இப்பகுதிகளில் இந்துநாகரீகம் பரவ முடிந்தது. கிறீஸ்து சகாப்தத்தின் முற்பகுதியில் தென்னிந்திய வர்த்தகர்களுக்கும், பர்மாவிற்கும் இடையே தொடர்பு இருந்ததெனவும், தென்னிந்தியாவின் கிழக்குக் கரையிலிருந்து பர்மாவிற்குப் பெருந்தொகையான கப்பல்கள் செல்வதைத் தாம் கண்டதாகவும் தொலமி என்பவர் கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

கம்போடியாவில் பூனன் என்ற இராச்சியமே இந்துக் குடியேற்ற நாடாக விளங்கியது. இங்கு கி.பி.2ம் நூற்றாண்டளவில் இந்து மதத்தை மேற்கொண்ட மன்னர்கள் ஆட்சிபுரிந்தனர் எனவும், அவர்கள் தம் முன்னோர்கள் அந்தியாவிலிருந்து வந்தனர் எனவும் மரபுக் கதைகள் கூறுகின்றன. கி.பி.4ம் நூற்றாண்டின் இறுதியில் கௌடினயன் என்ற அரசன் ஆட்சி புரிந்தான் எனவும் இவன் பிராமணகுலத்தைச் சேர்ந்தவன் எனவும், இந்தியாவில் இருந்து வந்தான் எனவும், இந்திய வழமைகளையும் கோட்பாடுகளையும் பழக்கவழக்கங்களையும் நாட்டில் புகுத்தியதாகவும் அறிய முடிகிறது.

இராச்சியம் கி.பி.7ம் நூற்றாண்டளவில் செல்வாக்கை இழக்க கம்போடியா முதன்மை பெற்றது. இங்கு ஆட்சி செய்த பவவர்மன் சிறந்த சிவபக்தனுவான். அவன் நாலு சிவாலயங்களைக்கட்டுவித்து, நாட்டிலுள்ள பலகோவில்களிலும் சிவலிங்கங்களைப் பிரதிஷ்டை செய்வித்தான். இதிகாசங்களையும் புராணங்களையும் பாராயணஞ் செய்யும் வழக்கத்தையும் ஏற்படுத்தினுன். இங்கமைந்த கோவில்களில் அங்கோர்வாத எனுமிடத்திலுள்ள திருமால் கோவில் மிகவும் சிறப்புடையது. இக்கோயிற் கருவறையில் கருட வாகனத்தின் மீது எழுந்தருளியிருக்கும் விஷ்ணுவின் சிலை பொன்னுற் செய்து வைக்கப்பட்டுள்ளது. இக்கோயிற் சுவர்களில் இருக்கும் இராமாயண, பாரதக் கதைகள், விஷ்ணு புராணம் கூறும் கருத்துக்கள் ஓவியங்களாக இடம்பெற்றுள்ளன.

சம்பா நாட்டினை எடுத்துக்கொண்டால் நூற்றுக்கு மேற்பட்ட கல்வெட்டுக்கள் கிடைத்துள்ளன. இவற்றுள் 90க்கு மேற்பட்டவை இந்துமதச் சார்பானவை. சம்பாநாட்டில் மைசான், போநகர், டொங்-டோங் போன்ற நகரங்களில் பிரதான ஆலயங்கள் இருந்ததாக அறியமுடிகிறது. நகரில் பத்திரவர்மனுல் அமைக்கப்பட்ட ஆலயம் பத்திரேஸ்வரம் என்று அழைக்கப்பட்டது. இக்கோவில் 5ம், 6ம் நூற்றாண்டுகளில் தீப்பற்றி எரிந்து அழிவுற்றதால் சம்புவர்மன் எனும் அரசன் அதனை மீண்டும் புதுப்பித்து அதற்கு சம்புபத்திரேஸ்வரம் என்ற பெயரை இட்டான். இவ்வாறு சம்பாவில் இந்துமதம் நன்கு செல்வாக்கும் பெற்றிருந்தது.

போர்ணியோவில் அகத்திய வழிபாடு இடம்பெற்றமைக்குச் சான்றுகளுண்டு. வடபோர்ணியோவில் சரவக் என்ற இடத்தில் காணப்பட்ட கணேசர் வடிவம் மேற்குப் போர்ணியோவில் எடுக்கப்பட்ட லிங்க அமைப்புக்கள் தென்னிந்தியரால் சிறப்பாக தமிழரால் போர்ணியோ பழங்காலத்திலேயே குடியேற்றப்பட்டது என்பதற்குச் சான்றுக உள்ளது.

தென்கிழக்காசிய நாடுகளில் இந்துநாகரீகச் செல்வாக்குப் பெற்றிருந்த நாடுகளில் ஜாவா மிகவும் சிறப்புடையதாகும். கி.பி.132 அளவில் ஜாவா தேவவர்மன் ஆட்சி செய்ததாகச் சீன நூல்கள் கூறுகின்றன. கி.பி.2ம் நூற்றாண்டளவில் கலிங்கத்திலிருந்து 20,000 இந்தியக் குடும்பங்கள் ஜாவாவில் வந்து குடியேறியதாகக் கூறப்படுகின்றது. பூர்ணவர்மன் என்ற மன்னன் ஒரு பெருங் கால்வாயை வெட்டியதாகவும், அதன் திறப்பு விழாவில் 1000 பசுக்களைப் பார்ப்பனருக்கு அளித்ததாகவும் துரு என்ற இடத்தைச் சேர்ந்த கல்வெட்டு ஒன்று கூறுகிறது. சீன யாத்திரீகனுன பாஹியன் கி.பி.4ம் நூற்றாண்டளவில் ஜாவாவுக்கு வந்தபோது அங்கு சில பௌத்தர்கள் எஞ்சியிருந்தபோதும் பிராமணமதமே உச்சநிலையில் இருந்தது. என்று கூறுகிறுர். ஜாவாவில் உள்ள பெரம்பனுன் இந்துக் கோயில்கள் புகழ்பெற்றவை. இங்கு சிறுசிறு ஆலயங்களாக 150 ஆலயங்கள் ஒரு பெருங்கோபுரத்தைச் சுற்றியமைக்கப்பட்டுள்ளன. இராமாயண பாரதக் கதைகள் சிற்ப வடிவில் இடம் பெறுகின்றன. அகத்தியர் சிவன் போன்றோரது உருவங்கள் கையில் ஏட்டுடன் காணப்படுகின்றன.

தாயிலாந்து மன்னர்களின் முடிசூட்டுவிழாவில் தமிழ்ப் பாடல்கள் பாடப்படுவதாக அறிகிறோம். பாங்கொக்கில் உள்ள கோயில்களில் பார்ப்பனர் மாணிக்கவாசகரது திருவெம்பாவையிலிருந்து சில பகுதிகளை இன்றும் பாடிவருகின்றனர். தாயிலாந்துக் கோவில்களில்

நடைபெறும் ஆசாரங்களும், சடங்குகளும் தென்னிந்தியக் கோவில்களில் நடப்பனபோலவே காணப்படுகிறது. இவ்வாறு வர்த்தக ரீதியாகவும், அதன் காரணமாக குடியேற்றங்களினூடும் தென்கிழக்காசிய நாடுகளில் இந்துநாகரீகம், அரசியல், சமயம், சமூகம், கலைகள் ஆகிய துறைகளில் தனது செல்வாக்கை ஏற்படுத்தியமையைக் காணலாம்.

(19) போர்த்துக்கேயர் இலங்கைக்கு வருவதற்கு முன்பு, இலங்கையில் இடம்பெற்ற இந்துசமய வளர்ச்சியை வரலாற்றுமுறையில் ஆராய்க.

இலங்கையில் வரலாற்றுக்காலம் பௌத்த மதம் உத்தியோக பூர்வமாகப் பரப்பப்படுவதுடன் தோன்றுகிறது. கி.மு.3ம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் தேவநம்பியதீசனது ஆட்சிக் காலத்தில் மகிந்ததேரரால் பௌத்த மதம் பரப்பட்டது. இக்காலப் பகுதியிலேயே எழுத்தாதாரங் களும் கிடைக்கின்றன, இவ்வெழுத்தாதாரங்கள் குகைகளிலேயே இடம் பெறுகின்றன. கி.மு.3ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலப் பகுதியில் வர லாற்றுக்கு முற்பட்ட காலங்களாகவே கொள்ளப்படுகிறது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இலங்கையில் இந்துமதம் காலத்துக்குக் காலம் செல்வாக்குப் பெற்று வளர்ச்சியடைந்து வந்துள்ளமையை நோக்கலாம். வரலாற்றுக்கு முற்பட்ட இந்துமதம் பற்றி அறிவதற்குத் தெளிவான சான்றுகள் இல்லையாயினும் வரலாற்று ஆசிரியர்கள் தருகின்ற குறிப்புக்களிலிருந்தும், சமகால இந்திய இலக்கியங்களிலிருந்தும், இலங்கை வரலாற்று நூலான மகாவம்சம் தரும் தகவல்களிலிருந்தும், கி.மு.3ம் நூற்றாண்டில் கிடைக்கின்ற பிராமி குகை சாசனங்கள் தருகின்ற குறிப்புக்களிலிருந்தும் ஓரளவுக்கு அறிந்து கொள்ளலாம். வரலாற்றுக் காலங்களில் அநுரதபுரிக் காலம், பொலனறுவைக் காலம், பாண்டிய விஜயநகரக் காலம், யாழ்ப்பாண இராச்சியக்காலம் போன்ற காலப்பகுதிகளில் இடம்பெற்ற இந்துமதம் பற்றிய கருத்துக்களை வரலாற்றுக் குறிப்புக்கள். கல்வெட்டுக் குறிப்புகளில் இருந்தும் அறிந்து கொள்ளலாம்.

இந்தியப் புராதன இலக்கியங்களில் இராமாயணம் மிகவும் சிறப்புடையது. இராமாயணத்திற்கும் இலங்கை மன்னன் இராவணனுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. இராமாயணம் இராவணனைப் பற்றித் தரும் குறிப்புக் களில் இருந்து வரலாற்றிற்கு முற்பட்ட காலத்தில் ஈழத்தில் இந்துமதம் நன்கு வளர்ச்சியடைந்திருந்ததென்பதை அறிந்துகொள்ளலாம். இராவணன் சிவபக்தன் எனவும் இராமாயணம் கூறுகிறது. இராவணன் சிவலிங்க வழிபாடுடையவன் எனவும், அவன்தான் செல்லுமிடமெங்கும் சிவலிங்கமொன்றை எடுத்துச்சென்று முறைப்படி பூசித்தான் எனவும், அதனை 108 நாமங்களினால் அர்ச்சித்து வழிபட்டான் எனவும் இராமாயணம் கூறுவதிலிருந்து சிவ வழிபாட்டின் சிறப்பினை அறிந்து கொள்ளலாம். அத்துடன் இராவணன் காலத்திலும் அவன் தம்பி விபீஷணன் காலத்திலும் இலங்கையிற் பல சிவதேவாலயங்கள் கட்டப்பட்டதாக அறியமுடிகிறது.

மகாவம்சம் தருகின்ற குறிப்புக்களை நோக்குமிடத்து விஜயன் இலங்கைக்கு வந்தமை வரலாற்றுப் புகழ்மிக்க ஒருநிகழ்ச்சியாகக் கூறப்பட்டு உள்ளது. விஜயன் இலங்கைக்கு வரும்போது அவனுடன் உபதிஸ்ஸ என்ற பிராமண ஒருவன் இலங்கை வந்ததாகவும் அவன் அநுராதபுரத்திற்கு வடக்கே 'உபதிஸ்ஸகாம' என்ற கிராமத்தை அமைத்தான் எனவும் அறியமுடிகிறது. மகாவம்சம் கி.மு.4ம் நூற்றாண்டுக் காலப்பகுதியைச் சேர்ந்த பண்டுகாபயன் என்ற அரசன் 'ஸோதிசாலா', 'ஸிவிக்கசாலா' என்ற இரு மண்டபங்களைக் கட்டினான் என்று கூறுகிறது. இவற்றுள் 'ஸிவிக்கசாலா' என்பதனை சிவலிங் கத்தைக் கொண்டுள்ள வீடு என்று மகாவம்ச உரைநூல் கூறுகின்றமையால் அக்காலப் பகுதிகளில் சிவவழிபாடு சிறப்புற்றிருந்திருக்கலாம் என அறிய முடிகிறது.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே வர்த்தக அரசியல் ரீதியான தொடர்புகள் இடம்பெற்று வந்திருப்பதைக் காணலாம். வர்த்தக நோக்கம் காரணமாக இலங்கை வந்தவர்கள் துறைமுகப் பகுதிகளிற் தங்கித் தமது வர்த்தக விடயங்களை அவதானித்ததுடன், தமது வழிபாட்டு முறைகளைப் பேணிப் போற்றியிருக்கலாம். இந்த வகையில் கரையோரப் பகுதிகளில் சிவ தேவாலயங்கள் கட்டப்பட்டிருக் கலாம் என வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். பீரிஸ் என்பவர் "விஜயன்

இலங்கைக்கு வருவதற்கு அதிக காலத்திற்கு முன்னரேயே இலங்கையிற் கருத்திற் கொள்ளத்தக்கனவும், முழு இந்தியாவின் வழிபாட்டிற்குரியனவுமான ஐந்து சிவதேவாலயங்கள் இருந்தன எனவும், அவை திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், முனீஸ்வரம், மாந்தோட்டையில் அமைந்த தண்டேஸ்வரம், நகுலேஸ்வரம் என்பன' என்று கூறுகிறார். இதிலிருந்து பௌத்தம் இலங்கையிற் பரப்பப்படுவதற்கு முன்னர் ஈழத்தில் இந்துமத வழிபாடே சிறப்புற்று இருந்தது என்று கூறலாம்,

பண்டைக்காலந்தொட்டுப் பிராமணர்கள் மன்னர்களுக்கு ஆலோசகர்களாகவும், ஆசிரியர்களாகவும், வைத்தியர்களாகவும், சமயச் சடங்குகளைச் செய்பவர்களாகவும் அரசவையிற் செல்வாக்குப் பெற்றிருந்தனர். தேவநம்பியதீசனுக்கு 'கோபூதி' என்ற பெயரையுடைய பிராமணன் ஆசிரியனை, ஆலோசகனுக, வைத்தியனுக இருநததமைக்குச் சான்று கிடைக்கிறது. பிராமணர்களின் செல்வாக்கை நோக்கும்போது அவர்களது மதமாகிய பிராமண மதமும் செல்வாக்குப் பெற்றிருக்க வேண்டும். என்பதை ஊகித்து அறிந்து கொள்ளலாம். இவ்வாறு பௌத்தம் பரப்பப்படுவதற்கு முன்னர் ஈழத்தில் இந்துமதமே இடம்பெற்றிருந்தது என்பதையும், சிவவழிபாடே சிறந்து விளங்கியதென்பதையும் அறிந்து கொள்ளலாம்.

பௌத்த மதம் இலங்கையிற் பரப்பப்பட்டபோது ஆட்சி செய்துகொண்டிருந்த தேவநம்பியதீசன் பௌத்தத்தைப் பபின்பற்றியதனுல் மக்கள் பலரும் மன்னனைத் தொடர்ந்து பௌத்தர்களாயினர். கி.பி.1ம் நூற்றாண்டைச் சேர்ந்த திஸ்ஸமகாராமையில் கிடைத்த கல்வெட்டு ஒன்று அங்கு ஆட்சிசெய்த இளவரசன் ஒருவன் பௌத்தத்திற்கு மதம் மாறினுன் என்ற செய்தியைத்தருகிறது. இதிலிருந்து பௌத்தம் பரப்பப்பட்டபின்னரும் இந்துமதம் செல்வாக்கும் பெற்றிருந்தது என்பதையும் மன்னர் அம்மதத்தைப் பின்பற்றினர் என்பதையும், பிற்பட்ட காலத்திலேயே பௌத்தத்தைத் தழுவினர் என்பதையும் அறியலாம்.

பிற்பட்ட காலங்களில் இந்துமதத்திற்கு அரச ஆதரவும் இல்லாமையினுல் அது வளர்ச்சியடைய முடியவில்லை. குறிப்பாக கி.பி. 3ம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் ஆட்சிசெய்த மகாசேனன் தீவிர பௌத்தமதவாதியாக இருந்து அம்மதத்தையே வளர்த்தான். மகாவம்ச உரைநூல் 'இலங்கைத் தீவுமுழுவதிலும் பௌத்தமத நம்பிக்கையற்ற மக்களது ஆலயங்களை அழித்து சிவலிங்கம் போன்றவற்றை ஒழித்து புத்தசாதனத்தை நிலைநாட்டினுன்' என்று கூறுவதிலிருந்து இவ்வது காலப்பகுதியில் இந்துமதம் தன்செல்வாக்கை இழந்துவிட்டது என்பதை அறியலாம். கி.பி.4ம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் கீர்த்திஸ்ரீமேகன் அநுரதபுரத்தை அடைந்தபோது மாதோட்டத்தில் 'அழகிய சிவதேவாலயம்' ஒன்று இருந்ததாகத் 'தடாவம்ச' என்ற நூல் கூறுகிறது. தமிழ்நாட்டில் கி.பி.6ம் நூற்றாண்டின் பின்பாக ஏற்பட்டபக்தி இலக்கியத்தின் விளைவாக சமய மறுமலர்ச்சி, இலங்கையில் இந்துமதச் செல்வாக்குக் காரணமாயிருந்தது. இக்காலப் பகுதியில் தமிழகத்துக்கும், இலங்கைக்கும் இடையே வர்த்தகத் தொடர்புகளும் அதிகரித்திருந்தன. இலங்கைக்கு வந்த வர்த்தகர்களினுல் துறைமுகப் பகுதிகளிலிருந்த சிவாலயங்கள் புதுப்பிக்கப் பட்டிருக்கவேண்டும் என்று கருதப்படுகிறது. இக்காலப் பகுதியிலேயே திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், போன்ற சிவத்தலங்களும் நாயன்மார்களினுற் பாடப்பட்டது. பௌத்த மதத்திலும் இந்துக் கடவுள்களான விஷ்ணு, இந்திரன், பிரமன், யமன், வருணன் போன்ற கடவுள்கள் வணங்கப்பட்டனர். வருணனுக்குரிய கோவில் 'தேவுந்தர' எனுமிடத்திலுள்ள 'உபுல்வன்' ஆலயமாகும். இவ்வாறு கி.பி.10ம் நூற்றாண்டுக் காலப்பகுதி வரைக்கும் இந்துமதம் அழியாத ஒருமதமாக நிலைபெற்றிருந்தது.

சோழ மன்னர்கள் கி.பி.11ம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் இலங்கையைக் கைப்பற்றினர். இலங்கை மும்முடிச் சோழமண்டலம் என்ற பெயரைப்பெற்றது. சோழமன்னர்கள் அநுராதபுரியைக் கைவிட்டுப் பொலநறுவையைத் தலைநகரமாக்கியதுடன் அதற்கு 'ஜனநாதமங்கலம்' என்ற பெயரையும் இட்டனர். இப் பொநறுவைப் பிரதேசத்தில் சோழ மன்னர்கள் திராவிடக் கலைப்பாணியைப் பின்பற்றிப் பல சிவதேவாலயங்களைக் கட்டுவித்தனர். சோழர்காலத்தில் அமைக்கப்பட்ட கோவில்களிற் பல அழிபாடுகளாகவே உள்ளன. கி.பி.11ம் நூற்றாண்டுக்கும், கி.பி.13ம் நூற்றாண்டுக்கும்இடைப்பட்ட காலப்பகுதியைச் சேர்ந்த முப்பதுக்குக் குறையாத சைவ, வைஷ்ணவக் கோயில்கள் பல நகரங்களிலிருந்தும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

பொலநறுவையில் பத்து சிவதேவாலயங்களும் , ஐந்து விஷ்ணு கோயில்களும், ஒரு காளி கோயிலும், காணப்படுகின்றன. இவற்றுட் பல சோழர் காலத்தவை. இவற்றுள் 2ம் சிவதேவாலயம் எனப்படும் 'வானவன் மாதேவி ஈஸ்வரம்' மிகவும் சிறப்புடையது. இது 1ம் இராசேந்திரச்சோழனால் அமைக்கப்பட்ட தாகவும், அவன் தனது தாயின் பெயரை அக்கோயிலுக்கு இட்டான் எனவும் கருதப்படுகிறது. இக்காலப் பகுதிக்குரிய கல்லினாலும், உலோகத்தினாலும் செய்யப்பட்ட விக்கிரகங்கள் பலவும் கிடைத்துள்ளன. சோழமன்னர்கள் இந்துக்களாகையினால் மன்னர்களின் மதமாக இந்துமதம் நன்கு வளர்ச்சி அடைந்தது.

பொலநறுவைச் சிவதேவாலயங்களில் 1ம் சிவதேவாலயம் பாண்டியர் சிற்பமுறையில் கட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. இது 12ம் அல்லது 13ம் நூற்றாண்டிற் கட்டப்ப்ட்டிருககலாம். பொலநறுவை வீழ்ச்சிக்குப் பின்தமிழ்ப் பிரதேசங்களாகிய யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு போன்ற இடங்களில் இந்து மன்னர்களும், சிற்றரசர்களும் ஆட்சி நடத்தியமையால் இந்துமதத்தின் செல்வாக்கு மேலோங்கியது. மட்டக்களப்பில் திருககோயில் பாண்டியர் பாணியிற் கட்டப்பட்டது. கோணேசர் கோவிலும் பாண்டியர் பாணியிற் திருத்திக் கட்டப்பட்டிருத்தல் வேண்டும். கோட்டை மன்னன் 6ம் பராக்கிரமபாகு காலத்தில் முனீஸ்வரத்திலும் தேவுந்தர எனும் இடத்திலும் பிராமணர்களுக்குத் தானங்கள் வழங்கப்ப்பட்டன. யாழ்ப்பாணத்தில் ஆரியச் சக்கரவர்த்திகளின் காலத்தில் மாவிட்டபுரம் கந்தசுவாமிகோவில் கட்டப் பட்டது. 6ம் பராக்கிரமபாகுவின் காலத்தில் சண்பகப்பெருமாள் என அழைடககப் அழைக்கப்படும் புவனேகபாகு யாழ்ப்பாணத்தின்மீது படையெடுத்து வந்து யாழ்ப்பாணத்தையும் வன்னியையும் தோற்கடித்து நல்லூரைத் தலைநகராக்கி அங்கு கந்தசுவாமி கோவிலைக் கட்டினான். சிங்களப் பிரதேசங்களிலும் ஓரளவுக்கு நல்லநிலையிலிருந்த இந்துமதச் செல்வாக்கு 16ம் நூற்றாண்டில் உச்சநிலையை அடைந்தது. 1ம் இராஜசிங்கன் சைவத்தைப் பின்பற்றினான். அரண்மலையில் இந்துமதச் செல்வாக்கு மேலோங்கியது. பத்தினி கோவிலுக்கு இவன் கொடுத்த நிலத்தானம் குறிப்பிடத்தக்கது. இவனது காலத்தில் விஜய நகரக் கட்டடப்பாணியில் கோவில்கள் கட்டப்பட்டன. இராஜசிங்கன் சிவனொளிபாத மலையின் வருமானங்களைக்கூட சைவத் துறவியர்களுக்கு வழங்கினான் என்று சூளவம்சம் கூறுகிறது.

இவ்வாறாக போர்த்துக்கீசர் காலம்பரை படிப்படியாக இந்து மதம் நாடு முழுவதிலும் செல்வாக்குப் பெற்று வளர்ச்சியடைந்தது. போர்த்துக் கேயர் வருகையினால் பெரிதும் பாதிக்கப்பட்டது. அதுவரை பௌத்தமன்னர் களும், அதாவது மகாசேனனைத் தவிர்ந்த ஏனைய மன்னர்களும், இந்து மன்னர்களும் ஒருங்கே அதனை ஆதரித்து வந்தனர். பௌத்த மக்கள் பௌத்தத்துடன் இந்துமத வழிபாட்டு அம்சங்களையும் ஏற்றிருந்தனர் எனக் கூறலாம்.

(11x) ஈழத்து சைவசமய வளர்ச்சிக்கு ஆறுமுகநாவலர் ஆற்றிய தொண்டினை மதிப்பிடுக.

ஈழத்து அரசியல் வரலாற்றில் 16ம் நூற்றாண்டிலிருந்து 19ம் நூற்றாண்டுவரையுள்ள காலப்பகுதியில் ஈழம், போர்த்துககேயர், ஒல்லாந்தர் ஆங்கிலேயர் ஆகிய மேலைநாட்டவரது ஆதிக்கத்தின்கீழ் இருந்தது. இக்காலப் பகுதியில் சைவம், பௌத்தம் ஆகிய மதங்கள் வீழ்சசியுற்று கிறீஸ்தவமதம் வளர்ச்சிபெறத் தொடங்கியது. போர்த்துக்கேயரினாலும், பின்பு வந்த ஒல்லாந்தரினாலும் கத்தோலிக்க மதம் வலோற்காரமாக மக்கள் மத்தியில் பரப்பப்பட்டதுடன் மத மாற்றங்களும் பெருமளவில் நடைபெற்றன. 1815 இலிருந்து 1948 வரை நடைபெற்ற ஆங்கிலேயராட்சியில் சைவமதங் கள் ஓரளவுக்கு மீண்டும் வளர்ச்சியடையத் தொடங்கினவெனலாம். ஆங்கில அரசு ஆரம்பத்தில் கடைப்பிடித்த சமய சுயாதீனக் கொள்கையால் இந்நிலை மேலும் விருத்தியடைந்தது எனினும் அரசாங்கக் கொள்கையைப் பொறுத்த வரை இந்துமதம் புதிய அந்தஸ்தைப் பெறவில்லை. இந்நிலையில் ஈழமண்ட லத்தில் யாழ்ப்பாணத்தில் நல்லூரில் ஞானப்பிரகாசர் மரபில் 1822ம் ஆண்டில் ஆறுமுகநாவலர் தோன்றினார். இவர் சைவத்திற்கு ஆற்றிய அருந்தொண்டின் காரணமாகவே இந்துமதம் புத்துயிர் பெறமுடிந்தது என்று கூறலாம்.

ஆறுமுகநாவலர் இளமையிலேயே வாக்குண்டாம், நிகண்டு, எண்சுவடி, நைடதம், பாரதம், கந்தபுராணம் போன்ற நூல்களைக் கற்றார். பன்னிரண்டாவது வயதில் பீற்றர் பார்சிவல் பாதிரியாருடைய ஆங்கில வித்தியாசாலையில் ஆங்கிலம் கற்க அனுப்பப்பட்டார். இங்கு ஆங்கிலம் கற்கும் காலத்தில் தமிழ்க் கல்வியில் மேலும் ஈடுபட்டார். தமிழிலும் ஆங்கிலத்திலும் மிகுந்த திறமையுடையவராக விளங்கினார். மேல்வகுப்புக்கு வந்தவுடன் பார்சிவல் பாதிரியார் இவருடைய இருபாஷைத் திறமையையுங் கண்டு கீழ்வகுப்புக்கு ஆங்கிலம் கற்பிக்கவும், மேல்வகுப்புக்குத் தமிழ் படிப்பிக்கவும் இவரை நியமித்தார். அவரது வேண்டுகோளுக்கிசைந்து வேதனம் பெறுதபடிப்பித்தார். பார்சிவல் பாதிரியார் இவரைத் தமக்குத் தமிழ்ப் பண்டிதராகவும் நியமித்தார். தமிழ்ப் பண்டிதராக இருந்து பைபிளைத் திருத்திக் கொண்டு வருங்காலத்தில் பிறமதமாகிய கிறீஸ்தவம் பரவ சுவமதமாகிய சைவம் குன்றுதலைக் கண்டார். இந்நிலையிலும் வேத சிவாகமங்கள், வடமொழியைக் கற்று தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளையும் கற்றுப் பாண்டித்தியம் பெற்றிருந்தமையினால் மக்கள் தமக்கு விளங்காத விடயங்களை இவரிடம் கேட்டறிய முற்பட்டனர். இவ்வாறு மக்கள் தம்மிடம் வரும் போது அவர்களுக்கு கடவுளுண்மை, ஆன்ம உண்மை, புண்ணிய பாவம், சுவர்க்கம் நரகம், மறுபிறவி இவைகளை எல்லோரும் நம்பவேண்டும் என்றும், இவைகளைப்பற்றிக் கூறும் நூல்கள் சதாசிவமூர்த்தினது ஈசான முகத்தினின்றும் தோன்றிய காமிகம் முதல் வாதுளம் வரையுள்ள மூலாகமம் 28ம், அவைகளின் சார்பு நூல்களாகிய 207 உபாகமங்கள் எனவும், சிவாகமத்தின் ஞானகாண்டப்பொருளைச் சுருக்கி இனிதும் விளக்கும் தமிழ்ச் சைவசித்தாந்த சாத்திரங்களுமே எனவும் மக்களுக்கு விளக்குவார்.

பிரவுன்றிக் தேசாதிபதி இலங்கையை ஆண்டு காலத்தில் சேர்ச் மிசன் வெஸ்லிமிசன் போன்ற செல்வ வளமுள்ள சங்கங்களைச் சேர்ந்த பாதிரிமார் இலங்கை வந்து சுதேசிகளை மதமாற்றஞ் செய்தனர். இந்நிலையை உணர்ந்த நாவலர் சைவர் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும்பொருட்டு, கண்டனங்களைத் தெரிவிக்கும் வகையில் வித்தியாபனங்களை வெளியிட்டார். சைவத்தின் நிலையையும், மக்களின் அறியாமையையும் யாழ்ப்பாணத்துச் சமய நிலை 1873 நல்லூர்க் கந்தசுவாமி கோயில், 1875 இதுநல்ல சமயம் போன்ற போன்ற பிரசுரங்களில் தெளிவாக விளக்கினார். பாதிரிமார்கள் யாழ்ப்பாணம் வந்து சிவன் கடவுளல்லர் எனவும், சைவம் துன்மார்க்கம் என்றும் போதித்தனர். மேலும் சைவர்கள் அஞ்ஞானிகளென்றும், அவர்கள் பிசாசின் அடிமைகள் என்றும் பேசினர். இந்நிலையில் நாவலர் சைவர் மத்தியில் சமய அறிவைப் பரப்பும் நோக்குடன் யாழ்ப்பாணத்து சமயநிலை எனும் நூலில் பின்வருமாறு கூறுகிறார். 'யாழ்ப்பாணத் சைவசமயிகளே! உங்களிடத்துள்ள அன்பு மிகுதியினால் நாம் சொல்வதைக் கேளுங்கள். நீங்கள் சிவதீட்சை பெற்றும், விபூதி உருத்திராட்சம் அணிந்தும், பஞ்சாட்சர செபம், சிவாலய தரிசனம் செய்தும் என்னை நீங்கள் உங்கள் சடயக் கடவுளாகிய சிவனுடைய இலக்கணங்களையும், ஆன்மாவின் இலக்கணங்களையும், ஆன்மாவைப் பற்றித்த பாசங்களின் இலக்கணங்களையும் கிரமமாகப் படித்தாயினும் கேட்டாயினும் அறிகிறீர்களில்லை. உங்கள் பிள்ளைகளுக்கு இவைகளைப் படிப்பிக்கிறீர்களில்லை. உங்கள் கோவில்களில் வேதபாராயணம் செய்கின்றீர்களில்லை". என்று மக்களைக் கண்டித்தார். கிறீஸ்தவப் பாதிரிமார் தம் சமயத்தைப் பரப்ப மேடைப்பிரசங்கங்கள் செய்தபோது தாமும் அவ்விதம் செய்து இலகுவில் சமயத்தைப் பரப்புவும் முற்பட்டார். நாவலரே ஈழத்தில் முதன்முதலில் சமயத்தைப் பரப்ப பிரசங்க முறையைக் கையாண்டவராவார்.

1847ம் ஆண்டு முதல் வெள்ளிக்கிழமைதோறும் வண்ணார்பண்ணைச் சிவன் கோயிலில் பிரசங்கத்தை நடத்தத் தொடங்கினார். இவரது பிரசங்கங்கள் பலநூல்களின் சாரமாகவும், முதுமை மறுமைப்பயன்களைத் தருவனவாகவும் காதுக்கினியனவாகவும், கேட்போருக்கு இனிது விளங்குவனவாகவும் இருந்தன. இதனால் மக்கள் பெருந்திரளாக வந்து இவரது பிரசங்கத்திக் கேட்டனர். கடவுள் வாழ்த்து, உருத்திராக்ஷதாரணம், சிவபக்தி, வேதாகமங்கள், திருவிழா, சிவலிங்க உபாசனை, யாக்கை நிலையாமை, சிவதீக்ஷை, மகளிரொழுக்கம், கல்வி கற்பித்தல், கடவுளொருவர் உண்டு போன்ற பல வேறு விடயங்களைப் பற்றியும் பிரசங்கங்கள் செய்தார். இவரது பிரசங்கங்களினால் ஆலயதரிசனஞ் செய்யாத அநேகர் சோமவாரம், மங்களவாரம், சுக்கிர வாரம், பிரதோஷம், கார்த்திகை, நவராத்திரி, சிவராத்திரி போன்ற புண்ணிய காலங்களிலும், வேறு அநேகர் நியமமாகவும் தரிசனஞ்

தரிசனஞ் செய்யத் தொடங்கினர்கள். கல்வியிற் குறைவுடையோரும், கல்வியில்லாதவராகிய இருதிறத்தாரும் கல்வியில் மேம்பட்ட செல்வம் பிறிதொன்றும் இல்லை எனக் கண்டு கல்வி கற்கத் தொடங்கினர்.

கிறிஸ்தவ மிசனரிமார் தமது பாடசாலைகளில் ஏனைய பாடங்களுடன் சமயத்தையும் முக்கியபாடமாகப் போதித்தனர். இதைக் கண்ட நாவலர் 1848ல் வண்ணை சைவப்பிரகாச வித்தியாசாலையை முதலில் ஒரு வீட்டில் அமைத்தார். பின்னர் அதற்கென ஒரு கட்டிடத்தை அமைப்பித்தார். சைவப் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிப்பதற்குத் தமது உத்தியோகத்தையும் கைவிட்டார். இப்பாடசாலையைத் தொடர்ந்து கோப்பாய், இருபாலை, பருத்தித்துறையில் வித்தியாசாலைகள் தோன்றின. கில்நர் கல்லூரியில் கற்ற சைவப்பிள்ளைகள் திருநீறணிந்து செல்ல முடியாமைகாரணமாகப் பிள்ளைகளின் பெற்றோரது வேண்டுகோட்படி ஆங்கிலப் பாடசாலையையும் ஸ்தாபித்தார்.

கல்லூரிகளில் பிள்ளைகளுக்குக் கல்வியைப் போதிப்பதற்குப் புத்தகங்கள் அவசியமானமையினால் சென்னைப் பட்டினஞ் சென்று, அச்சியந்திரம் கொண்டு வந்து அச்சியந்திரசாலை ஒன்றைத் தாபித்தார். இது வித்தியாநுபாலன யந்திரசாலையாகும். ஆங்கிலப் பாலபாடசாலையிலிருந்தும் பாலபாடங்கள் போல அநேக நீதிசாரங்களையும், சைவசமயசாரங்களையும் திரட்டி வசனரூபமாக எழுதி, நூதற்பாலபாடத்தினிறுதியில் ஆத்திசூடி, கொன்றை வேந்தன் எனும் நீதி நூல்களையும், இரண்டாம் பாலபாடத்தில் அவைகளுக்கு உரையையும் எழுதிச் சேர்த்து அச்சிடுவித்தார். திருமுருகாற்றுப்படை, கோயிற்புராணம், சைவசமய நெறி போன்றவற்றிற்கு உரையெழுதினர். மேலும் கந்தரலங்காரம், சிதம்பரமும் மணிக்கோவை, பட்டினத்துப்பிள்ளை பாடல், விநாயகர் கவசம், சக்தி கவசம், சிவ கவசம், வள்ளுவம் பரிமேலழகர், உரை, சேதுபுராணம், கந்தபுராணம், சிவஞானபோதச்சிற்றுரை போன்றவற்றைப் பரிசோதித்துப் பதிப்பித்தார். பக்தியை ஏற்படுத்தும் வகையில் நாயன்மார்கள், மெய்யடியார்கள் பாடல்களைத் தொகுத்துப் பதிப்பித்தார். இவர் பதிப்பித்த நூல்களில் பாலபாடம், நிகண்டு, இலக்கணநூல், ஒழுக்க நூல், ஒழிந்தவை சமய நூல்களாகும். நாவலர் சமயவழிநின்று அதற்குக் கருவியாகிய தமிழ்மொழியையும் வளர்க்க முயன்றார்.

இவ்வாறு பிறமதங்களின் செல்வாக்கினால் சைவம் வலுவிழந்து அழியும் நிலையில் இருந்தபோது நாவலர் அவர்கள் அதனைக் காத்துப் புத்துயிர் அளித்தார். சைவப் பாடசாலைகள் அமைத்து, மேடைப் பிரசங்கங்கள் செய்து, அச்சியந்திரசாலை அமைத்து, நூல்களை வெளியிட்டு மக்கள் மத்தியில் சமய உண்மைகளைப் பரப்பி சைவத்தை வளர்த்தார். இவ்வாறு சைவத்தின் வளர்ச்சிக்கு அரும்தொண்டாற்றிய நாவலர் 1879ம் ஆண்டு 12ம் மாதம் 5ந் திகதி இவ்வுலக வாழ்க்கையை நீத்தனர்.

(12) தென்னாட்டில் தோன்றிய பக்திநெறி வடநாட்டில் பரவி வளர்ச்சியடைந்தமையை இராமாநந்தர், கபீர்தாஸர், மீராபாய், துளசிதாஸர், சூர்தாஸர், ஸ்ரீசைதன்யர் ஆகியோரை அடிப்படையாகக் கொண்டு விளக்குக.

தென்னாட்டில் கி.பி.6ம் நூற்றாண்டு காலப்பகுதியில் தோன்றிய பக்தி இயக்கம் நன்கு வளர்ச்சியடைந்ததுடன் சைவ வைஷ்ணவ மதங்களையும் நன்கு வளர்த்தது. பக்தி இயக்கத்தை வளர்த்தவர்கள் சைவ நாயன்மார்களும், வைஷ்ணவ ஆழ்வார்களும் ஆவர். ஆழ்வார்கள் பன்னிருவராவர். இவர்களில் சடகோபன் எனப் பெயருடைய நம்மாழ்வார் மிகவும் சிறப்புடையவராவர். இவரது திருவாய்மொழி சிறப்புடையதாகும். வைஷ்ணவப் பெரியோர்களினால் வேதநூல்களுக்குப் ஒப்பாகத் திருவாய்மொழி மதிக்கப்பட்டது. கி.பி.11ம் நூற்றாண்டுக் காலப்பகுதியினைச் சேர்ந்த இராமானுஜர் வைஷ்ணவ பக்தி இயக்கத்தை வளர்த்தவர்களில் மிகவும் முதன்மையான இடத்தைப் பெறுகிறார். இவர் கோயில்களிலும் கழகங்களிலும் திருவாய்மொழிப் பாடல்களை நெறிமுறையில் ஓதவேண்டும் என்று ஏற்பாடு செய்தார். இவரது அருட்பாடல்களை உலகிற்குப் பரப்பிய பெருமை நாதமுனிகளையே சாரும். திருவாய்மொழிப் பாடல்களைக் கேட்டு உள்ளம் உருகிய நாதமுனிகள் இவ்வின்னிசை பாடல்களினாலேயே இறைவனைத் தொழுதல் யோகத்திலும் சிறந்தது எனக்

கருதுகிறார். தென்னாட்டு வைஷ்ணவம் ஆழ்வார்களின் ஊற்றினின்றும் உதித்து அன்புவெள்ளம் பெருக்கி, வடக்குநோக்கி அலையெறிந்து பாய்ந்து பாரத நாடுமுழுவதும் பரவியது. இராமானுஜரே தென்னாட்டுப் பக்தி இயக்கத்தை வடநாட்டில் கலக்குமாறு செய்தார் என்று கூறலாம்.

ஸ்ரீஇராமானுஜர் காஞ்சியில் சந்நியாச ஆச்சிரமத்தைக் கைக்கொண்டு ஆழ்வார்கள் அருளிச்செய்த திவ்யபிரபந்தங்களையும், யமுனாசாரியாருடைய நூல்களையும் கற்றுணர்ந்தார். கி.பி.1100 அளவில் இவர் பிரமசூத்திரத்திற்கு உரையாகிய ஸ்ரீபாஷ்யத்தை எழுதிமுடித்தார். அதன் உண்மைகளைப் பல இடங்களிலும் பிரசங்கித்தார் எனவும், வடநாட்டில் பல முக்கிய ஸ்தலங்களுக்குச் சென்று காசியிலும், பூரிஜகந்நாதத்திலும் பௌத்தரை வாதில்வென்று அவ்விடத்தில் வைஷ்ணவ சம்பிரதாயத்திருமடங்களை ஏற்படுத்தினார்கள் என்றும் அறிகிறோம். சைவமதத்தில் கடும்பற்றுள்ள சோழ மன்னர்கள் துன்புறுத்தியதால் இவர் மைசூர் இராய்ச்சியத்தை அடைந்து அங்கு விஷ்ணுவர்த்தனன் என்னும் ஹொய்சள மன்னனை ஜைனத்திலிருந்து வைஷ்ணவத்திற்கு மதம் மாற்றினார் எனவும் அறிகிறோம். இராமானுஜர் தமது ஆத்மீகசக்தி, கல்விநலம் ஆகியவற்றினால் வைஷ்ணவ சமயத்தை நிலைபெறச் செய்தார். இவர் தமது சீடராகிய கூரேசரின் புதல்வராகிய பட்டரைக்கொண்டு விஷ்ணுசகஸ்ரநாமத்திற்கு உரை எழுதுவித்தார். இராமானுஜரது விசிஷ்டாத்துவைத மதத்தினை உணர்ந்த போதகாசிரியராகிய இராகவாநந்தருக்குச் சீடராகிய இராமாநந்தர் தென்னாட்டுப் பக்தி மார்க்கத்தினை வடநாட்டுக்குக் கொண்டு சென்றாரெனவும், இராமாநந்தரது சீடராகிய கபீர்தாஸர் அதனை இந்தியா முழுவதிலும் பரப்பினார் எனவும் அறியமுடிகிறது.

இராமாநந்தர் கி.பி.1300-1411 காலப் பகுதியைச் சேர்ந்தவராவர். இவர் விஷ்ணு பக்தர்களையெல்லாம் சமபந்தியில் உண்ணும்படி செய்ததனுடன் சாதித் தளைகளை நீக்கிவிட்டார். தென்னாட்டில் பக்தியை வளர்த்த ஆழ்வார்கள் தம்முள் குலவேறுபாடுகளுக்கு இடம் கொடுக்கவில்லை. இவ்வுண்மையை இராமாநந்தர் சாதனையிற் கொணர்ந்தவராதலின் முஸ்லீம்கள், பெண்கள், தீண்டாதோர் போன்ற பலர் அவருடைய சீடர்களாகி மதபோதனை செய்யும் ஆசிரியர்களுமாயினர். தெய்வம் ஒன்றே எனும் உண்மையையும், அந்தத் தெய்வமே அனைவர்க்கும் பிறப்பிடம் என்பதையும் உணர்ந்த இராமாநந்தர் சாதிமத போதங்களை ஒழித்து அனைவரையும் ஒரு குடும்பமாக மதித்தார். இவரது சீடர்களில் சக்கிலியராகிய இரவிதாஸரும் இஸ்லாமிய நெசவுக்காரராகிய கபீர்தாஸரும் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

இராமாநந்தரின் சீடராகிய கபீர்தாஸர் கி.பி.1398-1518 காலப்பகுதியில் வாழ்ந்தவராவர். நெசவுக்கார சாதியிலுதித்த இஸ்லாமிய சிறுவராகிய கபீர், இராமாநந்தர் வழக்கமாக ஸ்நானம் செய்யச் செல்கின்ற படித்துறைக்குப்போய்ப் படுத்திருந்தார். சூரியோதயத்திற்குமுன் படித்துறைக்குச் சென்ற இராமாநந்தர் கபீருடைய உடலில் காலைவைத்தார். அப்போது கபீர், ராமா ராமா என்று உச்சரித்துக்கொண்டு, இராமாநந்தர் தம்மைக் கண்டுகொள்ள முன்னரே அவ்விடத்தைவிட்டு ஓடிவிட்டார். பின்னர் இராமாநந்தர் தம்மைச் சீடராக்கிக் கொண்டாரென ஊரெல்லாம் சொல்லித் திரிந்தார். இராமாநந்தர் கபீரை அழைப்பித்து வினவுதலும் அவர்... வாயிலிருந்து வந்த ராமநாமத்தைக் கண்டு அவரைச் சீடராக்கிக்கொண்டார். பின்னர் கபீர் அப்பெரியாரின் சீடராகவிருந்து அவரது போதனைகளைக் கேட்டு வந்தார். ஆத்மஞானத்தை அடைந்த கபீர் நாடெங்கும் சென்று இஸ்லாமிய மதத்திற்கும், இந்துமதத்திற்கும் இடையேயுள்ள சமரசத்தினைப் போதிப்பாராயினர். அவருடைய பாடல்களும் உபதேசங்களும் ஆண்டவன் பாலுள்ளபடி வேட்கையுடைய மக்களுக்குப் பொதுச் சொத்தவாயின. இந்துக்களுடைய தெய்வம் காசியிலும், இஸ்லாமியருடைய தெய்வம் மக்கத்திலும் இருக்க, அனைவருக்கும் பொதுவாகிய தெய்வம் எல்லா உயிர்களின் இதயத்திலுமிருக்கின்றதெனக் கபீர் கூறினார். இதுவே கபீர்தாஸரது போதனைகளின் மூலவாசகமாயிற்று. நாடு முழுவதிலும் கபீர்தாஸர் பக்தி இயக்கத்தை வளர்த்துச் சென்றார்.

இராமாநந்தரது சீடர்களில் சக்கிலியக்குலத்தைச் சேர்ந்தவர் இரவிதாசர். இவரது சிஷ்யையாக விளங்கியவர் மீராபாய் என்பவராவர். இவர் தன்னை இராதையாகப் பாவித்துக் கண்ணனைப் புகழ்ந்து பலபாடல்

களைப் பாடினர். இவரது பாடல்கள் மீராபஜனை எனப்படும். இன்றும் வடஇந்தியாவில் இப்பாடல்கள் விருப்புடன் பாடப்பட்டு வருகின்றன. இவர் கோட்டூரைச் சேர்ந்த இளவரசியாவார். கண்ணன்மீது பக்திகொண்டு அவனைப் பாடுவதிலும் பூஜிப்பதிலும் காலத்தைக் கழித்தார். தெய்வீக அன்பின் உருக்கத்தை அறிந்தவர்களே ஆண்டவனை அடைவதற்குரியவர் என்ற இரவிதாஸரது கருத்தினைக் கைக்கொண்டு ஒழுகினர். இவரது தொண்டு வடநாட்டு பக்தி இயக்கத்தில் குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கின்றது.

இராமாநந்தருடைய ஆத்மீக வாழ்க்கையைப் பின்பற்றியவர்களில் துளசிதாஸரும் ஒருவராவார். இவர் 16ம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் வாழ்ந்தவராவர். இவர் உறிந்திமொழியில் இராமாயணத்தை எழுதினர். இவர் இராமனையே இஷ்ட தெய்வமாகக் கொண்டு வழிபட்டார். இவர் அக்பர் சக்கரவர்த்தியின் காலத்திற் சிறப்பெய்தினர். இவரது குரு நரஹரிதாஸ் என்பவராவர். இவரிடம்பெற்ற ஆன்மீக உண்மைகளைத் தமது நூலில் விளக்கியுள்ளார். இந்நூல் இந்திய இலக்கியங்களில் மிகச் சிறந்த தொன்றாகக் கருதப்படுகிறது. இந்நூல் கோடிக்கணக்கான இந்துக்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தியதெனக் கூறலாம். வடநாட்டுப் பக்தி இயக்கத்திற்குத் துளசிதாஸர் ஆற்றிய தொண்டு அளவிடற்கரியதாகும். ஞானக் குரு வல்லபாச்சாரியார் ஆவர். இவரது பாடல்களில் கண்ணன்து பால லீலைகள் வர்ணிக்கப்பட்டுள்ளன. இடைச்சியர் கண்ணனோடு ஆடிப்பாடித் திரிந்ததையும், ராதை எனும் பெண் கண்ணன்மீது கொண்ட தணியாத அன்பு, கண்ணன் ஊதும் புல்லாங்குழலின் சிறப்பு, கண்ணன் பிரிவால் வாடும் இடைச்சியருக்குச் செய்யப்படும் ஞான உபதேசம் போன்றன பாடுவோரைப் பிணிக்கும்வகையில் அமைக்கப்பட்டுள்ளன. இவரது பாடல்கள் இன்று டெல்லி, ஆக்கிரா போன்ற இடங்களில் பாடப்பட்டு வருகின்றன.

வங்காள நாட்டுச் சமய வாழ்க்கையில் பெரிய மாறுதலை ஏற்படுத்தி அங்கு பக்தியை வளர்த்துக் கிருஷ்ண வழிபாட்டைச் சிறப்பித்தவர் ஸ்ரீசைதன்யர் ஆவர். இவர் கயாக்ஷேத்திரத்திலே ஈஸ்வரமுனி என்னும் வைஷ்ணவப் பெரியார்பால் சென்று தீக்ஷை பெற்றுப் பக்திமார்க்க நெறிநின்றார். இவர் தென்னாட்டுக்கு யாத்திரை செய்து, ஸ்ரீராமானுஜருடைய சிஷ்ய பரம்பரையினரோடு அளவளாவினர். விஷ்ணுவின் பல்வேறு பெயர்களையும் ஒன்றுகூடிப் பாடுகின்ற நாமசங்கீர்த்தன முறையை இப்பெரியார் வங்காள நாட்டில் நிறுவினர். உயிருக்கு உறுதிபயக்கும் பக்தியாகிய தீர்த்தத்தினை ஆண்டவனை அவாவிநின்ற பலருக்கு இவர் வழங்கினர். கி.பி.1485-1533 காலப்பகுதியில் வாழ்ந்த சைதன்யர் மக்களிடையே காணப்பட்ட எல்லாவகையான தொழில்களினாலும், அரசியற் கட்டுப்பாடுகளினாலும் இனம், மதம் என்பவற்றினாலும் பிரிக்கப்பட்டு ஒருங்கின்றிக் கிடக்கும் மக்களை அவற்றிலிருந்து விடுவிக்க வேண்டுமென விரும்பினர். ஒரு பார்ப்பனப் புரோகிதனுக்கும், கீழ்த்தரமான நிலையிலுள்ள தோட்டிக்கும் யாதொரு வேறுபாடும் இருப்பதாக அவருக்குப்படவில்லை. இருவரும் தெய்வத்தை நம்பி வாழ்பவர்கள். இருவருள்ளும் தெய்வம் உறைகிறது என்று நம்பினர். ஒவ்வொரு மனிதனிடமும் வெளித்தோன்றாது மறைந்து கிடக்கும் தெய்வீகச் சுடரை வெளிப்படுத்தச் செய்வதற்கு மிகச் சிறந்ததும், மிக எளியதுமான வழி பணிவோடும், பக்தியோடும் தெய்வங்களின் திருநாமங்களை வாயாற் கூறுவதும், தெய்வத்தைப் பற்றிச் சிந்தித்திருத்தலுமே எனக்கருதினர். கண்ணன் பெயரை ஓதிப்பாடுவதன் மூலம் மனமாசுநீக்கிப் பிறப்பெனும் துன்பத்தினின்றும் நீங்கி முத்தியின்பம் பெறமுடியும் என்பதை மக்களுக்கு வலியுறுத்தினர்.

(13) யோகம் என்றால் என்ன? பகவத்கீதை கூறும் பல்வேறு யோக வகைகளை விவரிக்க.

இந்து சமயத்திற்கும், இந்து தத்துவத்திற்கும் அடிப்படையாக உள்ள நூல்கள் மூன்றாகும். அவை உபநிடதம், பிரமசூத்திரம், பகவத்கீதை என்பனவாகும். இம்மூன்று நூல்களையும் பிரஸ்தானத்திரயம் என்று அழைப்பர். இவற்றுள் பகவத்கீதையை எடுத்துக்கொண்டால் அது பீஷ்மபர்வத்தில் கிருஷ்ணனுக்கும், அருச்சுனனுக்கும் இடையில் நடைபெற்ற சம்பாஷணையாகவுள்ளது. கீதை பதினெட்டு அத்தியாயங்களைக் கொண்டமைந்தது. இதில் முதல் ஆறு அத்தியாயங்களும் கர்மயோகத்தையும், அடுத்த ஆறு அத்தியாயங்களும் பக்தி

யோகத்தையும், இறுதி ஆறு அத்தியாயங்களும் ஞானயோகத்தையும் விளக்குகின்றன. கீதை ஆன்மாக்களின் துக்கம், துக்க உற்பத்தி, துக்க நிவாரணம் துக்க நிவாரண மார்க்கம் என்ற நான்கு அம்சங்களை உள்ளடக்கியதாகும். துக்கம் என்பது ஆன்மாக்களின் பிறப்பினையும், துக்க உற்பத்தி பிறவிக்குக் காரணமான கன்மங்களையும், துக்க நிவாரணம் பிறவியினின்றும் விடுபடுதலாகிய மோட்சத்தையும், துக்க நிவாரண மார்க்கம் என்பது பிறவியினின்றும் விடுபடுவதற்குரிய வழிகளையும் குறித்து நிற்கிறது. கீதை பிறவியினின்றும் விடுபடுவதற்குரிய வழிகளாக கர்மம், பக்தி, ஞானம் என்ற மூவகை யோக நெறிகளையும் விளக்குகிறது.

யோகம் என்பதை எடுத்துக்கொண்டால் அது இறைவனோடு ~~இணை~~ இணைதலும், அதற்கான வழியும் என்று பொருள்படுகிறது. இது 'யோக்' என்ற ஆங்கிலச் சொல்லின் பொருள்கொண்டது. ஆன்மாக்கள் இறைவனோடு இணைவதற்குரிய வழியாக கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் என்ற மூன்று யோகங்கள் கீதையில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. கர்ம யோகம் என்பது தன்னலம் கருதாத சேவை மார்க்கமாகும். பக்தியோகம் என்று சொல்லப்படுவது இறைவனிடம் அன்புசெலுத்தும் வழியாகும். ஞான யோகம் என்பது அறிவு வழியாகும். அதாவது செயல்நிலை, உணர்வுநிலை, அறிவுநிலை எனவும் விளக்கப்படுகிறது. இம்மூன்றும் ஒன்றிலிருந்து ஒன்று பிரித்தெடுக்கப்படக்கூடிய தனிநிலைகளல்ல. இம்மூன்று வழிகளும் மனிதனது ஆன்மீகப் பயணத்தில் தேவையான நிலைகளாகின்றன.

கீதை கூறும் கர்மயோகம் பற்றற்ற செயலாகும். பற்று வைத்துச் செய்யப்படும் செயல்கள் மனிதனைப் பாதிக்கும் இயல்புடையவை. செயல்கள் ஒருவனை இருவகையாகப் பாதிக்கும். 'நல்ல செயலால் ஒருவன் நல்லவனாகிறான். தீய செயல்களினால் ஒருவன் தீயவனாகிறான்' என்று உபநிடதங்கள் கூறுகின்றன. ஒருவன் செய்யும் செயல்கள் யாவும் அவனை நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கும். இவ்வாறு பாதிக்காதவகையில் செயலைச் செய்வதே மோட்சமடைவதற்குரிய வழி என்று கீதை கூறுகிறது. இதனைக் கர்மயோகம் என்று கீதை அழைக்கிறது. இதனை செயலிற் துறவு எனவும் கூறலாம். செயலிற் துறவு என்றால் செயலைச் செய்தபின்னர் அதன் பலன் பற்றி எண்ணாதிருத்தலாகும். செயலைச் செய்தபின் அதன் பலனைப்பற்றிச் சிந்திப்பதே பிறவித் துன்பத்துக்குக் காரணமாக அமைகிறது. பயன்பற்றிய விருப்பம் இல்லாதொழியுமாயின் செயல் ஒரு தளையாகத் தோன்றாது. கீதை கர்மயோகத்தை விளக்குமிடத்து 'கடமையைச் செய். பலனை எதிர்பாராதே' கடமையைச் செய்வதற்கு மட்டுமே உனக்கு உரிமை உண்டு. அதன் பயனுக்கு நீ உரிமையுடையவன் அல்ல. பலனைக் கருதி வினையைச் செய்யாதே. அதுபோலக் கடமையைச் செய்யாமலும் பின் வாங்காதே' என்று கூறுகிறது. 'நான்', 'எனது' என்னும் உணர்வு இருக்கும்வரைவினையாற்றாமல் இருப்பது கடினம். ஒருவன் உடலை அசையாது வைத்துக்கொள்ளலாம். புலன்களை மந்தமாக வைத்துக்கொள்ளலாம். ஆனால் அவன் மனம் நெடுந்தூரம் அலைந்து திரியும். அத்தகைய நிலையை ஒருவன் கடந்து வந்துவிட்டேன் என்று கூறினால் அவன் நம்மை ஏமாற்றுகிறான் என்பதுதான் பொருள். 'கடமையைச் செய்யாமல் இராதே' என்று கீதை கூறுகிறது. பலனைப் பற்றிச் சிந்திக்காமலே ஒருவன் கடமையைச் செய்யவேண்டும். அறிவிலி ஒருவன் பலனைக் கருதிச் செயலைச் செய்யும் போது, அறிஞன் ஒருவன் பலனைப் பற்றிச் சிந்திக்காமல் செயலைச் செய்கிறான். இத்தகைய ஒருவனே கர்மயோகி ஆகிறான். பற்று, ஆசை என்பன அறியாமையினின்றும் பிறக்கின்றன. பற்றற்ற கர்மம் சாத்வீக குணத்தினின்றும் பிறக்கின்றது. பற்றற்ற கர்மத்தை மீண்டும் மீண்டும் அனுஷ்டிக்கவேண்டும். 'சிறுபிள்ளை நடைபழகும்போது இடறிவிழுவதுபோல ( விழுந்தாலும் இது இறுதியில் அமைதியைத் தருகிறது' எனக் கூறப்படுகிறது. ஸ்ரீகிருஷ்ணபகவான் 'நீ எதைச் செய்தாலும் எதை உட்கொண்டாலும், எந்த வேள்வி செய்தாலும், எதைப் பிறருக்குக் கொடுத்துவிட்டாலும் எத்தகைய கடுமையான தவங்களை நீ அனுசரித்தாலும், நீ அவற்றை எனக்கே அர்ப்பணம் என்று செய்துவிடல் வேண்டும்" என்று அர்ச்சுனனுக்குக் கூறுகிறார். நுகர்ச்சிப் பொருள்களிலும் செயல்களிலும் பற்றுக் கொள்ளாமல் செயல்களுக்குரிய மனச் சங்கற்பங்களைத் துறந்துவிட்டவனே யோகத்தில் வெற்றி பெற்றவனாவான். இத்தகைய ஒருவனே கர்மயோகியாவான். கர்மயோகி ஆத்மாவில் இன்புற்று ஆத்மாவில் திருப்தியடைந்து மகிழ்ந்திருப்பான். அவனுக்குக் கர்மம் இல்லை. கர்மஞ் செய்து ஒன்றைப் பெறுதலுமில்லை. கர்மம் செய்யாது எதையாவது இழத்தலுமில்லை. ஆத்மாவை அடைந்தவன் அதற்கு

மேல் அடையவேண்டியதொன்றில்லை. துன்பம் வந்தபோது கலக்கமடைய மாட்டான். இன்பம் வந்தபோது அவன் உள்ளம் அதைப்பற்றிக்கொண்டு நிற்காது. ஆசை, அச்சம், கோபம் இவற்றை அகற்றியவன் நிலைபெற்ற ஞானத்தை உடையவனாவான். இவன் ஸ்திதப்பிரக்ஞன் என்று அழைக்கப்படு கிறான். இந்நிலையை அடைந்தவனுக்கு வாழ்க்கையில் மயக்கம் என்பதில்லை. இவனது நிலையே சீவன்முத்தி நிலையாகும். இவர்கள் முத்தியை அடைவர் என்று கீதை கூறுகிறது.

கீதை கூறும் பக்தி என்பது ஆழ்ந்த இறைப்பற்றாகும். அறிவற்றவர்கள் புலனுக்குச்சிப் பொருட்களின் மீது பற்று வைக்கின்றனர். அப்பற்று இறைவன்மீது திருப்பப்படுமேயானால் அதுவே பக்தியாகும். பக்தியின் மூலமாகவும் ஒருவன்மோட்சத்தை அடையலாம். கீதையில் கிருஷ்ணபகவான் 'யாரிடத்தும் எதனிடத்தும் வெறுப்புமின்றி, எவ்வுயிரிலும் அன்பும் கருணையும் உள்ளத்திற் கொண்டு, மனதை உள்ளடக்கி அசையாத உறுதியுடன் மனத்தையும், புத்தியை யும் எனக்கே அர்ப்பணஞ் செய்துவிட்டு என் பக்தனாகிறானோ அவனே எனது அன்பனாவான்' என்று கூறுகிறார். மேலும் 'என்னையே நினைக்கும் மனத்தவ னாவாயாக; எனக்கே பக்தி செலுத்தும் பக்தனாவாயாக; எனக்கே வேள்வி களையும் செய்வாயாக; இவ்வாறு உள்ளத்தைத் திருந்த நிறுத்தி என்னையே அடைவாயாக" என்று போதிக்கிறார். பக்தியில் சிறந்தது பிரபக்தியாகும். இது வருணவேறுபாடுகளைக் கடந்தது. அறிஞன் அறிவிலி என்ற போதங்களுக்கு அப்பாற்பட்டது. இத்தகைய பிரபக்தியே கிருஷ்ணனால் போதிக்கப்படுகிறது. 'என்னைச் சரணம் இடைந்தவர்கள் நிச்சயமாகப் பரகதி அடைவார்கள். நீசகுலம், பெண், வைசிய, சூத்திர ஜாதிவேற்றுமை என்ற வேறுபாடின்றி அடைவார்கள்' எனக் கூறியுள்ளார். பக்தனுக்கு விருப்பு, வெறுப்புக்கள் கிடையாது. இறைப்பக்தியிலேயே அவனுக்குத் திருப்தி உண்டாகிற காரணத்தினால் வேறு பற்றுக்களில்லை. பக்தியின் மேலீட்டினால்பக்தனும் நன்மை தீமை இரண்டினையும் மறந்துவிடுகின்றான். இத்தகையவனே ஈஸ்வரனுக்குப் பக்தனாவான். அவன் மாறுபடும் உலகில் மாறுபடாத இறைவனிடத்தில் ஸ்திரபுத்தி உடையவனாக இருக்கிறான். இவ்வாறு இறைவனிடத்தில் பக்தி செலுத்துவதனால் அவன் செயலற்றவனாகிறான். தர்மத்தை உறுதியாக அனுஷ்டிக்கிறான். பக்தியினால் ஒருவன் மோட்சத்தைப் பெறமுடியும். இவ்வாறு கீதை பக்திநெறிபற்றிய கருத்துக்களை விளக்குகிறது.

கீதையில், கர்மம், பக்தி ஆகிய நெறிகளைப்போன்று ஞானமும் மோட்சமடைவதற்குரிய வழியாகக் கூறப்பட்டுள்ளது. ஞானயோகம் என்பது அறிவுநெறியாகும். உபநிடதங்களும், ஞான மார்க்கத்தையே சிறப்பித்துக் கூறுகின்றன. பிரமம், ஆன்மா பற்றிய அறிவின் மூலமாக மோட்சத்தைப் பெறமுடியும் என்று கூறப்படுகின்றது. கீதையில் கண்ணன் ஞானம் என்பது எப்பொருளைப் பற்றியது? எதை அறிந்தபின் மனிதன் மர ணத்தை வெல்கிறான் என்பதை விளக்கியுள்ளார். முத்திநிலை பெறுவதற் குரிய ஞானம் மனதாற் பெறும் அறிவு அன்று. அது ஆன்மீக உள்ளொளி பெறுவது. இத்தகைய அறிவைப்பற்றி விளக்குமிடத்து உயர்ந்த அறிவு, தாழ்ந்த அறிவு என இருவகைப்படுத்திக் கூறப்பட்டுள்ளது. தாழ்ந்த அறி வானது வேதங்கள், மதச்சடங்கு, வானநூல், இலக்கணம் என்பவற்றிற் காணப்படுவது. உயர்ந்த அறிவு பிரமத்தைப் பற்றிய அறிவாகும். சாந் தோக்கிய உபநிடதத்தில் நாரதருக்கும், சனற்குமாரருக்கும் இடையில் நடைபெற்ற உரையாடல் இதற்குச் சிறந்த உதாரணமாகும். நாரதர் தமக்கு எல்லாவிதமான அறிவு இருந்தும் ஆத்மா பற்றிய அறிவு இல்லை என்பதைக்கூறி, ஆத்மஞானம் அடைந்தால்தான் துக்கம் தீரும். எனவே எனக்கு ஆத்மஞானத்தை அருள்வீராக என்று கேட்கிறார். இவ்வாறு நாரதர் அருளும்படி கேட்ட ஞானமே உயர்ந்த ஆத்மீக ஞானமாகும். இத்தகைய உயர்ந்த ஞானத்தைப் பெறுவதற்கு பல பயிற்சிநெறிகளுண்டு என்று கீதை கூறுகிறது. ஆன்ம அறிவுபெறுவதில் முமாருதமனம், மெய்ஞ்ஞானப் பொருளைக் காணுதல் ஆகிய இவையெல்லாம் ஞானமாகும். இவற்றிற்கு மாறானவை அஞ்ஞானமாகும். இந்த ஞானத்தை அடைவதற்கு முதற்கட்டத்தில் அறநிலை, அறிவுநிலை, உளர்ச்சிநிலையில் தன்னைத் தயார்ப்படுத்தவேண்டும். இதில் நிலையானவை, நிலையற்றவை இவற்றினைப் பிரித்தெண்ணுதல், தன்னலக் காரியங்களிலிருந்து விடுபடுதல், மனஅமைதி, துறவுமேற்கொள்ளுதல் ஆகிய பண்புகளை வளர்த்தல், விடுதலைபெற அதிகமான விருப்பம் போன்றன அடங்கியுள்ளன. அடுத்த கட்டத்தில் சிரவணம், மனனம், நிதித்தியாசனம் என்ற மூன்று படிகள் உள்ளன. சிரவணம் என்பது வேதாந்த நூல்களைக்

கற்றல், மனனம் என்பது கற்றவற்றைச் சுத்தித்து தியானஞ் செய்தலாகும்.
சிந்தனைகள் மூலம் சந்தேகம் தோன்றினால் தெளிவடைந்து ஆழ்ந்த தியானத்
தின்மூலம் சீவன்முத்தி நிலையைப் பெறமுடியும். கீதையில் அறிவைப்பற்றிய
பல பகுதிகள் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. பிரமம் பற்றிக் கூறப்படும்
இடத்து 'அது அனாதியும், அனைத்தையும் கடந்ததுமான உள்பொருள்' என்று
விளக்கப்பட்டுள்ளது. மேலும் 'அது பொருட்களுக்குப் புறப்பாக நிற்கு
மெனினும் பொருள் அனைத்தின் உள்ளும் நிற்கும். அது அடையாப்பொருள்.
அடையும் பொருளும் அதுவே. பிளவுபடாத அந்தப் பொருளே பல
பொருட்களாகி பிளவுபட்டதுபோல் நிற்கிறது, பொருட்களைத் தாங்கு
வதும், தன்னுள் ஒடுக்குவதும் தோற்றுவிப்பதும் அதுவே' இத்தகைய
பிரமத்தை, அதன் இயல்புகளை ஒருவன் அறிந்துகொள்ளவேண்டும். அழியும்
உடலில் அழியாமல் சமதன்மைகொண்டு ஆன்மா நிற்பதைக் காண்பவனே
ஞானியாவான். 'சரீரம் வேறு ஆன்மா வேறு என்பதனை உணர்ந்தால்
அந்த ஆன்மாவின் பரிசுத்தநிலையைக் குழப்பமின்றிக் காண்பான். அது
மாசுபடாதது என்பதை அறிவான். சூரியன் உலகனைத்தும் பிரகாசிப்பது
போல் ஆத்மா சரீரங்களை அனைத்தையும் ஒளிபெறச் செய்கின்றது. ஒளி
பெற்ற இடங்களில் அழுக்கு, சூரியனைத் தீண்டாது என்று கதை கூறி இத்த
கைய அறிவை உடைய ஒருவன் பிரம்மபதம் இடைவான் என்றும் கூறுகிறது.
கீதையில் கிருஷ்ணபகவான் 'தமக்கு மிகவும் விருப்பமானவன் ஞானி என்றும்
ஞானியும், தாமும் ஒன்றென்றுங் கூறுகிறார். எல்லா வினைகளையும் எரிக்கும்
நெருப்பு ஞானமே. எரியூட்டும் நெருப்பானது எல்லாப் பொருட்களையும்
எரித்துச் சாம்பராக்கி விடுவதுபோல் ஞானமென்னும் தீயானது எல்லாவினை
களையும் எரித்துச் சாம்பராக்குகிறது. அறியாமை காரணமாக எழுந்த
குழப்பங்களை அறிவு நீக்குகிறது. எல்லாவினைகளும் ஞானத்தில் ஒடுங்குகின்றன.
நம்பிக்கை வழியாக ஞானம் பிறக்கிறது. ஞானம் வழியாக மோட்சம்
கிட்டுகிறது.

இவ்வாறு ஆத்மாக்கள் இறைவனோடு இணைந்துவிடுதலாகிய
மோட்சத்தையடைவதற்குரிய வழிகளாக கீதை கர்மயோகம், பக்தியோகம்
ஞானயோகம் என்ற மூன்று வழிகளைக் கூறியுள்ளது.

(14) இந்துக்கல்விப் பாரம்பரியத்தில் குருகுலக் கல்விமுறை பற்றி
விபரிக்குக.

இந்து ஒருவனின் வாழ்க்கையில் கல்விக்கு மிக முக்கியத்துவம்
கொடுக்கப்பட்டது. பண்டைய இந்து ஒருவனது வாழ்க்கைநெறி பற்றி அறிந்து
கொள்வதற்கு எமக்குக் கிடைக்கும் மிகப் பழைய இலக்கிய ஆதாரங்கள்
வேதங்களாகும். வேதகாலப் பகுதியிலிருந்தே இந்துக்களின் கல்விநிலைபற்றி
அறியக் கூடியதாக உள்ளது. பிற்பட்ட காலங்களில் குரு-சிஷ்ய பரம்பரைகளின்
மூலமாகக் கல்வி வளர்ச்சியடைந்து சென்றதை அவதானிக்கலாம். பண்டைக்
காலத்தில் வேதக் கல்வியே இடம்பெற்றது. பிராமணர்கள் குருவாக இருந்து
வேத அத்தியயனம் செய்து வந்தமையை அறிந்து கொள்ளலாம்.

வேதகாலப் பகுதியில் இடம்பெற்ற கல்விநிலைபற்றி அறிந்து
கொள்வதற்கு வேதங்களிற் குறிப்புக்கள் உள்ளன. மாணவர்கள் வேதங்களை
உரக்க ஓதுவது தவளைகள் கத்துகின்ற சத்தங்களுடன் ஒப்பிட்டுக் கூறும் பாடல்
ஒன்று இருக்குவேதத்தில் உண்டு. பிரமச்சாரிசூக்தம் என்ற பாடற்றொகுதியில்
காணப்படும் குறிப்புக்களை அடிப்படையாகக் கொண்டும் கல்விநிலை பற்றி
அறிந்துகொள்ளலாம். எழுத்துக்கலை, பயின்றதற்கு இங்கு ஆதாரம் எதுவும்
இல்லை. வேதங்கள் செவிவழியாகக் கேட்கப்பட்டு ஓதப்பட்டவேயன்றி
எழுத்துக்களாக பொறிக்கப்பட்டமைக்கு ஆதாரங்களில்லை. எனவே குரு
வேத மந்திரங்களை உச்சரிக்க மாணவர்கள் அவற்றைக் கேட்டு பாடம்வரும்
வரை திரும்பத் திரும்ப ஓதியிருத்தல் வேண்டும் என்பதை அறிய முடிகிறது.
குரு நிலத்தில் தன்னைச் சூழ்ந்திருந்த மாணவர்களுக்கு வேதப்பாடங்களை
வாயாற் சொல்ல அம்மாணாக்கர் நாள்தோறும் பலமணிநேரம் அப்பாடல்
களை ஒன்றன்பின் ஒன்றாக மனனஞ் செய்தனர். முதலிற் சொற்களைத்
தொடுத்தும் பின்னர் தனித்தனியாகப் பிரித்தும் படித்தனர். இதனைப்
பதபாடம் என்று அழைப்பர். பின்னர் சொற்களில் ஒன்றைவிட்டு ஒன்றைக்
கூட்டி அஆ - ஆஇ - இஈ என்ற ஒழுங்கில் இவ்விரண்டாக இணைத்துப் படிப்பர்.

இது கிரம பாடம் எனப்படும். இவ்வாறு வேதங்கள் மனனஞ்செய்யப்பட்டு வந்தமையால் தம் வடிவம் மாறுமல் பழைய நிலையிலேயே உள்ளன.

வேதங்களின் இறுதிப் பகுதியாக அமையும் நூல்கள் உபநிடதங்களாகும். உபநிடதம் வடமொழியில் உபநிஷத் என்றழைக்கப்படும். உபநிஷத் என்றால் நெருங்கி மிக அண்மையில் இருத்தல் என்று பொருள்படும். இது குருவுக்கண்மையில் மாணவர்கள் அமர்ந்திருப்பதையே குறித்து நிற்கிறது. பின்னர் மாணவனும் ஆசிரியனும் நெருங்கி இருக்கும்பொழுது கூறப்படுவது இரகசியம் என்னும் பொருளையும் பெறலாயிற்று. மாணவன் குருவை நாடி பலமுறையணுகி உபதேசம் வேண்டி நிற்பதையும் அதன் தகுதியை அறிந்த பின்னரே குரு அறிவுரை வழங்குவதையும் உபநிடதங்கள் அழகாக எடுத்துக் கூறுகின்றன. குரு சீடர்களுக்கிடையில் நடைபெற்ற உரையாடல் வடிவிலேயே உபநிடதங்கள் அமைந்துள்ளன. குருகுலக் கல்வியில் மாணவர்களுக்கு இறுதியாகப் போதிக்கப்படுபவையும் உபநிடதங்களாகும். மாணவர்கள் ஏனைய வேதங்களைக் கற்றுத் தகுதிபெற்ற நிலையிலேயே அறிவுப் பொக்கிஷங்களான உபநிடதங்களை விளங்கிக் கொள்ளும் ஆற்றலைப் பெறுவர் என்று கருதப்பட்டது. இது பிரமம் என்ற கடவுளின் உண்மை, ஆன்மாக்களின் உண்மை, இரண்டும் அடிப்படையில் ஒன்று என்ற கருத்துக்களைப் பற்றிய விளக்கங்களை குருசீட உரையாடல்களிலிருந்தே அறிய முடிகிறது. தந்தை–மகன், கணவன் – மனைவி, பிராமணர் – சத்திரியர்களுக்கிடையே இத்தகைய உரையாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இதிகாச காலப்பகுதியில் அரசியங்குமாரரும், ஏனைத் தலைவர், பெருமக்கள் ஆகியோர் தம் புதல்வரும் படைக்கலப்பயிற்சியோடு ஆட்சிக்குவேண்டிய பல்வகைத் துறைகளிலும் பயிற்சிபெற்றனர். பிராமணர்கள் குருவாக இருந்து சத்திரியர்களுக்கு வேண்டிய சகலவிதமான கலைகளையும் பயிற்றுவித்தனர். அரசர்கள் பிராமணர்களுக்கு மிகுந்த மதிப்பளித்தனர். இராமர் வசிட்டரைத் தொழுதமையாலும், பாண்டவர்கள் துருவாச முனிவரைத் தொழுதமையாலும் இதனை அறியலாம். இராமஇலக்குமணர் வசிட்டர் விசுவாமித்திரரிடமும், பஞ்சபாண்டவர்கள் துரோணரிடமும் கல்வி, கலைகள் படைக்கலப் பயிற்சிகளைப் பெற்றனர். கிருஷ்ணர் அர்ச்சுனனுக்குக் குருவாக இருந்து கீதை போதித்தார். ஏகலைவன் துரோணரைக் குருவாகக் கொண்டிருந்தமையும் அவனது குருபக்தியும் குறிப்பிடத் தக்கது.

இந்து ஒருவனது வாழ்க்கை பிரமச்சரியம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்ற நான்கு நிலைகளாக வகுக்கப்பட்டிருந்தது. இவற்றுள் பிரமச்சரிய நிலையை எடுத்துக்கொண்டால் அது ஒருவனது கல்விக்குரிய நிலையாக விளங்குகிறது. வேதநூல் வகுத்துள்ள இலட்சியப்படி பிரமச்சாரி ஒருவனது கல்விப் பயிற்சி பிராமணக் குருவின் இல்லத்திலே நடைபெற்றது. பூணூல் அணிந்த ஒருவன் குருவின் இல்லத்திற்குச் சென்று கல்வியைக் கற்றுக்கொள்வான். குருவின் இல்லத்தில் குருவிற்கு உணவு இரந்துவருதல் போன்ற கடமைகளைச் செய்வான். அங்கு மாணவன்பெற்ற பயிற்சிகளில் ஒன்று சந்தியாவந்தனம் ஆகும். இது காலை, நண்பகல், மாலை என்ற மூன்றுவேளைகளிலும் செய்யப்படும் சூரியவழிபாடாகும். இவ்வழிபாட்டில் காயத்திரி மந்திரம் ஓதுதல், மூச்சை அடக்குதலும், நீரைச் சிறிதளவு உட்கொண்டு தெளித்தலும் அதாவது ஆசமனஞ்செய்தலும் இடம்பெற்றன. இவ்வாறு பல்வேறு வழிபாட்டு முறைகளையும், கடமைகளையும் செய்து கல்வியைக் கற்றுக் கொள்வான்.

மாணவர்கள் வேதங்களை மட்டுமன்றி வேறுபல கலைகளையும்கற்றதாக அறியமுடிகிறது. அவற்றுள் வேதத்தைச் செவ்வையாக விளங்கிக் கொள்வதன்பொருட்டு வேதாங்கங்கள் ஆறும் பயிற்றுவிக்கப்பட்டன. அவை கற்பம், சிட்ஷை, வியாகரணம், சோதிடம், சந்தோவிசிதி, நிருத்தம் என்பனவாகும். இவற்றுள் கற்பம் என்பது வேள்வி இயற்றும் முறையைத் தெரிவிப்பதாகும். சிட்சை என்பது வேதத்தின் ஒலியியலை அதாவது வேதப் பாடல்களை ஓசைவேறுபாட்டோடு உச்சரிக்கும் முறையைத் தெரிவிப்பது வியாகரணம் என்பது வேதத்திலுள்ள எழுத்து, சொல், பொருள் ஆகியவற்றின் இலக்கணத்தைத் தெரிவிப்பதாகும். சோதிடம் என்பது வானவியல்

அதாவது வேதங்களில் விதிக்கப்பட்டுள்ள கடமைகளைச் செய்வதற்குரிய காலங்களை நிச்சயிக்கும் கலையைத் தெரிவிப்பதாகும். சந்தோநிசிதி வேதத்திலுள்ள செய்யுள் வகைகளையும் அவற்றின் யாப்பமைதிகளையும் தெரிவிப்பதுமாகும். நிருக்தம் என்பது சொற்பிறப்பியலை அதாவது வேதத்திலுள்ள எழுத்து, சொல், பொருளாகியவற்றின் இலக்கணத்தைத் தெரிவிப்பதாகும். இத்தகைய வேதாங்கங்களையும் மாணவர் கற்றுக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறு பண்டைய இந்துக்களின் கல்வி முறையில் வேதங்களும், வேதஇலக்கியங்களும் பயிற்றுவிக்கப்பட்டமையையும், மாணவர்கள் ஒழுக்கத்துடனும் வழிபாட்டு நெறிகளுடனும் கல்வியைப் பெற்றமையையும் அறியலாம்.

(15) "மறுமை பற்றி அழுத்திப் பேசும் இந்துமதம் இம்மை இன்பங்களுக்கும் தனியிடம் வகுத்துள்ளது" ஆராய்க.

இந்துமதத்தின் பல்வேறு கோட்பாடுகளும் ஆன்மாக்களின் உயர்குறிக்கோள் மோட்சம் என்றே கூறுகின்றன. மோட்சம் என்றால் விடுதலை அல்லது விடுபடுதல் என்பது கருத்தாகும். எனவே பிறவியினின்றும் விடுபடுதலே மோட்சம் என்பதை அறிந்துகொள்ளலாம். இம்மோட்சம் மறுமையிலேயே ஒருவனுக்குக் கிட்டக்கூடியது. இத்தகைய மறுமைபற்றி அழுத்திப் பேசினாலும் இந்துமதம் இம்மை இன்பங்களுக்கும் இடம்கொடுக்கிறதென்பதை விளக்கக்கூடிய வகையில் 'புருஷார்த் கோட்பாடு' விளங்குகிறது. புருஷார்த்தம் என்றால் மனித இலட்சியமாகும். இவை அறம், பொருள், இன்பம், வீடு என்பனவாகும். இவற்றைத் தர்மம், அர்த்தம், காமம், மோட்சம் எனவும் அழைக்கலாம். இந்நான்கினுள்ளும் இறுதியாகச் சொல்லப்பட்ட மோட்சமே ஆன்மாக்களின் உயர்குறிக்கோளாகும். இதனை அடைவதற்குரிய வழியாக அறம், பொருள், இன்பம் என்ற மூன்றும் அமைந்துள்ளன, என்பதை நோக்கும்போது இந்து மதம் மறுமைபற்றி அழுத்திப் பேசினாலும் இம்மை இன்பங்களுக்கும் தனியிடம் வகுத்துள்ளதையே அறியமுடிகிறது.

பண்டைய ஆரியன் ஒருவனது சமூகம் நான்கு சாதிகளை உடையதாக இருந்ததுபோல ஆரியன் ஒருவனது வாழ்க்கையும் நான்கு நிலைகளையுடையனவாக விளங்கிற்று. அவை பிரமச்சரியம், இல்லறம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பனவாகும். இந்நான்கு நிலைகளில் இல்லற நிலையே மிகச் சிறந்ததாகும். இந்துமதம் இல்லறம், துறவறம் என்ற இரண்டு அறங்களைப்பற்றிக் கூறினாலும் அறம் என்று சிறப்பித்துக் கூறப்படுவது இல்லறமேயாகும். திருவள்ளுவரும்,

'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்பதில்லாயின் நன்று'

எனக்கூறியுள்ளார். இல்வாழ்க்கை நிலையிலேயே ஒருவன் இந்து ஒருவன் அனுஷ்டிக்க வேண்டிய சகலவிதமான அறங்களையும் பிற்பற்ற முடியும் என்று இந்துமதம் கூறுகிறது. அறம் என்பதை எடுத்துக்கொண்டால் மனுமுதலிய அறநூல்களில் விதித்த கடமைகளைச் செய்தலும், விலக்கியவற்றை ஒழித்தலுமாகும். உயர்குலத்தைச் சேர்ந்த இந்து ஒருவனுக்கு எண்ணற்ற சமயச்சடங்குகளை இந்துமத அறநூல்கள் கூறுகின்றன. சிறப்பாக பிறப்பு, மணம், இறப்பு ஆகியனபற்றிய சடங்குகளைச் செய்தலும், இல்வாழ்க்கை நிலையில் ஆற்றவேண்டிய 'பஞ்சமகாயக்ஞம்' எனப்படும் 'ஐம்பெரும் வேள்விகளை' ஒழுங்காகச் செய்தலும் அறத்தின்பாற் பட்டனவாகும். பிரமயஞ்ஞம் வேதங்களை ஓதிப் பரமான்மாவாகிய பிரமத்தை வழிபடுதலாகும். தேவயஞ்ஞம் வேள்வித்தீயில் நெய்சொரிந்து தேவர்களை வழிபடுதலாகும். பிருர்யஞ்ஞம் நீர்க்கடன் செய்தலாலும் காலந்தோறும் இறந்த மூதாதையரை வழிபடுதலுமாகும். மானுடயஞ்ஞம் விருந்தோம்பும் முறையால் மனிதரைப் பேணுதலாகும். பூதயஞ்ஞம் விலங்குகள், பறவைகள் ஆகியவற்றுக்குத் தானியங்கள், உணவுகள் கொடுத்து எல்லா உயிர்களையும் பேணுதலாகும். இவ்வாறு இல்வாழ்வான் ஒருவன் தினந்தோறும் இவ்வறங்களை அனுஷ்டித்து இம்மைப் பலன்களைப்பெறுவதுடன் அது அவன் மறுமையடைவதற்கும் வழியாக அமைகிறது. இல்வாழ்க்கையை ஒருவன் அறத்தின்வழியே செலுத்துவானாயின் அவன் அதற்குப் புறமாகிய நெறியிற் போய்ப் பெறும் பயன் யாது உளது என்பதை,

'அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போய்ப் பெறுவது எவன்'

என்று வள்ளுவர் கூறுகிறார்.

இவ்வாறு இல்வாழ்க்கையில் சகல அறங்களையும் அனுஷ்டிக்கும் ஒருவன் பொருளை ஈட்டவும் தகுதியுடையவனாவான். அறங்களை அனுஷ்டிப்பதற்குப் பொருள் அவசியம் ஆகையினால் இல்வாழ்க்கை நிலையில் ஒருவன் பொருளீட்ட வேண்டும் என்று வற்புறுத்தப்படுகிறான்.

'அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளிலார்க்கு
இவ்வுலகம் இல்லாகியாங்கு' எனக் கூறப்படுகிறது.

இந்துமதம் செம்மையான வழியில் பொருளை ஈட்டி அறத்தின்வழியே அதனைப் பகிர்ந்து கொள்ளுதல் வேண்டுமெனக் கூறுவதைக் காணலாம்.

'பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழி எஞ்சல் எஞ்ஞான்றுமில்'

என்று திருக்குறள் விளக்குகிறது. அதாவது பொருள் செய்யுங்கால் பாவத்திற்கு அஞ்சிப் பொருளை ஈட்டி, அப்பொருளை இயல்புடைய மூவர்க்கும் தென்புலத்தார் போன்ற நால்வர்க்கும் பகுத்துத் தானும் உண்ணுதலை உடையவனாயின் அவன் சந்ததி உலகத்தில் இறத்தலில்லை என்று கூறப்படுகிறது.

இந்துமதம் அறம்பொருள் இரண்டுடனும் ஒருவன் இன்பத்தையும் அனுபவித்தல் வேண்டும் எனக் கூறுகிறது. மனைவி மக்களுடன் கூடி அறவழியில் நின்று அனுபவிக்கும் இன்பத்திற்கே இடங்கொடுக்கப்படுகிறது. இந்திய இலக்கியங்கள் சமயஞ்சார்ந்தவையாயினும், உலகியல் சார்ந்தவையாயினும் இன்பத்திற்கு இடங்கொடுக்கின்றன. வாத்சாயனர் எழுதிய காமசூத்திரம் காமக்கலையை நன்கு விளக்குகிறது. திருவள்ளுவரும் காமத்துப்பால் என்னும் பகுதியில் இல்வாழ்க்கையில் ஒருவன் அனுபவிக்கும் இன்பம் பற்றி எடுத்துக்கூறுகிறார். காமத்துப்பாலில் களவு இயலில்,

'ஊடல் உணர்தல் புணர்தல் இவை காமம்
கூடியார் பெற்ற பயன்'

என்று கூறப்பட்டுள்ளது. அதாவது புணர்ச்சி இனிதாதற்பொருட்டு வேண்டுவதாய ஊடலும் அதனை அளவறிந்து நீக்குதலும், அதன்பின் நிகழ்வதாகிய புணர்ச்சியும் காமத்தை இடைவிடாது எய்தியவர் பெற்ற பயன்கள் என்று கூறப்பட்டுள்ளது. இவ்வாறு இந்துமதம் இல்வாழ்க்கைக்கும், இன்மை இன்பங்களுக்கும் தனியிடம் வகுத்துள்ளது எனக் கூறலாம்.

வேதங்கள் வேத இலக்கியங்களும் இம்மைப் பயன் விரும்பிச்செய்த வேள்விக் கிரியைகள் பற்றிக் கூறுகின்றன. அக்கினி வளர்த்து ஆகுதிப்பொருள்களைச் சொரிந்து "நான் உனக்கு நெய் போன்ற ஆகுதிப் பொருட்களைத் தருகின்றேன். நீ எனக்கு செல்வங்கள், வீரர்களாகிய புத்திரர்கள், நீண்ட ஆயுள், மழையைத்தா" என்று கேட்டு வேதகால மக்கள் யாகக்கிரியைகளைச் செய்ததாக இருக்குவேதம் கூறுகிறது. கர்மகாண்ட இலக்கியங்களான பிராமணங்களும் யாகக் கிரியைகளை ஒருவன் முறைப்படி செய்யின் அதற்குரிய பலனை அத்தெய்வம் கொடுத்தே தீரும் எனவும் ஒருவன் இவ்வுலகில் செய்யும் இஷ்டாபூர்த்தங்களின் பலன் அவனை இம்மையிலும் மறுமையிலும் சென்றடையுமெனவும் கூறுகின்றன.

இந்துமதம் அறம், பொருள், இன்பம் என்ற மூன்றிற்கும் முக்கியத்துவம் கொடுத்ததுடன், வீடுபேறடைவதற்குரிய வழிகளாகவும் கூறியுள்ளன. இல்வாழ்வானைப் பொறுத்தமட்டில் இம்மூன்றும் நிறைவான வாழ்வு வாழ உதவுவதோடு மறுமையின்பமாகிய மோட்சத்தையுடையவும் காரணமாகின்றன. இல்வாழ்க்கையில் அறங்களோடு சகலவிதமான இன்பங்களையும் அநுபவித்து வயதுவந்த காலத்தில் வனத்திற்குச் சென்று உலகப் பற்றுக்களினின்றும் தன்னை விடுவித்துக் கொள்வதற்குப் பயிற்சி எடுக்கிறான். இந்நிலையே வானப்பிரஸ்த நிலையாகும். இவ்வாறு தியானங்களின் மூலம் பயிற்சி பெற்று முற்று முழுதாக உலகப்பற்றுக்களைத் துறந்து சந்நியாச நிலையை அடைகிறான். சந்நியாச நிலையில் உபநிடதக் கருத்தை இறைதியானத்திலேயே முற்றுமுழுதாகச் செலவழிக்கிறான். 'தியானயோகிகள் எதனைத் தியானிக்கிறார்களோ அதுவே ஆவார்கள்' என்று பகவத்கீதை கூறுகிறது. இவ்வாறு இறைவனோடு ஒன்றி விடுகிற நிலையே மோட்சமாகும்.

இந்துமதத்தில் புருஷார்த்தக் கோட்பாடு தரும் விளக்கங்களைத் தொகுத்து நோக்கின் மோட்சமாகிய மறுமை பற்றி அழுத்திப் பேசினாலும் இல்வாழ்க்கையின் மூலம் இம்மையின்பங்களுக்கும் தனியிடம் வகுத்துள்ளது என்றே கூறவேண்டும்.

(16) கட்டிடக்கலை அறிவில் இந்துக்கள் எவ்வளவிற்குச் சிறந்து விளங்கினார்கள் என்பதை, இந்துக்கோயிற் கட்டிடக்கலை வளர்ச்சி நிலைகளிற் சோழர் காலத்தைக் கருத்திற்கொண்டு ஆராய்க.

இந்துக்கள் கட்டிடக்கலையில் சிறந்து விளங்கினார்கள் என்பதை இந்தியாவிற் காலத்துக்குக் காலம் தோன்றிய கோயிற் கட்டிடங்களை அடிப்படையாகக் கொண்டு அறிந்துகொள்ளலாம். இந்துக் கட்டிடக் கலையின் தோற்றத்தை சிந்துவெளியிலிருந்தே அறியமுடிகிறது. ஆனால் கோயிற் கட்டிடங்கள் எனக் கூறக்கூடிய வகையில் சான்றுகளோ, அழிபாடுகளோ கிடைக்கவில்லை. மௌரிய மன்னர்களது காலத்திற்கும் குப்தராட்சிக் காலத்திற்கும் இடைப்பட்ட காலங்களில் பௌத்தக் கட்டிடக்கலை வளர்ச்சியடைந்திருந்தது. குப்தர் காலத்தில் இந்துக்கோயிற் கட்டிடக்கலை சிறப்புற்று விளங்கியது. வடநாட்டு கலைமரபின் வளர்ச்சியை அத்துணைத் தெளிவாகக் கண்டுகொள்ள முடியாது. வடஇந்தியப் பழைமைக் கோயில்களில் பல இஸ்லாமியப் படையெடுப்புக்களால் அழிந்துவிட்டன. தென்னிந்தியத் திராவிடக் கட்டிடக்கலை கி.பி. 6-9ம் நூற்றாண்டு வரையும் பல்லவ மன்னர்களின் ஆதரவில் வளர்ச்சியடைந்தது. இக் காலப்பகுதியிலேயே தமிழ்நாட்டிற் கருங்கற் கோயில்கள் முதன்முதலாகத்தோற்றம்பெற்றன எனக் கூறக்கூடியவகையில் ஆதாரங்கள் உள்ளன. பல்லவர்காலக் கோயில்களிற் சிறந்தவை காஞ்சிபுரம், மாமல்லபுரம் போன்ற இடங்களிற் காணப்படுகின்றன. சோழராட்சியிற் பல்லவ திராவிடப் பாணி மேலும் வளர்ச்சியடைந்துள்ளது. தஞ்சைப் பெருங்கோயில், கங்கைகொண்ட சோழபுரம் போன்ற கோயில்கள் குறிப்பிடத்தக்கவையாகும். தமிழகத்தில் கலை, மொழி சமய உணர்வுகளை வெளிப்படுத்தும் பண்பாட்டு நிலையங்களாகத் திருக்கோயில்கள் விளங்குகின்றன. கோயில்கள் வழிபாட்டு நிலையங்களாகவும், சமூகத்தின் பல்வேறு தேவைகளையும் பூர்த்தி செய்கின்ற சமூக நிறுவனங்களாகவும் விளங்கியுள்ளன. சமூகத்தில் முக்கியத்துவம் பெற்ற இக்கோயில்கள் இந்துக் கட்டிடங்களின் வளர்ச்சியையும், இந்துக்கள் கட்டிடக் கலையில் பெற்றிருந்த நுண்ணறிவையும் எடுத்துக் காட்டுவனவாகவுள்ளன.

தென்னிந்தியத் திராவிடக் கட்டிடக்கலை பல்லவர்காலப் பகுதியிலேயே தோற்றம் பெற்றதாக வரலாற்றாசிரியர் கூறுவர். பல்லவருக்கு முற்பட்ட காலங்களில் சங்ககாலம், சங்கம் மருவிய காலப் பகுதிகளில் கோயில்கள் இருந்தமையை இலக்கியங்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடிந்தாலும் அவற்றின் வரலாறு, கலைப்பாணி ஆகியவைபற்றித் தெளிவாக அறிந்துகொள்ள முடியவில்லை. அக்கோயில்கள் மண், மரம் போன்ற அழிகின்ற பொருட்களினாலான கோயில்களாக இருந்தமையால் அவைபற்றி அறியமுடியாதுள்ளது. பல்லவர் காலப்பகுதியில் கருங்கற் கோயில்கள் தோற்றம்பெற்றமையை 1ம் மகேந்திரவர்மனது மண்டகப்பற்று என்ற இடத்தைச் சேர்ந்த கல்வெட்டு மூலம் அறிந்துகொள்ளலாம். இக்காலப் பகுதியிலிருந்தே கட்டிடக்கலை வரலாற்றைத் தெளிவாக அறியமுடிகிறது. இவ்வாறு தோற்றம்பெற்ற திராவிடக் கட்டிடக்கலை சோழர் காலப்பகுதியில் மிக உன்னத நிலை அடைந்தது.

சோழர்காலக் கட்டிடக்கலை வரலாற்றை மூன்று காலப் பகுதிகளாகப் பிரித்து அறிஞர்கள் விளக்கியுள்ளனர். முதலாவது காலப்பகுதி பிற்கால சோழவம்சத்தின் முதலாவது சுதந்திர மன்னாகிய விஜயாலயச் சோழனது ஆட்சிதொடக்கம் முதலாவது பெரும் பேரரசனாகிய இராஜராஜனது ஆட்சியின் ஆரம்பகாலம்வரையுள்ள காலப்பகுதியாகும். இரண்டாவது காலப் பகுதி இராஜராஜனது ஆட்சி தொடக்கம் வீரராஜேந்திரனது ஆட்சிவரையுள்ள காலப்பகுதியாகும். மூன்றாவது காலப்பகுதி 1ம் குலோத்துங்கனது ஆட்சி தொடக்கம் பேரரசின் வீழ்ச்சியுடன் முடிவடைகிறது. இது ஏறக்குறைய கி.பி.1070-13ம் நூற்றாண்டு வரையுள்ள காலப்பகுதியாகும். இவற்றுள் ஆரம்ப காலத்திற் கட்டப்பட்ட கோயில்களிற் குறிப்பிடத்தக்கது நார்த்தமலையிலுள்ள விஜயாலயசோளீஸ்வரம் ஆகும். இக்கோயில் பல்லவர்கால இறுதியில் கட்டப்பட்ட கோயில்களைப்போன்று அளவிற் சிறியதாக உள்ளது. 1ம் இராஜராஜன், 1ம் இராஜேந்திரச்சோழன் போன்றோரினாற் கட்டப்பட்ட கோயில்களை இந்துக்களின் கட்டிக்கலைச்சிறப்பை உணர்த்தும் கோயில்களாக உள்ளன.

தமிழ்நாட்டு வரலாற்றில் 1ம் இராஜராஜச்சோழன், 1ம் இராஜேந்திரச்சோழன் போன்ற மன்னர்களது ஆட்சிக்காலம் புகழ்பெற்ற தாகும். இவர்கள் பலம்வாய்ந்தவர்களாகவும், திறமையுடையவர்களாகவும் விளங்கினர். இவர்களது ஏகாதிபத்தியக் கொள்கைகள், வர்த்தகமுயற்சிகள் சிறந்து விளங்கியமையால் நாடு பொருளாதாரத் துறையிற் செழிப்புற்று இருந்தது. அரசியற் சூழ்நிலைகளும் சமயம், கலைகள் ஆகியவற்றின் வளர்ச் சிக்குச் சாதகமாகவே இருந்தது. இந்நிலையில் சமயத்தைப் பேணிவளர்க்க வேண்டுமென்ற நோக்குடன் அளவிற் பெரிய கோயில்கள் சோழமன்னர்களால் அமைக்கப்பட்டன. இக்கோயில்கள் சிற்பம், ஓவியம், இசை நடனம் போன்ற கலைகளின் வளர்ச்சிக்கும் நிலைக்களனாக அமைந்தது.

சோழர்காலக் கோவில்களில் மிகவும் புகழ்பெற்றது தஞ்சைப் பெருங்கோயிலாகும். இது பிருகதீஸ்வரர் கோயில் எனவும் அழைக்கப்படுகிறது. இது 500' நீளமும் 250' அகலமும் கொண்ட நல்லஇடவசதியுடைய ஓர் இடத்தின் மத்தியில் அமைந்துள்ளது. இக்கோயிற் கருவறை, அர்த்தமண்டபம், மகாமண்டபம், நந்திக்கென அமைக்கப்பட்ட மண்டபம், கோபுரம், விமானம் வீதி அல்லது பிரகாரம் போன்ற அம்சங்களை உள்ளடக்கியது. பிரதான கோயிலைச்சுற்றி மதிலின் உட்புறத்தில் நான்கு பக்கங்களிலும் முக்கியமான இடங்களில் சம அயவு இடைவெளிகளில் துணைக்கோயில்கள் கட்டப்பட்டுள்ளன. தூண்களை உடைய நடைபாதை ஒன்று இத்துணைக் கோயில்களைத் தொடுக் கிறது. இக்கோயில் வாயிலில் இரண்டு கோபுரங்கள் இடம்பெறுகின்றன. இரண்டு கோபுரங்களையுடைய முதலாவது தென்னிந்தியக் கோயில் தஞ்சைப் பெருங்கோயில் என்று கூறப்படுகிறது. இக்கோயிற் கருவறையின் மேலுள்ள விமானம் ஏறக்குறைய 200' உயரமுடையது. இதன் அடித்தளம் சதுர வடிவினதாக உள்ளது. இது 82' உயரமுடையது. மேலே செல்லச்செல்ல விமானம் கூம்பிக்கொண்டு செல்கிறது. இவ்விமானம் 13தளங்களைக் கொண்டுள்ளது. விமானத்தின் சிகரத்தின்மேல் அழகிய பிரமாண்டமான கோளவடிவுடைய கல் லொன்று முடியாக வைக்கப்பட்டுள்ளது. இதன் நடுவில் கலசம் ஒன்று இடம்பெறுகிறது. திராவிடக் கட்டிடக்கலை அம்சங்களிற் சிறந்ததான விமான அமைப்புத் தஞ்சைப் பெருங்கோயிலுக்குத் தனியழகைக் கொடுக்கிறது. இக்கோயில் மூலஸ்தான அறையின் நுழைவாயில்களின் இரு பக்கங்களிலுமுள்ள மாடங்களில் இரு துவாரபாலகர்களின் வடிவங்கள் இடம் பெறுகின்றன. தென்னிந்தியாவிலுள்ள ஒரேகல்லினாலான மிகப்பெரிய நந்தி வடிவம் தஞ்சைப் பெருங்கோயிலில் இருப்பதாக அறிஞர்கள் கூறுவர். கரு வறையின் பின்புறச் சுவர்களில் பல ஓவியக் காட்சிகள் விளங்குகின்றன. அர்த்தமண்டபத்தின் வெளிப்புறச் சுவரிலுள்ள பல மாடங்களில் நுட்பமான விக்கிரகங்கள் பல கலைவனப்புடையனவாக விளங்குகின்றன. இவ்வாறு அமையப்பெற்ற தஞ்சைப் பெருங்கோயில் பற்றி தென்னிந்திய வரலாற்றாசிரியர் களில் ஒருவரான நீலகண்டசாஸ்திரி என்பவர் கூறுமிடத்து "மற்றைய இந்தியக் கோயில்கள் எல்லாவற்றிலும் பார்க்க அதிகம் பெரிதாகவும், அதிகம் உயரமாகவும் விளங்குகிறது. இது இராஜராஜனது இணையற்ற படைப்புக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது" என்று கருத்துத் தெரிவித்துள்ளார். இக்கோயில் அமைப்பையும், கலைநுட்பத்தையும் அடிப்படையாகக் கொண்டு இந்துக் கட்டிடக்கலையில் பெற்றிருந்த உயர்ந்த அறிவினை விளங்கிக்கொள்ளலாம்,

சோழர் காலத்தில் தஞ்சைப் பெருங்கோயிலைப் போன்று சிறப்புடைய இன்னொரு கோயிலும் அமைக்கப்பட்டது. அது 1ம் இராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட கங்கைகொண்ட சோழபுரம் என்ற கோயிலாகும். இக்கோயில் இராஜேந்திரச் சோழனது ஆட்சியில் சோழப் பேரரசு பெற்றிருந்த செல்வநிலையை விளக்கி நிற்கிறது. 340' நீளமும் 110' அகலமும் உடைய நீள்சதுர வடிவிலமைந்த கோயிலாக உள்ளது. கருவறை அர்த்தமண்டபம், மகாமண்டபம், கோபுரம், விமானம், வீதி போன்ற அம்சங்கள் இக்கோயிலில் இடம்பெறுகின்றன. இதன் மகாமண்டபம் 175' நீளமும் 95' அகலமும் உடையது. மகாமண்டபத்தள் 4' உயரமுடைய மேடையின்மீது சாதாரண சிற்ப வேலைப்பாடுகளுடன்கூடிய 150 தூண்கள் இடம்பெறுகின்றன. இக்கோயில் விமானம் ஏறக்குறைய 186' உயரமுடையது. இது 8 தளங்களை உடையது. தஞ்சைப் பெருங்கோயிலை ஒத்த அமைப்பையுடையதாயினும் அதைவிட உயரத்திற்குறைந்த கோயிலாகவுள்ளது தஞ்சைப் பெருங்கோயிலைவிட அழகிற் சிறந்த கோயிலாக உள்ளது.

திராவிடக் கட்டிடக்கலை அம்சங்களில் மிகவும் சிறந்தது விமானம் என்ற அமைப்பாகும். தஞ்சைப் பெருங்கோயில், கங்கைகொண்ட சோழபுரம் என்ற இருகோயில்களினதும் விமானங்களை அவதானிக்கும்போது இந்தக் கட்டிடக்கலைச் சிறப்பினை விளங்கிக்கொள்ளலாம். இவ்விரு விமானங்களையும் அவதானித்த பேர்சி பிரவுண் எனும் அறிஞர் பின்வருமாறு குறிப்பிடுகிறார். 'இவை ஒவ்வொன்றும் கட்டட உருவம் மூலம் வெளிப்படுத்தப்பட்ட சிருஷ்டிகர்த்தாவின் இறுதியான, நிறைவான காட்சியைக் காட்டுகின்றன. ஒன்று தன்னறிவுடன் கூடிய சக்தியின் குறியீடாகவும், மற்றது உள்ளுணர்வுடன் கூடிய அழகின் குறியீடாகவும் உள்ளன; ஆனால் இரண்டுமே ஆத்மாவைப் பிடித்த தெய்வீகத் தன்மையின் தூண்டுதலாலே உருவாக்கப்பட்டன' என்று கூறியிருப்பதிலிருந்து சோழர் காலக் கட்டிடக்கலை வளர்ச்சி பற்றி அறியமுடிகிறது.

சோழர் காலக் கோயில்களில் சுவர்களின் சுற்றுப்புறத்திலுள்ள சிலைகள், அலங்கார வேலைப்பாடுகள் யாவும் நுட்பமானவையாக உள்ளன. கற்களில் சிற்பங்களைச் செதுக்கும் கலையும், உலோகங்களில் சிற்பங்களை வடிக்கும் வார்ப்புக்கலையும் நன்கு வளர்ச்சியடைந்தன. திருமால், பிரமன் போன்றோரது உருவத்திருமேனிகளில், பல்வேறு மூர்த்தங்களில் வடிக்கப்பட்ட சிவனது விக்கிரகங்கள், காளிங்கன் என்ற பாம்பின்மீது நடமாடும் குழந்தைப் பருவக் கிருஷ்ணர், இராமர், சீதை, நாயன்மார்களது உருவங்கள் சோழர் காலச் சிற்பங்களில் கலைத்திறன் மிக்கவையாகும். உலோகங்களில் வடிக்கப்பட்ட சிற்பங்களில் நடராஜவடிவங்கள் மிகச்சிறந்தவையாகும்.

சோழ மன்னர்கள் கட்டிய கோயில்களில் பல்வேறு மண்டபங்களும், பலபிரகாரங்களும் இடம்பெற்றன. நடனமண்டபம், நாடகமண்டபம், புராண 'படன மண்டபம், வியாகரண மண்டபம், தருக்க மண்டபம் போன்றன இடம்பெறுகின்றன. இம்மண்டபங்களிலும், பிரகாரங்களிலும் கலைநுட்பம் வாய்ந்த கற்களிற் செதுக்கப்பட்ட சிற்பங்கள் பல இடம்பெற்றுள்ளன.

இவ்வாறு சோழர்காலப் பகுதியில் வளர்ச்சியடைந்திருந்த கோயில் கட்டிடக்கலை அமைப்பு, அங்கமைந்த மண்டபங்கள், பிரகாரங்கள் கோபுரங்கள், விமானங்கள், சிற்பங்கள் ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டு இந்துக்கள் கட்டிடக்கலையில் மிகச் சிறந்த அறிவைப் பெற்றிருந்தனர் என்பதனை அறிந்து கொள்ளலாம்.

(17) மேல்வருவனபற்றி விரிவான விளக்கக் குறிப்புக்கள் வரைக.

(அ) ஆகமங்களும் கோயிற் கிரியைகளும்:-

இந்துமதத்தின் முதல்நூல்கள் வேதங்களும் ஆகமங்களுமாகும். சைவம் வேதத்தைப் பொதுநூலாகவும், ஆகமங்களைச் சிறப்பு நூலாகவும் கொள்கிறது. வேதங்களும் ஆகமங்களும் இறைவனால் அருளப்பட்டவை.

"திருமந்திரம் 'வேதமோடாகமம் மெய்யாம் இறைவனூல் ஓதிப் பொதுவும் சிறப்புமென்றுன்னுக" எனக் கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது. ஆகமங்கள் என்று கூறும்போது சிவாகமங்களை குறித்து நிற்கிறது. அவை எண்ணிக்கையில் இருபத்தெட்டாகும். சாக்தர்களுக்குரிய ஆகமங்கள் தந்திரங்களெனப்படும் இவை எண்ணிக்கையில் எழுபத்தேழு ஆகும். வைஷ்ணவர்களுக்குரிய ஆகமங்கள் பஞ்சராத்திரம் எனப்படும். இவை எண்ணிக்கையில் நூற்றெட்டாகும்.

சிவாகமங்கள் காமிகம் தொடக்கம் வாதுளம்வரையுள்ள இருபத்தெட்டாகும். திருமூலர் "அஞ்சனமேனி அரிவையோர் பாகத்தன் அஞ்சொடு இருபத்து மூன்றுளதாகமம்" எனக் கூறுகிறார். சிவாகமங்கள் ஒவ்வொன்றும் சரியாகாண்டம், கிரியாகாண்டம், யோககாண்டம், ஞான காண்டம் என்ற நான்கு காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் கிரியாகாண்டம் கிரியை முறைகளைப் பற்றி விளக்கிக் கூறுகிறது. மந்திரங்களின் இலக்கணம், சந்தியாவந்தனம், பூசை, செபம், ஓமம், கர்ஷணம், பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம், தீட்சைவிதிகள் பற்றிக்கூறுகிறது.

கர்ஷணம் எனப்படுவது நிலத்தை மட்டமாக்கிக் கோயில் கட்டத்தொடங்கும்பொழுது நிகழ்த்தப்படும் உழுங்கிரியையாகும். யாகசாலை அமைக்கும்பொழுதும் இவ்வாறு கர்ஷணம் செய்தல் முறையாகும். வேதங்களில் யாகம் நிகழுமுன் உழுதல் ஓரம்சமாக விளங்குவது குறிப்பிடத்தக்கது.

பிரதிஷ்டை, அநாவர்த்தன பிரதிஷ்டை, ஆவர்த்தன பிரதிஷ்டை, புனராவர்த்தன பிரதிஷ்டை, அந்தரித பிரதிஷ்டை என நான்குவகைப் படும். அநாவர்த்தன பிரதிஷ்டை எனப்படுவது கோயில்கள் இல்லாதவிடத்துப் புதிதாகக் கோயில் ஒன்றை அமைத்து அங்கு இறைவனைப் பிரதிஷ்டை செய்தலாகும். நீண்டகாலத்திற்குமுன் கோயில் அமைக்கப்பட்டு நித்திய, நைமித்திய, காமிய கிரியைகள் நடைபெற்றுவரும்வேளை, எதிர்பாராதவிதமாக காடுபடர்தல், மண்மாரி ஏற்படல், தீபரவுதல், முதலியவை நிகழ்ந்து ஆலயம் மறைக்கப்பட்டபொழுது அதனை வெளியாக்கியோ அல்லது முன்போல் தேவாலயம் ஒன்றைப் புதிதாக நிர்மாணித்தோ நிகழும் பிரதிஷ்டை ஆவர்த்தன பிரதிஷ்டை எனப்படும். புனராவர்த்தன பிரதிஷ்டை எனப்படுவது, நித்திய நைமித்தியக் கிரியைகள் யாவும் நடைபெற்றுவரும் வேளை விமானம், கோபுரம், மண்டபம், பிரகாரம், ஆலய விக்கிரகங்கள் ஆகியவற்றில் எவையேனும் வெடித்தோ, பிளந்தோ சிதிலமடையின் பாலஸ்தாபனஞ் செய்து பழுதுடைந்த கட்டிடங்களை முன்போல் அழகாகவும், பலமிவாய்ந்ததாகவும் அமைத்துப் பிரதிஷ்டை செய்தலாகும். அந்தரித பிரதிஷ்டை எனப்படுவது தேவாலயத்தினுள் மக்கள் இறந்தால், மிருகங்கள் கொல்லப்பட்டால், சடக்குடன் கோயிலுக்குள் சென்றால், நாய், கழுதை, பன்றி, குரங்கு சென்றால் செய்யப்படும் பிரதிஷ்டையாகும்.

உற்சவம் என்பது பஞ்சகிருத்தியங்களில் ஒன்றாகிய சிருஷ்டியைக் குறிக்கும் கிரியைநூல்கள் விளக்கம் தருகின்றன. உற்சவம் பன்னிரண்டு, ஒன்பது, ஏழு, ஐந்து, மூன்று, ஒருநாள் நடைபெறும் உற்சவங்கள் பற்றிக் கூறப்படுகிறது. உற்சவங்கள் இன்னும் வேறுவகைகளாகவும் பிரித்துக் கூறப்படுகிறது. பத்து நாட்கள் நடைபெறும்முறையே பெரிதும் வழக்கிலுள்ளது. உற்சவங்களும் நித்தியம், நைமித்தியம், காமியம் எனமூன்றுவகைப்படும். தினந்தோறும் நிகழும் கிரியைகள் நித்தியோற்சவம் எனப்படும். விசேட நிமித்தங்களின் பொருட்டு நடைபெறும் கிரியைகள் நைமித்தியோற்சவம் எனப்படும். இவற்றில் சிறந்தது பிரமோற்சவம் ஆகும். கொடி ஏறியபின் நிகழும் திருவிழாவாகும். பலனைக் குறிக்கோளாகக் கொண்டு செய்யப்படும் கிரியைகள் காமியோற்சவம் ஆகும். கிரியைகள் நித்தியமாயினும், நைமித்தியமாயினும் காமியமாயினும் அபிஷேகம், அலங்காரம், நைவேத்தியம், தீபாராதனை, அர்ச்சனை, தோத்திரம், நடனம் போன்ற அம்சங்கள் பொதுவானவை. நடனம் தற்காலத்தில் இடம்பெறுவதில்லை.

பிராயச்சித்தம் பிரதிஷ்டை, உற்சவம் ஆகிய இரு கிரியைகளின் இறுதியில் இன்றியமையா அம்சமாக இடம்பெறுகிறது. பல காரணங்களினால் கிரியைகள் உரியவாறு நிகழ்த்தாது தவறுஏற்படச் சந்தர்ப்பங்களுண்டு. இவை தெரிந்தோ, தெரியாமலோ நிகழலாம். இக்குறைகளை நீக்கும் வகையில் செய்யப்படுவதே பிராயச்சித்தமாகும். இவ்வாறு ஆகமங்கள் கோயிற் கிரியைகளைப் பற்றிய விளக்கங்களைக் கொண்டுள்ளன.

(ஆ) மனுதர்ம சாத்திரம்:-

தர்மசாஸ்திர நூல்கள் அறக் கருத்துக்களையும், ஒழுக்கம் பற்றியும் சட்டம், நீதி, நிர்வாகம் பற்றிய கருத்துக்களையும் கூறுவனவாக உள்ளன. தர்மசாஸ்திரங்கள் வேதங்களை மூலநூல்களாகவும், பிராமணங்களாகவும் கொண்டு அவை கூறும் விடயங்களை நினைவுகூர்ந்து எழுதப்பட்டமையினால் ஸ்மிருதி இலக்கியங்கள் என்று அழைக்கப்படுகின்றன. மனுதர்மசாஸ்திரம் தர்மசாசாஸ்திர நூல்களில் சிறப்புடையது. அதுமனு என்பவரால் செய்யப்பட்டது. மனுஸ்மிருதி, மானவ தர்மசாஸ்திரம் போன்ற பெயர்களினாலும் அழைக்கப்படுகிறது. இது கி.பி.2ம் அல்லது 3ம் நூற்றாண்டுகளில் தோற்றம் பெற்றதாகக் கருதப்படுகிறது. மனுதர்மசாத்திரம் பொதுவான மக்கள் ஒழுக்கத்தையே பெரிதும் கூறுகிறது. அறத்தின் காவலன் அரசனாவான். அரசன் அறத்தைக் காப்பவனாதலின் அவன் அறத்தின் உருவென்றே கூறப்படுகின்றான். தீயோரை ஒறுத்து நல்லோருக்கு இதம் செய்யுமாற்றல் அரசன் தெய்வச் சட்டமாகிய அறத்தைப் பேணினன். மனுதர்ம சாத்திரம் 'நடுநிலைநின்று நீதிவழங்கும் அரசன் அச்செயலினால் வேத வேள்வி செய்தலினால் ஏற்படும் புண்ணியத்தை எய்துவானெனவும் தனது கடமையிற் தவறும் அரசன் நரகத்தில் வீழ்ந்து அழுந்துவான்' எனவும் கூறுகிறது. குற்றம் நீதிநெறி பற்றிய கருத்துக்களும் மனுஸ்மிருதியில் விளக்கப்பட்டுள்ளன. பொய்ச்சாட்சி சொல்லுதல் இழிவானதொன்றாகும். பெருங்குற்றமாகவும் கருதப்பட்டது. சித்திரவதை முறைகள் கூறப்பட்டாலும் பிராமணர்கள், சூல்கொண்ட பெண்கள், குழந்தைகள், முதியோர், பிணியுற்றோர் சித்திரவதைகளுக்கு விலக்கானவர்கள் எனவும் அறியமுடிகிறது. இருவர் சண்டையிடும்போது ஒருவர் உடன் இறந்துவிட்டால் அல்லது ஏழு நாட்களுக்குள் இறந்துவிட்டால் அதற்குரிய தண்டனை கொலையாகும். தாய், தந்தை, உடன்பிறந்தோரைத் துன்புறுத்தியோர், அத்துமீறி அந்தப்புரத்தினுட் பிரவேசித்தோர், பகையரசர்க்குத் துணைபுரிவோர், நாட்டிற்கெதிராகச் சதிசெய்வோர் உயிருடன் தீயிலிட்டு எரிக்கப்படுவர் என்று தர்மசாத்திரம் கூறுகிறது. மனுதர்ம சாத்திரம் கூறும் நீதி குலத்துக்கொரு நீதியாகவே உள்ளது. அதாவது "பிராமணன் ஒருவன் சத்திரியன் ஒருவனைப் பழிதூற்றினால் அதற்குரிய தண்டமாக 50 பணத்தையும், வைசியனைப் பழிதூற்றினால் 25 பணத்தையும் சூத்திரனைப் பழிதூற்றினால் 12 பணத்தினையும் செலுத்தலாம்" என்று கூறுகிறது. வருணாச்சிரம தர்மம் பற்றிய கருத்துக்களையும் இந்நூல் விளக்குகின்றன. பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நால்வகை வருணங்களுக்குமுரிய கடமைகள் விளக்கப்பட்டிருப்பதோடு ஒவ்வொரு சாதியினரும் தனது சாதிக்குரிய தொழில்களையே செய்தல் சிறந்ததெனக் கூறப்பட்டுள்ளது. "ஒருவன் தனக்குரிய தொழிலைச் சீர்கேடாகச் செய்தல் மற்றவனுக்குரிய தொழிலைத் திறம்படச் செய்வதிலும் சிறந்தது" என மனு கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்து ஒருவனது வாழ்க்கை பிரமச்சரியம்; கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்ற நான்கு நிலைகளாகப் பிரித்துக் கூறப்பட்டிருப்பதுடன் முறைப்படுத்தப்பட்ட வாழ்க்கையின் மூலம் மோட்சத்தைப் பெறமுடியும் எனவும் கூறப்பட்டுள்ளது. இவ்வாறு மனுதர்மசாத்திரம் சட்டம், சமயம், ஒழுக்கம் ஆகிய அனைத்தையும் இணைத்துக்கூறும் நூல்களாகவுள்ளது.

(இ) சைவத்திருமுறைகள்:-

இந்துமத வளர்ச்சியில் திருமுறைகளின் பங்கு குறிப்பிடத்தக்கது. திருமுறைகள் நாயன்மார்கள் சிவனைப் புகழ்ந்து பாடிய பாடல்கள். இவற்றை சைவத் திருமுறைகள் என வழங்குவர். இத்திருமுறைகள் எண்ணிக்கையில் பன்னிரண்டாகும். திருமுறைகள் தொகுக்கப்பட்ட காலம் சோழர் காலமாகும். 1ம் இராஜராஜசோழன் நம்பியாண்டார் நம்பியைக் கொண்டு திருமுறைகளைத் தொகுப்பித்தான். நம்பியாண்டார் நம்பியினால் தொகுக்கப்பட்டவை பதினொரு திருமுறைகளேயாகும். பன்னிரண்டாம் திருமுறை பெரியபுராணமாகும். இதனை 2 ம் குலோத்துங்கசோழனின் அமைச்சராக அருண்மொழித்தேவர் எனும் சேக்கிழார் சுவாமிகள் இயற்றினார். இவர் இதனைத் தில்லையிலே இருந்து பாடி அங்கேயே அரங்கேற்றினார். சோழமன்னன் இதற்குப் பெருவிழா எடுத்துச் சிறப்பித்தான். தில்லைவாழ் அந்தணர்களும், சோழப்பேரரசனும் மற்றும் பெரியோரும் இதனைப் பன்னிரண்டாந் திருமுறையாகச் சேர்த்துக் கொண்டனர். சைவத் திருமுறைகள் பன்னிரண்டனுள் முதல் மூன்று திருமுறைகளும் ஞானசம்பந்தரால் எழுதப்பட்டவையாகும். நாலாம், ஐந்தாம், ஆறும் திருமுறைகள் திருநாவுக்கரசராலும், ஏழாந்திருமுறை சுந்தரமூர்த்திசுவாமி

730

களாவும் அருளப்பட்டன. இவ்வேழு திருமுறைகளும் தேவாரத் திருப்பதிகங்களாக விளங்குகின்றன. தேவாரத் திருமுறைகள் பண் அமைதி பெற்றவை. அவை பண்ணோடு பாடப்பட்டுத்தக்கவை. இவற்றைப் பண்ணோடு பாடவல்லார் ஓதுவாமூர்த்திகள் என்று அழைக்கப்படுவர். எட்டாந் திருமுறையாகக் கொள்ளப்படுவது மாணிக்கவாசகரினுல் அருளப்பட்ட திருவாசகமும், திருக்கோவையுமாகும். திருவாசகத்தை அருட்டிருவாசகம், மணிவார்த்தி எனவும் திருக்கோவையாரைத் திருச்சிற்றம்பலக் கோவையார் எனவும் அழைப்பர். ஒன்பதாந் திருமுறை திருவிசைப்பா, திருப்பல்லாண்டு எனும் இரு திருமுறைகள் உள்ளன. பத்தாந் திருமுறையாகக் கொள்ளப்படுவது திருமூலரது திருமந்திரமாகும். காரைக்காலம்மையார் போன்ற பன்னிருவரால் அருளப்பட்ட நூல்களாகிய 41பிரபந்தங்கள் பதினோராந் திருமுறையில் சேர்க்கப்பட்டுள்ளன. பன்னிரண்டாந் திருமுறையாகக் கொள்ளப்படுவது பெரியபுராணமாகும். இத்திருமுறைகள் பன்னிரண்டிலும் வேதாகமங்களின் வழிவந்த சைவ சித்தாந்த தத்துவக் கருத்துக்களே இடம்பெறுகின்றன. திருமுறைகள் மெய்கண்ட சாத்திரங்களின் தோற்றத்திற்கும் அடிப்படையாக அமைந்தவையாகும். வேதங்கள், ஆகமங்கள், திருமுறைகள், மெய்கண்ட சாத்திரங்களுக்கிடையில் உள்ள தொடர்பை

'வேதம் பசு அதன்பால் மெய்யாகமம் நால்வர்
ஓதுதமிழ் அதனுள்ளுறுநெய் - போதமிகு
நெய்யின் உறுசுவையாம் நீள்வெண்ணெய் மெய்கண்டான்
செய்ய தமிழ் நூலின் திறம்'

என்ற பாடல் விளக்குகிறது. தேவாரம் வேதசாரம் எனப்போற்றப்படுகிறது. இறைவனைப் புகழ்ந்துபாடும் புகழ்ச்சி நூல்களே தேவாரங்களாகிய திருமுறைகளாகும். இவற்றைத் தோத்திரங்கள் எதைப் புகழ்ந்து கூறுகின்றனவோ அதன் உண்மை, இயல்பு, இலக்கணங்களை விளக்கும் நூல்கள் சாத்திரங்களாகும். திருமுறைகளிலேயே பதி, பசு, பாசம் என்ற சைவ சித்தாந்த முப்பொருளுண்மையைக் காணமுடிகிறது. திருமுறைகளிற் காலத்தால் முற்பட்ட திருமந்திரம்

பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல் பசுபாசம் அநாதி
பதியினைச் சென்றணுகாப் பசுபாசம்
பதி அணுகில் பசுபாசம் நிலாவே

என்ற பாடல்மூலம் சைவசித்தாந்தக் கருத்துக்கள் அனைத்தையும் விளக்குகிறது. சம்பந்தரது பாடல்களில் இறைவனது தடத்தலட்சணம் விளக்கப்படுகிறது. 'தோடுடைய செவியன் விடை ஏறி' என்ற முதலாவது பாடல் இதனை விளக்குகிறது. நாவுக்கரசர் 'இப்படியன், இத்திறத்தன், இவ்வண்ணத்தன், இவனிறைவன் என எழுதிக் காட்டொணாது' என்று இறைவனது சொரூப இலட்சணத்தை விளக்குகிறார். மாணிக்கவாசகர் தமது நூல்களில் இறைவன் குருவடிவாக வந்து தம்மை ஆட்கொண்டமையை 'நான்றனக்கு அன்பின்மை நானுந் தானுந்தாமறிவோம், தானென்னை ஆட்கொண்டது எல்லாருந்தாமறிவார்' என்று பாடுகிறார். இவ்வாறு சைவத் திருமுறைகளில் சைவசித்தாந்தக் கருத்துக்கள் இடம்பெறுகின்றமையை நோக்கும்போது அவற்றின் சிறப்பினையும் அறிந்து கொள்ள முடிகிறது.

சைவசித்தாந்தம் கூறும் பாசம் பற்றிய கருத்துக்களையும் திருமுறைகளிற் காணலாம். நாவுக்கரசர் தம் பாடல்களிற்,

'கள்ளனேன் கள்ளத் தொண்டாய்க்
காலத்தைக் கழித்துப் போக்கி' என்றும்,

'புள்ளுவர் ஐவர் கள்வர்
புனத்திடைப் புகுந்து நின்று' என்றும்

'அல்லலாக ஐம்பூதங்கள் ஆட்டினும்' என்றும்

கூறியிருப்பதைக் காணலாம். இறைவனிடம் 'அருவாய வல்வினை நோயடையா வண்ணங் காவாய்' என்று வேண்டுதல் செய்வதும் குறிப்பிடத்தக்கது.

ஆன்மாக்களின் உயர் இலட்சியம் மோட்சமாகும். பாச நீக்கத்தின் மூலமே மோட்சத்தைப் பெறமுடியும். இதனைத் திருமந்திரம்,

'இருவினை நேரொப்பில் இன்னருட்சக்தி
குருவென வந்து குணம்பல நீக்கித்
தருமென ஞானத்தால் தன்செயலற்றால்
திரிமலந் தீர்ந்து சிவனவனாமே' எனக் கூறுகிறது.

முக்திநிலைபற்றி சைவசித்தாந்தம் கூறும்போது சீவன்முத்தி, விதேக முத்தி என்ற இருவகை முத்திகள் பற்றிக் கூறுவதைக் காணலாம். சீவன் முத்தி என்றால் உடலோடு கூடிய நிலையில் அடையப்படும் முத்தியாகும். அறுபத்து மூன்று நாயன்மார்களும் சீவன்முத்தர்களாவர். இவர்களது வரலாறு பற்றிக் கூறுவது பன்னிரண்டாம் திருமுறையாக விளங்குகின்ற பெரியபுராணமாகும். பெரியபுராணம் சீவன் முத்தர்களது இயல்புகள், கடமைகள், வழிபாடுகள், அவர்கள் பின்பற்றிய நெறிகள் பற்றிக் கூறுகிறது. இவர்கள் சிவனடியார்களை ஆதரித்து அவர் தொடர்பைத் தம்க்கு உறுதிப்பாடாகக் கொண்டு ஆலயங்கள் தோறும் சென்று வழிபட்டு வந்தார்கள் என்று பெரியபுராணம் கூறுகிறது. சிவஞானபோதம் 12ம் சூத்திரம்,

'மாலறநேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே' எனக் கூறுவதைக் காணலாம்.

சைவத் திருமுறைகள் சைவசித்தாந்த தத்துவக் கருத்துக்களையே சாரமாகக் கொண்டுள்ளன. இக்கருத்துக்கள் சைவசித்தாந்தச் சாத்திரங்களில் நன்கு தெளிவுபடுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு சைவசித்தாந்த தத்துவக் கருத்துக்களின் வளர்ச்சியில் திருமுறைகளும் குறிப்பிடத்தக்க இடத்தினை வகிக்கின்றன.

(ஈ) ஈழத்துச் சித்தர்கள்:-

பாரதத்தைப் போன்று ஈழநாடும் ஆன்மீகத் துறையில் வளர்ச்சியடைந்து காணப்படுகிறது. பாரதத்தில் பதினெண் சித்தர்கள் வாழ்ந்த சமயம், யோகநெறி, மருத்துவம் போன்ற துறைகளில் பலபாடல்களைப் பாடியுள்ளனர். பதினெண் சித்தர்களுக்குப் பின்னரும் இந்தியாவில் பல சித்தர்கள் வாழ்ந்துவந்தனர். சித்தர்கள் என்றால் சித்திகைவரப்பெற்றவர்களாவர். இவர்கள் அட்டமா சித்திகளை உடையவர்கள் என்று நூல்கள் கூறுகின்றன. இவை அணிமா-சிறியதிற்சிறிய காதல், மகிமா- பெரியதிற் பெரிய காதல், லகிமா- திண்ணியபொருளை நொய்யதாக்குதல், கரிமா- நொய்ய பொருளைத் திண்ணியதாக்குதல், பிராந்தி- நினைத்த வடிவமெடுத்து நினைத்த இடம் சேர்தல், பிராகாமியம்- பரகாயப்பிரவேசம், ஈசத்துவம்- எல்லாத் தேவர்களையும் தன்ற ஏவலில் வைத்திருத்தல், வசித்துவம்- உலகங்களையும் உயிர்களையும் தம்வசமாக்கல் என்பனவாகும்.

இத்தகைய சித்தர்கள் கைவரப்பெற்றவர் ஈழத்திலும் இருந்தனர் என அறியமுடிகிறது. யாழ்ப்பாணத்து யோகர்சுவாமிகள், கொழும்பு முகத்துவாரத்தில் சமாதிகொண்ட பெரியானைக்குட்டி சுவாமிகள், கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த காரைதீவில் சமாதியடைந்த சித்தானைக்குட்டி சுவாமிகள், நாவலப்பிட்டி குயின்ஸ்பரித் தோட்டத்தில் சமாதியடைந்த தவநாதசித்தர் போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

யாழ்ப்பாணத்து யோகர்சுவாமிகள் வாழ்வின் முற்பகுதியை அரசாங்க உத்தியோகத்திற் கழித்தார். ஓய்வு நேரத்தைத் தியானத்தில் மௌனத்தில் கழித்தார். இவரது குரு செல்லப்பாசுவாமிகள் ஆவர். நல்லூர்த் தேர்மண்டபத்தில் தமது குருவின் முன்னிலையில் 40 நாள் தவமிருந்தார். பின் நிஷ்டைகூடி இருந்தார். தன்னைத் தரிசிக்க வருவோருக்கு உபதேசம் செய்வதும், அவர்களுடைய ஐயங்களைத் தாமாகவே உணர்ந்து தீர்த்து வைப்பதும் அவரது கடமையாகும். இவர் அடிக்கடி கூறும் மந்திரம்

'சும்மா இரு', 'எப்பவோ முடிந்த காரியம்', 'நாம் அறியோம்', 'முழுவதும் உண்மை' என்பனவாகும். இறைவனையும், இறைவனை வழிபடும் அடியார்களையும் வழிபடவேண்டுமென்பதைத் திரும்பத் திருப்பக் கூறுவார். நேரங்கிடைக்கும் போதெல்லாம் வேதாகம உண்மைகளை உரைக்கூடியவர்களுக்கு உபதேசித்தார். வைத்தியர்களால் மாற்றமுடியாத கொடியநோய்களை மாற்றினர். உடல்நோய், உளநோய், உயிர்நோய் அனைத்தையும் மாற்றும் சக்தி பெற்றிருந்தார். நல்லூரிற் குரு தரிசனம் பெற்றவர் ஆகையினல் அப்பகுதியைக் குறித்து அதிகமான நற்சிந்தனைப் பாடல்களைப் பாடியுள்ளார். 1964ல் இறைபதம் அடைந்தார் என அறியமுடிகிறது.

பெரியானைக்குட்டிசுவாமிகள் கண்டி கதிரேசன்கோயிற் படிக்கட்டில் வசித்துவந்தார். சுவாமி கடைவீதியிற் போடப்பட்ட எச்சில் இலைகளைப் பொறுக்கி எச்சில் உணவை உண்டு பக்குவநிலையடைந்தார். புகைவண்டிகளை நிறுத்தியும், ஊமைக்குக் கன்னத்தில் அடித்துப் பேசச் செய்தும் வேறுபல சித்துக்கள் செய்தும் புகழடைந்தார். பின் கொழும்பு வந்து கப்பித்தான் கோயிலில் வாழ்ந்துவந்தார். தனது சீடன் சித்தானைக்குட்டியுடன் பல இடங்களுக்கும் சென்று, பல அற்புதங்கள் செய்தும் முகத்துவாரக் கடற்கரையில் சமாதியடைந்தார்.

கிழக்கிலங்கையில் காரைதீவில் சமாதியடைந்தவர் சித்தானைக்குட்டிசுவாமிகள் ஆவர். இவர் கண்ணோய உமிழ்நீரைக் கொப்புளித்து நீக்கினர். அறியப்படாத கடவுளை அறிவுறுத்தினர். மழையின்றி வருந்தியபோது மழையைப் பெய்வித்தார். திமிர்வாதக்காரனை நிமிர்ந்து நடக்கச் செய்தமை, மீன்கறியைக் கத்தரிக்காய்க் கறி ஆக்கியமை இவரது சித்துக்கள் ஆகும். இவர் 1951ல் சமாதிநிலையடைந்ததாகக் கூறப்படுகிறது.

நாவலப்பிட்டிக் குயின்ஸ்பரித் தோட்டத்தைச் சேர்ந்த நவநாதசித்தர் தோட்டத் தொழிலாளர்களிடையே பல சித்துக்கள் புரிந்ததாக அறியமுடிகிறது. சுவாமியை அவமதித்த மூவர் மயங்கி விழுந்ததாகவும் பின்னர் சுவாமிகள் இழுத்து ஊதிய சிகரெற் புகையினல் மயக்கம் தெளிவித்தார். ஆழவெட்டியும் நீரில்லாமலிருந்த கிணற்றில் நீர் ஊறிவரச்செய்தார். குயின்ஸ்பரியில் சுப்பிரமணியசுவாமி கோயில் கட்டிக் கும்பாபிஷேகத்திற்கு முதல்நாள் நவநாதசித்தருக்குக் கடிதம் எழுதிச் சேர்க்க, சுவாமிகள் அதிகாலையிலேயே அங்கு வந்தடைந்த அற்புதம் கூறப்படுகிறது. இவர் குயின்ஸ்பரியிலேயே சமாதிநிலையடைந்தார்.

இவ்வாறு ஈழத்தில் சித்தர்கள் வாழ்ந்து சித்துக்கள் பல புரிந்து யோகநெறிகளின் மூலமாக சமாதியிடைந்ததாகக் கூறப்படுகிறது.

(உ) ஆரிய சமாஜமும், தயானந்த சரஸ்வதியும்:-

இந்தியாவில் 19ம் நூற்ருண்டில் எழுந்த சமூக இயக்கங்களில் ஒன்று ஆரியசமாஜமாகும். இதனை நிறுவியவர் தயானந்தசரஸ்வதி என்பவர் ஆவர். இவர் 1825ல் குஜராத்தில் ஒரு சைவப் பிராமணராகப் பிறந்தார். சிறுவயதிலிருந்தே இவருக்குப் பாரம்பரிய வைதிகக் கொள்கைகளில் பல சந்தேகங்கள் தோன்றின. ஆனல் அவற்றுக்குச் சரியான விடைகள் கிடைக்கவில்லை. நர்மதை ஆற்றங்கரை சென்று பரமானந்த துறவிக்குச் சீடரானர். அங்கு பிரமமும் ஆன்மாவும் ஒன்றென்பதை உணர்ந்துகொண்டார். இதன்படி துறவு வாழ்க்கையை மேற்கொண்டார். ஆனல் அத்துறவறக் கொள்கை இவரது மனதுக்குத் திருப்தி அளிக்கக்கூடியதாக இருக்கவில்லை. இதனல் பின்னர்பக்தி மார்க்கத்தில் ஈடுபட்டார். இறைவனை யோகத்தின் மூலம் அறிந்துகொள்ளலாம் என்று கருதி யோகப் பயிற்சிகளை மேற்கொண்டார். இதுவும் அவருக்குத் திருப்தியளிக்கவில்லை. இதனல் தனக்குத் திருப்தியளிக்கக்கூடிய ஆசிரியரைத் தேடி அலைந்தார். வடஇந்தியாவில் வீரஜகந்நாதர் என்னும் பிறவிக் குருடரைத் துறவியாக்கிக்கொண்டார். இவர் நான்கு வேதங்களையும் காட்டி அறவே உலகத்தினின்றும் மீளுவதற்கு வழியாக உள்ளது எனவும், உலகமக்கள் ஒரு சமூகமாக வாழவேண்டுமெனவும் போதித்தார். இதை ஏற்ற தயானந்தர் 1875ல் பம்பாயில் ஆரிய சமாஜத்தை நிறுவினர். இந்தியா முழுவதும் ஆரியமயமாகவேண்டும் என்பது இவரது பேராவலாக இருந்தது.

தயானந்தரது கொள்கைகளை எடுத்துக்கொண்டால் தர்மம் என்பது நீதியைச்செய்து, தொழிலிலும் செயலிலும் உண்மையாக இருத்தல் வேண்டும் என்று கூறினர். நேர்மையாகப் பெற்ற செல்வமே அர்த்தமாகும். நேர்மையான வழியில் இன்பங்களை அனுபவிப்பதேகாமம் ஆகும். சாதி சாதிக்குரிய தொழில்கள் யாவும் ஒருவனது பண்பை அடிப்படையாகக் கொண்டு அமையவேண்டும். தமது ஒழுக்கத்தினின்றும் அழுக்காறடைந்தவர்கள் பிசாசுகளாவர். திருமணம் என்பது ஆண், பெண் இருவர் கருத்தொருமித்து வேதங்களில் விதித்த நெறிப்படி ஒன்றாக இணைதலாகும். வழிபாடு, நீதி ஆகியனவும் பிரமச்சரியத்தின் மூலம் மெய்யறிவை அடைதலும் மீட்பு மார்க்கங்கள் எனக்கூறினர். வழிபாட்டில் துதி, மன்றாட்டம், தியானம் என்ற மூன்றுநிலைகளைக் கூறினர். ஆசாரங்கள் சடங்குகள் மனிதனது ஆத்ம விருத்திக்கான சடங்குகள் என்பதனை உணர்த்தினர். கரு உருவாக்கம் முதல் இடுகாட்டை அடையும்வரை செய்யவேண்டிய சடங்குகளை எல்லோரும் அநுசரிக்கவேண்டும் என்று கூறினர். இவரது இத்தகைய போதனைகளின் அடிப்படையில் ஆரிய சமாஜ அறிக்கை உருவாக்கப்பட்டது. இதில் பத்து நியதிகள் முக்கியத்துவம் பெறுகின்றன.

1. எல்லாவற்றுக்கும் காரணம் கடவுளே.
2. கடவுள் மெய்யுண்மை, முழுஞானம், உருவமற்றவர், சர்வ வல்லமையுடையவர்.
3. வேதங்கள் உண்மையானவை.
4. உண்மையைக் கொண்டு பொய் மறைக்கப்படல் வேண்டும்.
5. மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்கு உதவவேண்டும்.
6. எல்லோரையும் அன்போடும், நீதியோடும், திறமைக்குத் தகுந்த மதியாதையோடும் நடத்தல் வேண்டும்.
7. தமக்குக் கிடைக்கும் நன்மையை மாத்திரம் எதிர்பாராது மற்றவர் நலனையும் எதிர்பார்த்துச் செயற்படவேண்டும்.
8. அறிவீனத்தை அகற்றி அறிவைப் புகட்டவேண்டும்.
9. பொதுவாழ்வுக்கான வழிகளைக் கருத்துவேற்றுமையின்றி ஏற்றுக்கொள்ள வேண்டும்.
10. சமாஜத்தில் அங்கத்தவராக இருக்க விரும்புவோர் சமாஜ விதிகளைக் கடைப்பிடித்தொழுகுவதாக உறுதியளித்தல் வேண்டும்.

சமாஜம் வேதங்களை மட்டுமல்லாது கர்மம், மறுபிறப்பு, ஆகியவற்றையும் வலியுறுத்துகிறது. விக்கிரக வழிபாடு, மிருகபலி, முன்னோர் வழிபாடு, சாதிபேதம், பாலியவிவாகம் போன்றன வன்மையாகக் கண்டிக்கப்பட்டன. சுத்தி எனும் சடங்குமூலம் இந்துக்களல்லாதோரை இந்துக்களாக்கியது. அன்னிய ஆளுகைக்குட்பட்டிருந்த இந்துக்களின் உணர்வை விழிப்படையச்செய்தது. பலவந்தமாக இஸ்லாமுக்குக் கொண்டு செல்லப்பட்ட இரண்டாயிரம் இந்துக்களை மீண்டும் இந்துக்களாக்கியது. இவ்வாறு பலவகையிலும் இந்துக்களின் உரிமைகளைப் பேணிக் காக்கும் ஓர் நிறுவனமாக ஆரிய சமாஜம் விளங்கியது.

(18) உபநிடதங்கள் பிரமம் பற்றியும் ஆன்மா பற்றியும் கூறும் கருத்துக்களை ஆராய்க. (1983 ஆகஸ்ட்)

இந்துசமய, தத்துவச் சிந்தனை வளர்ச்சியில் உபநிடதங்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றன. உபநிஷத் என்றால் நெருங்கி மிக அண்மையில் இருத்தல் என்று பொருள்படும். குருவுக்கு அண்மையில் சீடர்கள் நெருங்கியிருந்து உபநிடத போதனைக்கேட்டறிந்தனர், என்று விளக்கம் பெறுகிறது. இந்து சமயத்தின் தோற்றுவாய் வேதங்களாகும். வேத இலக்கிய வரிசையில் உபநிடதங்கள் இறுதிப் பகுதியாக அமைகின்றன. வேதத்திற்முடியாக, வேதத்தின் அந்தமாக விளங்கும் உபநிடதங்கள் வேதாந்தம் என்றபெயரைப் பெறுகிறது. வேதங்களிற் கூறப்பட்ட கருத்துக்களின் சாரமாகவும் உபநிடதங்கள் விளங்குகின்றன. வேதத்தின் ஞானகாண்டம் பகுதியாகப் போற்றப்படும் உபநிடதங்களில் தத்துவ விசாரணைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. அனைத்திற்கும் அடிப்படையாக உள்ள இறைவன் பற்றிய உண்மை, மனிதனுக்கு அடிப்படை சக்தியாக உள்ள ஆன்மாவின் உண்மை, இயல்பு பற்றிய கருத்துக்கள், பிரபஞ்ச உண்மை,, தோற்றம் பற்றிய கருத்துக்கள் விசாரணைகளாக இடம்பெறுகின்றன.

இருக்குவேதம் 'உண்மைப்பொருள் ஒன்று அதனை அறிஞர்கள் பலவாறாகக் கூறுவர்' என்ற கூற்றை அடிப்படையாகக் கொண்டு ஒரு கடவுட் கொள்கையை விளக்குகிறது. உபநிடதங்கள் அம்மெய்ப்பொருளை பிரமம் என்ற பெயரினால் அழைக்கின்றன. பிரமம் என்ற சொல் பிரஹ் என்ற வினையடியாகத் தோற்றம் பெற்றது எனவும் 'பிரஹ்' என்றால் தோன்றுதல் வளர்தல் என்று பொருள் படும். எனவும் கூறுகின்றன. எனவே பிரபஞ்சத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் காரணமாக உள்ளது பிரமம் என்பது உபநிடதங்களின் கருத்தாகும். ஆனால் பிரமம் விளக்கமுடியாத, வர்ணிக்க முடியாத ஒரு பொருளாகவே காணப்படுகின்றது. சிருஷ்டிக்கு ஆதாரமாய் உள்ள பிரமம் அழிவற்றது. அது தடிப்பானதும் அல்ல; நுண்ணியதுமல்ல. நீண்டதுமல்ல; குறுகியதுமல்ல, இருளானதுமல்ல; ஒளியானதுமல்ல. அதனை வசனங்களினால் விளக்க முடியாது. அது உருவமற்றது.

உபநிடதங்களிற் பிரமம் பற்றிய பல்வேறு உரையாடல்கள், விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. உபநிடதங்கள் சில இடங்களிற் உலகின் அடிப்படை சக்தியைப் பிரமம் எனவம், சில இடங்களில் ஆத்மார்எனவும் அழைப்பதனைக் காணலாம். இங்கு ஆத்மார் என்ற பதம் பிரமத்தின் மறுபெயராகவே கூறப்பட்டுள்ளது.

பிருகதாரண்யக உபநிடதம் 1ம் அதிகாரத்தில் 'உண்மையில் ஆதியில் இவ்வுலகமெலாம் பிரமமாக இருந்தது' என்ற கூற்றுக் காணப் படுகிறது. ஆனால் அதே உபநிடதத்தில் இன்னோரிடத்தில் 'ஆதியில் ஆத்மார் ஒன்றுதான் இவ்வுலகில் தனியாக இருந்தது' என்ற குறிப்பும் இடம்பெறுகிறது.

சந்தோக்கிய உபநிடதம் சுவேதகேதுவுக்கும், உத்தாலகருக் கும் இடையே நடைபெற்ற உரையாடலின் மூலம் பிரமம் பற்றிய கருத்துக்களை தெளிவுபடுத்துகிறது. 'கண்ணுக்குப் புலனாகாத நுண்ணிய ஆலம்விதையில் இருந்து பெரிய விருட்சம் தோன்றுவது போல காட்சிக்குப் புலனாகாத பிரமத்திடம் இருந்து இவ்வுலகம் உண்டாயிற்று என்ற கருத்து காணப்படுகிறது. நீரிலே கரைந்த உப்பு அதன் எல்லாப் பகுதியிலும் வியாபித்திருப்பதுபோல பிரமம் உலகம் முழுவதிலும் வியாபித்துக் காணப்படுகிறது.

சுவேதாஸ்வதர உபநிடதம் ஒருவனுக்குள்ளே ஆத்மார் இருப்பதனைக் கொண்டு பிரமத்தின் உண்மையை விளக்குகிறது. சாந்தோக்கிய உபநிடதமும் ஆத்மனே பிரமத்திற்கு சான்று எனக் கூறுகிறது.

உபநிடதங்கள் பிரமத்தைப் பிரபஞ்சத்திற்குக் காரணமான பொருளாகக் கூறுவதுடன், பிரமத்திற்கும் உலகிற்கும் இடையேயுள்ள தொடர்பின் அடிப்படையில் அதற்கு இருநிலைகளைக் கூறுவதனைக் காணலாம். அவை நிஷ்பிரபஞ்சநிலை, சப்பிரபஞ்சநிலை என்பனவாகும். பிரமம் பிரபஞ்சத்திற்கு அப்பாற்பட்டு, குணங்குறிகாற்று நிர்க்குணப்பிரமமாக நிற்கும் நிலையே நிஷ்பிரபஞ்சநிலையாகும். பிரமம் பிரபஞ்சத்தோடு கூடி எங்கும் வியாபித்துக் காணப்படும்நிலை சப்பிரபஞ்சநிலை எனப்படும். இந்நிலையில் உள்ள பிரமம் 'தஜ்ஜலன்' என்றபெயரைப் பெறுகிறது. தஜ்ஜலன் என்றால் தோற்றம், நிலைபேறு ஒடுக்கத்திற்குக் காரணமாக உள்ள பொருள் என்பது கருத்தாகும். எனவே இவ்வுலகம் எதிலிருந்து தோன்றிய தோன்றிய பின்னர் எதனால் நிலைபெற்று ஈற்றில் எதனுள் சென்று ஒடுங்கு கிறதோ அதுவே பிரமம் என்று கூறப்படுகிறது. மாண்டூக்கிய உபநிடதம் 'உண்மையில் இங்கு காணப்படுவனவெல்லாம் பிரமம் என்கிறது. முண்டக உபநிடதம் 'போற்றுதற்குரிய பிரமமே உலகனைத்துமாய் இருக்கிறது' என்ற குறிப்பைத் தருகிறது. தைத்திரீய உபநிடதம் 'தான் தன்னைப் பெருகப் பண்ணுவேன் என எண்ணிய பிரமம் தவத்தினால் இம்முழு உலகத்தையும் படைத்தது. பின்னர் தானே அவற்றுள் புகுந்துகொண்டு நாமரூபத்தை வேறுபடுத்தியது' என்கிறது.

இவ்வாறு பிரமம் பிரபஞ்சத்தின் தோற்றத்திற்கு மூலமாக அமைந்த சக்தியாக விளக்கப்பட்டுள்ளது.

உபநிடதங்கள் கூறும் ஆன்மா பற்றிய கருத்துக்களை ஆராய்ந்தால் மனிதனுக்கு அடிப்படையாகவுள்ள சக்தியாக விளக்கப்பட்டுள்ளது. சாந்தோக்கிய உபநிடதத்தில் இடம்பெறும் இந்திரன் பிரஜாபதி உரையாடல் ஆன்மா என்றால் என்ன? அது எங்கே தங்கியுள்ளது என்பன போன்ற வினாக்களுக்கு விடையளிப்பதாக உள்ளது. தேவர்களின் தலைவனான இந்திர இந்திரனும், அசுரர்களின் தலைவனான விரோச்சனன் என்பவனும் பிரஜாபதியிடம் ஆன்மா விசாரணையில் ஈடுபடச் சென்றனர். அப்போ குருவாகிய பிரஜாபதி 'தேகம் தான் ஆன்மா' என்று கூறுகிறார். இந்திரனுக்கு அவ்விடை திருப்தி அளிக்கவில்லை. உடல் அழிவுக்குரியது. உடல்தான் ஆன்மா எனின் ஆன்மாவும் அழிவுக்குரிய பொருளாகவே இருத்தல் வேண்டும் என்று வினவுகிறான். எனவே இந்திரனின் பக்குவத்தை உணர்ந்த பிரஜாபதி ஆன்மா பற்றிய உயர்ந்த தத்துவக் கருத்துக்களைப் போதிக்கிறார். 'வண்டியிலே கட்டப்பட்ட குதிரையைப் போல ஆன்மா சரீரத்தில் கட்டப்பட்டு உள்ளது, காண்பது கண்ணல்ல, கண்ணைக் கருவியாகக் கொண்டு காண்பது ஆத்மா. பேசுவது நாக்கல்ல. நாக்கைக் கருவியாகக் கொண்டு பேசுவதே ஆன்மா, மனமும், ஆத்மா அல்ல. இதை எண்ணுவேன் என்று மனதைக் கொண்டு எண்ணுபவனும், மனதை அடக்குபவனும் ஆன்மா. மனத்தையே கருவியாகக் கொண்டு தியானத்தில் ஆழ்ந்து பரமாத்மாவைக் கண்டு ஆனந்தங் கொள்பவன் ஆத்மா' இவ்வாறு உடலினின்றும், இந்திரியங்களினின்றும் உடலின் செயல்களினின்றும், மனதினின்றும் வேறான பொருளே ஆன்மா. சரீரம்வேறு, அது வேறு என்று கூறுகிறார். அதுவே ஆன்மாவின் உண்மைத் தன்மையாகும். அத்துடன் ஆன்மா அழிவற்றது. உடல் அழிவுக்குரியது. இந்த உடல் சாவற்ற, அழிவற்ற, உருவமற்ற ஆன்மாவிற்கு இருப்பிடமாக உள்ளது.

தைத்திரீய உபநிடதம் ஆன்மா பற்றி விளக்குமிடத்து அது பல கவசங்களினால் அல்லது கோசங்களினால் மூடப்பட்டுள்ளது எனக்கூறுகிறது. அவை பஞ்சகோசங்கள் என்று அழைக்கப்படுகின்றன. எல்லாவற்றுக்கும் புறத்தே உள்ள கவசமே இந்த உடல், அது உணவினாலாயது என்ற காரணத்தினால் அன்னமயகோசம் என்று அழைக்கப்படும். இதற்குள்ளே இருப்பது பிராணமய கோசம். மனதை அடிப்படையாகக் கொண்டது மனோமயகோசம். அறிவை அடிப்படையாகக் கொண்டது விஞ்ஞானமயகோசம். ஆனந்தத்தை அடிப்படையாகக் கொண்டது ஆனந்தமயகோசம். இவை எல்லாவற்றுக்கும் ஒன்றுள் ஒன்றாக பல்வகைக் கவசங்களினால் மூடப்பட்டு இவற்றுக்கு நடுவே இவை எல்லாம் இயங்குவதற்கு அடிப்படையாக உள்ள சக்தியே ஆன்மாவாகும்.

உபநிடதங்களின் கருத்துப்படி ஆன்மாக்கள் எண்ணிக்கையிற் பல. ஒவ்வொரு உடலோடும் ஒவ்வொரு ஆன்மா உண்டு. மரக்குற்றியில் மறைந்த அக்கினியைப்போல எல்லா உடல்களிலும் ஒரே தன்மையான ஆன்மா உண்டு. மரக்குற்றியில் இருக்கும் போது அக்கினி வடிவமற்றிருக்கிறது. அது விளக்கிலும், அடுப்பிலும் எரியும்போது அக்கினி வடிவில் தோன்றுகிறது. வெளித்தோற்றும் போது எரியும் பொருளுக்கு ஏற்ப பலவடிவம் பெறுவதுபோல ஆன்மாவும் பலவித மான உடல்களைப் பெற்றுள்ளது.

ஆன்மாக்கள் எண்ணிக்கையில் பலவாக இருப்பதுபோல் அவற்றுக்குப் பல பிறவிகளும் உண்டு. பிறவிக்குக்காரணம் அவை முற்பிறவி களும் செய்த கர்மம் என்று கூறப்படுகிறது. கர்மம் என்றால் செயல் அல்லது வினை என்று பொருள்படும். வினை என்று கூறின் நல்வினை, தீவினை எனப்படும். நல்வினை பிறவியைக் கொடுக்கும். பிருகதாரண்யக உப நிடதம் 'நல்ல செயலால் ஒருவன் நல்லவனாகிறான். தீயசெயலால் ஒருவன் தீயவனாகிறான். சாந்தோக்கிய உபநிடதம் இவ்வுலகில் நல்லொழுக்கம் உடையவர்கள் நல்ல கருப்பையிலே புகுந்து உயர்ந்த பிறவியைப் பெறுவர் எனவும் தீயொழுக்கம் உள்ளவர்கள் கீழான பிறவியைப் பெறுவர் எனவும் கூறுகிறது. இவ்வாறு பிறவிக்குப் பிறவி செல்லும் உயிரைப் பிருகதாரண்யகம் விளக்கு மிடத்து ஒரு புல்லின் நுனிக்கு வந்த புழுவானது மீண்டும் மறுபுல்லின் நுனியை நோக்கித் தாவுவதைப் போல ஒரு ஆன்மா ஒரு உடலைவிட்டு இன்னொரு உடலைப் பெறுகிறது.

பிறவிக்குப் பிறவி செல்லும் ஆன்மாக்களின் இலட்சியம் மோட்சமாகும். ஞானத்தின் மூலம் பிறவியினின்றும் விடுபட்ட ஆன்மா பிரமத்தோடு ஒன்றிவிடுகிறது. இந்நிலையில் பிரமமும் ஆன்மாவும் ஒன்று இதனை 'தத் துவம் அஸி' என்ற மகாவாக்கியம் விளக்குகிறது. தத்-என்பது அது எனவும், துவம்-என்பது நீ எனவும், அஸி-என்பது இருக்கிறாய் எனவும் பொருள்படும். இதேபோன்று 'அகம் பிரம்மோ அஸ்மி' என்ற மகாவாக்கியம் நாம் பிரமமாக இருக்கிறேன் என்று பொருள்படும். இதிலிருந்து பிரமமும் ஆன்மாவும் அடிப்படையில் ஒன்று, என்ற கருத்துப் பெறப்படுகிறது. பிரபஞ்சத்திற்கு அடிப்படை சக்தியான பிரமத்தையும், மனிதனுக்கு அடிப்படை சக்தியான ஆன்மாவையும் உபநிடதங்கள் ஒன்று என்று கூறுகின்றன.

(19) சைவசித்தாந்த சாத்திரங்கள் பதி பற்றிக் கூறும் கருத்துக்களை விவரிக்க.

சைவசமயத்தின் முடிந்த முடிபாக உள்ள கொள்கை சைவ சித்தாந்தம் ஆகும். சைவசித்தாந்தம் பதி, பசு, பாசம் எனும் முப்பொரு ளுண்மை பற்றிப் பேசுகிறது. பதி என்பது இறைவனையும், பசு என்பது ஆன்மாவையும், பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங் களையும், உலகத்தையும் குறித்து நிற்கிறது. இம்முப்பொருளுண்மை பற்றிய கருத்துக்களைமெய்கண்ட சாத்திரங்களின் வாயிலாக அறிந்துகொள்ள முடிகிறது. மெய்கண்ட சாத்திரங்கள் முப்பொருளுண்மையை விளக்குவதற்கு காட்சி அளவை, அனுமானம், ஆப்தவாக்கியம் என்ற மூன்றுவகை அளவைப் பிரமாணங்களை ஏற்றுக்கொண்டாலும் அவற்றுள் ஆப்தவாக்கியத்திற்கே மிக முதன்மையைக் கொடுக்கின்றன. ஆப்தவாக்கியம் என்றால் உண்மை வாக்கியம் என்பது பொருள். வேதங்களும் ஆகமங்களுமே ஆப்தவாக்கியங்களாக சைவசித்தாந்தி களினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. எனவே ஆப்தவாக்கியத்தை சுருதிப்பிரமாணம் ஆகமப்பிரமாணம், எனவும் அழைப்பர். இவ்வேதாகமக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு சைவசித்தாந்தம் முப்பொருளுண்மையை விளக்குகிறது. இம்முப்பொருட்களிலும் மேலானது பதி எனப்படும் இறைவனாகும். இதனை சிவப்பிரகாசம்,

'பலகலை ஆகமவேதம் யாவையினும் கருத்துப்
பதி பசு பாசம் தெரிதல் பதிபரமே' எனக் கூறுகிறது.

சைவசித்தாந்தம் கூறும் பதிபற்றிய கருத்துக்களை இரு வகையாகப் பிரித்து விளக்கலாம்.

1. பதியின் உண்மைத் தன்மை.
2. பதியின் இலக்கணம், இயல்பு.

வேதங்களும் ஆகமங்களும் கடவுள் உண்மையை சிறப்பாக விளக்கும் நூல்களாகும். வேதாகமங்களை ஆப்தவாக்கியங்களாகக்கொண்டு சைவசித்தாந்திகளும் கடவுள் என ஒருபொருள் உண்டு என்றுகூறி, அதனைப் பதி என்ற பெயரினால் அழைக்கின்றனர்.

காட்சிக்குப் புலனாகக்கூடிய பொருள் உலகம் ஆகும். இவ்வுல கின் உண்மையைக் கொண்டு அதனைப் படைத்தவனும் ஒருவன் உளன், அவன்தான் இறைவன் என்ற அனுமானத்திற்கும் இடம் கொடுக்கின்றனர். ஒரு பானையைப் பார் க்கும்போது அதனை வனைந்த குயவனும் ஒருவன் இருக்கவேண்டுமென்பதை அனுமானித் து அறிந்து கொள்கிறோம். இதேபோன்று உலகத்தைப் பார்க்கும்போது அதனைப் படைத்தவனும் ஒருவன் இருக்கவேண்டும் என்பதை ஊகித்து அறிந்து கொள்ளலாம். அவ்வாறு உலகின் தோற்றத்திற்கு இறைவனே நிமித்த காரணன் எனக்கூறி இறைவனுண்மை விளக்கப்படுகிறது. அதாவது ஒரு காரியநிகழ்ச்சிக்கு வேண்டப்படும் காரணங்கள் மூன்றாகும். அவை முதற்காரணம், துணைக்காரணம், நிமித்தகாரணம் என்பனவாகும். இவற்றிலிருந்து பானை தோன்றுகிறது. எனவே பானைக்கு முதற் காரணம் மண். திரிகை போன்றவற்றின் துணைகொண்டு தோன்றுகிறது. எனவே திரிகை முதலிய துணைக்காரணம் ஆகும். குயவனின் நிமித்தமாகப் பானை தோன்றுகிறது. எனவே குயவன் நிமித்தகாரணம் என்று அறியமுடிகிறது.

இதேபோன்று மாயையில் இருந்து உலகை இறைவன் தனது சக்தியைத் துணைக் கொண்டு தோற்றுவிக்கிறன். எனவே உலகின் தோற்றத்துக்கு முதற்காரணம் இறைவனது சக்தி துணைக்காரணம். இறைவன் நிமித்தகாரணம் என அறியலாம். இவ்வாறு உலகின் உண்மையைக்கொண்டு அதனைப் படைத்தவனும் ஒருவன் உளன். என்பதை சைவசித்தாந்தம் நிரூபிக்கிறது.

உலகின் இயல்பை எடுத்து நோக்கும்போது அது அறிவற்ற சடப்பொருள் என்பதையும், பல பகுதிகளையுடையது என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது. இப்பகுதிகள் ஒவ்வொன்றும் அறிவற்றவை. எனவே அவை ஒருபோதும் ஒன்றுசேரமுடியாது. அவையனைத்தையும் ஒன்று சேர்த்து உலகமாக இயங்கச் செய்வதற்கு அறிவுடைய ஒருவன் வேண்டும். அவனை இறைவன் என சைவசித்தாந்தம் கூறுகிறது. இவ்வாறு உலகின் இயல்பை அடிப்படையாகக் கொண்டும் சைவ சித்தாந்தம் கடவுள் உண்மையை விளக்குகிறது.

இறைவனால் படைக்கப்பட்டது உலகம் எனக் கூறும்போது உலகப் படைப்பின் நோக்கம் பற்றியும், எடுத்துக் கூறவேண்டியுள்ளது. ஆன்மாக்கள் அநாதியாகவே மலங்களினால் பாதிக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாகவே ஆன்மாக்கள் அறியாமைக்குட்பட்டுக் கன்மங்களைச் செய்து, மீண்டும் மீண்டும் பிறவிக்குட்படுகின்றன. அப்பிறவியினின்றும் விடுபட்டு இறைவனோடு இரண்டறக் கலப்பதே கலப்பதே அவற்றின்இலட்சியமாகும். ஆன்மாக்கள் இத்தகைய இலட்சியத்தை அடைவதற்காகவே இறைவனால் உலகம் படைக்கப்பட்டது. ஆன்மாக்கள் முற் பிறவிகளில் செய்த கன்மங்களின் பலனை அநுபவித்த பின்னரே மோட்சத்தைப் பெறமுடியும். கன்மம் அறிவற்ற சடப்பொருள். அது தன்னைச் செய்த ஆன்மாவைத் தானகவே தேடி அடையும் வல்லமையற்றது. எனவே ஒரு ஆன்மா செய்த கன்மத்தை அந்த ஆன்மாவிடமே சேர்ப்பிப்பதற்கு அறிவுடைய ஒருவன் வேண்டும், அவனே இறைவன் எனச் சைவசித்தாந்தம் கூறுகிறது. இவ்வாறு சைவசித்தாந்தம் கூறும் பதி பற்றிய உண்மைத் தன்மையை சிவஞானபோதம் 1வது சூத்திரப்பாடல் விளக்குகிறது.

"அவன் அவள் அதுவெனும் அவை மூவினைமையில்
தோற்றிய திதியே ஒடுங்கி மலத்துளதாம்
அந்தம் ஆதி என்மனர் புலவர்"

அவன் அவள் அது என்று சுட்டியறியப்படுகின்ற உலகம் தோன்றுதல், நிலைபெறுதல், ஒடுங்குதல் என்ற மூன்று தொழில்களை உடைமையினால் ஒருவரால் தோற்றுவிக்கப்பட்ட உள்பொருளேயாகும். இவ்வுலகம் சங்கார காலத்தில் ஒடுங்குதற்கிடமாகிய கடவுளிடத்தில் ஒடுங்கி பரிபாகமடையாத மலர் காரணமாக ஒடுங்கிய இடமாகிய கடவுளிடத்தினின்று மீண்டும் தோன்றுவதாகும். ஒடுக்கத்தைச் செய்யும் கடவுளே உலகத்திற்கு முதற்கடவுள் என்று அறிஞர்கள் கூறுவர். சிவஞானசித்தியார் இக்கருத்தினை,

"ஒருவனோடொருத்தி யொன்றென் றுரைத்திடுமுலகெலாம்
வருமுறை வந்துநின்று போவது மாதலாலே
தருபவன் ஒருவன் வேண்டும் தான்முதலீறுமாகி
மருவிடு மநாதி முத்த சித்துரு மன்னி நின்றே"

என்ற பாடல் மூலம் விளக்குகிறது. அதாவது அவன், அவள், அது என்று கூறப்படும் சேதன அசேதனப் பிரபஞ்சமெல்லாம், தோன்றும் முறையிலே தோன்றி நின்று ஒடுங்குதலும், உடைமையினால், அங்ஙனம் அவற்றைத் தோற்றுவித்து நிலைப்படுத்தி ஒடுக்கும் கருத்தா ஒருவன் வேண்டப்படும். அக்கருத்தா முதல்வன் இன்றித் தானே எவற்றிற்கும் நிமித்த காரணனும் சங்கார காரணனுமாய் இயல்பாகவே பாசம் நீங்கிய ஞானமாகிய சக்தி வடிவத்தைப் பொருந்தி நின்று அவற்றைக் காரியப்படுத்தும் இயல்புடையவன் என்று கூறுகிறது.

சைவசித்தாந்தம் பதிக்குக் கொடுக்கும் இயல்புகளை ஆராய்ந்தால், பரிமேலழகர் கூறும் தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயற்கையாகவே பாசங்களினீங்குதல் பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை, ஆகிய எட்டுக் குணங்களையும் கூறலாம். இவற்றை சத், சித், ஆனந்தம் என்ற மூன்று இயல்புகளாக சுருக்கிக் கூறலாம். சத் என்றால் உள்பொருள் எனவும், சித்

என்றால் அறிவுள்ள பொருள் எனவும், அதனியல்பு ஆனந்தமயமானது எனவும் கூறலாம்.

வேதங்களும், ஆகமங்களும் இறைவன் என்ன தொழிலைச் செய்தாலும் விகாரமடைவதில்லை எனக் கூறுகின்றன. வேதாகமக் கருத்துக் களை ஆப்தவாக்கியமாக ஏற்றுக்கொண்ட சைவசித்தாந்திகளும் இறைவனுக்குரிய இயல்பாக இதனைக் கூறுகின்றனர். இறைவனுக்குரிய தொழில் படைத்தல் தொ தொழிலாகும். இறைவனிடமிருந்து உலகம் தோன்றினால் இறைவனும் மாறுதலுக்கு உட்படுதல் வேண்டும். ஆனால் மாறுதலடையாத தன்மையே இறைவனுக்குரிய இயல்பாகும். இதனை விளக்குவதற்கு மாயையிலிருந்து உலகம் தோன்றியது என சைவசித்தாந்தம் கூறுகிறது. சூரியனால் தாமரை மலர்ந்தாலும் சூரியன் எவ்வித விகாரமும் இடைவதில்லை. இதேபோன்று மாயையிலிருந்து இறைவன் உலகைத் தோற்றுவித்தாலும் இறைவன் விகாரமடைவதில்லை.

சைவசித்தாந்தத்தில் பதிக்கு சொரூபம், தடத்தம் என்ற இருநிலைகள் கொடுக்கப்படுகின்றன. சொரூபம் என்றால் குணம் குறிகளுக்கு அப்பாற்படும் நிலை மனம் வாக்குக்கு எட்டாத நிலையாகும். தடத்தநிலை என்றால் குணம் குறிகளோடு கூடியநிலையாகும். உமாபதி சிவாச்சாரியார் தமது சிவப்பிரகாசம் என்ற நூலில் இறைவனுக்குரிய இலக்கணங்கள் அனைத்தையும் விளக்குகிறார்.

'பலகலை ஆகமவேதம் யாவையினும் கருத்துப்
பதி பசு பாசம் தெரிதல் பதிபரமே அதுதான்
நிலவும் அருவுருவன்றிக் குணங்குறிகளின்றி
நின்மலமாய் ஏகமாய் நித்தமாகி
அலகிலுயிர்க்குணமாகி அசலமாகி
அகண்டிதமாய் ஆனந்த உருவாயன்றிச்
செலவரிதாய் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாய்த்
திகழ்வது தற்சிவமென்பர் தெரிந்தோரே'

வேதங்கள் ஆகமங்கள் அவற்றை அடிப்படையாகக் கொண்ட நூல்கள் யாவும் பதி, பசு, பாசம் என் முப்பொருளுண்மையைத் தெரிவிக்கின் றன. இவற்றுள் பதியே மேலான பொருள். அதற்கு அருவமும் இல்லை, உருவமும் இல்லை. குணங்குறிகளுமில்லை. மலங்களுக்கு அப்பாற்பட்டது. ஒன்றேயாகும். நித்தியமான உட்பொருள். உயிர்களுக்கு உணர்வு போன்றது. சலனமற்றது. கண்டிக்க முடியாதது. எல்லையற்றது, ஆனந்தமே இயல்பாக உடையது. சென்றடைவதற்கு அரியது. ஆன்மாக்கள் சென்றடைய வேண்டிய கதியும் அதுவே. சிறியவற்றுள் மிகச் சிறியது. மிகப் பெரியவற்றுள் மிகப் பெரியது அறிவுடையோர் அதனைச் சிவன் என்று கூறுவர்.

சொரூப நிலையிலுள்ள இறைவன் தடத்த நிலைக்கு வந்து உருவத்திருமேனிகளைப் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்ற ஐந்தொழில்களைப் புரிந்து ஆன்மாக்களுக்குப் போகங்களைக் கொடுத்து, பாசங்களினின்றும் விடுவித்து மோட்சத்தை அருளுவதாக சைவ சித்தாந்தம் கூறுகிறது.

(20) கன்மக்கோட்பாடு பற்றி இந்துசமய நூல்களும் தத்துவ நூல்களும் தரும் கருத்துக்களைத் தொகுத்துக் கூறுக.

இந்துமதம் கூறும் பல்வகைக் கோட்பாடுகளில் கன்மக் கோட்பாடும் ஒன்றாகும். கன்மம் என்றால் செயல் அல்லது வினை என்று பொருள் படும். வினை என்று கூறும்பொழுது நல்வினை தீவினை என்று இருவகைப்படும். தீவினைகளைச் செய்த ஆன்மாக்கள் துன்பங்களை அனுபவிப்பதற்கு பிறவி எடுப்பதுபோல. நல்வினைகளைச் செய்த ஆன்மாக்களும் அதற்குரிய பலனை அனுபவிப்பதற்கும் பிறவி எடுப்பதாக இந்துமத நூல்கள் கூறுகின்றன.

கன்மத்தின் காரணமாகப் பிறவி கிட்டுகிறது எனக்கூறும்போது மறுபிறவிக் கோட்பாடும் கன்மத்துடன் தொடர்புபடுத்தப்படுவதைக் காணலாம்.

வேத இலக்கியங்களில் உபநிடதங்களிலேயே முதன்முதலாகக் கன்மம் மறுபிறவி பற்றிய கருத்துக்களைக் கண்டுகொள்ள முடிகிறது. கன்மம் என்பது செயல், வினை என்று பொருள்பட்டாலும் அறிவு, சிந்தனை, பேச்சு ஆகியவற்றையும் குறித்து நிற்கிறது. கௌஷீதகி உபநிடதம் "ஒருவன் தனது அறிவுக்கேற்பவும், சிந்தனைக்கேற்பவும், செயலுக்கேற்பவும் புழுவாகவோ பூச்சியாகவோ, பறவையாகவோ, பாம்பாகவோ, விலங்காகவோ, மனிதனாகவோ பிறவி எடுக்கிறான்" என்று கூறுகிறது. சாந்தோக்கிய உபநிடதம் "இவ்வுலகில் நல்லொழுக்கம் உள்ளவர்கள் ஒரு நல்ல கருவிலே புகுந்து பிறவி எடுப்பர். பிராமணர், சத்திரியர், வைசியராகப் பிறவி எடுப்பர். தீய ஒழுக்கம் உள்ளவர்கள் ஒரு கீழான பிறவியைப் பெறுவர். சூத்திரர்களாக பன்றி அல்ல அல்லது நாயாகப் பிறவி எடுப்பர் என்று கூறுகிறது. இவ்வாறு கன்மங்களின் காரணமாக ஆன்மாக்களுக்குப் பல்வேறு பிறவிகிட்டும்" என்று உபநிடதங்கள் கூறுகின்றன. பிருகதாரண்யக உபநிடதம் "பிறவிக்குப் பிறவி செல்லும் உயிரை ஒரு புல்லின் நுனிக்கு வந்த புழுவானது மீண்டும் மறு புல்லின் நுனிக்கு தாவுவது போல ஆன்மாவானது ஒரு உடலை விட்டு இன்னொரு உடலை நோக்கிச் செல்வதற்குத் தன்னைத் தயார்ப்படுத்துகிறது" என்று கூறுகிறது.

சைவசித்தாந்த சாத்திரங்களும் கன்மம் பற்றிய கருத்துக்களை மறுபிறவிக் கொள்கையுடன் இணைத்துக் கூறுகின்றன. வித்தும் மரமும் போலக் கன்மமும் மறுபிறவியும் தொடர்புடையன என்று கூறப்படுகிறது. சைவசித்தாந்தம் கன்மத்தை சஞ்சிதகன்மம், பிராரப்தகன்மம், ஆகாமியகன்மம் என மூன்று வகைப்படுத்திக் கூறுகிறது. ஆன்மா பல பிறவிகளிலும் செய்து இன்னும் அநுபவிக்கப்படாது சேர்ந்திருக்கும் கன்மத் தொகுதியே சஞ்சிதம் ஆகும். அத்தொகுதியிலிருந்து இப்பிறப்பில் அநுபவிப்பதற்கென எடுக்கப்படும் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குப்பிராரப்தம் என்று பெயர். இப்பிராரப்த கன்மத்தை அநுபவிக்கும்போது புதிதாகக் ஈட்டும் வினை ஆகாமியம் எனப்படும். இவற்றை முறையே பழவினை, நிகழ்வினை, எதிர்வினை என மூன்று வகையாகக் கூறலாம். கன்மத்தின் காரணமாகப் பிறவியும், பிறவியின் காரணமாக கன்மமும் மாறி மாறி வந்துகொண்டிருக்குமென்பதை சிவஞானசித்தியார் 'ஒருவன் விதைத்து விளைந்த தானியங்கள் பின்னர் உணவாகவும், வித்தாகவும் வருவது போல நான் என்ற முனைப்போடு நாம் செய்யும் வினைகளெல்லாம் புண்ணிய பாவங்களாக விளைந்து இன்ப துன்பப் பயனாகியும். அவ்வின்ப துன்பப் பயன்களை அநுபவிக்குமிடத்து மீண்டும் செய்கின்ற நல்வினை தீவினைகளுக்குக் காரணமாகிவிடும் என்றும் முறை தவறாது வந்து நம்மைப் பொருந்தும்' என்ற குறிப்பின் மூலம் விளக்குகிறது.

கன்மத்தின் இயல்பு பற்றி சிவப்பிரகாசம் கூறுமிடத்து 'கன்மலமானது ஆன்மாக்கள் பொருந்துகின்ற உடல்களுக்குக் காரணமாயிருப்பதுடன், அவ்வுடலோடு கூடியிருந்து அநுபவிக்கும் இன்பதுன்பங்களுக்குக் காரணமாகியும், பிராரப்த கன்மம் நுகர்ச்சிக்கு வரும்போது ஆகாமிய கன்மம் ஈட்டப்படுவதால் பலவாகியும் ஆன்மாக்களின் மனம் வாக்கு காயம் என்ற மூன்றினாலும் செய்யப்படும் இயல்பினை உடையது' என்று விளக்குகிறது.

சைவசித்தாந்தத்தைப் பொறுத்தமட்டில் கன்மம் அறிவற்ற சடப் பொருளாகும். அது மறுபிறவியிலும் தன்னைச் செய்த ஆன்மா இதுதான் எனத் தானாகவே தேடியடையும் வல்லமையற்றது. எனவே ஒரு ஆன்மா செய்த கன்மத்தை அந்த ஆன்மாவிடமே சேர்ப்பிப்பதற்கு அறிவுடைய ஒருவன் வேண்டும். திருவருட்பயன் இதனை

"செய்வானும் செய்வினையும் சேர்பயனுஞ் சேர்ப்பவனும்
உய்வானுளன் என்றனர்"

என்ற பாடலின் மூலம் விளக்குகிறது. கன்மங்களைச் செய்யும் ஆன்மாக்கள் அவை செய்யும் நல்வினை, தீவினைகள் அவற்றுக்குரிய பலன்களாகிய இன்ப துன்பங்கள், அவற்றை ஆன்மாக்களிடம் சேர்ப்பிப்பவனாகிய இறைவனின் உண்மை ஆகியன விளக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு சமய நூல்களும் தத்துவங்களும் ஆன்மாக்களின் பல்வேறு பிறவிகளுக்குக் காரணம் கன்மம் எனக்கூறி கன்மக் கோட்பாட்டினை மறுபிறவிக் கொள்கையுடன் இணைத்து விளக்குகின்றன.

(21) மத்துவாச்சாரியார் கூறும் துவைத வேதாந்தத்தின் விசேட அம்சங்களை விரிவாக விளக்குக.

உபநிடதங்களின் கருத்துக்களை விளக்கி துவைதக் கோட்பாட்டை வெளிப்படுத்தியவர் மத்துவர் ஆவார். இவர் 13ம் நூற்றாண்டுக் காலப் பகுதியைச் சேர்ந்தவராவார். பிரமசூத்திரம், பகவத்கீதை, தசோபநிடதம் ஆகியவற்றுக்கு எழுதிய பாஷ்யங்கள் சிறப்புடையவை. உபநிடதங்களின் சுருக்கமாகிய பிரமசூத்திரத்துக்கு மத்துவர் கொடுத்த விளக்கமே துவைத வேதாந்தமாகும்.

உபநிடதங்களில் உள்ள 'மூலப்பொருள் பல' என்ற கருத்தை வலியுறுத்த முற்பட்டவர் மத்துவர் ஆவார். எனவே ஈஸ்வரன், சீவன், சடம் என்ற மூப்பொருட்களின் உண்மையை விளக்கியுள்ளார். ஈஸ்வரன் இறைவனையும் சீவன் ஆன்மாவையும், சடம் உலகத்தையும் குறித்து நிற்கிறது. இம்முப்பொருட்களும் நிலையானவை எனக் கூறும்போது, இம்முப்பொருட்களுக்குமிடையே உள்ள பேதங்களுக்கே முதன்மை கொடுக்க முடியும். பொருட்கள் பலவாகத் தெரிவதற்குக் காரணமே அவற்றுக்கிடையேயுள்ள வேற்றுமையேயாகும்.

முப்பொருள் உண்மையை விளக்கும் மத்துவர் ஈஸ்வரன், சீவன், சடம் என்ற முப்பொருட்களுக்குமிடையே ஐவகைப் பேதங்களையும் கூறுகிறார். அவை சீவனுக்கும், ஈஸ்வரனுக்கும் இடையேயுள்ள சீவேஸ்வர பேதம், சடத்துக்கும் ஈஸ்வரனுக்கும் இடையேயுள்ள சடஈஸ்வரபேதம், சீவனுக்கும் சடத்துக்கும் இடையேயுள்ள சிவசடபேதம், ஒரு சீவனுக்கும் இன்னொரு சீவனுக்கும் இடையேயுள்ள சடபரஸ்பரபேதம் என்பனவாகும். இவ்வாறு மத்துவர் வேற்றுமைக்கு முக்கியத்துவம் கொடுப்பதற்குக் காரணம் உபநிடதங்களிலுள்ள பலபொருள் உண்மையை வலியுறுத்துதற்கேயாகும்.

வைஷ்ணவ சமயத்தைச் சேர்ந்த மத்துவர் பேசும் ஈஸ்வரன் விஷ்ணு ஆகும். முப்பொருட்களிலும் மேலானது ஈஸ்வரன். அது அனைத்தையும் கடந்து நிற்கும் ஆற்றலுடையது என்று கூறுகிறார். உலகத்தை உள்பொருளாகக் கூறும் மத்துவர் சடப்பொருளாகிய உலகத்திற்கும், சித்துப் பொருளாகிய இறைவனுக்கும் நெருங்கிய தொடர்பில்லை. தொடர்புண்டு எனக் கூறுவதாயின் அது இறைவனுடைய மகத்துவத்தைக் குறைத்துக் கூறுவதாக அமையும் என விளக்குகிறார். மத்துவரைப் பொறுத்தமட்டில் உலகத்தின் தோற்றத்திற்கு இறைவன் முதற்காரணன் அல்லன், நிமித்த காரணனேயாவான்.

ஆன்மா பற்றிய மத்துவரது கருத்துக்களை கூறாயின் அவை எண்ணிக்கையில் பல எனக் கூறுவதனைக் காணலாம். இவ் ஆன்மாக்கள் யாவும் இயல்பிலே ஒத்தனவல்ல. ஒரு ஆன்மாவுக்கும், இன்னொரு ஆன்மாவுக்குமிடையே பேதம் உண்டு எனக்கூறி அதனை சிவபரஸ்பர பேதத்தின் மூலம் விளக்குகிறார். இவ்வாறுசிவ பரஸ்பர பேதம் பேசும் மத்துவர் எல்லா ஆன்மாக்களும் மோட்சத்தைப் பெறமுடியாது. அவை செய்த தீவினைப் பயன்களுக்கேற்ற வகையில் நரகத்திற்குச் சென்று என்றும் நரகத்திலேயே தங்கியிருக்கும் இயல்பினை உடையவை என்று கூறுகிறார். இவ்வாறு கூறுவதால் இறைவனது அருளுக்கும், ஆன்மாக்களின் முயற்சிகளுக்கும் மத்துவர் முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்றே அறியமுடிகிறது. ஆன்மாக்களின் உயர்ந்த இலட்சியம் மோட்சம் எனக் கூறுகின்ற கோட்பாடுகள், ஆன்மாக்கள் முயற்சி எடுப்பதன் மூலமாகவே இறைவனது அருளைப் பெற்று அத்திருவருளைத் துணையாகக் கொண்டே இறைவனோடு கலந்துவிட முடியும் எனக்கூறும்போது, மத்துவர் குறிப்பிட்ட சில ஆன்மாக்கள் நரகத்திலேயே வசிக்கும் இயல்புடையவை எனக் கூறுகிறார். மத்துவர் பிரத்தியட்சம், அநுமானம், ஆப்த வாக்கியம் என்ற மூவகை அளவைப் பிரமாணங்களுடன் புராணங்களுக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றார். ஒருவேளை புராணங்களை அடிப்படையாகக் கொண்டு நரகம் பற்றிய கருத்துக்களுக்கும் மத்துவர் இடம் கொடுத்திருக்கலாம். என்று கருதமுடிகிறது. மோட்சத்தை அடையும் ஆன்மாக்கள்கூட இறைவனை நேரடியாகச் சென்று அடையமுடியாது. இறைவனது புத்திரனாகிய வாயுவின் மூலமே அடையமுடியும். எனக் கூறுகிறார். இயல்பிலேயே வேறுபட்ட ஆன்மாக்கள் மோட்சத்தில் அனுபவிக்கும் இன்பத்தில் கூட வேறுபாடுண்டு என்பதே மத்துவரது கருத்தாகும்.

மத்துவர் கூறும் மோட்சம் "துவைதம்" என்ற பெயரினால் அழைக்கப்படுகிறது. துவைதம் என்றால் 'துவி' என்ற வினையடியாகப் பிறந்த சொல்லாகும். துவி என்றால் இரண்டு என்பது கருத்தாகும். எனவே துவைதமும் இரண்டு என்று பொருள்படும். இங்கு இரண்டு எனப்படுபவை ஆன்மாவும், இறைவனுமாகும். மத்துவர் சீவனுக்கும் ஈஸ்வரனுக்குமிடையே உள்ள சீவேஸ்வர பேதத்துக்கு இடம் கொடுத்து, அவ்வேற்றுமை நிலையானது எனக் கூறும்போது மோட்சநிலையில் மட்டும் சீவனும், ஈஸ்வரனும் பேதம் நீங்கி ஒன்றிவிடுகிறது எனக் கூறமுடியாது. எனவே மோட்சநிலையிலும் கூட இறைவன் வேறு, ஆன்மா வேறு, இவை இரண்டெனும் நிலை நீங்கி ஒருபோதும் ஒன்றுவதில்லை. அவை இரண்டும் இரண்டுதான் எனக் கூறுவதனால் அவரது கொள்கை துவைதம் என்ற பெயரைப் பெறுகிறது.

இவ்வாறு முப்பொருளுண்மை, ஐவகைப் பேதங்கள், துவைத கொள்கை ஆகியவற்றை மத்துவர் விளக்குவதற்கு அடிப்படையாக அமைந்தவை உபநிடதங்களாகும். உபநிடதக் கருத்துக்களுக்கு தனது அறிவையும் அனுபவத்தையும் பயன்படுத்தி மத்துவர் கொடுத்த துவைத வேதாந்த விளக்கம் சிறப்புடையதாகும்.

(22) சங்கரர், இராமானுஜர், மத்துவர் ஆகியோர் கூறும் வேதங்களிலின்று சைவசித்தாந்தம் எவ்வாறு வேறுபடுகிறது?

இந்து சமயத்திற்கும், இந்து தத்துவத்திற்கும் அடிப்படையாக உள்ள நூல்கள் மூன்றாகும். இவற்றை பிரஸ்தானத் திரயம் என்ற பெயரினால் அழைப்பர். இவை உபநிடதம், பகவத்கீதை, பிரமசூத்திரம் என்பனவாகும். இவற்றுள் மிகவும் சிறப்புடையது உபநிடதங்களாகும். உபநிடதங்களை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்ற போட்பாடுகளே, சங்கர வேதாந்தம். இராமானுஜ வேதாந்தம், மத்துவ வேதாந்தம் சைவசித்தாந்தம் என்பனவாகும். இவையனைத்தும் உபநிடதங்களை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றாலும், அவற்றுக்கிடையே குறிப்பிடத்தக்க அளவுக்கு வேறுபாடும் உண்டு என்பதை அறிந்து கொள்ளலாம்.

சங்கரர் உபநிடதங்களில் காணப்பட்ட 'உள்ள பொருள்' ஒன்று என்ற கூற்றை மூலமாகக் கொண்டு வேதாந்த தத்துவத்தை விளக்கியவர் ஆவர். எனவே உள்ளபொருள் ஒன்று, அதுதான் பிரமம். ஏனைய யாவும் வெறும் தோற்றம் எனக் கூறி, பிரமம் மட்டும் உண்மை எனக்கூறி அதற்கு சத், சித், ஆனந்தம் என்ற இயல்புகளைக் கொடுத்தார். மேலும் பிரமத்திற்கு குணங்குறிகளுக்கு அப்பாற்பட்ட நிர்க்குணப் பிரம நிலையையும் குணங்குறிகளோடு கூடிய சகுணப் பிரமநிலையையும் கூறுகிறார். இவ்விரு நிலைகளிலும் நிர்க்குணப் பிரம நிலையை உயர்ந்தநிலையாகவும் சகுணப்பிரம நிலையை இரண்டாவது நிலையாகவும் கூறுகிறார்.

சங்கரர் உள்ளபொருள் ஒன்று எனக்கூறும்போது சைவசித்தாந்தம் முப்பொருளுண்மையை விளக்குகிறது. சங்கரர் பிரமம் மட்டும் உண்மை எனக் கூற, சைவசித்தாந்தம் பதி ஆகிய இறைவனும் உண்மை. பசு என அழைக்கப்படும் ஆன்மாக்களும் உண்மை. பாசம் என அழைக்கப்படும் ஆணவம், கன்மம், மாயை உலகம் ஆகியனவும் உண்மை எனக் கூறுகின்றது. சைவசித்தாந்தம் சங்கரர் கூறுவது போல் பதிக்கு சொரூபம், தடத்தம் என்ற இருநிலைகளைக் கூறினும், இருநிலைகளையும் உயர்ந்த நிலைகளாகவே ஏற்றுக்கொள்ளுகின்றனர். சங்கரர் சகுணப் பிரமத்திற்கு ஈஸ்வரன் என்ற பெயரைக் கொடுத்து, அந்த ஈஸ்வரனே உலகின் தோற்றத்திற்குக் காரணம் என்று கூறுகிறார். அவ்வுலகம் உள்பொருளுமல்ல, அது எத்தகைய நோக்கங்களைக் கொண்டதுமல்ல. கயிறு பாம்பாகத் தோற்றுவதைப் போன்ற ஒரு தோற்றமே எனக் கூறப்படுகின்றது. சைவசித்தாந்திகள் நிலையில் உள்ளஇறைவன் தடத்தநிலைக்கு வந்து உருவத்திருமேனிகளைத் தாங்கிப் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்ற ஐந்தொழில்களைச் செய்வதாகவும், கூறுவர். இறைவனால் படைக்கப்பட்ட உலகம் உள்பொருள். அது ஆன்மாக்கள் மோட்சமடையவேண்டும் என்ற காரணத்திற்காகப் படைக்கப்பட்ட பொருளாகும். எனவே சைவசித்தாந்தம் தடத்தம், சொரூபம் என்ற இரு நிலைகளையும் உயர்ந்த நிலைகளாகக் கொள்கின்றது. ஆனால் சங்கரர் நிர்க்குணப் பிரமநிலைக்கு உயர்ந்த இடத்தையும் சகுணப்பிரமமாகிய ஈஸ்வரனுக்கு இரண்டாவது

இடத்தையும் கொடுக்கின்றார். சங்கரர் கூறும் அடிப்படைக் கருத்துக்களில் நின்றும் கடவுள் பற்றிய கருத்துக்களின்றும் சைவசித்தாந்தக் கருத்துக்கள் வேறுபடுகின்றன. என்பதை இவ்விளக்கங்களிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

சங்கரர் உண்மைப்பொருள் ஒன்று. அதுதான் பிரமம் எனக் கூறுவதனால் பிரமத்திற்கு வேறாக ஆன்மாவின் உண்மைத் தன்மையை விளக்காது, ஒரே ஒரு ஆன்மாதான் உண்டு அதுவே பிரமம் எனக் கூறுகின்றார். பிரமம் அவத்தையினால் கட்டுண்டு அது அவித்தையினால் கட்டுண்ட நிலையில் ஆன்மாவானத் தோன்றுகிறது. ஒரு வெண்ணிறப் பூவை செந்நிறக் கண்ணாடி வழியாகப் பார்க்கும் போது, அது செந்நிறமாகவே தோற்றும். இதே போன்று பிரமம் அவித்தையோடு தொடர்புடையதாகி இயல்பில் வேறுபடும்போது அது ஆன்மா என்று அழைக்கப்படும். ஆன்மாவும், பிரமமும் அடிப்படையில் ஒன்று என்பதை விளக்கப் பிரமத்தை பரமாத்மா எனவும், சீவன்களை சீவாத்மா எனவும் அழைக்கின்றார். இவ்வாறு ஒரு ஆன்மாவின் உண்மைத்தன்மையை விளக்குவதால் சங்கரரது ஆன்மக் கொள்கை ஏகான்மவாதம் என்று அழைக்கப்படுகிறது. சைவசித்தாந்தம் சங்கரரது ஆன்மா பற்றிய கருத்துக்களின்றும் வேறுபட்ட கருத்துக்களையே கொண்டுள்ளது. சங்கரர் ஏகான்மவாதம் பேச சைவசித்தாந்தம் ஒவ்வொரு உடலோடும் ஒவ்வொரு ஆன்மாக்கள் உண்டு என்ற அநேகாத்மாவாதக் கொள்கையை விளக்குகிறது. பதிவேறு, பசு வேறு, பதி இயல்பாகவே பாசங்களினின்றும் விடுபட்டது. பசு அனாதியாகவே மலங்களினால் பந்திக்கப்பட்டது என்பது சைவசித்தாந்தக் கருத்தாகும்.

உலகம் பற்றிய கோட்பாட்டை ஆராய்ந்தால் சங்கரர் உலகம் ஒரு தோற்றம் என்று கூறுவதைக் காணலாம். உபநிடதங்களில் இடம் பெறும் மூலப்பொருள் ஒன்று என்ற கருத்தை விளக்க முற்பட்ட சங்கரர் பிரமத்தை மட்டுமே உண்மை, பிரமத்திற்கு வேறாக உலகம் என ஒரு பொருள் இல்லை, கயிறு பாம்பாகத் தோன்றுவது போல பிரமம் உலகமாகத் தோன்றுகிறது. உலகம் ஒரு மாயையான தோற்றமே என்று கூறுகிறார். பிரமத்தைப் போன்று உலகம் உள்பொருளுமல்ல. இரண்டுக்குமிடைப்பட்ட சதசத்விலக்ஷணம் என்று கூறுகிறார். இவ்வாறு சங்கரர் உலகம் ஒரு தோற்றம் எனக் கூற, சைவசித்தாந்தம் உலகம் உள்பொருள் அது அறிவற்ற சடப்பொருள் எனக் கூறுகிறது. இவ்வுலகத்தோற்றத்திற்கு மூலமாக உள்ளது மாயை ஆகும். மாயையில் இருந்து இறைவனே உலகத்தைப் படைத்ததாகவும், ஆன்மாக்கள் ஈடேற்றம் அடைவதன் பொருட்டுப் படைக்கப்பட்டதாகவும் சைவசித்தாந்தம் கூறுகிறது.

சங்கரர் கூறும் மாயை பற்றிய கருத்துக்களை நோக்கும் போது தோற்றம், அறியாமை போன்ற பல்வேறு கருத்துக்களிற் பயன்படுத்தப் பட்டிருப்பதைக் காணலாம். சங்கரர் கூறும் மாயைக்கு ஆவரணம், விசேஷபம் என்ற இரு சக்திகள் உண்டு என்று அறியமுடிகிறது. ஆவரணம் என்றால் உள்ளதை மறைக்கும் இயல்பு எனவும், விசேஷபம் என்றால் இல்லாததைத் தோற்றுவிக்கும் இயல்பு எனவும் விளக்கப்படுகிறது. மாயை ஆவரண சக்தியினால் உள்பொருளாகிய பிரமத்தை மறைத்து விசேஷப சக்தியினால் இப்பொருளாகிய உலகத்தைத் தோற்றுவிக்கிறது. இத்தகைய உலகத்தோற்றம் மாயை என்று கூறப்படுகிறது. இம்மாயை உள்பொருள் என்றும் கூறமுடியாது. இல்பொருளெனவும் கூறமுடியாது. பிரமத்தோடு தொடர்புடையது என்றோ கூறமுடியாது. அதுவசனங்களினால் விளக்க முடியாத அநிர்வசனீயப் பொருள் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் சைவசித்தாந்திகள் மாயை உள்ள பொருள். அது ஒருவமற்றது. ஒன்றேயானது. உலகத்தின் தோற்றத்திற்கு மூலமாக உள்ளது. அறிவற்ற சடப்பொருள். எங்கும் வியாபித்துள்ள பொருள். இறைவனுக்கொரு சக்தியைப் போன்றது. ஆன்மாக்களுக்கு தநு, கரணம், புவனம், போகங்களைக் கொடுக்கிறது. ஆன்மாக்களுக்கு அறிவைக் கொடுத்தாலும் அதுசிற்றறிவென்றே கூறப்படுகிறது. மயக்க அறிவை மாயை ஆன்மாக்களுக்குக் கொடுப்பதன் காரணமாக அது மலம் என்று அழைக்கப்படுகிறது. சங்கரர் உலகத்தோற்றத்தை மாயை என்று அழைக்கும்போது சைவசித்தாந்தம் உலகம் தோன்றுவதற்கும், ஒடுங்குவதற்கும் காரணமாக உள்ளபொருளே மாயை எனக் கூறுவதிலிருந்து இரண்டுக்குமிடையேயுள்ள வேறுபாட்டினைக் கண்டு கொள்ளலாம்.

சங்கரர் கூறும் மோட்சம் பற்றிய கருத்துக்களை ஆராய்ந்தால் ஆன்மாக்கள் அறிவின் மூலம் அறியாமையினின்றும் விடுபடும் நிலையில் பிரமத்தோடு ஒன்றி விடுகின்றன. இந்நிலையில் ஆன்மாவும், பிரமமும் இரண்டில்லை எனக் கூறக்கூடிய வகையில் அத்துவைதமாகக் கலந்துவிடுகின்றன. இந்நிலையில் உள்ள

பொருள் ஒன்று. அதுதான் பிரமம். பிரமம் மட்டுமே உண்மை எனக் கூறுவதால் சங்கரர் கூறும் அத்துவைதம் கேவலாத்துவைதம் என்று அழைக்கப்படும். சைவசித்தாந்திகள் நால்வகை மார்க்கங்களில் ஞானமார்க்கத்தின் மூலமே ஆன்மா இறைவனோடு இரண்டறக் கலந்துவிடுகின்றன. இரண்டறக் கலந்தாலும் அவற்றை ஒன்றெனக் கூறவும் முடியாது. இரண்டெனக் கூறவும் முடியாது. இரண்டல்ல எனக் கூறக்கூடிய வகையில் அத்துவைதமாகக் கலந்துவிடுகிறது எனக் கூறுவர். அத்துவைதத்திலுள்ள 'அ' என்ற சொல்லுக்கு சங்கரர் 'இல்லை' என்ற பொருளை கொடுத்து இரண்டில்லை எனக்கூற, சைவசித்தாந்தம் 'அல்ல' என்ற பொருளை கொடுத்து இரண்டல்ல எனக் கூறுவதைக் காணலாம். சங்கரர் கேவலாத்துவைதம் பேச சைவசித்தாந்தம், ஆன்மாக்கள் தம்தனி இயல்பை இழக்காமல் இறைவனோடு கலக்கின்ற அத்துவைதத்தை சுத்தாத்துவைதம் என்று அழைக்கின்றனர். மோட்சக் கொள்கையிலும் சங்கரர் கூறும் கருத்துக்களிலிருந்து சைவசித்தாந்தம் கூறும் மோட்சம் பற்றிய கருத்துக்கள் வேறுபடுவதனைக் காணலாம்.

இராமானுஜர் கூறும் கருத்துக்களையும் சைவசித்தாந்தம் கூறும் கருத்துக்களையும் ஆராய்ந்தால் பல இடங்களிலும் ஒற்றுமை இருந்தாலும் மோட்சம் பற்றிய கோட்பாட்டில் வேறுபடுவதனைக் காணலாம். இராமானுஜர் அசித், சித், ஈஸ்வரன் என்ற முப்பொருளுண்மையை விளக்கியுள்ளார். அசித் என்பது உலகத்தையும், சித் என்பது ஆன்மாவையும், ஈஸ்வரன் என்பது இறைவனையும் குறித்து நிற்கிறது. முப்பொருளுண்மையை விளக்கினாலும், இறைவனை உயிராகவும், உலகையும் ஆன்மாவையும் சரீரங்களாகவும் கூறுகிறார். உலகம் ஆன்மாக்களினுள் இறைவன் அந்தர்யாமியாக நின்று இயங்குவதன் காரணமாகவே அவை இயங்குகின்றன. எனவே முப்பொருட்களிலும் மேலானது ஒன்று. ஆன்மாக்களுக்கெல்லாம் ஆன்மாவாகி நிற்கும் பரமான்மாவாகிய ஈஸ்வரன் ஒன்று எனக் கூறுகிறார். ஈஸ்வரனை உயிராக்கி அதற்குரிய விசேஷணங்களாக ஆன்மாவையும், உலகத்தையும் கூறுகிறார். ஆன்மாவையும் உலகத்தையும் விசேஷணங்களாக உடைய இறைவனுக்கு விசேஷியம் என்ற பெயர் கொடுக்கப்படுகிறது. விசேஷணம் விசேஷியம் என்ற இரண்டும் சேர்ந்த விசிஷ்டமே இராமானுஜர் பேசும் இறைவன். விசிஷ்டம் என்ற இறைவனோடு ஆன்மாக்கள் அத்துவைதமாகக் கலந்து விடும் மோட்சமே விசிஷ்டாத்துவைதம் ஆகும். இராமானுஜர் அத்துவைதம் என்ற சொல்லிலுள்ள 'அ' என்ற சொல்லுக்கு இல்லை என்ற பொருளைக் கொடுத்து ஆன்மாவும், இறைவனும் இரண்டில்லை எனக்கூறும் வகையில் அடையும் மோட்சமே விசிஷ்டாத்துவைதம் எனப்படும். சைவசித்தாந்தம் பதி, பசு, பாசம் எனும் முப்பொருளுண்மையைவிளக்கி மேலானது பதி எனக் கூறுகிறது. பசுவாகிய ஆன்மாக்கள் மலங்களின்ற் பந்திக்கப்பட்ட தன்மையிலின்றும் விடுபட்டு இறைவனோடு இரண்டறக் கலந்துவிடுகின்றன. இதனைச் சுத்தாத்துவைதம் என்று அழைப்பர். அத்துவைதம் என்றால் இரண்டல்ல என்பதே இவர்களது கருத்தாகும். மோட்சநிலையிலும் கூட ஆன்மாக்கள் தம் தனி இயல்பை இழக்காமல் இறைவனது இயல்பைப் பெற்று விளங்கும் மோட்சமே சுத்தாதுவைதம் ஆகும். இராமானுஜர் விசிஷ்டாத்துவைதம் பேச சைவசித்தாந்தம் விசிஷ்டாத்வைதக் கொள்கையை விளக்குகிறது.

மத்துவர் சைவசித்தாந்திகளைப் போன்று பன்மை வாதியாக விளங்கினும் மத்துவர் கூறும் கருத்துக்களுக்கும் சைவசித்தாந்தம் கூறும் கருத்துக்களுக்குமிடையே வேற்றுமை காணப்படுகின்றது. மத்துவர் ஈஸ்வரன், சிவன், சடம் எனும் முப்பொருளுண்மையை விளக்குவதுடன் முப்பொருளுக்குமிடையே ஐவகைப் பேதங்கள் உண்டு என்ற கருத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார்.

மத்துவர் சைவசித்தாந்திகளைப் போன்று பன்மை வாதியாக விளங்கினும் மத்துவர் கூறும் கருத்துக்களும் சைவசித்தாந்தம் கூறும் கருத்துக் களுக்கு மிடையே வேற்றுமை காணப்படுகின்றன. மத்துவர் ஈஸ்வரன், சிவன், சடம் எனும் முப்பொருளுண்மையை விளக்குவதுடன் முப்பொருட்களுக்குமிடையே ஐவகைப் பேதங்கள் உண்டு என்ற கருத்துக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறார். மத்துவரைப் பொறுத்தமட்டில்இவ்வகைப் பேதங்களும் நிலையானவையே. அவை சீவனுக்கும் ஈஸ்வரனுக்கும் இடையேயுள்ள சிவேஸ்வரபேதம் சடத்துக்கும் ஈஸ்ரனுக்குமிடையேயுள்ள சடஈஸ்வரபேதம் சீவனுக்கும் சடத்துக்கும் இடையேயுள்ள சிவசடபேதம், ஒரு சீவனுக்கும் இன்னொரு சீவனுக்கும் இடையேயுள்ள சிவபரஸ்பரபேதம் ஒரு சடத்துக்கும் இன்னொரு சடத்துக்கும் இடையேயுள்ள சடபரஸ்பரபேதம் என்பனவாகும். இவ்வாறு ஒவ்வொரு பொருட்களுக்குமிடையே பேதம் உண்டு எனக் கூறுகின்ற மத்துவர்,

மோட்ச நிலையிலும் கூட ஒற்றுமையைக் கூறமுடியாது. சீவனுக்கும் ஈஸ்வரனுக்கும் இடையே சிவேஸ்வரபேதம் உண்டு எனக் கூறுவதனால் மோட்டநிலையிலும் அவை இரண்டெனும் நிலை நீங்கி ஒருபோதும் ஒன்றுவதில்லை. இவையிரண்டும் இரண்டுதான் எனக் கூறுவதனால் அவரது தத்துவம் துவைதம் எனப்படும். அத்துவைதம் என்ற சொல்லிலுள்ள 'அ' என்ற சொல்லை மறுதலை என்ற பொருளில் விளக்கி இரண்டுதான் எனத் துவைதம் பேசுகின்றார். சைவசித்தாந்தம் முப்பொருள் உண்மையை விளக்கி இறுதி மோட்சநிலையிலும் முப்பொருட்களும் உண்மை என்பதைக் கூறுகிறது. பதிவேறு, பசுவேறு எனக் கூறினும் மோட்சநிலையில் அவை வேறு வேறாக நிற்கவும் முடியாது. இவை இரண்டும் ஒன்றென்று கூறக்கூடிய வகையில் கலந்துவிட முடியாது. இரண்டல்ல எனக் கூறக்கூடியவகையில் அத்துவைதமாகி விடுகின்றன, சுத்த அத்துவைதம் போசுவதனைக் காணலாம்.

இவ்வாறு சங்கரர், இராமானுஜர், மத்துவர் போன்றோரது அத்துவைதம், விசிஷ்டாத்துவைதம், துவைதம் போன்ற வேதாந்தக் கோட்பாடுகளினின்றும் சைவசித்தாந்திகளது சுத்தாந்துவைதம் வேறுபடுகிறது.

(23) சங்கரரின் அத்துவைதம் இராமானுஜர் கூறும் விசிஷ்டாத்துவைதத்தில் இருந்து எவ்வெவ்வகையில் வேறுபடுகின்றது என்பதைக் கூறுக.

இந்திய தத்துவஞான வரலாற்றில் அறுவகைத்தரிசனங்கள் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுகின்றன. அவை சாங்கியம், யோகம், நியாயம், வைசேடிகம், மீமாம்சை, வேதாந்தம் என்பனவாகும். வேதாந்தம் என்று கூறும்போது அது சங்கரவேதாந்தம், இராமானுஜவேதாந்தம், மத்துவ வேதா.ந்தம் என்று மூவகைப்படும். இவற்றுள் பொதுவாக வேதாந்தம் என்ற பெயரினால் அழைக்கப்படுவது சங்கரரது வேதாந்தம் ஆகும். இவ்வேதாந்தக் கோட்பாடுகள் யாவும் அத்துவைதக் கொள்கைபற்றிக் கூறினும், பொதுவாக அத்துவைதம் என்பது சங்கரவேதாந்தத்தையே குறிக்கும். சங்கரரும் இராமானுஜரும் உபநிட்தங்களின் சுருக்கமாகிய பிரம° சூத்திரத்திற்கு உரைஎழுதினர். சங்கரரது பிரமசூத்திர பாஷ்யத்தை அடியொற்றித் தோற்றம் பெற்றதே சங்கரரின் அத்துவைதவேதாந்தம். இராமானுஜர் பிரமசூத்திரத்திற்கு எழுதிய உரை ஸ்ரீபாஷ்யம் என்று அழைக்கப்படுகிறது. இதனை அடிப்படையாகக் கொண்டே இராமானுஜவேதாந்தம் தோன்றியது. இவ்வாறு சங்கரரும் இராமானுஜரும் பிரமசூத்திரத்திற்கு விளக்கம் கொடுத்தாலும், அவர்களது கொள்கை வேறுபாடு காரணமாக வேதாந்தக் கோட்பாடுகளும் மாறுபடுகின்றன. சங்கரர் கி.பி.8ம் நூற்றாண்டு காலப்பகுதியைச் சேர்ந்தவர். இராமானுஜர் கி.பி.11ம் நூற்றாண்டுக் காலப்பகுதியில் வாழ்ந்தவர். இதனால் சங்கரரது தத்துவக் கருத்துக்களை ஆராய்ந்து விமர்சிக்கும் வாய்ப்பை இராமானுஜருக்குக் காலமே கொடுத்தது.

இந்த தத்துவங்களுக்கு மூலமாக அமைந்த நூல்கள் உபநிடதங்கள் ஆகும். உபநிடதங்களில் மூலப்பொருள் ஒன்று என்ற கருத்துக்களும், மூலப்பொருள் பல என்று பொருள்படும் வசனங்களும் காணப்பட்டன. சங்கரர் உள்ளபொருள் ஒன்று என்ற கருத்தையே தமது கோட்பாட்டிற்கு மூலமாகக் கொண்டார். இராமானுஜர் பொருட்கள் பல என்ற கொள்கை உடையவர். அவர்முப்பொருள் உண்மையை விளக்குகிறார். சங்கரர் உண்மைப்பொருள் ஒன்று அதுதான் பிரமம். பிரமத்திற்கு வேறாக ஆன்மா என ஒருபொருள் இல்லை. பிரமத்திற்கு வேறாக உலகமும் உள்பொருள் அல்ல என்று ஒருமைக்கோட்டை விளக்குகிறார். ஆனால் இராமானுஜர் அசித், சித், ஈஸ்வரன் என்ற முப்பொருள் உண்மையை விளக்கி அதில் ஈஸ்வரனே மேலான பொருள். அசித்தாகிய உலகமும் சித்தாகிய ஆன்மாக்களும் ஈஸ்வரனுக்கு உடல்கள், சரீரங்கள், அங்கங்கள் என்று கூறுகிறார். இவ்வாறு முப்பொருள் உண்மையை விளக்குவதனால் இராமானுஜர் தத்துவத்திரயம் பேசுபவர் என்று அழைக்கப்படுகிறார்.

சங்கரர் பிரமம் ஒன்றுதான் உண்மை என்று கூறும்போது பிரமத்திற்கு வேறாக ஆன்மாவும் உள்பொருள் அல்ல. உலகமும் உண்மையல்ல என்ற கருத்து தெளிவுபடுத்தப்படுகிறது. ஒன்றாகிய பிரமமே பல சீவன்களாகவும், உலகமாகவும், தோன்றுகிறது. பிரமம் உலகமாவதை மாயைக்

கொண்டு சங்கரர் விளக்குகிறார். பிரமம் ஆன்மாவாகத் தோன்றுவதை
அவித்தையைக் கொண்டு விளக்குகிறார். கயிறு பாம்பாகத் தோன்றுவது
போல பிரமம் உலகமாகத் தோன்றுகிறது. எனக் கூறும் சங்கரர் கயிற்றில்
உண்மையில் எந்தமாற்றமும் நிகழவில்லை. அதுமாறாமல் இருந்தபடியே
மாறிப் பாட்பாகிவிட்டது போலத் தோன்றுகிறது. இதேபோன்று பிரமத்திலும்
எத்தகைய மாற்றமும் நிகழவில்லை. ஆனால் அது மாறி உலகசிருஷ்டி ஏற்பட்டு
விட்டது போலத் தோன்றுகிறது, காரணமாகிய கயிறு மட்டுமே உண்மை,
காரியமாகிய பாம்பு உண்மையல்ல. காரணமாகிய பிரமம் மட்டுமே உண்மை
காரியமாகிய உலகம் உண்மையல்ல என்று விவர்த்தவாதக் கொள்கையின் மூலம்
விளக்குகிறார். இராமானுஜர் பரிணமவாதக்கொள்கை உடையவர். பரிணமம்
என்றால் காரணம் காரியமாக மாறுதல். காரியம் காரணத்தில் இருந்து
முற்றிலும் வேறுபட்டதல்ல. காரணமும் உண்மை, காரியமும் உண்மை.
இராமானுஜரைப் பொறுத்தமட்டில் இறைவன் நிமித்த உபாதான காரணமாக
விளங்குகிறான். இறைவன் ஆன்மாக்களையும் உலகத்தையும் தனக்கு உடலாகக் கொ
கொள்கிறான். இவை இறைவனது வடிவங்கள் அல்லது மாற்றங்களே (Modes )
ஆன்மாவும் உலகும் சூக்கும வடிவில் இருக்கும்போது இறைவன் காரணமாகவும்,
அவை தூல வடிவைப் பெறும்போது காரியமாகவும் விளங்குகிறான். இறைவனுக்கும்
உலகுக்கும் உள்ள தொடர்பு ஒருபொருளுக்கும் அதன் குணத்துக்கும் இடையில்
உள்ள தொடர்பைப் போன்றது.

இராமானுஜரது கருத்துப்படி இறைவன் உயிர். ஆன்மாவும்
உலகமும் அதன் சரீரங்கள். இறைவன் ஆன்மாவையும் உலகத்தையும் சரீரங்களாக
உடைய சரீரி. சரீரிக்கும் சரீரங்களுக்கும் இடையே உள்ள தொடர்பு
சரீரசரீரிபாவம் எனப்படும். இறைவன் அங்கி, ஆன்மாவும் உலகமும் அதன்
அங்கங்கள் இதனை அங்க அங்கி பாவத்தின்மூலம் விளக்குகிறார். ஆன்மாவும்
உலகும் இறைவனுக்குரிய விசேஷணங்கள். இறைவன் விசேஷியம், விசேஷணம்,
விசேஷியம் இரண்டும் சேர்ந்த பரம்பொருள் விசிஷ்டம் என்று அழைக்கப்
படுகிறது. இக்கொள்கைகளில் மூலமாக இறைவனது அந்தர்யாமித் தத்துவம்
விளக்கப்படுகிறது. அதாவது ஆன்மாக்களினுள்ளும், உலகத்தினுள்ளும் இறைவன்
அந்தர்யாமியாய், அதாவது உள்நின்று இயக்குகிறார். இறைவன் என்ற உயிர்
இல்லையாயின் ஆன்மா, உலகம் ஆகிய உடல்கள் இயங்காது. எனவே மேலான
பொருள் ஒன்று எனக் கூறுகிறார். சங்கரர் உள்ள பொருள் ஒன்று என்று கூற,
இராமானுஜர் முப்பொருள் உண்மையைக் கூறி, ஆன்மாக்களை எல்லாம் தக்
தனக்கு உடலாகக்கொண்டு அவ்வான்மாக்களுக்கெல்லாம் ஆன்மாவாக நிற்கும்
பரமான்மா ஒன்றுதான் என் விளக்குகிறார்.

சங்கரர் பிரமத்திற்கு வேறாக. ஆன்மாக்களும் இல்லை. உலகும்
உண்மையல்ல என்று கூற, இராமானுஜர் அவற்றின் உண்மையை விளக்கி அவை
இறைவனுடன் கொண்டுள்ளதொடர்பு பிரிக்கமுடியாதது எனக் கூறுகிறார். இதனை
விளக்க 'அப்பிரதக் சித்திக்கொள்கை' யைக் கையாளுகிறார். அப்பிரதக்சித்தி
என்றால் பிரிக்க முடியாதது என்பது கருத்தாகும். அத்துடன் ஒன்று நிலைப்பதற்கு
இன்னொன்று அவசியம் என்றும் கூறப்படுகிறது. ஒருபழத்தில் இருந்து அதன்
சுவையைப் பிரிக்கமுடியாது. சுவை பழத்தில் தங்கியுள்ளது. பழம் சுவையில்
தங்கியுள்ளது. பழம் நிலைப்பதற்கு சுவை அவசியம். சுவை நிலைப்பதற்குப்
பழம் அவசியம். இதேபோன்று உயிர்களுக்கும் உலகுக்கும் இறைவன் இன்றி
யமையாதவன். உயிர்களும், உலகும் இறைவனுக்கு இன்றியமையாதன.
இக்கருத்துக்களை சங்கரர் ஏற்றுக்கொள்வதில்லை. உலகமும், உயிர்களும்
இறைவனது அங்கங்களாயின் அவற்றில் ஏற்படும் மாற்றம் இறைவனையும்
பாதித்தே ஆகவேண்டும். ஆனால் பிரமம் பரம்பொருள். அது நிர்க்குணப்
பிரமம். குறையாடுகளைக்கடந்தது என்கிறார். மேலும் பிரமம் குறைபாடுகளைக்
கடந்து, எல்லைகளுக்கு அப்பாற்பட்டுநிற்கும் உள்பொருள் என்பதை
நிருபிபதற்காகவே உலகும், உயிர்களும் தோற்றம் என்று சங்கரர் கூறினார்.

உலகம் உள்பொருள் ஆக இருந்தால் அது எதிலிருந்து
தோன்றியது, மூலப்பொருளுக்கும், உலகிற்கும் இடையிலுள்ள தொடர்பு எத்த
கையது என விளக்க வேண்டும். பிரமத்திடம் இருந்து உலகம் தோன்றியது எனக்
கூறும் சங்கரர், பிரமத்திற்கும் உலகத்துக்கும் இடையில் உள்ள தொடர்பு
எமது சிற்றறிவுக்கு விளங்காதது என்று கூறி அது மாயையான் தோற்றம்
என்கிறார். ஏனெனில் உலகம் சடப்பொருள், பிரமம் அறிவுள்ள பொருள்.

எனவே சடப்பொருளாகிய உலகத்திற்கு மூலமும் ஒரு சடப்பொருள் என்ற சத்காரிய வாதக் கொள்கையை சங்கரர் ஏற்றுக்கொள்கிறார். எனவே பிரமத்திடமிருந்து உலகம் தோன்றியது எனக் கூறமுடியாது. பிரமத்திடம் இருந்து உலகம் தோன்றினால் உலகமும் மாறுதலுக்குட்படுகின்றது என்ற கருத்து ஏற்பட்டுவிடும். பிரமம் மாறுதலுக்கு உட்படும்பொருள் ஆகின் அது நித்தியமான சத்துப் பொருளாக இருக்கமுடியாது. உபநிடதம் கூறுவது போல பிரமம் சத்துப்பொருள் என்பதை விளக்குவதற்காக உலகம் தோற்றம் என்று கூற இராமானுஜர் இறைவனுக்கு உலகத்தை உடலாகக் கூறி, அவற்றுக்கிடையேயுள்ள தொடர்பு பிரிக்கமுடியாதது என்கிறார்.

ஆன்மா பற்றிய சங்கரரது கருத்துக்களும் இராமானுஜரது கருத்துக்களில் இருந்து மாறுபடுகின்றன. சங்கரர் ஒரேஒரு ஆன்மாதான் உண்டு. அதுதான் பிரமம் என்ற ஏகான்மவாதக் கொள்கை உடையவர். பிரமமே அவித்தை காரணமாக ஆன்மாவாகிறது. ஒன்றாகவேஉள்ள பிரமம் பலசீவன் களாகத் தோன்றுகிறது. இதனைச் சங்கரர் பிரதிபிம்பவாதம், அவச்சேத வாதத்தின் மூலம் விளக்குகிறார். வானில் உள்ளது ஒரு சந்திரன். பல நீர் நிலைகளிலும் படும்போது பலவாகத் தோன்றுகிறது. அதுபோல பிரமத்தின் பிரதிபிம்பம் அவித்தையிற் பட்டுப் பலசீவன்களாகத் தோன்றுகிறது. பூமியில் உள்ள நீர் நிலைகள் அழிக்கப்பட்டால் வானில் உள்ளது ஒரு சந்திரன்போல, அறிவினால் அறியாமை நீங்கும் போது உள்ளது ஒரே ஒரு ஆன்மா, அது தான் பிரமம் என்ற உண்மை புலனாகும். இதனைசங்கரர் அவச்சேதவாதத்தின் மூலமும் விளக்குகிறார். உலகெங்கும் பரந்து காணப்படுவது ஒரேவெளி. அது பல தடுப்புக்களினாலும் தடுக்கப்படும்பொழுது பலவாகத் தெரிகிறது. அறை, குடம், பெட்டி போன்றவற்றை நிரப்பும் வெளி அவற்றின் வடிவத்தைப் பெற்றுப் பலவாகத் தோன்றுகிறது. இத்தடுப்புக்கள் நீக்கப்பட்டால் உள்ளது ஒரேவெளி. இதேபோன்று அறியாமை நீங்க உள்ளது ஒரே ஒரு ஆன்மா என்ற ஏகான்மைக் கொள்கை தெளிவாகும் என்று கூறுகிறார் சங்கரர்.

இராமானுஜரது கொள்கைப்படி ஆன்மாக்கள் பகுதி, இறைவன் அப்பகுதிகளை உடைய முழுப்பொருள். ஆன்மாக்கள் பல. அவை இறைவனுக்கு உடல்கள், இறைகள் அந்த உடல்களை இயக்கும் உயிர். இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள தொடர்பு ஒரு முழுப்பொருளுக்கும் அதன் பகுதிக்கும் இடையிலுள்ள தொடர்பைப்போன்றது. உதாரணமாக ஒரு மேசையை முழுப் பொருளாகவும் அதன்கால்களை பகுதிகளாகவும் கொள்ளலாம். மேசையும் கால்களும்ஒன்று எனவும் கூறலாம். வேறு எனவும் கூறலாம், ஒன்று வேறும் எனவும் கூறலாம். இதனை பேதம், அபேதம், பேதாபேதம் என்ற கொள்கைமூலம் விளக்குகிறார். இக்கருத்துக்கள் சங்கரருக்குப் பொருந்தாது. இறைவன் முழுப்பொருள். ஆன்மா அதன் பகுதி எனில் இறைவனும் பகுதிகளை உடைய பொருள் என்ற கருத்து ஏற்பட்டுவிடும். இது பிரமத்தின் நிறைவுத் தன்மைக்குப் பொருந்தாது எனக்கூறுவர்.

மேலும் ஆன்மாவும், உலகும் உறைவனுக்கு உடல்கள் எனில், அவற்றில் ஏற்படும் மாற்றங்கள் இறைவனாகிய அவற்றின் உயிரையும் பாதித்தல் வேண்டும். என்பது சங்கரவேதாந்திகளின் வாதம். ஆனால் இராமானுஜர் உடலுக்கும் உயிருக்கும் இடையேயுள்ள தொடர்பை விளக்குவதற்கு உடலைப்பாதிக்கும், பிணி, மூப்பு, சாக்காடு எவையும் அதனுள் நின்று அதனை இயக்கும் உயிரைப் பாதிப்பதில்லை. இதுபோலவே ஆன்மா, உலகில் ஏற்படும் குறைபாடுகள், மாற்றங்கள் அவற்றுள் அந்தர்யாமியாக நிற்கும் இறைவனைப் பாதிப்பதில்லை.

இராமானுஜரது கருத்துப்படி ஆன்மாக்கள் எண்ணிக்கையில் பல. ஆனால் அவை அறிவை இயல்பாகக் கொண்டிருப்பதனால் எண்ணிக்கையில் பலவாக இருந்தாலும் இயல்பிலே ஒன்று என்பார். சங்கரர் ஒன்றாக உள்ள பிரமமே பலசீவன்களாகத் தோன்றுகிறது. மேலும் அவித்தையின் இயல்புக் கேற்றவகையில் சீவர்களிலும் வேறுபாடுண்டு என்கிறார். இராமானுஜர் ஆன்மாக்களை மூன்றுவகைப் படுத்துகிறார். முதலாவது பிரிவு ஆன்மாக்கள் எப்போதும் முத்திநிலையிலுள்ளவை இவைபெற்ற நிலையில் இருந்து முத்தியடைந்த வை. இரண்டாவது பிரிவு பெத்தநிலையில் இருந்து முத்தி அடைந்தவை.

மூன்றுவது பிரிவு பெ... நிலையிலுள்ளவை. சங்கரர் ஆன்மாக்கள் உடலோடு கூடிய நிலையிலுள்ளபோதே அடையும் சீவன்முத்தியை ஏற்றுக்கொள்கிறார். இராமானுஜர் சீவன்முத்தியை ஏற்றுக்கொள்வதில்லை.

இராமானுஜர் ஆன்மாக்களின் இயல்பு ஞானம் என்று கூறி அதனைத் தர்ம பூதஞானம் என்ற பெயரினால் அழைக்கிறார். மேலும் இறைவனது ஞானம் பூரணமானது. ஆன்மாக்களின் அறிவு சிற்றறிவு, சிற்றறிவின் காரணமாக அறியாமைக்குட்பட்டு கர்மங்களைச் செய்து பிறவிக்குட்படுகின்றன. பிறவியில் நின்றும் விடுபட்டுப் பிரமத்தோடு ஒன்றிவிடுவதே மோட்சமாகும். இதற்குரிய வழியாகக் கர்மம், பக்தி, ஞானம் ஆகிய மூன்று வழிகளையும் கூறுகிறார். பக்தியிலும் பிரபத்திக்கே முக்கியத்துவம் கொடுக்கிறார். பிரபக்தி கட்டுப்பாடுகளைக் கடந்தது. எந்த வருணத்தவர்களும், எந்த நிலையில் உள்ளவர்களும் இறைவனது அருளிலும், சக்தியிலும் பூரண நம்பிக்கை வைத்து தன்னை முழுமையாக இறைவனிடம் ஒப்படைத்தலாகும். இதன் மூலமாக மோட்சமடையமுடியும் என்பது இராமானுஜர் கொள்கை.

சங்கரரது கொள்கை இராமானுஜர் கொள்கையில் இருந்து வேறுபட்டது. இராமானுஜர் பக்திக்கு இடம் கொடுக்கும்போது சங்கரர் ஞானத்திற்கு முககியத்துவம் கொடுக்கிறார். பிரமம் பற்றிய அறிவின் மூலமாக, அதாவது பிரமத்தை சத், சித், ஆனந்தம் ஆக அறிந்து கொள்வதன் மூலம் அறியாமையில் இருந்து விடுபட்டுப் பிரமத்தோடு ஒன்றி விடுகிறார்.

மோட்சநிலையில் ஆன்மாவும் பிரமமும் ஒன்று என சங்கரரும், இராமானுஜரும் கூறுகின்றனர். ஆனால் சங்கரரைப் பொறுத்தமட்டில் வெறும் துன்பம் நீங்கிய நிலைஅல்ல. அது பேரின்பமான நிலை. அங்கு ஆன்மா தனது உண்மைநிலையாக சத், சித், ஆனந்தமாகிறது. அது முற்றாக பிரமமே ஆகிவிடுகிறது. எனவே மோட்சநிலையில் பிரமம் மட்டுமே உண்மை என்று அத்துவைதம் பேசுகிறார். ஆன்மாவும் பிரமமும் இரண்டில்லை. உள்ளது ஒன்று ஒன்று. அதுதான் பிரமம் என்ற கேவலாத்துவைதம் பேசுகிறார்.

இராமானுஜரைப் பொறுத்தமட்டில் ஆன்மா முற்றுமுழுதாக இறைவன் ஆவதில்லை. இறைவனிடமிருந்து பிரிக்கமுடியாதவாறு இறைவனுடன் கலந்து விடுகிறது. இந்நிலையில் அது இறைவனது ஆனந்தத்தை அனுபவிக்கிறது. இவரது அத்துவைதம் விசிட்டாத்துவைதம் எனப்படும். இறைவன் சித்தாகிய ஆன்மாக்களையும், அசித்தாகிய உலகத்தையும் விசேடணங்களாக உடையவன் இதனால் 'விசிட்டம்' என்று அழைக்கப்படுகிறான். விசிட்டமாகிய இறைவனுடன் ஆன்மாக்கள் இரண்டறக் கலக்கின்றன. இறைவனுடைய இயல்புகளை ஆன்மா பெறுகின்றது.

சங்கரர் ஆன்மாவும் பிரமமும் ஒன்றென்பதை 'தத்துவம் அஸி' 'அகம் பிரம்மோ அஸ்மி' என்ற உபநிடத மகாவாக்கியங்களைக் கொண்டு விளக்குகிறார். சங்கரர் 'தத்' என்பதை அது அல்லது பிரமம் எனவும், 'துவம்' என்பதை 'நீ' எனவும் நேர்பொருளில் கொண்டு 'அஸி' என்றால் இருக்கிய என்று பொருள் கூறி 'நீ அதுவாக இருக்கிறாய்' எனவே ஆன்மாவும் பிரமமும் ஒன்று என்கிறார். இராமானுஜர் 'துவம்' என்பதை 'நீ' என்று கூறாமல், உனக்குள்ளே அந்தர்யாமியாக நின்று உன்னை இயக்கும் இறைவன் எனக்கூறுகிறார். எனவே உன்னுள்ளே இருக்கும் இறைவனும் பரம்பொருளும் ஒன்று என்றே இராமானுஜர் விளக்குகிறார்.

இவ்வாறு மேற்கூறப்பட்ட கருத்துக்களைத் தொகுத்து நோக்கின் இராமானுஜரது உலகம், ஆன்மா, பிரமம், மோட்சம் பற்றிய கருத்துக்களில் இருந்து சங்கரர் பெரிதும் வேறுபடுகின்றார் என்ற உண்மை தெளிவாகிறது.

(24). "சமயத்தையும் தத்துவத்தையும் நெருக்கமாக இணைப்பதிலேயே சைவசித்தாந்த சாத்திரங்கள் வெற்றி கண்டன". சைவிசித்தாந்த தத்துவ முறையை மனதிற்கொண்டு இக்கூற்றினை ஆராய்க. (1983 ஓகஸ்ட்)

சைவசமயம் சிவனைப் பரம்பொருளாகக் கொள்ளும் மதம். ஆகும். சிவவழிபாடு மிகத் தொன்மை வாய்ந்த வழிபாட்டு முறைகளில் ஒன்றாகும். சைவசமயத்தின் முடிந்தமுடிபாக உள்ள கொள்கையே சைவசித்தாந்தமாகும். சைவசித்தாந்தத் தத்துவக் கருத்துக்களை சைவசித்தாந்த சாத்திரங்கள் அல்லது மெய்கண்ட சாத்திரங்களிலிருந்து தெளிவாகவும், ஒழுங்குமுறைப்படுத்தப்பட்ட வகையிலும் அறிந்து கொள்கிறோம். சைவசித்தாந்த சாத்திரங்கள் எண்ணிக்கையில் பதினான்கு ஆகும். அவை திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபாஇருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்பனவாகும். இவற்றுள் சிவஞானபோதம் முதல் நூலாகவும், சித்தியார் வழிநூலாகவும், சிவப்பிரகாசம் சார்பு நூலாகவும் விளங்குகின்றன. இச்சைவ சித்தாந்த சாத்திரங்கள் தமக்குள் மாறுபடாது சைவசித்தாந்த தத்துவக் கருத்துக்களை விளக்குகின்றன.

சைவசித்தாந்தம் வேதங்களையும், ஆகமங்களையும் மிகச் சிறந்த பிரமாணங்களாகக் கொண்டு பதி, பசு, பாசம் எனும் முப்பொருளுண்மையை விளக்குகிறது. பதி என்பது இறைவனையும், பசு என்பது ஆன்மாக்களையும், பாசம் என்பது ஆணவம் கன்மம், மாயை எனும் மும்மலங்களையும் குறித்து நிற்கிறது. முப்பொருட்களிலும் மேலானவன் இறைவன் என்பதனால் தலைவன் என்ற பொருளில் இறைவனுக்குப் பதி என்ற பெயர் கொடுக்கப்படுகிறது. ஆன்மாக்கள் அநாதியாகவே மலபந்தம் உடையனவ் என்பதனால் அவை பசு என்று அழைக்கப்படுகின்றன. மலங்கள் பந்தித்து நிற்கும் இயல்பினை உடையவை என்பதனால் அவை பாசம் என்று அழைக்கப்படுகின்றன. சைவசித்தாந்த தத்துவக் கருத்துப்படி பாசங்களினின்றும் விடுபட்டு பதியோடு ஆன்மா இரண்டறக்கலத்தலே மோட்சம் அல்லது முத்தி எனப்படும். இதுவே ஆன்மாக்களின் உயர் குறிக்கோள் ஆகும். இக்குறிக்கோளை அடைவதற்கு ஆன்மாக்கள் முயலவேண்டும். இறைவனும் அருளவேண்டும். இறைவனது திருவருள் இன்றி ஆன்மா ஒருபோதும் மோட்சத்தைப் பெறமுடியாது. இக்கருத்துக்களின் அடிப்படையில் சைவசித்தாந்தம் இறைவன், ஆன்மா, உலகம், மோட்சம், மோட்சத்தை அடையும் வழிகள் போன்ற பல்வேறு கோட்பாடுகளை விளக்கியுள்ளது. இக்கருத்துக்களை சைவசித்தாந்த சாத்திரங்களில் தெளிவாகக் காணலாம். சைவசித்தாந்த சாத்திரங்கள் சமயத்தையும் தத்துவத்தையும் நெருக்கமாக இணைப்பதில் வெற்றி கண்ட நூல்கள் என்பதனை சைவசித்தாந்த தத்துவமுறையை கருத்திற்கொண்டு காணமுடிகிறது.

சைவசித்தாந்த சாத்திரங்கள் கூறும் பதி பற்றிய கருத்துக்களை ஆராயின் பதியின் உண்மை, பதி இயல்பு, இலக்கணம் பதிக்குரிய தொழில் போன்ற பல்வேறு கருத்துக்கள் விளக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். பதியின் இயல்புகளை ஆராயின் சிறப்பாக சொரூபம், தடத்தம் எனும் இருநிலைகள் கூறப்பட்டுள்ளன. சொரூபம் என்பது இறைவனது உண்மை நிலையாகும். இந்நிலையில் இறைவன் 'நில்வும் அருவுருவன்றிக் குணங்குறிகளின்றி நின்மலமாய் ஏகமாய் நித்தமாகி அலகிலுயிர்க்குணர்வாகி, அசலமாகி, அகண்டிதமாய், ஆனந்த உருவாய், செலவரிதாய், செல்கதியாய் நிற்கிறான்' என்று சிவப்பிரகாசம் கூறுகிறது. இந்நிலையிலுள்ள இறைவன் கீழான நிலைக்கு இறங்கி வந்து, உருவத்திருமேனிகளைத் தாங்கும் நிலை தடத்தநிலை எனப்படும். இறைவன் குணங்குறிகளோடும், அருவம், உருவம், அருவுருவத் திருமேனிகளோடு விளங்கும் நிலையாகும். தடத்தநிலையிலுள்ள இறைவனையே மனம், வாக்கு, காயத்தினால் வழிபட முடியும். ஆகமங்களும் சிற்பசாத்திரங்களும் இறைவனது பல்வேறு உருவத்திருமேனிகள் பற்றியும், அவற்றை கற்களிலும், உலோகங்களிலும் வடித்து, கோயில்களில் வைத்து வணங்கும் விதிமுறைகள் பற்றியும் விளக்குகின்றன. சைவசித்தாந்த சாத்திரங்களுக்கு மூலமாக அமையும் ஆகமங்கள் சிறப்பாக கோயில்வழிபாடு, உருவவழிபாடு, நித்திய, நைமித்திய, காமிய கிரியைகள், அபிடேகம், அலங்காரம், தீபாராதனை, நைவேத்தியம், அர்ச்சனை,"

தோத்திரம் போன்ற இறைவனைப் பூஜிக்கும் பலவழிபாட்டு முறை பற்றி விளக்குகின்றன. சைவசித்தாந்திகளும் ஆன்ம ஈடேற்றத்திற்குரிய வழியாக வழிபாட்டு முறைகளை ஒற்றுக் கொள்கின்றனர். இறைவனை வெறும் மெய்ப் பொருள் ஆராய்ச்சிக்குரிய பொருளாகக் கூறாமல், வழிபாட்டுக்கும் வணக்கத்திற்கும் உரிய பொருளாகக் கூறும் சைவசித்தாந்த சாத்திரங்கள் சமயத்தையும் தத்துவத்தையும் இணைத்துக் கூறுவதில் வெற்றிகண்டுள்ளன எனக் கூறலாம். சங்கரர் பிரமத்திற்கு இரண்டு நிலைகள் கூறினும் மேலான உயர்ந்த நிலையாக நிர்க்குணப்பிரம நிலையைக் கொள்கிறார். மனம் வாக்குக்கு எட்டாத குணங்குறிகளற்ற நிலையே நிர்க்குணப் பிரமமாகும். ஆனால் சைவசித்தாந்திகள் சொரூபம், தடத்தம் ஆகிய இரண்டு நிலைகளையும் சமமாகவே கருதுகின்றனர். சொரூபநிலையிலுள்ள இறைவன் தடத்தநிலைக்கு இறங்கிவந்து, ஆன்மாக்கள் மீது கொண்ட கருணை காரணமாக உருவத் திருமேனிகளைத் தாங்கி படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் எனும் பஞ்சகிருத்தியங்களைச் செய்வதாக சைவசித்தாந்தம் கூறுகிறது. நை சைவசித்தாந்தத்தில் உருவத்திருமேனிகள் முக்கியத்துவம் பெறுவதுடன் சமய வழிபாட்டிலும் சிறப்பிடம் பெறுகின்றன.

ஆன்மாக்கள் மோட்சமடையும் வழிகளாக சைவசித்தாந்தம் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நால்வகை மார்க்கங்களையும் கூறுவதிலிருந்து, சமயமும் தத்துவமும் நெருங்கிய தொடர்புடையனவாக இருந்தலைக்காணலாம். நால்வகை மார்க்கங்களிலும் மேலானது ஞானமார்க்கம் எனினும், ஞானம் இலகுவில் கைவரக்கூடியதொன்றல்ல. சாதாரண மக்களும் வழிபாட்டில் ஈடுபட்டு இறையின்பம் பெறும் வகையில் சரியை, கிரியை, யோகம், போன்ற வழிகளும் இங்கு கூறப்பட்டுள்ளன.

சரியை நெறியில் ஒருவர் இறைவனது உருவத்திருமேனிகளை வழிபடமுடியும். திருக்கோயிலைக் கூட்டுதல், கழுவுதல், நந்தவனம் அமைத்தல் பூமாலை தொடுத்தல், இறைவனைப் புகழ்ந்து பாடுதல் சிவனடியாரைப் பேணுதல் போன்ற தொண்டுகளைச் செய்து இறைவழிபாடு நிகழ்த்துகிறான். சைவசித்தாந்த சாத்திரங்கள் கூறும் சரியை நெறிக்கு அறிவு அவசியமற்றது. இறைவன் இடும் கட்டளையை நிறைவேற்றுவது போல் சரியை நெறி நிற்பவன் தனது கரணங்களினால் இறைவனை வழிபடுகிறான்.

சரியை நெறிநின்று பக்குவம் அடைந்தவன் அதனைவிட சிறிது உயர்ந்த கிரியை நெறியைப் பின்பற்றலாம். இங்கு இறைவனது அருவுருவத் திருமேனி வணங்கப்படுகிறது. சரியை நெறியைக்காட்டிலும் கிரியை நெறியில் பக்தி மிகுந்து காணப்படுகிறது. இறைவனை எழுந்தருளச் செய்து மலர்கள், தூபம், தீபம், திருவமுது முதலியவற்றால் மெய்யன்போடு இறைவனை வழிபடுகிறான்.

யோகநெறியில் ஒருவன் மனத்தை ஒருநிலைப் படுத்திப் புலன் வழிப்பற்றுக்களைத் துறந்து தியானத்தின் மூலம் சமாதி அடைந்து அதன் மூலம் இறைவனை அடைகிறான். இங்கு இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்ற எட்டுவகை யோக நெறிகளையும் பின்பற்றுகிறான். கொல்லாமை, பொய் சொல்லாமை, புறங்கூறாமை, ஆகியவற்றை மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் அனுஷ்டிக்கிறான். தூய்மை, திருப்தி, நல்லெண்ணம் உடையவனாகிறான். மூச்சை அடக்கி, புலன்களை அடக்கி, மனதை ஒருநிலைப்படுத்தி இறைதியானத்தின் மூலம் பயன்பெறுகிறான்.

சைவசித்தாந்தக் கருத்துப்படி ஆன்மீக ஈடேற்றத்திற்குரிய உயர்ந்த நெறியும், இறுதிநெறியும், ஞானமே. சரியை, கிரியை, யோக நெறிகளைப் பின்பற்றுவதன் மூலம் படிப்படியாக ஞானத்தைப் பெறுகிறான். இந்நெறியில் இறைவனை அறிவுவடிவாகக் கண்டு வணங்குகிறான். அதாவது சத், சித், ஆனந்தமாகக் கண்டு வழிபடுகிறான். ஞானமார்க்கத்தின் மூலம் ஆன்மா இறைவனோடு இரண்டறக் கலத்தலாகிய சாயுச்சிய முத்தியைப் பெற முடியும், என சைவசித்தாந்த சாத்திரங்கள் கூறுகின்றன.

இவ்வாறு சைவசித்தாந்த நூல்கள் கூறும் நால்வகை மார்க்கங்களிலிருந்து சமயம், வழிபாடு, கிரியைகள், சடங்குகள், தியானம், தவம் போன்ற வழிபாட்டு முறைகளும் ஆன்மீக சாதனங்களாக சிறப்பித்துக் கூறப்படுவதனைக் காணலாம். இந்நெறிகளின் மூலம் படிப்படியாக உண்மை ஞானம் கைவரப்பெற்ற ஒருவன் பதியை அடைகிறான். சைவசித்தாந்த சாத்திரங்களின் கருத்துப்படி பசுஞானத்தினாலும், பாசஞானத்தினாலும் அறிய முடியாத இறைவனைப் பதி ஞானத்தினால் அடைகிறான். இதிலிருந்து சமயமும் தத்துவமும் சைவசித்தாந்த சாத்திரங்களில் நெருங்கிய தொடர்புடையனவாகக் கூறப்பட்டிருப்பதனைக் காணலாம்.

(25) இந்து விக்கிரகக் கலையின் நுண்ணியல்புகளை, விக்கிரகங்கள் அமையும் அடிப்படைப் பொருள்களையும் சிற்பிகள் அவற்றைக் கையாளும் முறையையும் கருத்திற்கொண்டு ஆராய்க.

இந்து மதத்தில் கோயில் வழிபாடு முக்கியத்துவம் பெறுகிறது. மக்கள் அனைவரும் சென்று வழிபாடு செய்வதற்காகவே கோயில்கள் அமைக்கப் பட்டன. சாதாரண பாமர மக்களும் இறையின்பத்தைப் பெறும் வகையில் கோயில் வழிபாடு மிக எளிமையாக விளங்குகிறது. இவ்வாறு வழிபாட்டை எளிமைப்படுத்துவது விக்கிரகம் ஆகும். குணங்குறிகளைக் கடந்த இறைவனை குணங்குறிகளால் வகுக்கும் எல்லைக்குள் அகப்படுத்திப் புறவுருவம் கொடுத்து எமது கட்புலனுக்குள் அடங்கச் செய்யும் முயற்சியின் விளைவே வழிபாட்டுக்குரிய விக்கிரகங்களை நிறுவியமையாகும். உருவமற்ற இறைவன் ஆன்மாக்கள் மீது கொண்ட பெருங்கருணை காரணமாகப் பல்வேறு உருவங்களை எடுக்கிறான். பல்வேறு உருவங்களின் மூலம் அடியவர்களுக்கு அருள் பாலிப்பதனால் உருவங்களும் பலவாகின்றன. இறைவனுக்கு உருவம், அருவம், அருவுருவம் ஆகிய மூன்று நிலைகள் பேசப்படுகின்றன. அருவம் என்றால் உருவமற்ற நிலை. உருவம் இறைவனது பல்வேறு மூர்த்தங்கள், வடிவங்கள் ஆகும். அருவுருவம் சிவலிங்கத்திருமேனி இது இந்திரியங்களினால் கிரகிக்க முடியாத இறைவனை, அறியமுற்படும் விவேகமும் பக்குவமும் உடையவர்களுக்கு உரியது. இதனைக் கிரகித்து உணரமாட்டாதவர்களுக்கே கை, கால் முதலிய உறுப்புக்களுடன் கூடிய உருவத் திருமேனிகள் பயன்படுகின்றன. சமயங்கள் கடவுளுக்குரிய தொழில்களாகப் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் போன்ற தொழில்களை கூறுகின்றன. இவை ஒவ்வொன்றையும் உணர்த்தும் வகையில் தெய்வவடிவங்கள் அமைகின்றன.

தெய்வ விக்கிரகங்கள் பிம்பம், மூர்த்தி, பேரம், பிரதிமை முதலிய பல பெயர்களினால் அழைக்கப்படுகின்றன. விக்கிரக வழிபாடு அல்லது உருவ வழிபாடு சிந்து சமவெளி காலப்பகுதியில் இருந்தே இடம்பெற்றதாக அறிஞர்கள் கருதுகின்றனர். வேதப்பாடல்களில் தெய்வங்களைப் பற்றிய விரிவான வருணனைகள் காணப்படுகின்றன. தெய்வங்கள் யாவும் கை, கால் முதலிய உறுப்புக்களை உடையனவாக வருணிக்கப்பட்டுள்ளன. உருவ வழிபாடு அங்கு இடம்பெறாவிடினும், தெய்வங்களுக்கு உருவம் கற்பிக்கப்பட்டுள்ளமையைக் காணலாம். பிராமணங்கள் கிரியைகளின் அதிஉன்னத நிலையை விளக்கும் நூல்களாகும். இவை யாக, வேதி, யாக குண்டம் அமைக்கும் முறையைத் திறம்பட வகுத்துக் கூறுகின்றன.

கோயில் வழிபாடு பற்றிச் சிறப்பித்துக் கூறும் நூல்கள் ஆகமங்களாகும். ஆகமங்கள் கூறும் விதிமுறைகளுக்கேற்பவும், சிற்பநூல்கள் தரும் விளக்கங்களின் அடிப்படையிலும் விக்கிரகங்கள் அமைக்கப்படுகின்றன. உருவங்களைச் சிற்ப முறைப்படி அமைக்கும் ஆற்றல் பெற்றோர் ஸ்தபதிகள் என்று அழைக்கப்படுவர்.

சிற்பம் என்று பொதுவாகச் சொல்லப்படும் கலையானது மூன்று பிரிவுகளை உடையது. அவையாவன வாஸ்து வித்தியா, சிற்பம், சித்திர லட்சணம் என்பனவாகும். வாஸ்துவித்தியா என்பது தேவாலயம், அரண்மனை, வீடு முதலியவற்றுக்கு வேண்டப்படும் கட்டிடங்களை அமைக்கும் முறைகளைக் கூறுவதாகும். சிற்பம் என்பது உருவங்கள் அமைக்கும் முறைகளைக்

கூறுவது. சித்திர லட்சணம் எனப்படுவது ஓவியம் வரையும் முறைபற்றிக் கூறுவதாகும்.

படிமவியல், சிற்பக்கலை பற்றிய நூல்கள் பல பண்டைய இந்தியாவில் வழக்கில் இருந்தன. இவைவடமொழியிலேயே எழுதப்பட்டன. சில்பரத்தினம், மயமதம், மானசாரம், வாஸ்துவித்தியா, சகளாதிகாரம், பிரதிமாநலட்சணம், காசியபம் போன்ற நூல்கள் குறிப்பிடத்தக்கனவாகும். வாஸ்து வித்தியா, சிற்பம் என்பனவற்றைப் பற்றிய அத்தியாயங்கள், மத்சய புராணம், அக்கினி புராணம், கருடபுராணம், அக்கிரநீதி போன்ற நூல்களிலும் காணப்படுகின்றன.

இந்துக்களின் கோட்பாடுகளில் ஓவியம், நடனம், சிற்பம் ஆகிய மூன்றும் நெருங்கிய தொடர்புடையவை. பெரும்பாலும் பொதுவான வரைவிலக்கணங்களையும், விதிமுறைகளையும் கொண்டனவாகும். சிற்பங்களைப் பொறுத்தமட்டில் இந்துச் சிற்பங்கள் பௌத்த சிற்பங்களிலிருந்தும், மேல் நாட்டு சிற்பங்களிலிருந்தும் வேறுபடுகின்றன. கிரேக்க மக்கள் பரம்பொருளின் தன்மைகளை பூரணமாக மனித இயல்பு கொண்டதும், அதிசிறந்ததும், அதிக ஆற்றல் கொண்டதும், அதிக ஒளி பொருந்தியதுமாகிய வடவத்தின் மூலம் விளக்கலாம் என நம்பினர். ஆனால் இந்துக்களைப் பொறுத்தவரை மனித உருவத்தின் மூலம் பரம்பொருளின் முழுமையான தன்மைகளை உணர்த்த முடியாதெனக் கண்டனர். மனித உருவங்களைத் தெய்வமூர்த்தங்களைக் காட்டப் பயன்படுத்திய போதும், அவற்றை நன்கு செப்பனிடுவதற்குப் பலவழிகளைக் கையாண்டனர். பல இலட்சணங்களும், குறிகளும் பரம்பொருளின் தன்மைகளை உணர்த்த வேண்டப்பட்டது. இத்தகைய லட்சணங்கள்பற்றி சிற்பநூல்கள் கூறுகின்றன. இந்து விக்கிரகங்கள் சைவ, வைஷ்ணவ சமயங்களில் இடம் பெறும் கோட்பாடுகளை அடிப்படையாகக்கொண்டது.

ஓர் பரம்பொருளானது இந்துக்களது தத்துவத்தில் ஆன்மையின் சின்னமாகக் கருதப்படுகின்றது. யோகியின் வடிவங்கள் விருப்பு வெறுப்புகளைக் கடந்த பற்றற்ற நிலையை உணர்த்தப் பயன்படுத்தப்படுகிறது. சிவனது மேலான பரத்துவ நிலை, உலக சிருஷ்டி பற்றிய கருத்துக்கள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு சிற்பநூல்களிற் கூறப்பட்ட விதி முறைகளின்படி சிற்பங்கள் அமைக்கப்படுகின்றன. மேலும் சிவனதும், திருமாலதும் பல்வேறு தோற்றங்களை சிற்பங்களாக அமைப்பதற்கும் புராணங்கள், ஆகமங்களில் வரும் கோட்பாடுகள், கதைகள் (அடிப்படையாக அமைகின்றன.

இவ்வுருவங்களை அமைப்பதற்குச் சிற்பிகள் கற்களையும் பல்வகை உலோகங்களையும் பயன்படுத்தினர். உருவங்களை அமைப்பதற்கு அவற்றைப் பொன், வெள்ளி, செப்பு முதலிய உலோகங்களில் இருந்தும் கல், சுதை, மரம் முதலியவற்றில் இருந்தும் அமைத்துக் கொள்ளலாம். என சுக்கிரநீதி கூறுகிறது. சகளாதிகாரத்தில் இடம்பெறும் பல அத்தியாயங்கள் பல்வகை அளவைப் பிரமாணங்கள் பற்றியும் பல்வகை நடராஜர் வடிவங்கள் பற்றியும் கூறுகின்றன. சோமஸ்கந்தர், சந்திரசேகரர், கங்காதரர், திரிபுராந்தகர், அர்த்தநாரீஸ்வரர், நந்தீஸ்வரர் போன்ற உருவங்கள் அமைப்பதற்கு வேண்டிய இலட்சண விதிகள் கூறப்பட்டுள்ளன.

சிற்பியானவன் உருவங்களை அமைக்கும்போது தான் அமைக்கும் மூர்த்தத்தின் தியான மந்திரங்களைச் செபித்துத் தியானித்துக் கொள்ளுதல் வேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன. சிற்பங்களின் அளவு இன்னமாதிரி அமைய வேண்டும் என்று கூறுவது அளவைப்பிரமாணம் எனப்படும். இலட்சண விதி பார்ப்போரது மனதில் ரசபாவங்களைத் தோற்றுவிக்கக்கூடிய வகையில் உருவங்களை அமைப்பதாகும். மனோநிலையையும் அங்க அசைவுகளையும், பேச்சு, உடல் நிலையால் காட்டுவது பற்றி லட்சணவிதி சிறப்பாகக் கூறுகிறது.

சிற்பங்களுக்குச் சிறப்பாக அமைகிற பங்கங்கள், அபிநயங்கள், ஆபரணங்கள், ஆயுதங்கள் என்பனவற்றியும் ஆகமங்களிற் கூறப்படுகிறது. இவற்றுள் பங்கங்கள் மூன்று வகைப்படும். அவை சமபங்கம், அபங்கம், அதிபங்கம் அல்லது திரிபங்கம் என்பனவாகும். சமபங்கள் ஒரு பக்கமும் சரியாது நிமிர்ந்து சுகமாக ஒரு நிலையில் நிற்றலாகும். சந்திரசேகரர், விஷ்ணு, சுப்பிரமணியர் முதலியோர் உருவங்கள் சமபங்க உருவங்களாகும். அபங்க வடவங்கள் ஒரு பக்கம் சரிந்து நிற்றலாம். தேவியின் வடிவங்களும், அடியார்களது உருவங்களும் இவ்வாறு அமைதல் வழக்கமாகும். அதிபங்கம் ஒன்றுக்கு மேற்பட்ட உடல், வளைவுகளைக் கொண்டு அமையும் சிற்பங்களைக் குறிக்கும். நர்த்தன கிருஷ்ணர், நடராஜர் போன்றோரது வடிவங்கள் இத்தகையனவாகும்.

உருவங்களில் வீரம், கோபம், சாந்தம், கருணை முதலான குணங்களைக் காட்டுவதற்கு பங்க அமைப்புக்கள் இன்றியமையாதனவாகும். ஓ.சீ.கங்கூலி என்பவர் "தென்னிந்திய உருவங்களின் பங்க அமைதிக்குச் சமமான அழகுவாய்ந்த உருவங்கள் நேபாள தேசத்துச் சில பௌத்த விக்கிரகங்களைத் தவிர வேறெப்பகுதியிலும் இல்லை என்று கூறுகிறார்.

சிற்பங்களில் அபிநயங்களும் முக்கியத்துவம் பெறுகின்றன. அபிநயம் என்பது பார்ப்போர் மனதில் ரசம் ஏற்படக்கூடிய வகையில் தேகத்தையும், அதன் உறுப்புக்களையும் வளைத்துக்காட்டும் முயற்சியாகும். இது நடனத்திற்கும் சிறப்பாக அமைந்த அம்சமாகும். நாட்டியங்களில் அபிநயம் ஆங்கிகம், வாசிகம், ஆஹார்யம், சாத்துவிகம் என நான்கு வகையினதாகக் கூறப்படுகிறது. ஆங்கிகம் தேக உறுப்புக்களினால் நிகழ்வது. வாசிக அபிநயம் வாயால் செய்யும் சப்த வேறுபாடுகள் உச்சரிப்புக்களைக் கூறுவதாகும். ஆஹார்யம் ரசபாவங்களைத் தோற்றுவிப்பதற்கு ஏற்ற விதத்தில் தேகத்தை ஆடை ஆபரணங்களினால் அலங்காரித்தலாகும். சாத்துவிகம் என்பது மனதின்கண் நிகழும் ரஸங்களினால் தேகத்தில் ஏற்படும் வளைவு, சோர்வு முதலான மாறுதல்களைக் காட்டுவதாகும். ஆங்கிகம், ஆஹார்யம், சாத்துவிகம் முதலிய அபிநயங்கள் சிற்பத்திற் காட்டப்படுகின்றன.

இந்து விக்கிரகவியலில் பங்கங்களைப் போன்றே கைவிரல்களிலும் பல அபிநயங்கள் உண்டு. இவை முத்திரைகள் எனப்படும். மன இயல்பினை வெளிக்காட்டுவதற்கு இவை இன்றியமையாதனவாகும். விரல்களை மடித்தும், நீட்டியும் ஆயுதங்களைப் பிடிக்கும் தன்மை உருவங்களை மனதின்கண் அரும்புவதாகிய இன்பநிலையைத் தெளிவாகக் காட்டுகிறது. தென்னிந்திய உருவங்களின் விரல் அமைப்புக்களையும், அவ்விரல் ஆயுதங்களைப்பிடிக்கும் தன்மைகளையும் நோக்கின் அச்செயல்கள் எவ்விதத் தேகத் தன்மையையும் பொருந்தாத உணர்வே காணப்படுகிறது.

சிற்பத் திருவுருவங்களில் பெரும்பாலும் வரத ஹஸ்தம், அபய ஹஸ்தம், கடக ஹஸ்தம் போன்றன இடம்பெறுகின்றன. வரத ஹஸ்தம் சமபங்க வடிவங்களில் இடக்கரத்து விரல்காட்டும் முத்திரையாகும். இது விரல்கள் கீழ்நோக்கிய நிலையில் அமைக்கப்படுவது. அனுக்கிரக பாவனையை இம்முத்திரை சுட்டி நிற்கிறது.

அபய ஹஸ்தம் சமபங்க உருவங்களில் வலக்கரம் காட்டும் முத்திரையாகும். இது அபயமளித்தலைக் குறித்துநிற்கிறது.

கடக ஹஸ்தம் வலக்கை விரல்களைச் சிறுகமடித்தும், விரித்தும் வைத்திருத்தலாகும். இம்முத்திரை பெரும்பாலும் தேவியின் வடிவங்களிலும், அடியார்களது உருவங்களிலும் இடம்பெறும்.

இந்து விக்கிரகங்களில் மிகச் சிறப்புடையது நடராஜ வடிவமாகும். அது படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற ஐந்தொழில்களையும் கூறுகிறது. நடராஜவடிவத்தில் டமருகஸ்தம் அதாவது உடுக்கை ஏந்திய கரம் படைத்தற் தொழிலையும், கஜகஸ்தம் காத்தற் தொழிலையும், அக்கினி ஏந்திய கரம் அழித்தற் தொழிலையும்,

முயலகன் மேல் ஊன்றிய பாதம் மறைத்தற் தொழிலையும், தூக்கிய திருவடி அருளும் தொழிலையும் காட்டுகின்றன.

சிற்ப வடிவங்கள் அழகுடையனவாக இருத்தற்பொருட்டு அவற்றுக்குப் பலவகையான ஆபரணங்கள் அமைக்கப்படுகின்றன. அவை மகுடம், குண்டலம், ஆரம், கேயூரம், உதர பந்தனம், கச்சுபந்தனம் போன்றனவாகும்.

மகுடம் தலைக்குமேல் அணியப்படுவது. ஆரம் என்பது கழுத்திலிருந்து மார்புவரை மாலையாயத்தொங்கும் ஆபரணம் ஆகும். குண்டலம் காதில் அணியப்படுவது. கேயூரம் மேற்கையின் மத்தியில் அணியப்படுவது. உதரபந்தனம் மார்பிற்கும், வயிற்றுக்குமிடையில் அணியப்படும் ஆபரணமாகும். கச்சுபந்தனம் பெண்ணுருவங்களின் மார்பின் மேல் அணியப்படும் சீலைக்கட்டு ஆகும்.

ஆபரணங்களைப் போன்று உருவங்களுக்கேற்றவகையில் ஆடைகளும் அணியப்படுகின்றன. சிற்பிகள் ஆகமங்கள், சிற்ப நூல்களிற் கூறப்பட்ட உடைகளை முறைப்படி அமைத்தே சிற்பங்களைச் செய்கின்றனர். இவ்வாறு அமைக்கப்படும் உருவங்கள் பின்னர் பட்டினும், வேறு பஞ்சுத் துணிகளினும் அலங்கரிக்கப்படுகிறது.

திருவுருவங்களின் கைகளில் பலவித ஆயுதங்கள் அமைக்கப்படுகின்றன. அவைகளுட்சில மான், பரசு, சூலம், அங்குசம், வச்சிரம், சங்கு, சக்கரம், கதாயுதம், வில், அம்பு, வாள், கேடயம், கமண்டலம் போன்றனவாகும். மான், பரசு, சூலம், கமண்டலம், சிலமூர்த்தங்களிலும் சங்கு, சக்கரம், கதாயுதம் என்பவை விஷ்ணுவின் வடிவங்களிலும், வில், வாள், அம்பு, கேடயம் சுப்பிரமணியவடிவங்களிலும் இடம்பெறும் ஆயுதங்கள் ஆகும்.

இவ்வாறு வழிபாட்டுக்காகச் செய்யப்படும் உருவங்கள் தச தாலமாகவோ, நவதாலமாகவோ அல்லது பஞ்சதாலமாகவோ அளவைகளுக்குட்பட்டு அமையும்.

திருவுருவங்கள் நிற்றல், இருத்தல், கிடத்தல் போன்ற கோலங்களில் செய்யப்படுகின்றன. நிற்கும் தோற்றம் ஸ்தான மூர்த்தம் எனவும், இருக்கும் வடிவங்கள் ஆசனமூர்த்தங்கள் எனவும், கிடக்கும் வடிவங்கள் சயனவடிவங்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. தாண்டவமாடும் மூர்த்தங்கள் நிருத்த மூர்த்தம் எனவும், ஆன்மாவுக்கு அருளைக்கொடுப்பது அனுக்கிரக மூர்த்தம் எனவும் அழைக்கப்படும்.

இவ்வாறு இந்துமதத்தில் வழிபாட்டுக்குரிய சிற்பங்கள் சிற்ப அமைதிக்கு ஏற்றவகையில் அமைக்கப்படுகின்றன. சிற்ப நூல்கள் சிற்பங்களுக்கு வேண்டிய மூலப்பொருட்களைப்பற்றிக் கூறும்போது மரம், சுதை, கல், உலோகம் முதலியவற்றில் தெய்வவிக்கிரகங்கள் அமைக்கப்படலாம் என்று கூறுகின்றன. மேலும் ஆகமங்கள் சிற்ப சாத்திரங்களில் கூறப்பட்ட தியான மந்திரங்கள், தியான சுலோகங்களை மனதில் தியானித்து, அகத்தே பதித்த இறைவடிவத்தைத் தனது கலைஆற்றல் மூலம் கற்களிலோ, மரங்களிலோ, உலோகங்களிலோ புற உருவமாகச் செதுக்கினர்.

சிற்பவடிவங்களை அமைக்கும் சிற்பியானவன் சிற்பசாத்திரங்களையும், தேவர்களை ஆவாகனம் பண்ணுகின்ற வேதமந்திரங்களையும் நன்கு அறிந்தவனாக இருத்தல் வேண்டும். அவன் சூணூல், உருத்திராட்சம் தரித்தவனாகவும், கைவிரல்களில் தர்ப்பைப்புல் மோதிரம் அணிந்தவனாகவும் இருத்தல் வேண்டும். கடவுள் வழிபாடு உடையவனாகவும், ஏகபத்தினி விரதனாகவும், அந்நியப்பெண்களை விலக்குபவனாகவும், பக்தியோடு பல சாத்திரங்களை அறிபவனாகவும் இருத்தல் வேண்டும். இத்தகைய இலட்சணங்களை உடையவனே ஸ்தபதியாவான். மேலும் கல்வி, நற்குணம், நல்லொழுக்கம் உடைய வாழ்வும்,

சாந்தியடைந்த மனோநிலையும் உள்ள ஒருவனுக்கே தியான யோகம் சித்திக்கும் எனவும் இத்தகைய சிற்பிகள் அமைக்கும் திருவுருவங்களே தெய்வீகத்தன்மை பொருந்தியனவாக அமைகின்றன. விதிமுறைக்குட்பட்ட அழகிய சிற்பங்களே வழிபாட்டுக்குரியவை ஆகும்.

ஆகமங்களும், சிற்பநூல்களும் சிற்பங்கள் அமைக்கும் விதிமுறைகளைக் கூறுவதுடன், சிற்பிகளுக்குரிய குணஇயல்புகளையும் ஒழுக்கங்களையும் கூறுகின்றன.

(26) ஆன்மா பற்றி அத்வைத வேதாந்தமும் சைவசித்தாந்தமும் கூறும் கருத்துக்களை ஒப்பிட்டு ஆராய்க.

7 இந்திய தத்துவஞான வரலாற்றில் அத்துவைத வேதாந்தம், சைவசித்தாந்தம் போன்ற தத்துவப்பிரிவுகள் மிகக்குறிப்பிடத்தக்க இடத்தினைப் பெறுகின்றன. இந்த தத்துவங்கள் அனைத்திற்கும் மூலமாக அமைபவை தத்துவ நூல்களாகிய உபநிடதங்களாகும். உபநிடதம் என்ற பெயரினால் அழைக்கப்படும் நூல்கள் இருநூறுக்கும் மேற்பட்டவை. இவற்றைத்தொகுத்து சுருங்கியநடையில் ஒரு நூலாகச் செய்தவர் பாதராயணர் ஆவர். இந்நூல் பிரமசூத்திரம் என்று அழைக்கப்படுகிறது. பிரமசூத்திரம் மிகவும் சுருங்கிய நடையில் அமைத்ததனால் உபநிடதம் கூறும் அடிப்படைக்கருத்து என்ன என்பதைக் கூட பிரமசூத்திரத்தில் இருந்து அறியமுடியவில்லை. எனவே பிரமசூத்திரத்திற்கு மீண்டு உரை எழுத வேண்டிய தேவை ஏற்பட்ட சங்கராச்சாரியர் பிரமசூத்திரத்திற்கு எழுதிய உரையை அடியொற்றி எழுந்ததே சங்கரவேதாந்தம் எனப்படும். இது அத்துவைத வேதாந்தம் என்ற பெயரையும் பெறுகிறது. தென்னாட்டு சமயம் எனப்போற்றப்படும் சைவசித்தாந்தம் வேதங்களையும், ஆகமங்களையும் பிரமாணமாகக் கொள்கிறது. வேதங்களைப் பொது நூலாகவும், ஆகமங்களைச் சிறப்பு நூல்களாகவும் கொண்டு சைவசித்தாந்த தத்துவக் கருத்துக்களை விளக்கும் மெய்கண்ட சாத்திரங்கள் தோற்றம் பெற்றன. வேதம் என்று கூறும்போது அது உபநிடதங்களையும் உள்ளடக்கியது. எனவே சங்கர வேதாந்திகளும் சைவசித்தாந்திகளும் உபநிடதங்கள் கூறும் கருத்துக்களை மூலமாகக் கொண்டுள்ளனர். இவர்கள் கூறும் ஆன்மா பற்றிய கருத்துக்களை ஆராய்ந்தால் அவற்றுக்கிடையே ஒற்றுமையை விட வேற்றுமைகளே மிகுதியாக உள்ளமையைக் காணலாம்.

சங்கரர் ஆன்மாவின் உண்மையை ஏற்றுக்கொள்வதால் ஆத்மவாதி. அதேநேரத்தில் ஒரே ஒரு ஆன்மாதான் உண்டு. அதுதான் பிரமம் என்று கூறுகிறார். இவ்வாறு ஒரு ஆன்மாவின் உண்மையை மட்டும் ஏற்றுக் கொள்வதால் அவர் ஏகான்மவாதி என்று கூறப்படுகிறார். சைவசித்தாந்திகளும் ஆத்மவாதிகள் ஆவர். இவர்கள் பல ஆன்மாக்களின் உண்மையை, அநேக ஆன்மாக்களின் உண்மையை விளக்குவதனால் அநேகாத்மவாதிகள் என்று அழைக்கப்படுகின்றனர். இவ்வாறு ஆன்மா பற்றிய அடிப்படைக் கொள்கையிலேயே சங்கரரும், சைவசித்தாந்திகளும் வேறுபடுவதனைக் காணலாம்.

சங்கரரைப் பொறுத்தமட்டில் உண்மைப்பொருள் ஒன்று. அதுதான் பிரமம். அந்தப் பிரமமே உலகாகவும், அதேபிரமமே ஆன்மாவாகவும் தோன்றுகிறது. பிரமம் உலகாவதை மாயையைக் கொண்டு விளக்கும் சங்கரர் பிரமம் ஆன்மா ஆவதை அவித்தையைக் கொண்டு விளக்குகிறார். அதாவது ஒரு வெண்ணிறப்பூவை செந்நிறக் கண்ணாடி வழியாகப் பார்க்கும் போது பூவும் செந்நிறமாகவே தெரிகிறது. இங்கு பூ உள்ள பொருள், ஆனால் அது இயல்பிலே வேறுபட்டுத் தோன்றுகிறது. எனவே பொருள் ஒன்று. அது இயல்பிலே வேறுபடும்போது ஆன்மா அல்லது சீவன் என்ற பெயரைப் பெறுகிறது. பிரமம் அவித்தை அல்லது அறியாமைக்கு அப்பாற்பட்டது. ஆனால் அது அவித்தையோடு சேரும்போது சீவர்கள் ஆகிவிடுகிறது. எனவே பிரமத்தை சீவர்கள் ஆக்குவது அவித்தையே. பிரமத்தைப் பரமாத்மா என்று அழைக்கும் சங்கரர், சீவர்களை சீவாத்மா என்றும் அழைக்கின்றார். இரண்டையும் ஆத்மன் என்ற பெயரினால் அழைப்பதில் இருந்து இரண்டும் ஒன்று

என்ற கருத்துப் பெறப்படுகிறது. பிரமம் பிரமமாக இருக்கும் நிலையே உண்மை, பிரமம் சீவர்களாகத் தோன்றுவது உண்மையல்ல.

சைவசித்தாந்திகள் பொருட்கள் பல என்ற கொள்கை உடையவர்கள். அவர்கள் பதியாகிய இறைவனும் உண்மை, பசுவாகிய ஆன்மாக்களும் உண்மை என்று கூறுவர். இறைவனினின்றும் வேறாக ஆன்மாக்கள் உள்ளன. ஒவ்வொரு உடலோடும் ஒவ்வொரு ஆன்மா உண்டு. ஆன்மாக்கள் எண்ணிக்கையில் பல்வாக இருக்கின்றன. அவை வெறு தோற்றமல்ல. அவை தனி இயல்புடையவை என்று கூறுவர்.

சங்கரர் ஏகான்மவாதக் கொள்கையை பிரதிபிம்பவாதம், அவச்சேதவாதம் போன்ற வாதங்களின் மூலம் விளக்குகிறார். பிரதிபிம்ப வாதத்தை ஆராய்ந்தால் 'வானத்தில் உள்ள சந்திரன் பல நீர்நிலைகளிற்பட்டு பலவாகத் தெரிகிறது. அதாவது ஆறு, குளம், குட்டை போன்றவற்றில் சந்திரனின் பிரதி பிம்பம் பட்டுப் பலவாகத் தெரிகிறது. ஆனால் இவை உண்மை அல்ல. வானில் இருப்பது ஒன்றே உண்மை. இதுபோலப் பிரமத்தின் பிரதி பிம்பம் அவித்தையிற் பட்டுப் பலசீவர்களாகத் தோன்றுகிறது. நீரில் ஏற்படும் மாற்றத்துக்கேற்ப, கலங்கிய நீரில் விழும் பிம்பம் தெளிவற்றதாகவும் தெளிந்த நீரில் விழும் பிம்பம் தெளிவானதாகவும் இருப்பதைப்போல அவித்தையின் இயல்புக்கேற்ப சீவர்களும் மாற்றமடைகின்றனர். நீர்நிலைகள் அனைத்தையும் அழித்தால் வானத்தில் உள்ள சந்திரன் ஒன்று என்பது புலனாகும். இதேபோல அவித்தை நீங்கினால் ஆன்மா ஒன்றுதான் என்பது புலனாகும்.

உலகெங்கும் பரந்து காணப்படும் வெளி ஒன்று. அது பல்வேறு தடுப்புக்களினாலும் தடுக்கப்படுகின்றபோது பலவாகத் தெரிகிறது. ஓர் அறையை நிரப்பும் வெளி அறையின் வடிவத்தையும், குடம் முதலியவற்றை நிரப்பும் வெளி அவற்றின்வடிவங்களுக்கு ஏற்பவும் பிரிந்து கனித்து நிற்கிறது. அறை, குடம் ஆகிய தடுப்புகள் நீக்கப்படும்போது எங்கும் பரந்து காணப்படும் வெளி ஒன்று என்ற உண்மை பெறப்படும். இதேபோல அறியாமை காரணமாக ஒன்று பலவாகத் தெரிகிறது. அறிவினால் அறியாமை நீக்கப்படும் இடத்து உள்ளது ஒன்று. அதுவே பிரமம் என்ற உண்மை பெறப்படும்.

சங்கரர் உண்மைப்பொருள் ஒன்று. ஒன்று பலவாகத் தெரிவதெல்லாம் தோற்றம். ஆன்மாக்களும் வெறும் தோற்றமே. ஒரே ஒரு ஆன்மாதான் உண்டு. அதுவே பிரமம் என்று கூற, சைவசித்தாந்திகள் ஆன்மாக்கள் பல. ஒவ்வொரு ஆன்மாவும் உண்மை என்று கூறி அவற்றின் இயல்பு, இலக்கணம், இலட்சியமாகிய மோட்சம், அதனை இடைவதற்குரிய வழிகள் பற்றியும் கூறுகின்றன.

சைவசித்தாந்திகளது கருத்துப்படி ஆன்மாக்கள் நித்தியமான உள்பொருட்கள். அவை மாயையின் காரியமாகிய உடலினுள்ளே உள்ளன. ஆனால் உடலினின்றும் வேறானவை. உடல் அழிவுக்குரியது. உயிர் அழிவற்றது. நனவு நிலையில் ஆன்மா ஐம்பொறிகளின் மூலமாகவும் விடயங்களை அறிகின்றன. கனவு நிலையில் ஐம்பொறிகளும் தொழிற்படாது ஒடுங்கி இருக்கின்றன. இவ்வாறு பொறிகள் ஒடுங்கிய நிலையிலும் ஆன்மா விடயங்களை அறிகிறது. எனவே பொறிகளினின்றும் வேறாக ஆன்மா என ஒரு பொருள் உண்டு என்று சிவஞான போதம் மூன்றும் சூத்திரம் கூறுகிறது. மேலும் சிவஞானபோதம் 4ம் சூத்திரம் 'அந்தக் கரணம் அவற்றின் ஒன்றல்ல' என்று ஆன்மாக்கள் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கில் இருந்தும் வேறுபட்டவை என்பதை விளக்குகிறது. மேலும் ஆன்மாக்கள் இறைவனில் இருந்தும் வேறுபட்டன. அதாவது ஆன்மாக்கள் உணர்த்தினால் உணரும் தன்மை உடையவை. எனவே அவை சிற்றறிவுடையவை. பேரறிவுடைய இறைவனுக்கு வேறானவை ஆன்மாக்கள். அவை தமது தனி இயல்பை எந்நிலையிலும் இழப்பதில்லை. பெத்தநிலையில் மலங்களோடு சேர்ந்து மலங்களின் இயல்பைப் பெறுகின்றன. முத்திநிலையில் இறைவனோடு சேர்ந்து இறைவனின் இயல்பைப் பெறுகின்றன.

அத்துவைதக் கொள்கைப்படி அவித்தை காரணமாகப் பிரமம் சீவர்கள் ஆகும். அறிவினால் அவித்தை நீங்கும் இடத்து மீண்டும் பிரமமே ஆகிறது. எனவே சீவர்களின் சீவத்துவம் நீங்கிய நிலையில் பிரமமும் ஆன்மாவும் ஒன்று. பிரமத்திற்கு வேறாக ஆன்மா என ஒருபொருள் இல்லை. எனவே தனி இயல்புடைய தனிப்பட்ட ஆத்மாக்களுக்கு சங்கரவேதாந்தத்தில் இடமில்லை, என்றநிலை காணப்படுகிறது.

சைவசித்தாந்திகளது கருத்துப்படி மலங்களினால் பந்திக்கப்பட்ட ஆன்மாக்களின் இலட்சியம், அதிலிருந்து விடுபட்டு இறைவனுடன் இரண்டறக் கலத்தலாகும். இதற்கு ஆன்மாக்களும் முயலுதல் வேண்டும். இறைவனும் அருளுதல் வேண்டும். இறைவனது திருவருளைத் துணையாகக் கொண்டு ஆன்மா மோட்சமடைகிறது. சங்கரரது கொள்கைப்படி பிரமஞானத்தின் மூலம் ஆன்மா பிரமத்துடன் ஒன்றி விடுகிறது. இந்நிலையில் பிரமம் மட்டுமே உண்மை என்று கேவலாத்துவைதம் பேசுகிறார். சைவசித்தாந்தக் கொள்கைப்படி ஆன்மா இரண்டல்ல எனக் கூறத்தக்க வகையில் இறைவனுடன் கலந்து விடுகிறது. இங்கு ஆன்மா இறைவனின் இயல்பைப் பெறுகிறதே அன்றி இறைவனாவதில்லை.

இவ்வாறு அத்துவைத வேதாந்தம் கூறும் ஆன்மாவுக்கும், சைவசித்தாந்தம் கூறும் ஆன்மாவுக்கும் இடையே வேற்றுமை காணப்படுகிறது.

(27) இந்துக்களின் வருண தர்மங்களிற் காணப்படும் குறைநிறைகளை மதிப்பிடுக. (1983 ஓகஸ்ட்)

இந்துமதக் கோட்பாடுகளிற் வருணச்சிரம தர்மக்கோட்பாடும் ஒன்றாகும். வருணச்சிரம தர்மம் என்பது வருணம், , ஆச்சிரமம், தர்மம் என்று மூன்றாகப் பிரிக்கப்படும். இவற்றை வருணதர்மம், ஆச்சிரம தர்மம் என்று விளங்கிக் கொள்ளலாம். வருணம் என்றால் நேரடியாக நிறம் என்றுபொருள் படும். ஆரம்பத்தில் நிறவேறுபாட்டை அடிப்படையாகக் கொண்டு தோன்றிய கருத்துக்கள் பின்னர் சாதிபற்றிய கருத்துக்களாக உருப்பெற்றுவிட்டன. அவை பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு சாதிகளாகும். இந்து ஒருவனது சமூகம் நான்கு சாதிகளாக விளங்கியதைப்போல, தனிப்பட்ட இந்து ஒருவனது வாழ்க்கையும் நான்குநிலைகளை உடையதாக விளங்கியது. அவை பிரமச்சரியம், கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பன வாகும். இவை ஆச்சிரமங்கள் என்று அழைக்கப்படும். பண்டைய இந்திய நூல்கள் பலவற்றிலும் வருணச்சிரம தர்மக் கொள்கை இடம்பெறுகிறது. இக் கோட்பாட்டின்படி அறமானது எல்லாமக்களுக்கும் ஒரேமாதிரியானதல்ல என்ற உண்மை வெளிப்படுத்தப்படுகிறது. எல்லா மக்களும் கடைப்பிடிக்கக் கூடிய பொதுவான ஒழுக்க நியமங் கள் இருந்தாலும் அத்துடன் ஒவ்வொரு வருணத்தவர்களுக்கும், தனி ஒருவனது வாழ்க்கையின் ஒவ்வொரு நிலைக்கும் சிறப்பாக உரிய அறமும் உண்டென்பதை உணர்த்துகிறது. மேலும் உயர்ந்த மக்களுக்குரிய அறம் தாழ்நத மக்களுக்குரிய அறமாகாது எனவும், அதேபோன்று மாணவ நிலையில் உள்ளவர்க்குரிய அறம் ஏனைய நிலையில் உள்ளவர்கர்க்குரிய அறமாகாது என்பதையும் உணர்த்துகிறது.

பண்டைய இந்து சமூகத்தில் மக்கள் மத்தியில் உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்கள் என்ற வேறுபாடும் பல்வேறுபட்ட கடமைகளும் இருந்து வந்தமையைக் காணலாம். சாதி பற்றிய கருத்துக்களை வேதங்களிற் காணலாம். வெவ்வேறு நிறமும் வேறுபண்பாடும் கொண்ட மக்களோடு தொடர்பு ஏற்பட்டபோது இவ்வகுப்புகள் தோன்றியிருக்கலாம். இதனையே வருணம் என்ற சொல் விளக்குகிறது. ஆரியமக்கள் அங்கு வாழ்ந்த கறுத்த நிற மக்களுடன் சேர்ந்து வாழமுற்பட்ட நிலையில் நிறவேறுபாட்டை வலி யுறுத்தி இருத்தல் வேண்டும்.

இருக்குவேதம் 'புருஷசூக்த'ப்பாடல் ஒன்று பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு வருணங்களும்முறையே புருஷனது முகம், தோள், தொடை, பாதம் ஆகிய உறுப்புக்களில் இருந்து தோன்றியதாகக் கூறுகிறது. எவ்வாறு உடலிலுள்ள அவயங்கள் அனைத்தும் முக்கியமானவையோ, ஒன்றுக்கொன்று தொடர்புடையனவோ, அதேபோன்று நான்கு வருணங்களும் அவசியமானவையாக இருந்திருக்கலாம்.

மனுதர்மசாத்திரம் வருண, ஆச்சிரம தர்மங்கள் பற்றி விளக்கிக் கூறுகின்றது. வேதங்களை ஓதுதல், ஓதுவித்தல், யாகங்களை வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் போன்ற ஆறு தொழில்களும் பிராமணர்க்குரியவை. பிராமணர்கள் சமூகத்தில் மக்களை ஆன்மீக வழியில் அழைத்துச் செல்பவர்கள் எனவும், கல்வியிற் சிறந்த ஆசிரியர்கள் எனவும் மக்களாற் போற்றப்பட்டனர். இவர்கள் உடல் வலிமையினால் நாட்டைக் காப்பவர்கள்.

சமூகத்தில் இரண்டாவது வகுப்பினராக விளங்கியவர்கள் அரசர்கள் ஆவர். இவர்களை இருக்குவேதம் இராஜன்யர் என்று கூறுகிறது. இவர்களது கடமை குடிகளைக் காத்தல் ஆகும். மேலும் வேதங்களைக் கற்றல், யாகங்களைச் செய்தல் போன்றனவாகும். போர்க்காலங்களிற் போரில் ஈடுபடுதலும், ஏனைய காலங்களில் நாட்டை ஆளுதலும் இவர்களது முக்கிய கடமையாகும். மேலும் சாதி வழக்கத்தை மீறியோரைச் சாதியில் இருந்து தள்ளிவைப்பதன் மூலம் அரசனானவன் வருணத்தூய்மையைப் பாதுகாக்கவேண்டும். குடும்பச் சொத்துக்கள் நேரிய முறையில் உரியவரைச் சென்றடையச் செய்வதன் மூலம் குடுமபத்தைப் பாதுகாத்தான். பிராமணர்களுக்கும், கோயில்களுக்கும் மானியம் வழங்குவதன் மூலம் சமயத்தைப் பாதுகாத்தான். மேலும் வறியவர்களிடமிருந்து செல்வந்தர்கள் வருந்திப்பொருள் பறித்தல், வருத்துதல் முதலிய குற்றங்களுக்குத் தண்டனை விதித்து செல்வந்தர்களிடமிருந்து வறியவர்களைப் பாதுகாத்தல் வேண்டும். பொருளைத் திருடுதல் போன்ற குற்றங்களுக்குத் தண்டனை விதித்து வறியவர்களிடம் இருந்து செல்வந்தர்களைப் பாதுகாத்தலும் அரசனின் கடமையாகும். இவ்வாறு அரசனும் சமூகத்தில் பொறுப்பு வாய்ந்த தொழிலை உடையவனாக விளங்கினான். பிராமணர்கள் தம் ஆன்மீக வலிமையினால் நாட்டைக்காக்க, சத்திரியர் தமது வீரம், வலிமையினால் நாட்டையும், நாட்டுமக்களையும் பாதுகாத்தனர்.

நாட்டின் பொருளாதாரத்தை வளர்க்கும் வகுப்பினராக விளங்கியவர்கள் வைசியர்கள் ஆவர். சிறந்த வைசியனொருவன் மணி, உலோகம், வாசனைப்பொருட்கள், நறுமணப்பொருட்கள் முதலியவற்றையும், எல்லாவகையான வியாபாரப் பொருட்களைப் பற்றியும் தேர்ந்த அறிவுடையவனாக விளங்கினான். பகவத்கீதை வைசியன் பற்றிக் கூறும்போது வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, வாணிபம் முதலிய மூன்று கடமைகளை உடையவன் என்கிறது. நாட்டின் பொருட்பெருக்கத்திற்குக் காரணமாக இருப்பதனால் அவனும் சமூகத்தில் முக்கியத்துவம் பெற்றவனாகிறான்.

சூத்திரர் நால்வகை வருணங்களிலும் இழிநதவர்களாகக் கருதப்பட்டனர். இவர்கள் உபநயனம் பெறுவதற்கு, கல்வி கற்பதற்கு தகுதியற்றவர்களாவர். இவர்களது தொழில் முதல் மூன்று வருணத்தவர்களுக்கும் அடிமைத்தொழில் செய்வதாகும்.

இவ்வாறாக இந்து சமூகத்தில் நான்கு வருணங்கள் கூறப்பட்டபோதும் அவர்களுள் பிராமணர்கள் போற்றப்பட்டமையை அறியலாம். மனுவின்கொள்கைப்படி பிராமணன் ஒருவன் வேதத்தைக் கற்பிக்காமல் வேறு தொழில்களைச் செய்தால் அவன் அச்சந்ததியோடு சூத்திரனாகிவிடுகிறான். மேலும் பிராமணன் ஒருவன் தனக்குரிய பண்புகளில் இருந்து விலகினால் அவன் பிறப்பினால் பிராமணனாக இருந்தாலும் பண்பு அல்லது நடத்தையினால் சூத்திரனாகவே மதிக்கப்படுகிறான். சூத்திரனாக இருந்தால் அவன் பிறப்பினால் சூத்திரனாக இருந்தாலும் பண்பு அல்லது நடத்தையினால் பிராமணனாக மதிக்கப்பட்டான்.

இவ்வாறு வருணதர்மம் பற்றிய கருத்துக்களை ஆராயும் போது தொழிலை அடிப்படையாகக் கொண்டும் பண்பு அல்லது நடத்தையை அடிப்படையாகக் கொண்டும் வருணப்பாகுபாடு இடம்பெற்றது. மகாத்மா காந்தி பண்டைய வருணப்பாகுபாட்டை 'ஆத்மீகப் பொருளியற்சட்டம்' என்று கூறுகிறார். ஒருவன் விடுதலை அடைவதற்குத் தனக்கு வகுக்கப்பட்ட கடமைகளைச் செய்தலின் மூலம் அடையமுடியும் என்றும், சமூக ஒழுங்குமாத்திரமன்றி ஆன்மீக ஈடேற்றமும் இதனால் ஏற்படுகிறது எனக் கூறுகிறார். இவரது கருத்துப்படி நான்கு வருணங்கள் இருக்கலாம். ஆனால் அவற்றுக்கிடையில் உயர்வு தாழ்வு பாராட்டுதல் வெறுப்பிற்குரியதாகும். ஏற்றத்தாழ்வு காட்டப்பட்டதன் காரணமாகவே பிற்காலத்தில் சாதிவேறுபாடுகள் சமூகத்தில் வலுப்பெற்று தீண்டாமை போன்ற சமூகச்சீர்கேடுகள் தோன்றின. மேலும் இவ்வருணப் பாகுபாடு எல்லாக்காலங்களிலும் முற்றாக மக்களினால் கடைப்பிடிக்கப்படவில்லை. வருணங்களுக்குரிய சட்டதிட்டங்களை வகுத்த அறநூல்கள் தரும் கருத்துக்கள் நடைமுறையில் முற்றாக நிறைவேற்றப்படவில்லை. மேலும் அவை மக்களினால் மீறப்பட்டுள்ளன. ஆதியில் சமூக ஒழுங்கிற்காக ஏற்படுத்தப்பட்ட வருண அமைப்பு பிற்பட்டகாலங்களில் தேவையற்ற தீண்டாமையை ஏற்படுத்தியதுடன், மக்கள் மத்தியில் பிளவையும் ஏற்படுத்தியது எனக் கூறலாம்.

அந்நியர்களது வருகையினால் சமூகத்தில் பல புரட்சிகரமான மாறுதல்கள் ஏற்படுத்தப்பட்டன. சமூகத்தில் கல்விமுறைகள் விரிவுபடுத்தப் பட்டன. கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஏற்படுத்தப்பட்டன. சாதி வேறுபாடின்றி சகலமக்களும் கல்வியைப் பெறமுடிந்தது. ஆங்கிலக் கல்வியைப் பெற்ற மக்கள் வெளிநாடுகளுக்குச் செல்லும் வாய்ப்பைப் பெற்றனர். அத்துடன் எதையும் நம்பிவிடாமல் சீர்தூக்கி ஆராய்ந்து காணவேண்டும் என்ற உணர்ச்சி உடையவர்களாகவும் விளங்கினர். இதனால் கல்விக்கேற்ற வகையில் சகல மக்களும் தொழில் வாய்ப்பைப் பெறமுடிந்தது. எனவே மக்கள் மத்தியில் ஏற்றத்தாழ்வுகள், பிணக்குகள், பிளவுகள் நீங்கின. கற்றோர் மத்தியில் தோன்றிய புரட்சிகரமான கருத்துக்கள் ஓரளவுக்கு வருணவேறுபாடுகளைக் குறைத்தன என்றே சொல்லவேண்டும்.

(28) பண்டைய இந்துக்களின் ஆச்சிரம தர்மக் கொள்கையில் உள்ள குறை நிறைகளை ஆராய்க.

பண்டைய இந்து சமூகம் பற்றி ஆராயின் அங்கு இருவகையான கருத்துக்கள் காணப்பட்டமையை அவதானிக்கலாம். ஒன்று வருணம் பற்றியது. மற்றையது தனிப்பட்ட இந்து ஒருவனது வாழ்க்கை நிலை பற்றியது. இந்து சமூகம் பிராமணர், சத்திரியர், வைசியர், சூத்திரர் என்று நான்கு சாதிகளாக வகுக்கப்பட்டிருந்ததைப்போல இந்து ஒருவனது தனிப்பட்ட வாழ்க்கையும் நான்கு நிலைகளை உடையதாக விளங்கியது. அவை பிரமச்சரியம் கிருகஸ்தம், வானப்பிரஸ்தம், சந்நியாசம் என்பனவாகும். இவை ஒருவனது வாழ்க்கையின் படிமுறை வளர்ச்சிகளாகும். ஒருவன் ஆற்றவேண்டிய கடமைகள் அவனது வருணத்தைப் பொறுத்தாயினும் அவன் அக்கடமைகளைச் செய்யத்தன் வாழ்க்கையின் நான்கு நிலைகளில் இருந்தே பயிற்சிகளைப் பெறுகின்றான். ஒவ்வொரு பயிற்சி நெறியும் இறுதியில் இறையின் பத்தை அடைவதனைக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இந்நோக்கத்திற்காகவே மனிதனது தனிப்பட்ட வாழ்கை நான்கு நிலைகளாக வகுத்துள்ளன.

பிரமச்சரியம் என்பது வாழ்க்கையின் முதலாவது நிலையாகும். ஒருவன் தனது பிள்ளைப்பருவம் கழித்து, பூணூல் அணிந்தபின்னர் பிரமச்சாரி ஆவான். இப்பூணூல் அணியும் வயதும் வருணத்திற்கேற்ப மாறுபட்டிருந்தது. பிராமணர்கள், சத்திரியர்கள், வைசியர்கள் ஆகிய மூன்று வருணத்தவர்கள் பூணூல் அணியத் தகுதிபெற்றவர்கள் ஆவர். இவ்வாறு பூணூல் அணியப்பெற்ற ஒருவன் எதிர்காலத்தில் தனது இல்லறத்தை இனிது நடாத்துவதன் பொருட்டுத் தன்னைத் தகுதி உடையவனுக்கும் வகையில் சமய நூல்களைக் கற்றல் வேண்டும். பண்டைய இந்தியாவில் முனிவர் ஆச்சிரமங்களை அமைத்து வாழ்வதோடு அங்கிருந்து கொண்டே மாணவருக்குவேதக்கல்வியையும் கற்பித்தனர். பிராமணர், சத்திரியர், வைசியர் என்ற வேறுபாடு இன்றிக் கல்வி நடைபெற்றதாக அறிய முடிகிறது. இங்கு மாணவர்கள் கல்வியைக் கற்றதுடன், ஒழுக்கத்தையும்

கற்றனர். மாணவன் ஒருவன் தனது குருவுக்கு உணவு இரந்து கொடுத்தலைக் கடமையாகச் செய்தான். மேலும் குருவைத் தெய்வமாகப் போற்றி வழிபட்டு, குருவுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து அவரது ஏவல்களுக்குப் பணிந்து ஒழுகினர். இங்கு மாணவன் ஒருவன் காலை, மாலை வழிபாடுகளை மேற்கொண்டான். இது சந்தியாவந்தனம் எனப்படும். அதாவது காலை மாலை வேளைகளில் சூரிய வழிபாட்டை பிரமச்சாரிகள் மேற்கொண்டனர். இவ்வழிபாட்டில் காயத்திரி மந்திரமோதுதல், மூச்சை அடக்குதல் போன்றன முக்கியத்துவம் பெறுகின்றன.

இவ்வாறு வாழ்க்கையின் முதல்நிலையாகிய பிரமச்சரியத்தில் இந்து ஒருவன் முறையான கல்வியைப் பெற்றதுடன், சமய வழிபாட்டுமுறைகளிலும் ஈடுபட்டு ஒழுக்கம், கீழ்ப்படிவு, கடமை உணர்வு உடையவர்களாக விளங்கினர். பண்டைய இந்துக்களின் கல்வி மாணவன் ஒருவனை சகலவிதத்திலும் தகுதியும், நேர்மையும், பண்பும் உடையவனாக வளர்த்தது. இவ்வாறு பண்பட்ட கல்வியைப் பெற்ற ஒருவன், குருவுக்கு தட்சிணை செலுத்தி விட்டு வீட்டுக்குத் திரும்புகிறான். இது சமாவர்த்தனம் எனப்படும். இதன்பின்னர் அவன் 'ஸ்நாதகன்' என்று அழைக்கப்பட்டான். ஸ்நாதகன் என்றால் நீராடியவன் என்பது கருத்தாகும். இத்தகைய ஒருவன் இல்வாழ்க்கை நிலைக்கு செல்லும் தகுதியைப் பெறுகிறான்.

வாழ்க்கையின் இரண்டாவது நிலை இல்வாழ்க்கை எனப்படும். ஒருவன் தனது குலத்திற்கும் அந்தஸ்துக்கும் ஏற்றவகையில் திருமணம் செய்து கொள்கிறான். இல்வாழ்க்கை நிலையில் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றையும் அனுபவிக்கும் தகுதி உடையவனாகிறான். அறம் என்பது தர்மம் ஆகும். அறநூல்கள் கூறுவதற்கேற்ப புண்ணியங்களைச் செய்தல் வேண்டும். இந்நிலையில் அவன் மேற்கொள்ளவேண்டிய சமயச்சடங்குகள் பலவாகும். சிறப்பாக பஞ்சமகாயக்ஞம் அல்லது ஐம்பெருவேள்வி பற்றிக் கூறப்படுகிறது. அவையாவன:

1. பிரமயக்ஞம் – மந்திரங்களினால் பிரமத்தை வழிபடுதலாகும்.
2. தேவயக்ஞம் – வேள்வித்தீயில் ஆகுதிகளைச் சொரிந்து தேவர்களை வழிபடுதல்.
3. பிதுர்யக்ஞம் – இறந்த ஆன்மாக்களுக்கு நீர்க்கடன், சிரார்த்தம் முதலியவற்றைச் செய்தல்.
4. மானுடயக்ஞம் – விருந்தோம்பும் முறையால் மனிதரைப் பேணுதலாகும்.
5. பூதயக்ஞம் – விலங்குகள் பறவைகளுக்கு உணவளித்தல் ஆகும்.

இவற்றைத் தினந்தோறும் செய்தல் வேண்டும். இவ்வாறு இல்வாழ்வான் தனக்கு விதிக்கப்பட்ட கடமைகளைச் செய்வதற்கு பொருள் அவசியம். அதனையும் ஒருவன் அறவழியில் ஈட்டல் வேண்டும். மேலும் மனைவி மக்களுடன் கூடி சகல இன்பங்களையும், அறத்தின் வழியில் அனுபவிக்கலாம் இந்துமதக் கொள்கைப்படி இல்லறத்தை செவ்வனே நடாத்திய ஒருவன் மோட்சத்தை அடைவதற்குரிய பக்குவம், தகுதி உடையவனாகிறான்.

மோட்சத்தைக் குறிக்கோளாகக் கொண்ட ஒருவன் வாழ்க்கையில் மூன்றாவது நிலையாகிய வானப்பிரஸ்த நிலைக்குச் செல்லுகிறான். இந்நிலையில் காட்டுக்குச் சென்று, அங்கு கிடைக்கின்ற உணவை உண்டு உலகப் பற்றுக்களில் இருந்து நீங்கி ஒழுங்காகச் சடங்குகளைச் செய்தல் வேண்டும். தியானம் அவனது வழிபாட்டில் முக்கியத்துவம் பெறுகிறது.

சந்நியாசி என்றால் சகலபற்றுக்களையும் துறந்தவன் என்பது கருத்தாகும். சந்நியாசி ஒருவன் இறைவனது தியானத்தில் தனது தியானத்தைக் கழிக்கிறான். இந்நிலையில் அவனுக்குப் பசியோ, தாகமோ, விருப்பு வெறுப்புக்களோ கிடையாது. தியானயோகிகள் யாவரும் உயர்ந்தவர்கள். அவர்கள் எதைத் தியானிக்கிறார்களோ அதுவே ஆகிறார்கள். தியானத்தினால் யோகிகள் சர்வேசுவரனை அடைகின்றனர். அதற்குமேல் அவர்களால் அடையப்படுவது ஒன்றுமில்லை என்று பகவத்கீதை கூறுகிறது.

இவ்வாறு இந்துமதம் ஒருவனது வாழ்க்கையை நான்கு நிலைகளாக வகுத்திருப்பதுவும், ஆன்மாவின் உயர்குறிக்கோளை அடைவதன் பொருட்டேயாகும். இத்தகைய கொள்கை இந்து ஒருவன் தனது வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையிலும் தனது குடும்பத்திற்கும், சமூகத்திற்கும் ஆற்றவேண்டிய கடமைகளையும் வரையறுத்துக் கூறியிருப்பதால் வாழ்க்கை அர்த்தமுள்ளதாய் மனித குலத்திற்குப் பயன்படுவதாய் அமைந்தது. காலப்போக்கில் ஏற்பட்ட சமூக வளர்ச்சி, அந்நியர் வருகை போன்றன இத்தகைய ஒரு வாழ்க்கை நிலைக்கு முக்கியத்துவம் தரவில்லை. பெரும்பாலும் வானப்பிரஸ்த, சந்நியாச நிலைகள் முதல் இரு நிலைகள் போன்று பின்பற்றப்படவில்லை. தற்கால சமூகத்திற்கு இத்தகைய வாழ்க்கைப்பிரிவு அவசியமற்றதாகவே உள்ளது என்று கூறலாம்.

(29) சந்திரசேகர மூர்த்தியின் அமைப்புப் பற்றியும் அதன் வரலாற்றுப் பின்னணி பற்றியும் விபரிக்குக.

இந்து மதத்தில் திருக்கோயில் வழிபாடு மிகவும் சிறப்புடையதாக விளங்குகிறது. மக்கள் அனைவருஞ் சென்று வழிபடுவதற்காகவே தேவாலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்மக்களிற் பெரும்பாலானோர் அறிவு நிலையின் அடித்தளத்தையும் அணுகாதநிலையினர். எனவே வழிபடும்முறை இவர்களுக்கு ஏற்றவாறு அமைதல் வேண்டும். இவ்வாறு எளிதாய் அமைய வழி செய்வது விக்கிரக வழிபாடு ஆகும். குணங்குறிகளற்ற இறைவனை குணங்குறிகளால் வகுத்து எல்லைக்குட்படுத்தி உருவம் கொடுத்து எமது காட்சிக்குப் புலனாகச் செய்யும் முயற்சிகளின் விளைவே நாம் வழிபட நிறுவும் விக்கிரகங்களாகும். ஆன்மாக்கள் மீது கொண்ட கருணை காரணமாக இறைவன் பல வடிவங்களை எடுத்து அருள் பாலித்ததனால் உருவங்களும் பல திறத்தனவாகின்றன. பல்வேறு நிலையிலுள்ளவர்களும் தமது விருப்பங்களுக்கேற்றவாறு வழிபடத் தக்கவகையில் இவை பலவகைப்பட்டு விளங்குகின்றன. சிவனைப் பரம்பொருளாகக் கொள்ளும் மதம் சைவம். சைவத்தில் சிவனுக்குரிய பல்வேறு மூர்த்தங்களும் வழிபாட்டில் முக்கியத்துவம் பெறுகின்றன. இலிங்கோற்பவமூர்த்தம், சந்திரசேகரமூர்த்தம், பைரவமூர்த்தம், சோமஸ்கந்தமூர்த்தம், பிசுஷாடனமூர்த்தம், தசஷுமூர்த்தம். நடராஜமூர்த்தம் போன்றன குறிப்பிடத்தக்கன. இவற்றுள் சந்திரசேகர மூர்த்தம் மிகவும் சிறப்புடையதாகும்.

சந்திரசேகர மூர்த்தியின் தோற்றங்கள் மூன்று வகைப்படும். இவை கேவல மூர்த்தி, உமாசகிதமூர்த்தி, ஆலிங்கனமூர்த்தி என்பனவாகும். ஆகமங்கள் இம் மூர்த்தங்களின் இயல்புகள் பற்றிக் கூறுகின்றன.

நான்கு திருக்கரங்களுடன் விளங்கும் கேவல மூர்த்தியின் முன் வலக்கை அபயமுத்திரையையும், முன் இடக்கை வரதமுத்திரையையும் கொண்டுள்ளது, வரதமுத்திரையினால் விரல்கள் கீழ் நோக்கியவிதமாக அமைக்கப்படும். இது அநுக்கிரக பாவனையைக் காட்டுகிறது. மற்றைய வலக்கையில் மழுவும், இடக்கையில் மானும் விளங்குவன. இம் மூர்த்தியில் வளைவு சிறிதளவுமின்றி உடல் சம நிலையில் அமையும். இந்நிலையை சிற்ப நூல்கள் சமபங்கம் என்று அழைக்கின்றன. சடாமுடியாகப் புனைந்த தலைக்கோலம் உருவிற்குத் தனியழகு கொடுப்பதாக உள்ளது. இம்முடியில் பிறைச்சந்திரன் இடம் பெறுகிறது. இவ்வடிவம் மூன்று கண்களை உடையதாகவும், அழகு பொலியும் முகத்தைக் கொண்டதாகவும், ஆபரணங்களையும், பீதாம்பரத்தையும் தரித்ததாகவும் அமைக்கப்படுதல் வேண்டும். இவ்வுருவம் நிற்கும் சமபங்கநிலை இராஜயகுணம் நிறைந்து நிற்றலைக்காட்டும். இவ்வகுலம் கையில் ஏந்தி நிற்கும் மான் இவ்வுருவத்தை நோக்கியவாறோ, அல்லது எதிர்ப்புறம் நோக்கியவாறோ அமையலாம். சடையாலமையும் மகுடத்தின் வலப்பக்கத்தில் பிறைச்சந்திரன் இடம்பெறும். வலதுமுன் கை சிம்ககர்ண ஹஸ்தமாகவோ கடக ஹஸ்தமாகவோ அமையலாம். முத்துமாலை, இரத்தினமாலை, பதக்கம், பூணூல், உதரபந்தனம், கடகம் முதலியன இத்திருவுருவத்தில் இடம்பெறவேண்டிய அணிகலன்களாகும். சந்திரசேகர மூர்த்தியைப் பத்ம பீடத்தில் நிற்கும் நிலையில் அமைத்தல் வேண்டும்.

இத்தகைய முறையில் தனிப்பீடத்திலோ அல்லது ஒரே பீடத்திலோ உமையுடன் நிறுவப்படும்பொழுது இம் மூர்த்தம் <u>உமாசகித சந்திரசேகரமூர்த்தி</u> என்னும் பெயரைப் பெறுகிறது.

தேவியை ஒரு இடதுபாரத்திலே ஆலிங்கனம் செய்த நிலையில் உருவாகும்பொழுது அது ஆலிங்கன மூர்த்தி எனப்படும். தேவியுடன் கூடி நிற்பினும் தனியே நிற்பினும் சந்திரசேகர மூர்த்தி பிரபாமண்டலத்துடன் விளங்குதல் வேண்டும். இவ்வடிவம் நின்ற நிலையிலேயே அமைக்கப்படுதல் வேண்டும். மூன்று வகையாகக் கூறப்பட்ட மூர்த்தங்களில் இரண்டாவது வகையான உமாசகித நிலையிலேயே இந்தியாவிலும், இலங்கையிலும் இடம் பெறுகின்றது.

சந்திரசேகர மூர்த்தம் சிவபிரான் பிறைசூடி நிற்கும் நிலையைச் சிறப்பாக உணர்த்துகிறது. சுப்பிரபேதாகமம் இதன் வரலாறு பற்றிக்கூறுகிறது. சிவனிடத்தில் கோபங்கொண்ட தாருகாவன ரிஷிகள் அபிசாரவேள்வி நடாத்தி பலபொருட்களைத் தோற்றுவித்தனர். பாம்புகள் மான், முயல்கள், மழு, மாறு, புலி, சிங்கம் முதலிய பொருட்கள் வரிசையாக வேள்வியில் தோன்றின. தோன்றிய இப்பொருட்களை ஒவ்வொன்றாக சிவனைநோக்கி சிவனை அழிக்கும் பொருட்டு ஏவினர். இறைவன் மழுவையும், மானையும் ஏற்று இருகரங்களில் ஏற்றுக்கொண்டார். பாம்புகள் அணிகலன்களாயின முயல்களைக் காலின்கீழ் நசித்தனர். யானையும், சிங்கத்தையும் கொன்று அவற்றின் தோல்களையுரித்து ஆடைகளாக அணிந்தார். மண்டையோடும் பிறைச் சந்திரனும் தலை அணிகளாயின என்று சுப்பிரபேதாகமம் கூறுகிறது.

கந்தபுராணம் இதன் வரலாற்றுப் பின்னணிபற்றிக் கூறுமிடத்து தக்கனின் இருபத்தேழு புதல்வியாரை மணந்த சந்திரன் உரோகணியிடம் தனி அன்பு செலுத்தினான். எனவும் தக்கன் தம் புதல்வியர் அனைவரிடமும் பாகுபாடு இன்றி நடக்கும்படி கூறியதாகவும் சந்திரன் அவ்வாறு நடக்காததைக் கண்டு பெரு கோபங்கொண்டு தேய்ந்து அழிந்து போகும்படி சபித்தான். இவ்வாறு சாபம் பெற்ற சந்திரன் சிவனிடம் சரண் புகுந்தான். சிவன் அவனுக்கு அபயமளித்து தனது தலையில் புகலிடமளித்தான் அத்துடன் தேய்ந்தொழியத் தக்கனிட்ட சாபத்தை திரும்பத்திரும்பத்தேய்ந்து வளரும்படி சபித்தான் எனவும் கூறுகிறது. இச்சம்பவத்தை நிகழ்த்தும் வடிவமாக அமைவதே சந்திரசேகர மூர்த்தமாகும்.

இவ்வாறு ஆகமங்களும், புராணங்களும் கூறும் வரலாற்றுப் பின்னணியைக் கொண்ட சந்திரசேகரமூர்த்தம் சிற்ப அமைதிக்கேற்றவாறு அமைக்கப்படுகிறது.

(30) மேல்வருவனபற்றி விளக்கக் குறிப்புகள் வரைக.

(அ) திருவருள்

சைவசித்தாந்தம் ஆன்மாக்களின் உயர்ந்த இலட்சியம் மோட்சம் என்று கூறுகிறது. மோட்சம் என்றால் விடுபடுதல் என்பது கருத்தாகும். அதாவது பிறவியினின்றும் விடுபடுதல் என்று கூறலாம். இப்பிறவியினின்றும் விடுபடுதற்குரிய வழியாக நால்வகை மார்க்கங்கள் கூறப்பட்டுள்ளன. இந்நால்வகை மார்க்கங்களின் மூலமாகவும் இறைவனது அருளைப் பெற்ற ஆன்மாக்களே மோட்சத்தைப் பெறமுடியும். இவ்வருளை சைவசித்தாந்த நூல்கள் திருவருள் என்று கூறுகின்றன. இத்திருவருள் சக்தி நிபாதம் என்று கூறப்படும். சக்தி என்றால் அருள் எனவும் பொருள்படும். நிபாதம் என்பது வீழ்ச்சி எனவும் பொருள்படும், இறைவனது அருள் ஆன்மாமீது பதிதலையே சைவசித்தாந்திகள் சத்திநிபாதம் என்று அழைப்பர். இத்திருவருளின் பயனை விளக்கும் நூல் உமாபதிசிவாச்சாரியாரினால் அருளப்பட்ட திருவருட்பயன் ஆகும். திருவருளின் தன்மையினை நாலாவது அதிகாரத்தில் பத்துக்குறட்பாக்கள் மூலம் உமாபதி சிவாச்சாரியார் நன்கு விளக்கியுள்ளார்.

அருளிற் பெரியதகிலத்து வேண்டும்
பொருளிற் தலையிலது போல்

என்று கூறுகிறார். அதாவது ஒருவருக்குத் தாம் விரும்பிய பொருள் ஒன்றை விட மேலான ஒரு பொருள் இல்லை என்பதுபோல திருவருளுக்கு மேலானதாகிய ஒரு பொருளும் இல்லையெனத் திருவருளின் சிறப்பு விளக்கப்படுகிறது. திருவருள் என்பது இறைவனின் பெருங்கருணையாகும். அது சூரிய ஒளிபோல எங்கும் வியாபித்து நின்று உயிர்கள் வினைகளைப் பெருக்கவும், அவற்றை நுகரவும்

துணையாய் உள்ளது. அறிவில்லாத உடல் என்றுமே எதனையும் அறியாது. ஆணவம் பிணிப்புள்ள ஆன்மா ஒன்றையும் அறியாது. அருள் அறிந்து காட்டிய பின்னரே ஆன்மா எதனையும் அறியும். திருப்பாற் கடலில் உள்ளமீன்கள் பாலைப் பருகாது இழிந்த பிராணிகளை வலிந்து தேடல் போல ஆன்மாவும் திருவருளில் இருந்தும் அதனை உணராது புலன்வழியே திரியும் இயல்பினை உடையது. ஆன்மாவின் உதவியால் தாம் விடயங்களை அறிகின்றோம் என்பதை அறியாத பொறிகள் போலத் திருவருள் உணர்த்தத் தாம் உணர்வதை உயிர்கள் உணர்வதில்லை பூமியைத் தமக்கு ஆதாரம் என அறியாத வழிப்போக்கர்போல அருளைத் தமக்கு ஆதாரம் என ஆன்மாக்கள் உணரமாட்டாது. ஆன்மாக்களது திருவருளை தேடின் அது எளிதிற்கிடைக்கும். அதனை அறியாது இருப்பவன் மலை, நிலம், ஆகாயம் என்பவற்றைத் தேடும் அறிவிலி போன்றவராவான். திருவருளை அறியாது நிற்பது ஆன்மாவின் குறையே என்பதை

> வெள்ளத்துள் நாவற்றியெங்கும் விடிந்திருளாம்
> கள்ளத் திறைவன் கடன்

என்று திருவருட்பயன் கூறுகிறது. அதாவது திருவருள் வெள்ளம்போலக் கரை புரண்டோடி நிற்கவும் அதனை நுகராமை உயிரின் குற்றமே. எங்கும் நல்லநீர் நிறைந்திருக்கவும் அதனைப் பருகாது நாவரண்டு நிற்பவனும், இருளகன்ற பின்னும் கண்ணை விழித்துப்பாராதவனும் இங்கு குற்றமுடையவர்களாவர். பூனை பாலைப்பருகாது கரப்பானைப் பிடிக்கத்தாவியதால் பாற்குடம் விழுந்து உடைவதோடு, பூச்சியும் அகப்படாது போகப் பூனை வருந்துவதுபோல, நல்ல ஞானத்தை மன அமைதியோடு கேளாது புலன்வழி மனதைவிட்டு மக்கள் கெடுவர். இத்தகையவர்கள் மோட்சம் பெறமுடியாது. மோட்சம் பெற வழி திருவருளேயாகும். திருவருளானது இருவடிவாக எழுந்தருளி வந்து பக்குவப்பட்ட ஆன்மாக்களுக்கு அவற்றின் உண்மையை உணர்த்த ஆன்மாக்கள் உண்மையை உணர்ந்து இறைவன் பாதங்களை அடைந்துவிடும். இதனை சிவஞானபோதம் எட்டாம் சூத்திரம்

> ஐம்புலவேடரின் அயர்த்தனை வளர்ந்தெனத்
> தம்முதல் குருவுமாய்த் தவத்தினில் உணர்த்தவிட்டு
> அன்னியம் இன்மையின் அரன் கழல் செலுமே

என்று கூறுகிறது. அதாவது ஆன்மாக்கள் இதுவரை செய்த தவத்தின் பயனாக இறைவன் குருவடிவாக எழுந்தருளிவந்து, ஆன்மாவுக்கு ஐம்புலன்களாகிய வேடரில் சூழலில்பட்டு அவற்றேருள்ள ஒரு பொருளாய் உன்னை நினைத்து வளர்ந்து, நிசித்துப் பொருள் என்ற உண்மையில் மறைந்தாய் என்று உணர்த்தியருள், தமக்கும் குருவுக்கும் வேறுபாடில்லாமையினால் குருபரம்பொருளாய் எழுந்தருளிவந்த சிவபரம்பொருளின் திருவடியை அடையும். என்று கூறுகிறது. இவ்வாறு திருவருளைப் பெற்ற ஆன்மாக்களே இறைவனோடு அத்துவிதமாகி விடுகின்றன என சைவசித்தாந்தம் கூறுகிறது.

(ஆ) பண்ணிசை

முத்தமிழில் நடுநாயகமாக அமைந்துள்ளது இசையாகும். இயற்றமிழை இயக்குவதும், நாடகத்தமிழுக்கு இன்றியமையாததும் அதுவே. இசையோடு பண்ணும் நாடகத்தோடு பரதமும் இணைந்துள்ளன. இங்கு 'பண்' எனும் பதம் 'பண்ணுதல்' எனும் வினையடியாகப் பிறந்து பெருந்தானமாகிய நெஞ்சு, மிடறு, நாக்கு, மூக்கு, அண்ணக்கு, உதடு, பல், தலை என்பன வற்றினவும், எடுத்தல், படுதல், தனித்தல், கம்பிதம், குடிலம், ஒலிஉருட்டு, தாக்கு என்பனவற்றினும் பண்ணிப்படுத்தலாகும். இசை இயற்கையானது. பண்செயற்கையானது. இசை எவ்வுயிர்க்குமுண்டு. ஆனால் பண் சங்கீதஞான முடையார்க்கு மாத்திரமே விளங்கக்கூடியது. மிகப் பழந்தமிழ் நூலாகிய தொல்காப்பியத்தில் பண்ணைப்பற்றிய விரிவான குறிப்புகள் உண்டு. நிலத்தை ஐந்து வகையாகப் பிரித்து அவ்வந் நிலங்களுக்குரிய ஐவ்வகைப்பண்ணும் அந்நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவையாவன: குறிஞ்சிப்பண், பாலைப்பண், சாதாரிப்பண் (முல்லை), விளரிப்பண் (நெய்தல்) மருதப்பண் என்பனவாகும். இப்பண்களில் குறிஞ்சிப்பண்ணைச் சாமத்திலும், பாலைப்பண்ணை நண்பகலிலும், சாதாரிப்பண்ணை மாலையிலும், விளாரிப்பண்ணை காலையிலும் மருதப்பண்ணை வைகறையிலும் பாடினரென அறியமுடிகிறது.

இசையில் ஏழு சுரங்களின் [illegible] பண் எனப்படும். சங்ககாலத்தில் வழக்கிலிருந்தவை 103 பண்களாகும். மூவர்பதிகங்களிலிருந்தும் இருபத்தெட்டு பண்கள் காணப்படுகின்றன. இவ்விருபத்தெட்டுப் பண்களில் சம்பந்தரது பாடல்கள் 23 பண்களில் அமைந்துள்ளது. அப்பர் சுவாமிகளது பாடல்கள் 16 பண்களில் அமைக்கப்பட்டுள்ளன. சுந்தரர் பாடிய பண்கள் 17ஆகும். சம்பந்தரது பாடல்களில் பெரும்பான்மைப் பண்கள் காணப்படுகின்றன. இவற்றிலிருந்து இசைத்திறன் மிகுந்து காணப்படுகிறது எனக் கூறலாம். இப்பண்களில் நட்டபாடை, கொல்லி, இந்தோளம், தக்கராகம், தக்கேசி, குறிஞ்சி, வியாழக்குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி, காந்தாரம், சாதாரி, செல்வழி என்பன குறிப்பிடத்தக்கவை. வைஷ்ணவ ஆழ்வார்களுள் நம்மாழ்வார் பண்ணமைத்துப் பாடுவதில் வல்லவராக இருந்தார். பண்ணில் பாடியோருக்கு இல்லையாம் பாவம் பாவம் என்பது ஆன்றோர் வாக்கு. புலன்களை அடக்கி இறைவனை வழிபடுபவர்க்கு சிறந்தவழி பண்ணாகும்.

(இ) இருவினை ஒப்பு

ஆன்மாக்கள் தம் இறுதி இலட்சியத்தை அடைவதற்கு சைவ சித்தாந்தம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நால்வகை மார்க்கங்களைப் பின்பற்ற வேண்டுமென்று கூறுகின்றது. நால்வகை மார்க்கங்களையும் ஆன்மாக்கள் முறையாக அனுஷ்டிக்குமிடத்து அவை இருவினை ஒப்பு நிலையை அடைகின்றன. இருவினை ஒப்பு என்றால் நல்வினை, தீவினை ஆகிய இரண்டையும் சமமாக நோக்குதலாகும். இதனைத் திருவருட்பயன்,

"நீடுமிருவினைகள் நேராக நேர்ந்தால்
கூடுமிறை சக்தி கொளல்"

என்று கூறுகிறது. மிக்க வளர்ந்து வருவனவாகிய புண்ணியபாவங்கள் இரண்டும் முன்னர் ஒன்றையொன்று ஒவ்வாதனவாய் இருந்தவை. இப்போ ஒத்ததன்மையுடையவை என்ற எண்ணம் ஆன்மாவுக்கு உண்டாக, சிவனது சக்தி ஆன்மாமீது பதியும் என்று விளக்கப்படுகிறது. இருவினை ஒப்பு ஏற்படுமிடத்து ஆணவமலம் ஆன்மாவைப் பற்றிக் கமுடியாத அளவுக்கு தனது சக்தியை இழந்துவிடும். இதுமலபரிபாகம் எனப்படும் மலபரிபாகத்தை அடுத்து நிகழ்வது சக்திநிபாதம் ஆகும். சக்திநிபாதம் என்றால் இறைவனது சக்திபதிதலாகும். ஆணவமலம் பக்குவமாகும் பொருட்டு அதுக்கு அநுகூலமாய் நின்று நடத்திய திரோதான சக்தி அம்மலம் பரிபாகமடைய கருணை எனப்படும் சக்தி ரூபமாய் ஆன்மாக்களில் பதியும். திருமூலர் தமது திருமந்திரத்தில் இதனைப்பின் வருமாறு விளக்குகின்றார்.

"இருவினை தோரொப்பில் இன்னருட்சக்தி
குருவெனவந்து குணம்பல நீக்கித்
தருமெனும் ஞானத்தால் தன்செயல் அற்றல்
திரிமலத்தீர்ந்து சிவனவனுகும்"

இருவினைகளையும் ஆன்மா ஒப்புநோக்குமிடத்து இறைவனது அருள் குருவடிவாக வந்து ஆன்மாக்களுக்கு உண்மையை உணர்த்த அறியாமையினின்றும் விடுபட்டு, மலங்களினின்றுவிடுபட்டு இறைவனோடு ஒன்றிவிடுகின்றன.

(ஈ) நடராச வடிவத்தின் அமைப்புப் பற்றி நூல்கள் தரும் விவரங்களையும், இத்தோற்றம் உணர்த்தி நிற்கும் தத்துவம் பற்றியும் விளக்கிக் கூறுக.

தமிழ்நாட்டுத் திருவுருவங்கள் அனைத்திலும் அழகிலும் தத்துவக் கருத்திலும் சிறப்புடையதாக விளங்குவது நடராசவடிவமாகும். பரம்பொருளானது உருவமற்றது. யாவற்றையும் கடந்து நிற்கும் ஆற்றலுடையது. ஆதியும் அந்தமும் அற்றது. பிரபஞ்சம் அனைத்திலும் வியாபித்து அவற்றைத் தன்னகத்தே அடக்குகிறது. இந்துமதத்தில் இறைதத்துவத்தை உணர பக்தி, யோகம், கிரியை ஞானம் போன்ற வழிகள் கூறப்படுகிறது. ஆனால் இறையுணர்வு மிகுந்த அளவு பெற்று ஞானத்தின் வாயிலாகவோ அல்லது வேறு வழியிலோ பரம்பொருளை அறிந்துகொள்ளும் ஆற்றல் அற்ற உபாசகரின் நலனுக்காக இறைவனை உருவகிக்கும் வழக்கம் ஏற்பட்டது. இறைவனது பல்வேறு தத்துவங்களை விளக்கும் பல வடிவங்கள் தோற்றம் பெற்றாலும், அனைத்திலும் சிறப்புடையதாக விளங்குவதும்,

சைவசித்தாந்தத் தத்துவக் கருத்துக்கள் அனைத்தையும் ஒருங்கே விளக்குவதுமாகிய ஓர் வடிவம் நடராச வடிவமாகும்.

சிவனது நர்த்தன வடிவங்களில் ஒன்று நடராஜ வடிவமாகும். பரதநாட்டிய சாத்திரத்தில் 108வகையான நடனங்கள் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. ஆகமங்களிலும் 108 வகையான நடனங்கள் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. நடராசரை வழிபடுவதற்கென அமைக்கப்பட்ட ஆலயம் சிதம்பரம் ஆகும். சிதம்பரத்தின் கோபுரங்களில் ஒன்றில் இருமருங்கிலும் 108 வகை நடனங்களும் சித்தரிக்கப்பட்டுள்ளன. ஆகமங்கள் கூறும் விதிப்படியும், தியானமந்திரங்களுக்கேற்ற வகையிலும் நடராச வடிவங்கள் அமைக்கப்படுகின்றன. ஆகமங்கள் 108 வகை நடனங்களைப்பற்றிக் கூறுகின்றனவாயினும் ஒன்பது வகை நடனங்களையே விளக்குகின்றன. இவ்வொன்பது வகை நடனங்களைப் புரியும் வகையில் இறைவனை வெவ்வேறான நிருத்த மூர்த்திகளாக வைத்து வழிபடும் வழக்கு பாரதத்தில் பரவியுள்ளது.

நடராச வடிவமானது 3 கண்களையுடையதாக நான்கு தோள், நான்கு கைகள் உடையதாக இருத்தல் வேண்டும். சாந்தகுணமும், சிவப்பு நிறமும், புன்முறுவல் செய்யும் முகமும் உடையதாக அமைதல் வேண்டும். தலையில் கொக்கின் இறகு, கங்கை சந்திரன், ஊமத்தை, உருக்கு முதலானவை இருத்தல் வேண்டும். கரங்களில் வலதுபுற முன் கரம் அபயகரமாகவும், பின்கரம் டமரகம் தாங்கியதாகவும், இடக் கரங்களில் முன்னையது வீசித் தொங்கவிடப்பட்ட நிலையிலும், பின்னையது அக்கினி ஏந்தியதாகவும் இடச்செவியில் திருத்தோடும், வலச் செவியில் மகரகுண்டலமும் அணிந்ததாகவும் உடல் முழுவதும் விபூதி தரித்ததாகவும் இருத்தல் வேண்டும் என நூல்கள் கூறுகின்றன. காமிக ஆகமம் கூறும் கருத்தின்படி, கழுத்தில் கழுத்தணி, முத்தாரம், பாம்புமாலை, சங்குமாலை, பன்றிப்பல் புலிநகம், மணிகள் ஆழியோடு முதலியனவும் விளங்குதல் வேண்டும். வலப்பாதம் முயலகன் மேல் ஊன்றிநிற்பதாகவும், இடப்பாதம் தூக்கியநிலையிலும் இருத்தல் வேண்டும் நடராசரின் உருவத்தைச் சுற்றி பிரபாமண்டலம் விளங்குதல் வேண்டும். என சிலபரத்தினம் கூறுகிறது. இதனைத் திருவாசி எனவும் அழைப்பர். நடராசரின் இடதுபக்கத்தில் பார்வதியின் உருவம் இடம்பெறும்.

நடராச வடிவம் சைவசித்தாந்தம் கூறும் இறைவனுக்குரிய இயல்புகள் தொழில்களை நன்கு விளக்குகிறது. நடராச வடிவத்தைச் சுற்றி அமையும் திருவாசியானது பிரபஞ்சத்தைக் குறித்து நிற்க அதனுள் அமிழ்ந்து சற்று அடங்காது வெளிப்பட்டு நிற்கும் நடராசர் வடிவமானது, பிரபஞ்சத்தில் நீக்கமற நிறைந்து, அனைத்தையும் கடந்த நிலையைக் குறிக்கிறது. வலக்கரத்தின் பின்புறத்தில் உள்ள கை டமாரகம் தாங்கியநிலையிலுள்ளது. இது உலக சிருஷ்டியைக் குறித்துநிற்கிறது. வலதுபுற முன்கரம் அபயநிலையிலுள்ளது. இது ஆன்மாக்களின் காத்தல் தொழிலையும், இடப்புறப் பின்கரம் அக்கினியைத் தாங்கியுள்ளது மல சங்காரத்தையும், வீசித் தொங்கவிடப்பட்ட நிலையிலுள்ள இடப்புறமுன்கரம் உலக அசைவுச் சுழற்சியையும், முயலகன் மேல் ஊன்றிய பாதம் மறைத்தல் தொழிலையும், தூக்கிய பாதம் அருளுந் தொழிலையும் விளக்கி நிற்கிறது.

நடராச வடிவமானது இந்து விக்கிரக நூல்கள் கூறும் சிற்ப அமைதிக்கு ஏற்ற வகையிலும், சைவசித்தாந்திகளது அடிப்படைத் தத்துவக் கருத்துக்களை விளக்கும் வகையிலும் அமைந்த ஓர் ஒப்பற்ற வடிவமாகும்.

(31) இந்துக் கோவில்கள் நுண்கலைகளின் வளர்ச்சிக்குத் தாயகமாக அமைந்துள்ளன. ஆராய்க.

இந்து நாகரீக வளர்ச்சியில் இந்துகோவில்கள் சிறந்த இடத்தைப் பெறுகின்றன. ஆகமங்கள் கூறும் வழிபாடு கோயில் வழிபாடாகும். ஆகமங்கள் கூறும் அமைப்பு விதியின்படியே இந்துக் கோவில்கள் அமைக்கப்படுகின்றன. எங்கும் வியாபித்திருக்கும் இறைவன் ஆன்ம ஈடேற்றம் கருதிக் கருணை மேலீட்டினால் உருவந்தாங்கி எழுந்தருளியிருக்கும் இடம் கோயிலாகும். இக் கோயில் கலைகள் யாவற்றினதும் வளர்ச்சிக்கு ஏற்ற ஒப்புயர்வற்ற நிலைக்களனாக விளங்குகிறது. நுண்கலைகளிற் தலைசிறந்த கட்டிடக்கலையும், சிற்பக்கலையும் ஓவியக்கலையும சிறந்தோங்கும் வண்ணம் கோயில்கள் ஆற்றிய தொண்டினை கோயில் சுவர்கள் தூண்கள், கோபுரங்கள், விமானங்கள் எடுத்துககாட்டுவனவாக எ உள்ளன. ஏனைய கலைகளான இசை, நடனம் எனும் இரண்டும் கோயில்களிற் பேணப்பட்டு வந்ததையும் அறியமுடிகிறது.

கோயிலமைப்பினை நோக்குமிடத்து அங்கு பல அம்சங்கள் இடம்பெறுவதைக் காணலாம். மூலவிக்கிரகம் எழுந்தருளியிருக்கும் அறை கர்ப்பக் கிருகம் எனப்படும். இதன் மேற்கூரை விமானம், ஸ்தூபி, சிகரம் என அழைக் கப்படும். கருவறையின்வாயில் பெரும்பாலும் கிழக்கு நோக்கியதாகவே அமை யும். இவ்வாயிலுக்கு முன்னிருப்பது மக்கள் நின்று வணங்குதற்குரியதான மகாமண்ட பம் ஆகும். மண்டபமும், கருவறையும் ஒரு காலத்தில் பிரிக்கப்பட்டிருந்தன. என்ப தைக் காஞ்சிக்கைலாசநாதர் கோயில், மாமல்லபுரம் கோயில்கள் போன்ற வற்றிலிருந்து அறியமுடிகிறது. கருவறையும், மகாமண்டபத்தையும் இணைத்து இடையே தோன்றிய அமைப்பு அர்த்தமண்டபம் ஆகும். இதுவே கர்ப்பக்கிருகம், அர்த்தமண்டபம் மகாமண்டபமாகிய மூன்று மண்டபங்களாகக் கருப்பொருளாய் அமைந்த கருவறையின் விரிந்த நிலையாகும். இதையடுத்து இவ்வாறு வளர்ந்துவரும் கோயிலைச்சுற்றிலும் பல அறைகள் வரிசை வரிசையாக நாற்புறங்களிலும் அமை யும்வண்ணம் கோயிற் கட்டிடத்தை வளர்க்கும் வழக்கம் தோன்றலாயிற்று. கோயிலைச்சுற்றிலும் அமையும் அறைகளின் வரிசையே நாளடைவில் சுவர்களாயின. இவ்வாறு உருவான மதிற் சுவர்களுக்கும், கோயிலுக்கும் இடையில் கருவறையைச் சுற்றி அமையும் இடைவெளி கோயிலைவலம்வரும் வீதி அல்லது பிரகாரம் ஆக அமைந்தது. இவ்வாறு அமையும் திருக்கோயிலுக்கு அங்கமாகத் தனித்தனி சிறு கோயில்கள் தோற்றுவிக்கப்பட்டன. இவை பரிவார தெய்வங்களுக்கென அமைக் கப்பட்ட தனிக் கருவறைகளாகும். இவற்றைவிடக் கர்ப்பக் கிருகத்தின் புறச் சுவர்களில் அமைக்கப்பட்ட கூடுகளிலும் விக்கிரகங்கள் இடம்பெற்றன. இக்கூடுகள் பஞ்சர கோட்டங்கள் என்று அழைக்கப்படும். இவ்வாறு கோயில் கட்டும் முறை தொன்றுதொட்டு வழங்கிவருகின்றதெனினும் கி.பி.8ம் நூற்றாண்டில் சிறந்து விளங்கியதற்கு கல்லவட்டுக்கள் முதலான வரலாற்றுச் சான்றுகள் கிடைக்கின்றது. இக்காலப்பகுதியை அடுத்து பல புதுக்கோயில்கள் தோற்றம் பெற்றன. இக்காலப்பகுதியிலேயே கற்கோயில்கள் குடைவரைகோயில்கள் தோற்றம் பெற்றன.

கோயிற் கட்டிட அமைப்பில் மண்டபங்களும், தூண்களும் முக்கிய இடத்தைப் பெற்றன. இவற்றுள் முக்கியமானவை அர்த்தமண்டபம். மகாமண்டபம், திருத்தமண்டபம், பதினறுகால் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம், என்பனவாகும். மண்டபங்களில் இடம்பெறும் தூண்களும் தனித்தனி சிறப்புடையவை. மண்டபங்களுக்குத் தக்கவாறு தூண்களின் எண்ணிக்கை வேறுபடும். தூண்களில் சிற்ப வேலைகள் இடம்பெறும். தூண்கள், மலம், செங்கல், கல், போன்றவற்றால் அமைக்கப்படும். ஒரு பொருளினால் மட்டும் அமைக்கப்படின் சுத்தம் எனவும், இரு பொருட்களினால் அமைக்கப்படின் கசரம் எனவும் அழைக்கப்படும். மூன்று பொருட்களால் அமைக்கப்படின் சங்கீர்ணம் எனவும் அழைக்கப்படும். தூண்கள் சதுரவடிவமாகவோ, ஐங்கோண, பதினறுகோண, அறுகோணவடிவின தாகவோ அமைக்கப்படலாம்.

கோயிற் கிரியைகள் யாவும் திருவுருவ வழிபாட்டை அடிப்படை யாகக் கொண்டவையாகும். திருவுருவங்கள் கற்களினாலும், மரத்தினாலும் சந்த் தினாலும், வெண்கலத்தினாலும் அமைக்கப்பட்டவையாக உள்ளன. கோயில்களில் சிவனுக்கமைந்த பல்வேறு வடிவங்கள் இடம்பெறுகின்றன. இலிங்கோற்பவர், சந்திரசேகரர், நடராசர், பிச்சாடனர், தட்சிணமூர்த்தி, கல்யாணசுந்தரர் போன்ற வடிவங்கள் சிறப்புடையவை. இவ்வடிவங்கள் வழிபாட்டுக்குரியன வாகும். கோபுரங்களிலும், விமானங்களிலும் இறைவனது அற்புதங்கள் திரு விளையாடல்களைச் சித்தரிக்கும் பல சிற்பங்கள் இடம்பெறுகின்றன. சோழர் காலக் கோவில்களில் கல்லாலும், வெண்கலத்தினாலும் ஆக்கப்பட்ட பல சிற்பங்கள் இடம்பெறுகின்றன. வெண்கலச் சிலைகள் யாவற்றிலும் அழகிலும், அமைப்பிலும், தத்துவ விளக்கத்திலும் மிகவும் சிறந்து விளங்குவது நடராசரின் வடிவமாகும். சிதம்பரம், கும்பகோணம் நாகேஸ்வரர் கோயிலில் இடம்பெறும் சிற்பங்கள் மிகவும் அழகானவை. வைஷ்ணவக் கோயில்களில் திருமாலின் வடிவங்கள் மூவகைத் திருக்கோலங்களில் காட்சியளிக்கின்றன. அவ்வடிவங்கள் நின்றதிருமேனி, அமர்ந்த திருமேனி, கிடந்த திருமேனி என்று அழைக்கப்படுகின்றன. கோயில் களில் வழிபாட்டுக்கெனவும், சமய உண்மைகளை உணர்த்துவதற்கெனவும் அழகை எடுத்துக்காட்டும் வகையில் சிற்பங்கள் அமைக்கப்பட்டன.

ஓவியக்கலையானது சிற்பத்தின் ஓர் உறுப்பாக கோயில்களின் வளர்ச்சியடைந்து வந்துள்ளதைக் காணலாம். சிற்பநூல்களும், ஆகமங்களும் திருவுருவம் அமையும் முறையைக் கூறியதும், , அவற்றுக்குத் தீட்டவேண்டிய

நிறங்களையும் கூறுகின்றது. பிற்பட்டகாலங்களில் இது தனிக்கலையாக வளர்ந்து வருகிறது. கோயிற்கூரைகளிலும் சுவர்களிலும் தூண்களிலும் ஓவியங்கள் இடம்பெறுவதைக் பெறுவதைக்காணலாம். புராணங்கள் கூறும் இறைவனின் பெருஞ்செயல்களைத் தொடர்சித்திரமாக உட்பிரகாரச் சுவர்களில் எழுதும் மரபு சில கோவில்களில் இடம்பெறுகிறது. சித்தன்னவாசல் குறை ஓவியம், காஞ்சிக் கைலாசநாதர் கோயில் தஞ்சைப் பெருங்கோயில் ஓவியம் திருமலைபுரக் கோயிற் பழைய சுவர்களிலும் சுவரோவியங்கள் காணப்படுகின்றன. தஞ்சைப் பெருங்கோயிற் கருவறையின் பின்புறச் சுவர்களிற் காணப்படும் ஓவியங்களிற் குறிப்பிடத்தக்கது 'சிவன் சுந்தரரை தடுத்தாட்கொண்ட நிகழ்ச்சியாகும். இதில் ஒரு மண்டபத்தில் பலர் நிற்கிறார்கள். அவர்களுக்கு நடுவில் ஒரு கிழவரும் இளைஞரும் நிற்கின்றனர். கிழவர் முழுகு வளைந்தவர். இளைஞர் அடக்கத்துடன் நிற்கிறார். கிழவரது ஒரு கையில் பழங் குடையும் மறுகையில் ஓலையும் காணப்படுகிறது. கூட்டத்தாரது முகங்களில் வியப்பும், திகைப்பும் மாறி மாறித் தோன்றுகின்றன. கூட்டத்தினர்க்கு வலப் பக்கம் ஒரு கோயில் விமானம் தெரிகிறது, மண்டபத்தில் கூடியிருந்தவர்கள் அவசரமாக அக்கோவிலினுள் நுழைகின்றனர். இவ் ஓவியக்காட்சி சுந்தரரது வரலாற்றின் ஒரு பகுதியை விளக்குவதாக உள்ளது.

கோயில்களை அடிப்படையாகக் கொண்டே இசை, நடனம், போன்ற கலைகளும் வளர்ந்து வந்துள்ளன. ஆகமங்கள் கூறும் வழிபாட்டில் கீதம், வாத்தியம், நிருத்தியம் எனும் மூன்றும் இடம்பெறுகின்றன. இவை மூன்றையும் தௌரியத்திரிகம் என்று கூறுகின்றன. இம்மூன்றாலும் இறைவனை வழிபட வகுக்கப்பட்ட முறை நுண்கலைகளைப் பேணத் திருக்கோவில் வழிபாடு வழிகோலியதைக் காட்டுகிறது. இவற்றுள் வாத்தியங்கள் அபிஷேகங்களின் போதும், ஆராதனைகளின்போதும், மீட்டப்படவேண்டியவை. இவை மத்தளம், தாளம், குழல், சங்கு, நாதசுரம், மேளம் போன்றன. சாமகானத்தில் ஸ்தோபங்கள் அமைந்த கானம் இறைக்கும்பொழுதும், தேவாரங்களை பண்ணோடு இசைக்கும் வேளையிலும், ஏனைய திருமுறைகளை உரிய இராகங்களில் பாடுங்காலத்திலும் கீதத்தால் இறைவனின் நாத உபாசனை நிகழும். கீதம் வாத்தியம் எனும் இரண்டின்பின் இடம்பெற வேண்டியது நிருத்தியம் ஆகும். அவ்வக்காலத்துக்குரிய நிருத்தங்களை அவ்வப் பூசைமுடிவில் உரியவாறு இடம்பெறச் செய்தல் ஆகமமரபாகும். இவ்வழக்கம் இன்று அருகிவிட்டது. கோயில்களில் இசை, சடனம், போன்ற கலைகள் வளர்ந்து வந்தமையை நாயன்மார்கள் பாடல்களிலிருந்தும், சோழர்காலக் கல்வெட்டுக்களில் இருந்தும் அறிந்துகொள்ள லாம். ஆண்டவனின் முன்னிலையில் இளம் மகளிர் நாட்டியம் ஆடினர் என்பதை "பூவைமேனி இளையமாதர் பொன்னும் மணியும் கொழித்தெடுத்து ஆவணவீதியில் ஆடும் கூடல்" என்று சம்பந்தர் பாடுவதிலிருந்து அறியலாம். சுந்தரர் பெண்கள் தம்நிலை மறந்து ஆடுவதை "தையல் மடவார்கள் உடைஅவிழக் குழல் அவிழக் கோதை குடைந்தாடக்" எனப் பாடுவதன் மூலம் எடுத்துக்காட்டுகிறார். சோழ மன்னர் தஞ்சைப் பெருங்கோயிலில் திருமுறைகளை ஓதுவதற்கு 48 ஓதுவார் களை நியமித்தானெனவும், 400க்கு மேற்பட்ட நடனமாதர்களை நடனக் கலைகளை வளர்க்க நியமித்தானெனவும் அறியமுடிகிறது.

இவ்வாறு கோயில்கள் கட்டிடம், சிற்பம், ஓவியம், இசை, நடனம் போன்ற கலைகளின் வளர்ச்சிக்கு நிலைக்களனாக அமைகின்றன.

(32) இந்துநாகரீக வளர்ச்சியில் அரசியல் நிறுவனங்களின் பங்கினை விளக்குக.

இந்திய அரசியல் தத்துவங்கள் பற்றிய இலக்கியங்களில் ஆங் காங்கே கிடைக்கின்ற குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு அறிந்துகொள்ள முடிகிறது. அரசியல் ஆராய்ச்சித்துறைபற்றி இராஜநீதி, தண்டநீதி, போன்ற நூல்களில் இருந்து குறிப்புகள் கிடைக்கின்றன. பிற்பட்ட வேத இலக்கியங்கள் புத்தருக்கு முந்திய அரசியல் வாழ்வு பற்றியும் அரசியல் சிந்தனைகள் பற்றியும் கூறுகின்றன. கௌடில்யர் என்பவரினால் இயற்றப்பட்ட அர்த்த சாஸ்திரம் அரசி யல் தத்துவக் கருத்துக்களைத் தெளிவாகக் கூறுகிறது. குப்தர் காலத்தில் எழுந்த அரசியல் நூல்கள் காமந்தரின் நீதிசாரம் சிறப்புடையது. சோம தேவசூரியின் நீதிவாக்கியாமிருதம், சுக்கிராச்சாரியின் நீதிசாஸ்திரம் போன்ற நூல்கள் பிற்பட்டகால அரசியல் இலக்கியங்களில் குறிப்பிடத்தக்கவை. இந்நூல் கள் தரும் குறிப்புகளை நோக்கும்போது பண்டைக்காலத்திலேயே இந்துக்கள் சிறந்த அரசியல் கொள்கைகளை உடையவர்களாக விளங்கினர் என்பதையும் இந்து நாகரீக வளர்ச்சியில் அரசியல் நிறுவனங்களும் பெரும்பங்கினை வகித்துள்ளன என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது.

அரச பதத்தின் தோற்றம் பற்றி பிராமண இலக்கியங்களில் ஐதரேயப் பிராமணத்தில் மிகத் தொன்மையான குறிப்பு காணப்படுகின்றது. 'ஒரு காலத்தில் தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் இடையில் போர் நடந்தது. எனவும் அப்போரில் தேவர்கள் தம் பகைவர்களுக்குத் தோற்றுத் துன்புற்றனர் எனவும், இதனால் தேவர்கள் ஒருங்குகூடிப் போரிற் தமக்குத் தலைமை தாங்கி நடத்துவதற்கு தமக்கோர் அரசன் வேண்டுமென முடிவு செய்தனரெனவும் அவ்வாறே அவர்கள் இந்திரனைத் தம் அரசனாக நியமித்தனரென்றும், அதற்குப் பின்னரே தேவர்களுக்கு வெற்றி கிடைத்ததெனவும்' கதை ஒன்று காணப்படுகிறது. இதிலிருந்து இந்தியாவின் மிகப் பண்டைய காலத்திலேயே அரச பதமானது மனிதத் தேவைகளையும், போர் இன்றியமையாமையையும் அடிப்படையாகக் கொண்டே தோன்றியதென்று கருதமுடிகிறது. தைத்திரிய ஆரண்யகத்திலும் இக்கதை இடம்பெறுகின்றன. அர்த்த சாஸ்திரத்தில் கௌடில்யரும் அரசனுக்கு ஓரளவுக்கு தெய்வீகத் தன்மை கொடுப்பதைக் காணலாம். அதாவது அரசனை அவமதிப்பவர் எல்லோரும் உலகியல் சட்டத்தினால் அரசினால் தண்டிக்கப்படுவதோடு, தேவர்களினாலும் தண்டிக்கப் படுவர் எனவும் கூறுகிறார். அரசர்கள் தெய்வீகத் தன்மை உடையவர்களாகக் காணப்பட்டனர். அசோகனும் ஏனைய மௌரிய மன்னர்களும் 'தேவர்க்கினியான்' எனப் பொருள்படும் 'தேவானம்பிய' எனும் பட்டத்தைச் சூடிக்கொண்டமை குறிப்பிடத்தக்கது. மௌரிய மன்னர்களே 'சக்கரவர்த்தி' 'உலகப்பேரரசன்' போன்ற மரபுகளையும் நிலைநாட்டியவர்களாவர். உயிர்களனைத்தையும் உய்விப்பதற்கு பேருலகத்தில் காலத்துக்குக்காலம் தன்னிகரிலாதவர்கள் தோன்ற 'நற்குறிகளுடன் கூடிய புத்தர்கள் தோன்றுவது போல அறம் தழைக்கவும் வளம் பெருகவும் மக்களை ஒரு குடைக்கீழ் வைத்தாள்வதற்கு உலகப் பேரரசர்கள் தோன்றுவர்' என்பது பௌத்தம் கூறும் கருத்து ஆகும். இக்கருத்துக்குப் பின்னர் வைதீக இந்துமதத்துடன் கலந்துவிட்டது. இதிகாசங்கள் யுதிஷ்டிரன், ராமன் போன்ற மன்னர்கள் நாற்றிசையும் வென்ற 'திக்கு விஜயர்' என்று கூறுகின்றன.

அர்த்த சாஸ்திரம் அரசனது கடமை பற்றிக் கூறுமிடத்து நாட்டைக் காப்பதே அவனது முதற்கடமை என்று கூறுகிறது. அரசனுக்குத் தலையான, அரசன் எனும் எண்ணக்கருத்தின் விரிவானது அமைப்பே அரசு ஆகும். புறப்பகையால் உண்டாகும் தாக்கத்திலிருந்து நாட்டைக் காப்பதோடு உட்பகையால் உயிருக்கும், பொருளுக்கும் ஏற்படும் கேடுகளை நீக்கி மக்களைக் காப்பதும் அரசனுக்குரிய கடமையாகும். 'போருக்குச் செல்லுமுன் அரசன் படைகளைக் கூட்டி அவர்களுக்கு உரைநிகழ்த்தவேண்டுமெனவும், அப்போது தானும் அவர்களைப் போன்று கூலிக்குத் தொழில்புரியும் ஒரு ஊழியன்' எனவும் அவர்களுக்குக் கூறி வேண்டும் என்றும் அர்த்த சாஸ்திரம் அறிவுறுத்துகிறது. சமூகத்தில் சாதி வழக்கங்களை மீறியோரைச் சாதியிலிருந்து தள்ளி விடுவதன்மூலம் வருணத் தூய்மையைப் பாதுகாத்தல் வேண்டும், கற்றுத் துறைபோய பிராமணர்களுக்கும், கோயில்களுக்கும் மானியங்கள் வழங்குவதன் மூலம் சமயத்தைப் பாதுகாத்தல் வேண்டும். இவ்வாறு கூறுகின்ற அர்த்த சாஸ்திரம் அரசனது நாட்கடமைக்கு நேர அட்டவணை ஒன்றையும் வகுத்துள்ளது. அதன்படி 'அரசன் ஒருவன் உண்பதற்கும் ஏனைய பொழுதுபோக்கிற்கும் மூன்றுமணி நேரத்தையும் உறங்குவதற்கு நாலரைமணி நேரத்தையும் செலவழித்தல் வேண்டும். ஏனைய நேரங்களை அரசியற் கருமங்களை கவனிப்பதற்கு செலவிடல் வேண்டும்." என்று கூறப்பட்டுள்ளது.

அரசின் ஓர் அங்கமாக அமைவது அமைச்சு ஆகும். அரசன் அமைச்சரை நியமித்து அவர்களின் அறிவுரைகளை கேட்டு நடத்தல் வேண்டும். அரசியலறிஞர் குழுவொன்று இருந்தது. இது 'மந்திரச் சுற்றம்' என்று அழைக்கப்படும். இவ்வமைச்சரவை அதிகாரமும் செல்வாக்கும் உடைய ஓர் அமைப்பாகும். அரசன் நாட்டில் இல்லாத காலங்களில் அது அரசகாரியங்களைச் செய்து வந்தது. அரசன் தனது அமைச்சர்களை அவர்தம் தகுதியொன்றைக் கருத்தில் கொண்டே நியமித்தல் வேண்டும். என்று அர்த்த சாஸ்திரம் கூறுகிறது. ஆனால் பிற்காலங்களில்மரபுரிமையாக அமைச்சர்கள் பதவிகளைப் பெற்றதாக அறியமுடிகிறது. அமைச்சர்கள் குழுத்துக்குத் தலைவனாக விளங்கியவன் மகாமந்திரி என்று அழைக்கப்பட்டான், வைதீக மன்னரவையில் புரோகிதர் எனப்பட்ட இராஜகுரு பெருஞ் செல்வாக்குப் பெற்றிருந்தார், ஒரு கருமத்தைப் பற்றி அரசன் இறுதி முடிவு எடுத்தற்கு முன்னர் மறைவில் தன் புரோகிதனோடு கலந்தாலோசிக்க வேண்டும் என்று யாக்ஞவல்கியம் கூறுகிறது. படைத்தலைவன் சேனாபதி என்று அழைக்கப்பட்டான். அரசனது கட்டளை மக்களுக்கு அறிவிப்பதற்கு ஊருவினைஞர், செயலாளர் போன்ற அலுவலர்களும் செய்தனர்., இவ்வாறு அரசனது பல்வேறு தொழிலாளர்களைக் கொண்ட பெரும் நிறுவனமாக இருந்து நாட்டை நன்முறையில் ஆட்சி செய்தது.

இந்துக்களின் அரசியல் நெறி பற்றிய கருத்துக்களைத்

திருக்குறள்

"படைகுடி கூழ் அமைச்சு நட்பு அரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு"

எனக் கூறுகிறது.

அரசியற் கொள்கையாளன் ஆதரித்து வந்த ஒரு பாகுபாட்டின் படி அரசு, அமைச்சு, நட்பு பொருள் (கூழ்) நாடு (குடி) படை, அரண் ஆகியன அரசியலுறுப்புக்களாகக் கொள்ளப்பட்டன. இவ்வேழையும் மனித உடலுறுப்புக்களோடு நூல்கள் சில சமயங்களில் தொடர்புபடுத்துவதைக் காணலாம். அரசு என்பது அரசனைக் குறிக்கும். அரசன் தலையாகவும், அமைச்சு கண்ணாகவும், நட்பு செவியாகவும், பொருள் முகமாகவும், படை மானமாகவும், அரண் கையாகவும், நாடு காலாகவும் கருதப்பட்டது. அர்த்த சாஸ்திரம் இவ்வேழுடன் எட்டாவதாகப் பகையையும் சேர்த்துக் கூறுகிறது.

அர்த்த சாஸ்திரம் 'உதவி இருந்த வழியே அரசாட்சி நடைபெறும்' எனக்கூறி அமைச்சரின் தேவையை வற்புறுத்துகிறது. திருக்குறள் அமைச்சனானவன் வினை செய்யுங்கால் அதற்கு வேண்டும் கருவிகளும் அதற்கேற்ற காலமும் அது செய்யுமாறும். செய்யப்படும் வினையும் என்னவல்லவனாக இருக்க வேண்டுமென்பதை

"கருவியும் காலமும் செய்கையும் செய்யும்
அருவினையும் மாண்டது அமைச்சு" என்று கூறுகிறது.

அரசனும் அமைச்சனும் ஆளப்படுவதாய் நாடு பற்றிக் கூறுமிடத்து வள்ளுவர்,

"பிணியின்மை செல்வம் விளைவு இன்பம் ஏமம்
அணி என்ப நாட்டிற்கு இவவைந்து'

என்ற குறளைத் தருகிறார். நோயின்மையைத், செல்வம், விளைதல் இன்பம் காவல் என்ற ஐந்தும் நாட்டிற்கு அணி. அதாவது அழகு என்று கூறுகின்றார்.

இவ்வாறு இந்துக்களின் அரசியல் பற்றி அறிகின்றபோது அரசனே எல்லாவிதமான நீதிக்கும் ஊற்றாக விளங்கினான் என்பதையும் கூறலாம். நீர்நிர்வாகங்களை அரசனே அறங்கூறும் அவைகளாகிய நீதிமன்றங்களுக்குத் தலைவனாக இருந்தான். அர்த்த சாஸ்திரம் மூவர் நியாய அதிகாரிகள் அமர்ந்து நீதி வழங்கும் நீதிமன்றம் பத்து ஊர்களுக்கு ஒன்றாக நிறுவப்படல் வேண்டும் என்றும் மாவட்டங்களுக்கும் மாகாணங்களுக்கும் உயர்மன்றங்கள் நிறுவப்படல் வேண்டும் என்று கூறுகிறது. மெகத்தனிஸ், பாஹியன் போன்றோர் 'இந்தியர்கள் வியக்கத் தக்கவாறு சட்டத்துக்கமைந்து ஒழுகுந்தன்மையுடையவரென்றும் குற்றங்கள் மிக அருகியே காணப்பட்டன' என்று கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பண்டையகாலந்தொட்டு அரசியல் நிறுவனங்கள் இருந்தமையையும், அந்நிறுவனங்களுக்குத் தலைவனாக அரசன் விளங்கியமையையும் அரசின் பல்வேறு அம்சங்களையும் அவை நீதி நிர்வாகம் ஆகியவற்றில் சிறந்து இருந்தமையையும், அறியலாம். இத்தகைய சிறந்த கொள்கைகளையுடைய அரசியல் நிறுவனங்கள் இந்து நாகரிக வளர்ச்சியில் பெரும்பங்கு வகித்துள்ளன என்று கூறலாம்.

(33) சமணத்தினதும் பௌத்தத்தினதும் தொடர்பால் இந்துமதத்தில் நிகழ்ந்த பிரதி பலிப்புக்கள் பற்றி விளக்கிக் கூறுக.

இந்தியாவில் தோற்றம் பெற்ற மதங்களில் இந்து மதமும் சமண, பௌத்த மதங்களும் முக்கியத்துவம் பெறுபவையாகும். சமண பௌத்த மதங்கள் வேதங்களை ஏற்றுக்கொள்ளாத அவைதீக மதங்களாகும். இந்துமதம் வேதத்தை ஏற்றுக்கொள்வதனால் வைதீகமதம் என்று அழைக்கப்படுகின்றது. சமணமும், பௌத்தமும் கடவுள் உண்மைக்கு இடம்கொடுப்பதில்லை. இந்துமதம் கடவுள் உண்மைக்கே மிகமுக்கியத்துவம் கொடுத்தமதம். சமணர்கள் சீவன், அசீவன் என்ற இருபொருள் உண்மையை விளக்குவர். சீவன் உயிரையும், அசீவன் உலகத்தையும் குறித்து நிற்கும். பௌத்தம் 'மாற்றந்தான் உண்மை நிலைபே

(34) சாக்தமதம் பற்றிய முக்கிய கருத்துக்களைத் தொகுத்துக்கூறி, அந்தமதம் இன்றுள்ள சைவசமயத்தில் எவ்வாறு தாக்கம் விளைவித்துள்ளது என்பதை விளக்குக.

சக்தியை பரம்பொருளாகக் கொள்ளும் மதம் சாக்தம் எனப்படும். இது மிகத் தொன்மைவாய்ந்த மதப்பிரிவுகளில் ஒன்றாகும். மொஹஞ்சதாரோ, ஹரப்பா முதலிய இடங்களில் நிகழ்த்தப்பட்ட அகழ்வாராய்ச்சியின் பயனாகக் கிடைத்த பலபொருட்களில் இருந்து அக்காலப் பெண் தெய்வ வணக்கம் பற்றி அறியமுடிகிறது. இருக்குவேதத்தில் உஷ, இராத்திரி போன்ற தெய்வங்கள் பெண்தெய்வங்களாகப் போற்றப்பட்டன. இருக்குவேதப் பாடல் ஒன்றில் சூரியன் பார்வதியைப் பரப்பிரம்மாக அழைத்ததாகக் குறிப்புண்டு. அத்துடன் பிரமம் தனக்குள் வேறுபடாத சக்தியை, படைப்புக்குரிய பீஜத்தைத் தானே ஏற்படுத்திக் கொண்டது. என்றும் கூறப்பட்டுள்ளது. சுவேதாஸ்வதர உபநிடதத்தில் சக்தி தத்துவம்பற்றிக் கூறப்பட்டுள்ளது. புராணங்களிலும் சக்திவழிபாடு பற்றி கூறப்பட்டுள்ளது. தேவி பாகவதம் தேவியின் பெருமை, விரதம், காயத்திரி கவசம், காயத்திரி சகஸ்ரநாமம் முதலியன பற்றிக் கூறுகிறது. சாக்தமதக் கொள்கைகளை விளக்கும் சிறப்பு வாய்ந்த நூல்கள் சாக்த ஆகமங்களாகும். இவை தந்திரங்கள் என அழைக்கப்படும். எண்ணிக்கையில் எழுபத்தேழு ஆகும். இவற்றைத் தரிசனங்கள் எனவும், தாந்திரீக நூல்கள் அழைப்பர். தந்திர சாரம், சாரதாதிலகம், மகாநிர்வாண தந்திரம், குலார்ணவம், பிரபஞ்ச சாரம் போன்றன அவற்றுள் சிலவாகும். தாந்திரீக நூல்களில் சக்தி சிவனின் துணைவியாகக் கூறப்படுகிறாள். இச்சக்தி இறைவனில் இருந்தும் பிரிக்கமுடியாத ஒன்றாகும். அவனது இயல்பு சத், சித், ஆனந்தம் ஆகும். இச்சக்தி சிவனது ஆற்றலாக விளக்கப்படும்போது காளி, துர்க்கை, கமலா, ஜகத், மாதங்கி, உமை, பார்வதி போன்ற பெயர்களைப்பெறுகிறாள். தமிழ் இலக்கியங்களிலும் பெண் தெய்வ வழிபாடு பற்றிய குறிப்புகள் இடம்பெறுகின்றன. சங்க இலக்கியங்களில் சக்தி கொற்றவை என்ற பெயரில் அழைக்கப்படுவதனைக் காணலாம். பாலைநிலத்திற்குரிய தெய்வமாகிய கொற்றவையை மக்கள் குரவைக் கூத்தின் மூலம் வழிபட்டனர். கொற்றவைக்குப் பலிகொடுத்து வணங்கும் வழக்கமும் இடம்பெற்றது. சிலப்பதிகாரத்தில் கவுரி, அமரி, சமரி, சூலி, நீலி போன்ற பெயர்களினால் அழைக்கப்படுவதனைக் காணலாம்.

தத்துவ ரீதியில் பார்த்தால், சாக்த தரிசனம் என்பது ஒருவகை இருமை இன்மைத் தத்துவம் ஆகும். அதன்படி உள்பொருளானது இரண்டல்ல (அத்வைதம்) அது சத், சித், ஆனந்தம் என்ற இயல்புடையது. அதாவது நித்தியமான உள்பொருள், பூரணமான அறிவுடைய பொருள், ஆனந்த மயமான இயல்புடையது. மாயையின் சக்தி காரணமாக இந்த இருமையற்ற உள்பொருள் பன்மைப் பொருளான உலகமாகக் காட்சி தருகிறது. இதுவரை சாக்த அத்துவைதம் சங்கரரின் அத்துவைதத்தோடு ஒற்றுமையுடையதாய் இருக்கிறது. சாக்தக் கொள்கைப்படி மாயை ஓர் உண்மைச் சக்தியாகவும், அதுவே பலவாகத் தோன்றும் பிரபஞ்சமாகத் தன்னை வெளிக்காட்டி நிற்கிறது. சிவன் அறிவின் ஆதாரம் சக்தி அதன் ஆற்றலாகும். சிவன் உலகத் தோற்றத்திற்கு அடிப்படையாக இருக்கும்போது, சக்தி இதனை இயக்கும் தத்துவமாக விளங்குகிறது. சக்திக்கு சிற்சக்தி, மாயாசக்தி என்ற இரு அம்சங்கள் உண்டு. சிற்சக்தி ஒளிமயமானது, அல்லது அறிவுமயமானது. மாயா சக்தி என்பது அதே அறிவு தன்னை மறைத்து உலகை வெளிப்பாட்டுவது.

சாக்தர்களது ஆன்மா பற்றிய கருத்துக்களை ஆராய்ந்தால் அவை பசு, வீரம், திவ்யம் எனமூன்றுபிரிவுகளை உடையவை என சாக்த தந்திரங்கள் கூறும். திவ்யம் என்றால் தெய்வீகத்தன்மை என்று பொருள்படும். பசு என்றால் தளை நீங்கப்பெறாத ஆன்மா. சாதனைத்தால் இந்த ஆன்மா படிப்படியாக வீர, திவ்விய ஆன்மா என்றநிலைக்கு செல்லுதல் வேண்டும். இதன் மூலம் ஆன்மாதன் விலங்கியல்பை விடுத்து முற்றிலும் தெய்வீகத் தன்மை வாய்ந்த தன்மையைப் பெறவேண்டும். முக்குணங்களின் அடிப்படையில் இதனை விளக்குவதாயின் தாமசத்தை இராஜசத்தாலும், இராஜஸத்தை சாத்வீகத்தினாலும் வெல்லவேண்டும். ஆன்மாக்கள் பின்பற்றவேண்டிய ஒருவகையான ஆசாரங்களைப்பற்றிக் கூறுகிறது, அவை வேதம், வைணவம், சைவம், தட்சிணம், வாமம், சித்தாந்தம், கௌலம் என்பனவாகும். இவற்றுள் முதல் மூன்றும் பசு ஜீவன்களுக்கென்றும், அடுத்த இரண்டும் வீர ஜீவனுக்கென்றும், கடைசி இரண்டும் திவ்விய ஜீவனுக்கு என்றும் ஏற்பட்டவை.

முதல் மூன்று ஆசாரங்களான வேதம் , வைணவம், சைவம் ஆகியன முறை கர்மம், பக்தி, , ஞானம் ஆகிய மூன்று மார்க்கங்களுக்கென்றே ஏற்பட்டவை. வேதத்தில் சடங்குகளும், வைணவத்தில் தியானமும், சைவத்தில் ஞானமும் கூறப்பட்டுள்ளன. தட்சிணச்சாரத்தில் முதல் மூன்று மார்க்கத்திலும் அடைந்த முன்னேற்றத்தைப் பாதுகாக்க முயற்சி எடுக்கப்படுகிறது. இதுவரை முன்னேறிவந்த நிலை, வாமாச்சாரத்தில் பின்னோக்கிச் செல்கிறது. இந்த ஆசாரத்தில் மதுவையும், மங்கையையும் பயன்படுத்துகின்றனர். இதில் இடம் பெறும் சடங்கு 'பஞ்ச தத்துவம்' எனப்படும். அதாவது தெய்வத்திற்கு ஐந்து வகையான பொருட்கள் வழங்கப்படுகின்றது. இவை மது (மத்யம்), புலால் (மாமிசம்), மீன் (மர்சயம்), தானியம் (முத்திரை), மாது (மைதுனம்) என்பனவாகும். இவை சம்ஸ்கிருதத்தில் 'ம' எனும் எழுத்தோடு தொடங்குவதனால் இச்சடங்கு 'பஞ்சமகாரம்' எனப்படும். இவ்வழிபாட்டு முறைகள் இராஜஸமுறையில் அமைகின்றன. இவ்வழிபாட்டு முறையின்படி முதலில் வழிபடுபவர்கள் மது, மாமிசம் முதலிய பொருட்களில் பற்று வைத்துப் பின்னர் தமது பற்றினை நக்தியிடம் திருப்புவது அவர்களின் இலட்சியமாகும். பின் இந்நிலையைக் கடந்து ஆன்மா திவ்ய நிலையை அடையும்.

சாக்தர்களது கொள்கைப்படி மகாதேவியே உலக முதல்வி. இத்தேவியின் பல்வேறு மூர்த்தங்களை அவர்கள் வணங்குவர். தேவி, பார்வதி, கௌரி, சதி, , துர்க்கை, பைரவி, சாமுண்டி, குமரி, காளி, கபாலி. , சண்டி, கார்த்தியாயினி, விஜயை, பவானி போன்ற உருவங்கள் வழிபாட்டுக்குரியவை. புரட்டாதி மாதத்தில் வரும் நவராத்திரியை வட இந்தியாவில் '<u>தசரா</u>' என்று அழைப்பர்.

ஸ்ரீ லலிதா சகஸ்ரநாமம், தேவிசூக்தம், துர்க்கா சூக்தம், போன்ற தோத்திரப்பாடல்களால் இத்தெய்வத்தை வணங்குவர். சாக்தர்களுக்குரிய சமயதீட்சை, வழிபாட்டுமுறை என்பன வேறாக உள்ளன. இவர்களது பூசையில் முக்கியமானது யந்திரபூசை, சக்கர பூசை என்பனவாகும். இயந்திர வடிவத்திலோ கோடுகளிலானான சக்கர வடிவத்திலோ தியானித்து வழிபடுகிறான். சடங்குகளோடு கூடிய வழிபாட்டு முறை மிகவும் சிறந்தது. ஒருவன் முதலில் தனது உடலை சுத்தம் செய்தல் வேண்டும். இது பூதசுத்தி எனப்படும். பின் மந்திரங்களை உச்சரித்துக்கொண்டு உடலின்பல பாகங்களையும், விரல் நுனியாலும், வலக்கையில் உள்ளங்கையாலும் தொடுதல் வேண்டும். இது <u>நியாசம்</u> எனப்படும். பின்னர் விக்கிரகத்தில் தெய்வப் பிரசன்னத்திற்காக வேண்டி நிற்பான். இதற்குப் <u>பிராணப்பிரதிஷ்டை</u> என்று பெயர். பின்னர் வழிபாடு செய்பவன் தன் மனதில் உள்ள எண்ணங்கள், ஆசைகளை கைகளின் மூலம் குறிக்கிறான். இது <u>முத்திரை</u> எனப்படும். இவையாவும் முடிந்தபின்னர் விக்கிரகத்தை நீராட்டி, அலங்கரித்தல் வேண்டும். இதன் மூலம் ஒருவன் மனதைத் தூய்மைப்படுத்தி இறைவனை நோக்கித் திருப்புகிறான். இதனால் ஆன்மா தான்பரமான்மாவில் இருந்தும் வேறுபட்டது அன்று என்ற உண்மையை உணர்ந்துகொள்ள வேண்டும்.

சாக்த தரிசனத்தில் பெண்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டுள்ளது. பெண்களை இம்சிப்பதையும், சாதி (உடன்கட்டை ஏறுதலையும்) வழக்கத்தையும் தடைசெய்கின்றன. வேள்விகளில் பெண்மிருகங்கள் கொல்லப் படக்கூடாதெனக் கூறுகின்றன. மகா நிர்வாண தந்திரம் தனது மனைவியைக் கொடூரமாகப் பேசுபவனும், திருமணத்திற்கு முன் பெண்களது கல்வியைக் கட்டுப்படுத்துபவனும் ஒருநாள் முழுவதும் உண்ணாநோன்பு இருக்கவேண்டும் எனக் கூறுகிறது.

சாக்தர்கள் போற்றும் பரம்பொருளான சக்தி சிவனுடன் தொடர்புடையதாய் உள்ளது. இறைவனை உலகப்படைப்பில் சம்பந்தப்படுத்துவது சக்தி தத்துவம் ஆகும். சைவசமயத்தைப் பொறுத்தமட்டில் உலகம் உள்பொருள். அது இறைவனால் இறைவனது சக்தியைத் துணையாகக் கொண்டு படைக்கப்படுகிறது. அதாவது ஆன்மாக்கள் பாசங்களில் இருந்து விடுபட்டு, இறையருள் பெற்று மோட்சத்தை அடைவதைக் குறிக்கோளாகக் கொண்டே உலகம் படைக்கப்படுகிறது. இதனை நிறைவேற்றும்பொருட்டு இறைவன் தனது சக்தியுடன் பிரிப்பின்றி நிற்பன்.

என்பது பொய் அடிப்படையில் எதுவுமே உண்மையில்லை' என்று சூன்யவாதம் பேசுகிறது, இந்துமதம் கடவுள், ஆன்மா, உலகின் இன்மையைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு சமண, பௌத்த மதங்களுக்கும் இந்துமதத்திற்கும் அடிப்படைத் தத்துவக் கருத்துக்களில் வேறுபாடு காணப்பட்டாலும், இந்துமதங்களுக்கிடையே ஒற்றுமைகளும் காணப்படுகின்றன. சமண, பௌத்த மதங்கள் போதித்த அறக்கருத்துக்கள் பலவற்றை இந்துமதம் தனது கருத்துக்களாக ஏற்றுக்கொண்டது.

புத்தரது போதனைகளை அடிப்படையாகக் கொண்டது பௌத்தமதமாகும். உலகநிகழ்ச்சிகள், வாழ்க்கையில் நிகழும் துன்பங்களை அவதானித்த புத்தர் துக்கம், துக்கோற்பத்தி, துக்கநிவாரணம், துக்கநிவாரண மார்க்கம், ஆகியவற்றை ஆராய்ந்து துக்கத்தினின்றும் விடுபட்டார். இவைபற்றி மக்களுக்கு போதித்தார். ஆசை அல்லது பற்றே துன்பத்திற்குக் காரணம் ஆசைகளை முற்றாக நீக்கினால் துன்பத்தினின்றும் விடுபடலாம். இதற்கு புத்தர் எட்டு வகையான மார்க்கங்களைகூறுகிறார். அவை நன்நோக்கு, நற்சிந்தனை, நல்வார்த்தை, நற்செய்கை, நல்வாழ்க்கை, நன்முயற்சி, நற்கொள்கை, நல்லமைதி என்பனவாகும். கடவுள் ஆன்மா உண்மையை ஏற்றுக்கொள்ளாத பௌத்தம், கன்மம் மறுபிறவி பற்றிக், கூறுவது குறிப்பிடத்தக்கது. பிறவிக்குக் காரணம் பற்றென்பதை

"பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்
பிறவார் உறுவது பெரும்பேரின்பம்
பற்றின் வருவது முன்னது' பின்னது
அற்றோர் உறுவது" என்று மணிமேகலை கூறுகிறது.

இவ்வாறு பௌத்தம் கூறும் கருத்துக்கள் இந்துமதத்திற்கும் ஏற்புடைய கருத்துக்களேயாகும். இந்துமதம் இருவினைஒப்பு, கர்மயோகம் பற்றிக் கூறுவது. இருவினை ஒப்பு, நல்வினை, தீவினை இரண்டையும் சமமாக நோக்கும் பற்றற்ற நிலையாகும். கர்மயோகம் பற்றற்ற செயலாகும். கீதை கூறும் 'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே அதன் பலனுக்கு நீ உரிமையுடையவனல்லன்" என்ற வாக்கியங்களைக் குறிப்பிடலாம். இவ்வாறு பௌத்தத்திற்கும் இந்துமதத்துக்கும் இடையே தொடர்பபு காணப்படுகிறது.

சமயமதம் வர்த்தமான மகாவீரரினால் ஸ்தாபிக்கப்பட்டது. சமணமும் கன்மம் மறுபிறவி பற்றிக் கூறுகிறது. மனம், வாக்கு, காயம் மூன்றினாலும் உண்டான வினைகள் உயிருடன் கலந்து விடுகிறது. பழுக்கக் காய்ச்சிய இரும்பில் நீரைத் தெளித்தால் இரண்டும் ஒன்றுபடுவது போலவும், பாலுடன் நீரை கலந்தால் இரண்டும் ஒன்றுபடுவது போலவும் வினைகள் உயிருடன் கலந்து பிறவியைக் கொடுப்பதாக சமணம் கூறுகிறது. நல்வினை, தீவினை ஆகிய இருவினைகளினின்றும் விடுபட்டுப் பிறவியினின்றும் விடுபடவும் முடியும் பழைய கன்மங்களைத் துய்க்கும்போது புதிய கன்மம் சேராதபடி தடுக்க வேண்டும், . நீலகேசி

"வரும்பாவம் எதிர்காத்து மன்னும்தம் பழவினையும்
ஒழுங்காக உதிர்த்தக்கால் உயிர்தூய்மை விடேல்" எனக் கூறுகிறது.

கன்மத்தினின்றும் விடுபடுவதற்கு நற்காட்சி, நல்ஞானம், நல்லொழுக்கம் கூறப்பட்டுள்ளன. சமணத்திலும் பௌத்தத்திலும் கொல்லாமை களவு, செய்யாமை, கள்ளாண்மை, புலாலுண்ணாமை, களவு வழியில் சிற்றின்பம் துய்க்காமை என்ற பஞ்சசீலங்கள் கூறப்பட்டுள்ளன. இந்துமதமும் கள்ளுண்ணுதல் உயிர்களைக் கொல்லுதல், களவு செய்தல், புலாலுண்ணுதல், களவு வழியில் சிற்றின்பம் துய்த்தல் போன்ற ஐந்தையும் பஞ்சமாபாதகங்கள் என்று கூறுகிறது. ஆரம்பத்தில்இந்துமதத்தில் வேள்விக்கிரியை சிறப்புற்றிருந்தன. இக்கிரியைகளில் உயிர்க்கொலைகள் மிகுதியாக இடம்பெற்றிருந்தன. எனவே புத்தர் யாகக்கிரியைகளை மறுத்துப் போதனைசெய்தார். ஒழுக்கத்திற்கே முதன்மை கொடுத்தார், இக்கருத்துக்கள் மக்களைப் பெரிதும் கவர்ந்தமையினால் இந்துமதம் தனது செல்வாக்கை இழந்தது. ஆனால்காலப்போக்கில் புத்தரது போதனைகளை இந்துமதம் தனது மதக்கருத்துக்களாகவே ஏற்றுக்கொண்டது. இவ்வாறு சமண, பௌத்த மதத் தொடர்பினால் பல அம்சங்கள் இந்துமதத்தில் இடம்பெற்றுள்ளன. சமணர் பௌத்தர் ஆகிய இரு சமயத்தாருமே எல்லா உயிர்களையும் பொதுப்படத் தாக்கி அவற்றிடம், அன்பையும் அருளையும் காட்டுவதையே தம் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர். தரையின்மேல் நடந்துபோகும் ஈ, எறும்புக்கும் எவ்வித ஊறும் நேரிடாதவாறு சமணர்கள் மயிர்பீலியால் தரையைத் தடவிக்கொண்டே

நடப்பர். இரவில் விளக்கேற்றி வைத்தால் விட்டில்கள் விழுந்து இறந்துபோம் என்று அஞ்சிமாலையில் விளக்கேற்று முனபே அவர்கள் உணவுண்பது வழக்கம், கொல்லாமையாகிய நோன்பை சமணர்கள் வழுவாது நோற்றுவந்ததுடன் மக்களுக்கும் விரித்துரைத்தனர். இக்கருத்துக்கள் மக்கள் மத்தியில் மிகுந்த செல்வாக்கைப் பெற்றிருந்தாலும் சமணமும் பௌத்தமும் கடவுட் கொள்கைக்கு இடம்கொடுக்காமையினால் மக்கள் மத்தியில் செல்வாக்குப்பெற்ற மதங்களாகத் தொடர்ந்து வளர்ச்சியடைய முடியவில்லை. இந்நிலையில் இக்கொள்கைகள் இந்து மதத்தில் கலந்து விட்டன என்றே கூறவேண்டும். எனவே இந்துமதத்தில் கொல் லாமை என்ற அறம் முக்கியத்துவம் பெற்றது. மாமிசத்தைவிட்டு சைவ உணவை உண்டனர்.

பௌத்த சமணக் கொள்கைகளை இந்துமதம் ஏற்றுக்கொண்ட துடன் புத்தரையும் திருமாலின் ஒரு அவதாரமாக ஏற்றுக்கொண்டனர். பௌத்த ஜாதகக்கதைகள் புத்தரது பிறப்புப் பற்றிக் கூறுகின்றன. புத்தரது பிறப்புக் களுக்கும் விஷ்ணுவின் அவதாரங்களுக்குமிடையே தொடர்பிருப்பதைக் காணலாம். புத்தஜாதகக் கதைகளில் ஹம்ஸ ஜாதகமும் ஒன்றாகும். இது புத்தர் அன்னப் பறவையாகப் பிறந்து அரசனுக்கும் மக்களுக்கும் அறமுரைத்தார் என்று கூறுகிறது. வைஷ்ணவர்களுக்கும் திருமால் அன்னப் பறவையாகப் பபிறந்து அறமுரைத்தார் எனக் கூறுகின்றனர், திருமங்கையாழ்வாரின் பாசுரங்களிற் இக்கதை கூறப் பட்டுள்ளது. அன்னமாய் அங்கு அருமறை பயந்தான்.

"அன்னமாய் அங்கு அருமறை பயந்தான்
அரங்கமாநகர் அமர்ந்தானே" என்றும்

"ஏன்னி மண்ணும் விண்ணேடும்
தோன்றுற இருளாய் மூடியதான்
அன்னமாகி அருமறைகள்
அருளிச் செய்த அமலன்" எனவும் கூறுவதைக் காணலாம்.

சமண பௌத்த மதங்கள் சாதிக்கு இடம் கொடுக்காதவை. இந்துமதத்தை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தில் பிராமணர், சத்திரியர் வைசியர், சூத்திரர் என்ற நால்வகை வருணப்பாகுபாடு இடம்பெற்றதுடன், சூத்திர வகுப்பினர் ஏனைய வகுப்பினர் அனுபவித்த சமூக பொருளாதார சமய உரிமை களை இழந்துவிட்டனர். எனஇவ பௌத்தர் சமூக சமய சீர்திருத்தவாதியாகத் தோன்றி ஆத்மீக வளர்ச்சிக்கு சாதி அடிப்படை அத்தியாவசியமற்றது என்பதை விளக்கினர். புத்தர் ஒரு தனி மனிதன். அறக்கோட்பாட்டினால் மட்டும் உயர்ந்தவனாக வரலாம். சாதிவேறுபாடின்றி தனது சங்கத்தில் சேர்த்துக் கொள்ளும் உரிமையை வழங்கினர். சமயர்களும் சாதிவேறுபாடின்றிப் பள்ளிகளில் அனைவருக்கும் கல்வியைப் போதித்தனர். இத்தகைய சமண, பௌத்தக் கொள்கை கள் மக்களைப் பெரிதும் கவரக்கூடியனவாக இருந்தமையினால் அம்மதங்களும் மக்கள் மத்தியில் செல்வாக்குப் பெற்று விளங்கின. இத்தகைய சமணத்தையும் பௌத்தத்தையும் வெல்ல முயன்ற இந்துமதத்திலும் அத்தகைய கொள்கைகள் இருத்தல் இழிவென்று கருதி அதனை விலக்கினர். பக்தி இயக்கத்தில் ஈடுபட்ட அடியார்கள் சாதிபேதத்துக்கு இடம் கொடாமை குறிப்பிடத்தக்கது 'ஆவுரித்துத் தின்றுழலும்புலையரேனும் கங்கைவார் சடைக் கரந்தார்க்கன் பரதகில் அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுயாரே' என்று அப்பர் கூறியுள்ளமையைக் காணலாம். இவ்வாறு சமண, பௌத்தமதக் கொள்கைகளில் சிறந்தவாற்றை இந்துமதம் தனது கொள்கையாக ஏற்றுக் கொண்டுள்ளது.

சமய, பௌத்த மதத்தைக் சார்ந்த அறிஞர்களும் துறவிகளும் பள்ளிகள், சங்கங்கள், மடங்கள் அமைத்து மக்களுக்கு சமயக்கல்வியை இலகுவில் பரப்ப முடிந்தது. இதனைப் பின்பற்றி இந்துத் துறவியரும் மடங்களை அடிப்படையாகக் கொண்டு சமய உண்மைகள், நூல்களை மக்களுக்குப் போதித்தனர். குருபரம்பரையினர் மூலமாகத் தத்துவக் கருத்துக்கள் போதிக் கப்பட்டு வளர்ச்சியடைந்து வந்தன.

இவ்வாறு சமண, பௌத்த மதங்களின் தொடர்பாக இந்து மதத்தில் பல்வேறு அம்சங்கள் கலந்து அம்மதத்தின் வளர்ச்சிக்கும் சிறப்புக்கும் காரணமாயிற்று என்று கூறலாம்.

மேலும் சைவக்கொள்கைப்படி ஆன்மாக்கள் தமது உயர் குறிக்கோளை அடைவதாயின், அவை தாம் செய்த நல்வினை தீவினைகட்குரிய பலன்களை அனுபவித்தே ஆகவேண்டும். எனவே ஒவ்வோர் ஆன்மாவும் தாம் செய்த கர்மப்பலன்களைத் தாமே பெற்று பிறப்பு இறப்புக்குட்படல் வேண்டும். எனக்கூறும் சைவதத்துவம் இறைவன் ஆன்மாக்களுக்கு பிறப்பு இறப்புக்களைக் கொடுக்க தனது சக்தியுடன் பிரிப்பின்றி நிற்பன் என்கிறது. இதனை சிவஞானபோதம்:

"இருவினையில் போக்கு வரவு புரிய
ஆணையின் நீக்கமற நிற்குமன்றே" என்று கூறுகிறது.

இவ்வாறு சக்தி சிவத்தோடு தொடுதொடர்புடையதாய், பிரிக்கமுடியாதபடி இணைந்து நிற்கும். சிவம் இன்றி சக்தி இல்லை. நசக்தி இன்றி சிவமில்லை. என்று கூறக்கூடிய வகையில் சக்தி சிவனது ஆற்றலாக சிவனிடமிருந்து பிரிக்கமுடியாத பொருளாக விளங்குகிறது.

இவ்வாறு சக்திவழிபாடு சக்தி தத்துவம் சிவனோடு இணைந்து சைவத்தில் பெருஞ்செல்வாக்குப் பெற்றுவிட்டமை குறிப்பிடத்தக்கது.

(35) மேல்வருவன பற்றி விரிவான விளக்கக் குறிப்புகள் வரைக.

அ. உபநயனம்

இந்து ஒருவனது வாழ்க்கையில் சிறப்புடைய சடங்காகும். பிராமணர், சத்திரியர், வைசியர் என்ற முதல் மூன்று வருணத்தார்கள் மட்டுமே பூணூல் அணியத் தகுதியுடையவர்களாவர். பிராமணர்கள் 8 வயதிலும் சத்திரியர்கள் 11 வயதிலும், வைசியர்கள் 12 வயதிலும் பூணூல் அணியும் தகுதியுடையவர்களாவர். இளஞ் சிறுவன் ஒருவனுக்கு இரண்டாம் பிறப்பை வழங்குவது உபநயனமாகும். பூணூல் அணிந்த ஒருவன் துவிஜன் என்று அழைக்கப்படுகிறான். துவிஜன் என்றால் இருபிறப்பாளன் என்பது கருத்தாகும். காலப்போக்கில் பிராமணர்களுக்கு உரிய மற்றொரு பெயராக இது கொள்ளப்பட்டது. இளஞ்சிறுவன் ஒருவனைத் தனது வருணத்திலும் சமூகத்திலும் முழு உறுப்பினனாக விளங்கவைத்தது இப்பூணூல் சடங்காகும். பூணூல் தரித்தலே சடங்கின்பிரதான அம்சமாகும். சிறுவன் ஒருவன் துறவியின் உடையணிந்து கையில் தண்டொன்றைப் பிடித்துநிற்க அவனது வலத்தோளின் மேலாகவும், இடக்கையின் கீழாகவும் பொருந்தித் தொங்குமாறு பூணூல் அணிவிக்கப்பட்டது. அவ்வாறு அணிவிக்கப்பட்ட பூணூலை அச்சிறுவன் பின்னர் களையாது எப்போதுமே அணிந்திருத்தல் வேண்டும். ஒன்பது இழைகளை ஒன்று சேர்த்து முறுக்கிய நூல் மூன்று சேர்ந்தது இப்பூணூல் ஆகும். இதனால் இது முப்புரிநூல் எனப்படும். பிராமணர்களுக்குரிய பூணூல் பஞ்சினாலும், சத்திரியர்களுக்குரியது சணலினாலும், வைசியர்களுக்குரியது கம்பளியினாலும் செய்யப்படுவதாகும். இது யஞ்ஞோபவீதம் என்ப்பட்டது. பூணூல் சிறப்புமிக்கதோர் சமயச் சின்னமாகக் கருதப்பட்டது. பூணூல் அணிவிக்கும்போது காயத்திரி மந்திரம் ஓதப்பட்டது. இது சவித்திருஎன்னும் பழைய ஞாயிற்றுக் கடவுளை விளித்துப் பாடப்பட்ட பாடலாகும். இவ்வாறு பூணூல் அணிந்த ஒருவனே குருவின் இல்லத்திற்குச் சென்று கல்வியைக் கற்கும் ஆற்றல் உடையோனாக விளங்கினான்.

(ஆ) கௌடில்ய அர்த்த சாஸ்திரம்

பண்டைய இந்துக்களின் அரசியல் நிலைபற்றி அறிந்து கொள்வதற்கு எமக்குக்கிடைத்த மிகப் பழையநூல், கௌடில்ய அர்த்த சாத்திரம். இதனை 4ம் நூற்றாண்டு காலப்பகுதியைச் சேர்ந்த கௌடில்யர் என்பவர் இயற்றினார். கௌடில்யர் சந்திரகுப்த மௌரிய மன்னனுக்கு அமைச்சராக இருந்தவர் ஆவர். சில அறிஞர்கள் இந்நூல் முழுவதையும் கௌடில்யரினால் இயற்றப்பட்டிருக்க முடியாதெனக் கூறுவர். இந்நூல் அரசினைக் கட்டி ஆள்வது பற்றியும் போரினைத் திறப்பட நடத்துவது பற்றியும் மிக விரிவான முறையில் விளக்குகிறது. நாட்டுப்பொருளாதாரத்தை ஒழுங்கு செய்வது பற்றியும் கூறுகிறது. அர்த்த சாஸ்திரம் அரசு பற்றிக் கூறுமிடத்து அதன் அம்சங்களாக அரசன், அமைச்சு, நட்பு, பொருள், படை, அரண், நாடு, பகை என்ற எட்டு அம்சங்களைக் கூறுகிறது.

அரசனது கடமை பற்றி சிறப்பாக விளக்கும் அர்த்த சாஸ்திரம் நாட்டைக் காப்பதை முதற் கடமையாகக் கூறுகிறது. புறப்பகையால் உயிருக்கும் பொருளுக்கும் கேடு தேடாமல் நாட்டை ஆளுதல் வேண்டும் களவினைக் கடிந்து அடக்குவதன் மூலம் செல்வந்தர்களை வறியவர்களிடமிருந்து காப்பாற்றுதல் வேண்டும். வலிந்து பொருள் பறித்தல், வருத்துதல் ஆகிய குற்றங்களுக்குத் தண்டனை விதிப்பதன் மூலம் வறியோர்களைச் செல்வந்தர்களிடம் இருந்துகாப்பாற்றுதல் வேண்டும். கற்றுத் துறைபோய பிராமணர்களுக்கும் கோயில்களுக்கும் மானியங்கள் வழங்குவதன் மூலம் சமயத்தையும் பாதுகாத்தல் வேண்டும் என்று கூறுகிறது. அரசனது நாட்கடமை பற்றி அர்த்தசாத்திரத்தில் கூறுமிடத்து உறங்குவதற்கு நாலரை மணிநேரமும், உண்பதற்கும் பொழுது போக்குவதற்கும் மூன்று மணிநேரமும் எஞ்சிய பாகத்தை அரசியற் கருமங்களைச் செய்வதிலும் செலவழித்தல் வேண்டுமெனக் கூறுகிறது. அரசுரிமை பற்றி அர்த்த சாத்திரம் கூறுமிடத்து மூத்த மைந்தனுக்கே அரசுரிமை செல்லுதல் வேண்டும். எனக் கூறுகிறது. தகியொரு மகனேயாயினும் தீயமகனாயின் அவன் ஒருபோதும் அரசுகட்டில் ஏறலாகாது. என்ற கருத்தைத் தெரிவிப்பதுடன் அரசர்கள் சில வேளைகளில் தம் மூத்த புதல்வர்கள் தீய வழிகளில் சென்றதாலே அவருக்குரிய உரிமைகளை மறுத்து தமக்குப்பின் உரிமைபெற வேண்டியவரைத் தாமே நியமித்தனர். பலமற்ற அரசனின் அவசியமேற்படின் அயலிலுள்ள வலிய அரசனைத் தன் விருப்பப்படியே பணிந்து வழிபடல் வேண்டும் என வலியுறுத்துகிறது. பல்வேறு குற்றங்களுக்குரிய தண்டனைகளைப் பற்றியும் விளக்கிக் கூறுகிறது. இருவர் செய்த போர் காரணமாகவோ சண்டைகாரணமாகவோ புண்பட்டவன் ஏழு நாட்களுக்குள் இறந்துவிட்டால் அக்குற்றத்திற்கு தொலைத்தண்டனை வழங்கப்படல் வேண்டும். பொய்வதந்திப் பரப்புதல் அரசனது யானை, குதிரை முதலியவற்றைத் திருடுதல் போன்ற குற்றங்களுக்குத் தூக்குத்தண்டனை விதிக்கின்றது. அரசனுக்கெதிராகச் சூழ்ச்சி செய்வோர் அரசனுடைய அந்தப்புரத்துள் அடாத முறையில் நுழைவோர் பகையரசர்களுக்குத் துணைபோவோர் தாய் தந்தை உடன்பிறந்தோரைத் துன்புறுத்துவோர் உயிருடன் தீயிலிட்டு எரிக்கப்படுவர் என்று கூறுகிறது. இவ்வாறு அர்த்த சாத்திரம் அரசியல் நிலைபற்றியும் அரசனுக்குரிய கடமைபற்றியும் குற்றங்கள் தண்டனைகள் பற்றியும் விளக்கிக்கூறும் நூலாக உள்ளது.

## (இ) கீதை கூறும் அநாசக்தியோகம்

இந்து சமயத்திற்கும், இந்து தத்துவத்திற்கும் அடிப்படையாக உள்ள நூல்கள் மூன்றாகும். அவற்றைப் பிரஸ்நானத்திரயம் என்று அழைப்பர். அவை உபநிடதம், பகவத்கீதை, பிரமசூத்திரம் என்பனவாகும். இவற்றுள் கீதை ஒரு யோக நூல் என்று கூறக்கூடிய வகையில் கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் என்ற மூன்றுவகை யோகங்களையும் விளக்குகிறது. கர்மயோகமே அநாசக்தியோகமாகும். அநாசக்தி என்றால் பற்றற்ற செயல் ஆகும். பற்றற்ற செயலை கீதையில் கர்மயோகம் என்று சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. யோகம் என்றால் இணைதல் என்றுபொருள்படும். ஆன்மா இறைவனுடன் இணைவதற்குரிய வழியாக கீதை தர்மத்தையும் கூறுவதனால் கர்மயோகம் என்று அழைக்கப்படுகிறது. கர்மம் என்றால் செயல் என்பது கருத்து. செயல் ஒருவனை இருவிதமாகப் பாதிக்கின்றது. நல்லசெயல்கள் நல்ல பலனையும் தீய செயல்கள் தீயபலனையும் கொடுக்கும். பலன் கருதாமல் கடமையைச் செய்தலே கர்மயோகம் ஆகும். பலன்கருதிச் செயலைச் செய்வதே ஒருவனைப் பிறவிக்குட்படுத்தும். பயன்பற்றிப் விருப்பம் இல்லாதவிடத்து செயல் ஒரு தளையாகத் தோன்றாது. இவ்வுலகில் ஒருவனது வாழ்க்கை தாமரை இலையில் தண்ணீர் போன்று இருத்தல் வேண்டும். கர்மயோகத்தை மீண்டும் மீண்டும் அனுஷ்டித்தல் வேண்டும் . சிறுபிள்ளை நடைபழகும் போது இடறி விழுவதுபோல் விழுந்தாலும் இது இறுதியில் அமைதியைத் தருகின்றது. கர்மயோகத்தை கீதை விளக்கும்போது 'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே கடமையைச் செய்வதற்கு மட்டுமே உனக்குரிமை உண்டு அதன் பலனுக்கு நீ உரிமை பாராட்டக்கூடாது. அதே நேரம் கடமையைச் செய்யாமலும் பின்வாங்காதே. நான் எனது என்னும் உணர்வு இருக்கும் வரை வினையாற்றாமல் இருப்பது இயலாது, பலன் கருதாமல் வினையாற்றுபவனே கருமயோகி' என்று கூறுகிறது. இத்தகைய யோகி கர்மம் ஒன்றைப் பெறுதலுமில்லை. கர்மம் செய்யாது எதையாவது இழத்தலும் இல்லை. ஆத்மாவை அடைந்தவன் அதற்குமேல் பெறவேண்டிய ஒன்றுமில்லை பெற்றதை இழப்பதுமில்லை. பற்றற்ற தொழில் புரியும் ஒருவனே பெருநிலையடைகிறான். அவன் ஆசை என்னும் கீழான நிலையிலிருந்தும் உயர்ந்தவன் ஆவான். இத்தகைய ஒருவனை கீதை ஆசிரியன் 'ஸ்திதப் பிரக்ஞன்' என்று

அழைக்கின்றார். இவ்வாறு பற்றற்ற கர்மயோகத்தினால் ஆன்மீக ஈடேற்றத்தைப் பெறமுடியும் என்பதை கீதை வலியுறுத்துகிறது.

(ஈ) பிரதிஷ்டை

ஆகமங்கள் கூறும் கிரியைகளை கர்ஷணம், பிரதிஷ்டை உற்சவம் பிராயச்சித்தம் என்ற நான்கு பிரிவுகளாகப் பிரித்துக் கூறலாம். இவற்றுள் பிரதிஷ்டையை எடுத்துக்கொண்டால் அது அநாவர்த்தன பிரதிஷ்டை ஆவர்த்தனபிரதிஷ்டை புனராவர்த்தனப்பிரதிஷ்டை அந்தரிதபிரதிஷ்டை என்ற நாலு பிரிவுகளை உடையதாக விளங்குகிறது. தேவாலயங்கள் இல்லாத விடத்து ஆகமவிதிப்படி புதியவையாக அமைத்து அங்கு இறைவனைப் பிரதிஷ்டித்தல் அநாவர்த்தனபிரதிஷ்டை எனப்படும். நீண்டகாலத்துக்கு முன் நிர்மாணிக்கப்பட்ட தேவாலயத்தில் நெருங்காலமாக நித்திய, நைமித்திய கிரியைகள் நிகழ்ந்துவரும் வேளை எதிர்பாராதவாறு காடுபடர்தல், மண்மாரிஏற்படுதல், தீபரவுதல் போன்றவை நிகழ்ந்து ஆலயம் மறைக்கப்பட்ட பொழுது அதனை வெளியாக்கியோ அல்லது முன்போல் தேவாலயத்தைப் புதிதாக்கியோ நிர்மாணித்து நிகழ்த்தும் பிரதிஷ்டை ஆவர்த்தனபிரதிஷ்டை எனப்படும். தேவாலயத்தில் நித்திய நைமித்தியகிரியைகள் நடைபெற்றுவரும் வேளை விமானம், கோபுரம், மண்டபம், பிராகாரம் ஆலய விக்கிரகங்கள் ஆகியவற்றில் எவையேனும் வெடித்தோ பிளந்தோ சேதம் ஏற்படின் பாலஸ்தாபனஞ் செய்து பழுதடைந்த கட்டிடங்களை முன்போல் அழகாகவும், பலம் வாய்ந்ததாகவும் திடமானதாகவும் அமைத்துப் பிரதிஷ்டை செய்வதனை புனராவர்த்தனபிரதிஷ்டை என நூல்கள் கூறும். தேவாலயத்தில் மக்கள் எவரேனும் இறந்தால் மிருகங்கள் கொல்லப்படின், வருணச்சிரமம் தவறிப் பிரவேசம் நிகழின் வேதாகமங்களை நிந்திப்பவர்கள் நுழையினும் செய்யப்படுவது பிரதிஷ்டை அந்தரிதபிரதிஷ்டை எனப்படும். பிரதிஷ்டையில் முகூர்த்தநிர்ணயம், திரவியபாகம், கர்ப்பநியாசம், கணேச பூசை, அனுக்ஞை, கிராமசமந்தி, பிரவேசபலி, திசாஹோமம், சாந்தி ஹோமம், மூர்த்தி ஹோமம், ஜலாதிவாசம், அக்கினிகாரியம், பிம்பசுத்தி, பிம்பபிரதக்ஷிணம், யந்திர ஸ்தாபனம், பிம்பஸ்தாபனம் போன்றன இடம் பெற்றுக் கும்பாபிஷேகம் நடைபெறும். சிறந்த பிரதிஷ்டைக்கிரியைகளை நிகழ்த்துவதற்குரியவனு சைவசித்தாந்த தத்துவங்களை அறிந்தவனுகவும், தேவர்களிடத்தும் அக்கினியிடத்தும் குருவிடத்தும் பக்தியுள்ளவனுகவும், நல்லொழுக்க முள்ளவனுகவும் இருத்தல் வேண்டும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.

(உ) ஆணவமலம்

சைவசித்தாந்தம் முப்பொருள் உண்மையை விளக்குகிறது. அவை பதி, பசு. பாசம் எனப்படும். அவற்றுள் பாசம் என்பது ஆணவம், கன்மம், மாயை எனும் மும்மலங்களைக் குறித்து நிற்கிறது. மும்மலங்களிலும் ஆன்மாவை அநாதியாகவே பந்தித்து நிற்பது ஆணவமலம் ஆகையினால் அது மூலமலம் என்று அழைக்கப்படுகிறது. ஆன்மாவுடன் கூடப்பிறந்தது என்ற காரணத்தினால் சகசமலம் எனவும் அழைக்கப்படுகிறது. ஆணவமலம் ஆன்மாவுடன் இணைந்திருப்பதனை நெல்லிலே உமியும் செம்பிலே களிம்பும் போல ஆன்மா என்றுளதோ அன்றில் இருந்தே ஆணவமும் உளது எனக்கூறுவர். இதனை

"நெல்லிற்குமியும் செம்பினிற் களிம்புஞ்
சொல்லிற் புதிதன்று தொன்மையே"

என்ற அடிகள் உணர்த்துகிறது.

ஆணவமலம் ஆன்மாவின் அறிவை அடக்கி இருட்படலம்போல மறைத்து நிற்பதனுல் இதனை இருள்மலம் எனவும் அழைப்பர். உமாபதி சிவாச்சாரியார் இதனை,

இருளானதன்றி இலதெவையும் ஏகப்
பொருளாகி நிற்கும் பொருள்

ஒருபொருளும் காட்டாது இருள்உருவம் காட்டும்
இருபொருளும் காட்டாது இது. எனவும் கூறுகிறார்.

ஒளி எப்பொருளையும் பகுத்தறியும் படிகாட்டும். இருள் எப்பொருளையும் தன்மயமாக்கி இருளேயாக்கிப் பகுத்தறிய முடியாதபடி மறைக்கும். இதுபோலவே ஆன்மாவைப் பற்றிய ஆணவ இருளும் அது தன்னையும் பிறவற்றையும் பகுத்தறிய முடியாதபடி தன்மயமாக்கி மறைத்து நிற்கும். எனக் கூறப்படுகிறது. மேலும் இருளிலே பிறபொருட்களைக் காணாவிடினும் இருளையாவது காணலாம். ஆணவமலத்தொடர்பானது ஆன்மா பிறபொருளையும் காணவிடாது, ஆன்மாவாகிய தன்னையும் காணவிடாது. இருள்மலமாகிய அதன் இயல்பையும் அறியவிடாது. ஆதலால் ஆணவமலம் இருளைவிடக் கொடியது. இத்தகைய ஆணவமலமே ஆன்மாவை மறைத்துநிற்கிறது.

ஆணவம் ஒன்று. அது அநேக சக்திகளை உடையது. இதனை சிவஞானசித்தியார் 'ஒன்றதாய் அநேக சக்தி உடையதாய்" என்ற பாடல் மூலம் விளக்குகிறது.

ஆணவமலத் தொடர்பினால் அறியாமைக்குட்பட்ட ஆன்மாக்கள் கர்மங்களைச் செய்து, அதன் காரணமாகப் பலபிறவிகளுக்கு உட்படுகின்றன. ஆனால் ஆணவம் ஆன்மாவின் குணமன்று. அது ஆன்மாவின் குணமாயின் ஆணவம் அழியும்போது அதனைக்குணமாகக் கொண்ட குணிப்பொருளாகிய உயிரும் அழிந்து விடல் வேண்டும். ஆனால் ஆணவம் அழிந்தாலும் ஆன்மா அழிவதில்லை. எனவே ஆணவம் ஆன்மாவின் குணமன்று, ஆன்மா அறிவை இயல்பாக உடைய சித்துப் பொருள் ஆகும்.

ஆணவமலம் ஆன்மாவுடன் இணைந்திருப்பதன் காரணமாக ஆன்மா உண்மையை உணரமுடியாதுள்ளது. ஆணவக் கலப்பு நீங்கினால் ஆன்மாவுக்கு அறிவு உண்டாகி இறைவனின் திருவருள் கிட்டும் என்று சைவசித்தாந்திகள் கூறுவர். திருமூலர் 'மலக்கலப்பற்றால் மதி ஒளி ஆமே" என்று கூறுகிறார், மலம் பரிபாகம் ஆகும் காலத்தில் அது ஆன்மாவைப் பற்றிக்கமுடியாத அளவுக்கு தன் சக்தியை இழந்துவிடும். இந்நிலையில் இறைவனது அருளைப்பெற்று ஆன்மா இறைவனோடு இரண்டறக் கலந்துவிடுகிறது.

இவ்வாறு சைவசித்தாந்த நூல்களில் இடம்பெறும் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு ஆணவமலம் பற்றி அறியமுடிகிறது.

(36) இந்து தத்துவ வளர்ச்சிக்கு உபநிடதங்கள் நிலைக்களனாக விளங்குமாற்றை ஆராய்க.

இந்து சமயங்கள் அனைத்திற்கும் அடிப்படையாக உள்ளவை உபநிடதம், பிரமசூத்திரம், பகவத்கீதை எனும் மூன்று நூல்களுமாகும். இவற்றைப் பிரஸ்தானத்திரயம் எனக் குறிப்பிடுவது வழக்கம். "பிரஸ்தானத்திரயம்" என்பது 'பிரதானமான மூன்று' என்ற கருத்தை உணர்த்துகிறது. இவற்றுள் முக்கியத்துவம் பெறுபவை உபநிடதங்கள் ஆகும். இந்து சமயங்களுக்கு மட்டுமன்றி இந்திய தத்துவஞானம் முழுவதற்குமே உபநிடதங்களை மூலமாகக் கொள்ளலாம். உபநிடதங்கள் வேத இலக்கிய வரிசையில் ஞானகாண்ட இலக்கியங்கள் என்று போற்றப்படுபவை. இவை வேதங்களின் சாரமாக அமைவதுடன் மெய்ப்பொருள் ஆராய்ச்சிக்கு முதன்மையான இடத்தைக் கொடுக்கின்றன. வேதங்களில் குறிப்பாக இருக்குவேதத்தில் ''உண்மைப்பொருள் ஒன்று அதனை அறிஞர்கள் பலவாறாகக் கூறுவர்' என்ற கூற்று இடம்பெறுகின்றது. இது பரம்பொருள் ஒன்று என்ற கொள்கையை விளக்குகிறது. உபநிடதங்களிலும் மெய்ப்பொருள் ஒன்று, பலவா என்ற ஆராய்ச்சிகள் இடம்பெறுவதையும், மெய்ப்பொருள் ஒன்று என்ற கருத்து முக்கியத்துவம் பெறுவதையும் அவதானிக்கிறோம். மேலும் மனிதனுக்கு அடிப்படையாக உள்ள ஆன்மாவின் உண்மை, அதன் இயல்பு, இலட்சியமாகிய மோட்சம், அதனை அடைவதற்குரிய ஞானமார்க்கம் பற்றிய விளக்கங்கள் இடம் பெறுகின்றன. உபநிடதங்கள் எண்ணிக்கையில் இருநூறுக்கும் மேற்பட்டவை. அறையாவும் பரம்பொருள் பற்றியும், ஆன்மா உலகம் பற்றியுமே கூறுகின்றன. எனவேஉபநிடதங்கள் அனைத்தையும் தொகுத்து, சுருங்கிய நடையில் ஒரு நூலாகச் செய்தால், அதில் இருந்து உபநிடதங்கள் கூறும் தத்துவக் கருத்துக்களை இலகுவாகவும், தெளிவாகவும் விளங்கிக் கொள்ளமுடியும்,

என்று கருதிய பாதராயணர் பிரமசூத்திரம் என்ற பெயரில் உபநிடதங்களைத் தொகுத்து எழுதினர். ஆனால் பிரமசூத்திரம் மிகவும் சுருங்கிய நடையில் அமைந்ததன் காரணமாக, அதிலிருந்து உபநிடதங்கள் கூறும் அடிப்படைக் கருத்து என்ற என்பதையே அறியமுடியவில்லை. இதனால் பிரமசூத்திரத்திற்கு மீண்டும் விளக்க உரைகள் எழுதவேண்டிய தேவை ஏற்பட்டது. இவ்வாறு சங்கரர், இராமானுஜர், மத்துவர் போன்றோர் பிரமசூத்திரத்திற்கு எழுதிய உரை, இன்று சங்கர, இராமானுஜ, மத்துவவேதாந்தக் கோட்பாடுகளாகத் தோற்றம் பெற்றுள்ளன. இந்தவகையில் வேதாந்தக் கோட்பாடுகளின் தோற்றத்திற்கு உபநிடதங்கள் மூலமாக அமைந்துள்ளன. தென்னாட்டு சமய மரபாகிய சைவ சித்தாந்தமும், வேதஉபநிடதங்களைப் பொது நூலாகக் கொண்டுள்ளது. இதனால் 'வேதாந்தம் தெளிவாம் சைவசித்தாந்தம்' என்று கூறப்படுகிறது. இந்துதத்துவங்களுக்கு மட்டுமன்றி இந்திய தத்துவங்களுக்கும் உபநிடதங்கள் மூலமாக அமைந்தன என்று கூறமுடிகிறது. இந்திய தத்துவஞானிகளில் ஒருபிரிவினர் வேத உபநிடதங்களிற் கூறப்பட்ட கருத்தை ஏற்றுக்கொள்வர். மறுபிரிவினர் வேத உபநிடதங்களை ஏற்கமறுத்து, அம்மறுப்பை அடிப்படையாகக் கொண்டு தமது தத்துவங்களைத் தோற்றுவித்தனர். உலகாயதம், சமணம், பௌத்தம் போன்றன வேத உபநிடதங்களுக்குமறுப்பாகத் தோன்றிய தத்துவங்கள் ஆகும். எனவே உபநிடதங்கள் நேரடியாக அன்றி மறைமுகமாகவேனும் இத்தத்துவங்களின் தோற்றத்திற்கு வழிவகுத்தன என்று கூறலாம். இந்த வகையில் இந்திய தத்துவ ஞான வரலாற்றில் உபநிடதங்களின் பங்கு மிக்க் குறிப்பிடத்தக்கதாகும். இந்தியதத்துவங்கள் அனைத்திற்கும் உபநிடதங்கள் நிலைகளனாக அமைகின்றன என்று கூறின் அது மிகையாகாது.

இந்து மதக்கோட்பாடுகளில் பெரும்பாலும் மூன்று பொருட்களைப் பற்றிய ஆராய்ச்சியே அடிப்படையாக அமைகின்றன. அவை கடவுட் கோட்பாடு, ஆன்மக்கோட்பாடு, பிரபஞ்சக் கொள்கை என்பனவாகும். இவற்றுள் ஆன்மா மனிதனுக்கு அடிப்படையாக உள்ள சக்திஆகும். மனிதன், மனிதன் வாழும் உலகம், அவனது உயர் குறிக்கோள், அதனை அடையும் வழி, அதற்கு கடவுள், உலகின் இன்றியமையாமை ஆகிய விடயங்கள். ஒன்றுக்கொன்று தொடர்புடையனவாய், பயன்பாடு உள்ளவகையில் விளக்கப்பட்டுள்ளன. இக்கருத்துக்களை உபநிடதங்கள் முதன்முதலாகத் தெளிவாகக் கூறுகின்றன. இந்து சமயத்தின் தோற்றுவாய் வேதங்கள் ஆயினும், வேதங்களிற் கூறப்பட்டுள்ள கருத்துக்களின் வளர்ச்சியையும் உபநிடதங்களிலேயே காணமுடிகிறது.

மனிதனுக்கு அப்பாற்பட்ட பிரபஞ்சத்திற்கு அப்பாற்பட்ட, குணங்குறிகளைக் கடந்த நிர்க்குணப்பிரமமே மேலான உள்பொருள் ஆகும். அது மாறுதலடையாதது, குறைபாடற்றது, நித்தியமானது, உபநிடதங்கள் சத், சித், ஆனந்தம் என்ற மூன்று பெயர்களினால் அதனை அழைப்பர். பரம்பொருள் இம்மூன்றையும் குணங்களாகக் கொண்டதல்ல. இவை அதன் இயல்பான தன்மைகளே. இத்தகைய பரம்பொருளுக்கு, இரண்டாவது நிலை என ஒன்று உண்டென்று கூறப் படுகிறது. அது அனைத்துப் பொருட்களிலும் கலந்து வியாபித்துக் காணப்படும். ஓர் நிலையாகும். இந்நிலையிலேயே ஆன்மா, உலகத்துடன் பரம்பொருள் தொடர்புடையதாக உள்ளது. இதனை உபநிடதங்கள் பிரமம் பிரபஞ்சத்திற்கப் பாற்பட்ட நிஷ்பிரபஞ்ச நிலையாகவும், பிரமம் பிரபஞ்சத்தோடு கூடிய சகுணப்பிரம நிலையாகவும் கூறுகின்றன. உபநிடதங்கள் கூறும் இக்கடவுட் கோட்பாட்டை ஆதாரமாகக் கொண்டு பிற்கால இந்துதத்துவங்கள் தமது கடவுட் கொள்கையை விளக்கியுள்ளமையை அவை கூறும் கருத்துக்களுடன் ஒப்பிடுமிடத்து அறியலாம். சங்கரர் பிரமத்தை நிர்க்குணபிரமம், சகுணப் பிரமம் என்று இரண்டுவகையாகப் பிரிக்கிறார். சகுணப்பிரமமே குணங் குறிகளுடன் கூடியது. இது கடவுள் அல்லது ஈஸ்வரன் எனப்படுகிறது. இதுவே உலகத்தோற்றத்திற்குக் காரணமாக உள்ள பிரமம் ஆகும். இராமானுஜர் நிர்க்குணம், சகுணம் என்ற இரண்டுநிலைகளை ஏற்றுக்கொண்டாலும், சகுணப் பிரமத்திற்கே முதன்மை கொடுக்கிறார். ஈஸ்வரன் ஆன்மாக்களையும், உலகத் தையும் தனது உடலாகக் கொண்டு, அவற்றை உள்நின்று இயக்குபவன் எனக்கூறி, ஈஸ்வரனுக்கு அந்தர்யாமின் என்ற சிறப்புப்பெயரையும் கொடுக்கிறார். எனவே அவரது ஈஸ்வரன் விசேடணங்களை உடையதாக குணங்களை உடையதாகக் காணப் படுகிறது. மத்துவரும் ஈஸ்வரன், சீவன், சடம் ஆகிய முப்பொருட்களைப் பற்றிப் பேசுவதுடன், அவை மூன்றும் தனிப்பட்டவை, அவற்றுக்கிடையே பேதம் உண்டே தவிர அபேதம் இல்லை என்கிறார்.

சைவசித்தாந்திகள் பதியாகிய இறைவனுக்கு சொரூபம், தடத்தம் என்ற இருநிலைகளைக் கூறுவர். சொரூபம் இறைவனது உண்மைநிலை. ஆன்மாக்கள் மீது கொண்ட கருணை காரணமாக மேலான சொரூபநிலையில் உள்ள இறைவன் தடத்தநிலைக்கு இறங்கிவந்து, உருவத் திருமேனிகளை எடுத்து பஞ்சகிருத்தியங்களின் மூலம் ஆன்மாக்களை ஈடேற்றுகிறார். என்று கூறப்படுகிறது. இவ்வாறு உபநிடதங்களில் இடம்பெற்ற கடவுட்கொள்கையை ஆதாரமாகக் கொண்டு பலரும் தம் கோட்பாட்டை விளக்குவதை அவதானிக்கலாம்.

இந்துமதத்தில் ஆன்மக்கோட்பாடு சிறப்பிடம் பெறுகிறது. ஆன்மா, பசு, ஜீவன் உயிர் போன்ற பல்வேறு பெயர்களினால் அழைக்கப் படுகிறது. அது உடலிலே தங்கியுள்ளது. உடல்கள் பல. எனவே உயிர்களும் பல என்ற கருத்து ஏற்படுகிறது. உயிர்கள் உடலோடு கூடியிருந்தாலும் உடலில் இருந்து வேறானவை. ஐம்பொறிகளில் இருந்தும் வேறானவை. அந்தக் காரணங்களில் இருந்தும் வேறானவை என்பதே உபநிடதங்களின் கருத்தாகும். சைவசித்த ஆன்மா எண்ணிக்கையிற்பல என்று கூறுவதுடன் 'மாயா இயந்திர தனுவினுள் ஆன்மா உளது' என்று, மாயையின் காரியமாகிய உடலினுள்ளே ஆன்மா என்ற பொருள் இருப்பதாகக் கூறுகிறது. மேலும் ஆன்மா உடல் ஐம்பொறிகளினின்றும் வேறானது என்று கூறுகிறது. சிவஞானபோதம் நாலாம் சூத்திரம் "அந்தக்கரணம் அவற்றுள் ஒன்றன்று" என்று கூறுவதன் மூலம் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கில் இருந்தும் வேறானது ஆன்மா என்ற உண்மையையும் உணர்த்துகிறது. இராமானுஜர், மத்துவரும் பல ஆன்மாக்களின் உண்மையை ஏற்றுக்கொள்பவர்கள். எனவே இவர்கள் ஆத்ம வாதக்கொள்கையையும், அநேகாத்மவாதக் கொள்கையையும் விளக்குபவர்க ளாகக் காணப்படுகின்றனர். ஆனால் சங்கரர் ஒரேஒரு ஆன்மா உண்டென்ற ஏகான்மவாதக் கொள்கை உடையவர். அவரைப் பொறுத்தமட்டில் பிரமம் ஒன்றுதான் உண்மை. அப்பிரமமே பலசீவர்களாகத் தோன்றுகிறது. இதற்குக் காரணம் அவித்தை என்கிறார். எனவே அவித்தை காரணமாகப் பிரமம் சீவர்களாகத் தோன்றுகிறது. சீவர்களின் சீவத்துவம் நீங்கிய நிலையில் பிரமம் ஒன்றே உண்மை என்று கூறுகிறார்.

ஆன்மக் கோட்பாட்டில் கர்மம், மறுபிறப்பு, மோட்சக் கொள்கைகளும் இடம்பெறுவதனைக் காணலாம். ஆன்மாக்களை கர்மங்களைச் செய்யும் தன்மை உடையவை. அதன்காரணமாகவே அவை மறுபிறவிக்குட்படு கின்றன. கர்மமும் மறுபிறப்பும் ஒன்றுக்கொன்று தொடர்புடைய கோட் பாடுகளாகக் கூறப்பட்டிருப்பதனைக் காணலாம். கர்மம், மறுபிறவி பற்றிய தெளிவான கருத்துக்களை முதன்முதலாக எடுத்துக்கூறும் நூல்கள் உபநிடதங்களாகும். வாழ்க்கையில் மனிதர்களிடையே காணப்படும் ஏற்றத் தாழ்வுகளுக்கு, அவர்கள் அனுபவிக்கும் இன்பதுன்பங்களுக்கு காரணம் காணும் முயற்சியில் உபநிடதங்கள் கர்மக் கொள்கையையும், அதன் காரணமாகத் தொடர்ச்சியாக மனிதன் பல பிறவிகளுக்கு உட்படுகிறான் என்பதையும் விளக்குகின்றன. இக்கோட்பாடு பிற்பட்ட தத்துவஞானிகளுக்கும், தமது கோட்பாடுகளை முழுமையாக விளக்கப் பயன்பட்டது என்றே கூறலாம். ஆ ஆன்மா பற்றிக்கூறும் தத்துவங்கள் அதன் இயல்பை விளக்குமிடத்து அறியாமை காரணமாகப் பற்றுவைத்து கர்மங்களைச் செய்து, அதன் மூலம் புண்ணிய பாவங்களையும், இன்பதுன்பங்களையும் அனுபவிக்கின்றன. ஒவ்வொரு ஆன்மாவும் கர்மபலன்களை அனுபவித்த நிலையில் ஆன்மா ஈடேற்றத்தைப் பெறுகின்றன. அதுவே மோட்சம். மோட்சநிலையில் ஆன்மாவுக்கும் இறைவனுக்குமிடையில் உள்ளதொடர்பு அத்துவைதம் என்று கூறப்படுகிறது. இக்கருத்துக்களையும் முதன்முதலில் தெளிவுபடுத்தியவை உபநிடதங்களே.

உபநிடதங்கள் ஆன்மீக சாதனங்களாக ஞானநெறியை சிறப்பித்து கூறுகின்றன. பலஇடங்களில் அவை வேதங்கூறும் கிரியைகளை கண்டிப்பதுபோல் கூற்றுக்கள் காணப்படுகின்றன. கர்மங்களினாலோ கிரியைகளினாலோ, சடங்கு களினாலோ எந்தப் பயனும் இல்லை என்பது உபநிடதங்களின் கருத்தல்ல. அறிவோடு கூடிய கிரியைகளுக்கே அவை இடம் கொடுக்கின்றன. சிலமதப் பிரிவுகள் கிரியை ஒன்றே சிறந்தது எனக் கூறியதனால் உபநிடதங்கள்

கிரியைகளினால் மட்டும் பலனில்லை. கிரியைகளும் அறிவும் ஆன்மீக ஈடேற்றத்திற்கு வேண்டியவை என்பதை 'ஞானகன்ம சமுச்சயம்' என்ற கருத்தின்மூலம் விளக்குகின்றன. ஈசாவாசிய உபநிடதம் 'ஞானமின்றிக் கிரியைகளையும் சடங்குகளையும் கைக்கொள்கின்றவர்கள் காரிருளிற் கிடக்கிறார்கள். ஆனால் செய்யவேண்டிய கருமங்களைப் புறக்கணித்துவிட்டு வேதாந்த ஆராய்ச்சிகளிலே ஈடுபட்டவர்கள் அதைவிடப்பெரிய அந்தகாரத்தில் மூழ்குவர்' என்று கூறுகின்றமை குறிப்பிடத்தக்கது. இந்துமதத்திலும், தத்துவத்திலும் இற்றைவரை கிரியைகளும், தத்துவங்களும் இணைந்திருப்பதற்கு இத்தகைய உபநிடதக் கருத்துக்கள் வழிவகுத்தன என்று கூறமுடியும்.

உபநிடதங்கள் கூறும் ஞானம் பிரமம் பற்றியது. ஆன்மா பற்றியது, ஆன்மாவும் பிரமமும் ஒன்று என்ற அறிவு பற்றியது. இத்தகைய பரஞானத்தினால் ஆன்மா பிரமத்தோடு இரண்டில்லை என்ற வகையில் கலந்து விடுகிறது. இதனை 'நீ அதுவாக இருக்கிறாய்' (தத் துவம் அஸி) 'நான் பிரமமாக இருக்கிறேன்' (அகம் பிரம்மோ அஸ்மி) என்ற உபநிடத மகா வாக்கியங்கள் தெளிவுபடுத்துகின்றன. உபநிடத மகாவாக்கியங்களின் அடிப்படையில் இந்திய தத்துவஞானம் அத்துவைதக் கொள்கையைப் பேசுகின்றன. 'அத்துவைதம்' என்ற சொல்லை விளக்குவதில் வேதாந்திகளும் சித்தாந்திகளும் மாறுபடுவதுடன், வேதாந்திகள் தம்முள் மாறுபடுவதும் குறிப்பிடத்தக்கது. சங்கரர் உபநிடதம் கூறும் கருத்தில் தனது கோட்பாட்டில் மகாவாக்கியங்களைப் பயன்படுத்தி ஒருமைவாதத்தை, கருத்துவாதத்தையும் விளக்கியுள்ளார். சைவ சித்தாந்திகள் பன்மைவாதிகள். அடிப்படையில் பல பொருள் உண்மையை விளக்குபவர்கள் ஆவர். 'அத்துவைதம்' என்றால் சங்கரரைப்போன்று ஆன்மாவும் பிரமமும் ஒன்று எனக்கூறவில்லை. ஆயினும் இரண்டும் இரண்டல்ல எனத்தக்கவிதமாக ஐக்கியப்படக்கூடிய இயல்புடையன என்று சைவசித்தாந்திகள் கூறுவர்.

இராமானுஜரும் உபநிடத மகாவாக்கியங்களுக்கு வேறுபட்ட விளக்கங்களையே கொடுக்கிறார். அதாவது இறைவனாகிய ஆன்மாவுக்கு எமது ஆன்மாக்களும், உலகமும் உடல்கள் என்று கூறும் இராமானுஜர் ஆன்மாக்களுக்கெல்லாம் பரமான்மாவாக நிற்கும் ஈஸ்வரனும் அந்தப்பரப்பிரம்மமும் ஒன்று என்று நிருபிக்கிறார். மத்துவர் ஆன்மாவும் பிரமமும் இரண்டுதான். இரண்டும் ஒருபோதும் ஒன்றாவதில்லை என துவைதம் பேசுகிறார்.

இவ்வாறு பல்வேறு தத்துவக் கொள்கைகள் தோன்றுவதற்கு உபநிடதக் கருத்துக்களே மூலமாக அமைந்தன.

உபநிடதங்களில் பிரம, ஆன்ம, விசாரணைகள் மட்டுமன்றி வாழ்க்கைக்குப் பயன்படக்கூடிய பொருளாதாரம், சமூக ஒழுக்கம் பற்றிய கருத்துக்களும் இடம்பெறுகிறது. 'செல்வத்தைப் புறக்கணிக்க வேண்டாம். வந்த விருந்தினரைத் தெய்வமாகக் கருது. உனக்காகமட்டும் உணவு உண்டாக்கினால் போதாது. நாட்டுக்குப் பயன்படவேண்டும். பொருள் உண்டாக்குவது எல்லோருக்குமே' இதுவே ஒழுக்கம்' என்று உபநிடதங்கள் கூறுகின்றன. இதில் இருந்து அவை வையத்துள் மனிதனை வாழ்வாங்கு வாழ வைக்கும் கோட்பாடுகளை எடுத்துக் கூறுகின்றன என்பது தெளிவாகும்.

உபநிடதங்கள் கர்மக்கோட்பாட்டின் மூலம், சமூகத்தில் அறவியல் கருத்துக்களின் முக்கியத்துவத்தை விளக்குகின்றன. இருக்குவேதத்தில் ரிதம், நியதி, விரதம் போன்றன, இயற்கை ஒழுங்கையும், மக்களின் அற ஒழுக்கத்தையும் குறித்து நிற்கின்றன. உபநிடதங்களில் நன்மை தீமை புண்ணியம்-பாவம், இன்பதுன்பங்களை விளக்கி அவற்றைக் கர்மக்கோட்பாடாக சிறப்பித்துக்கூறி, அதனால் மறுபிறவி உண்டென்ற கொள்கையும் விளக்குகின்றன. ஒவ்வொரு செயலுக்கும் அதற்கேற்றவகையில் விளைவு உண்டு என்று, மனிதனை எந்த ஒரு செயலைச் செய்வதன்முன்னரும் அதன் விளைவை சிந்திக்க தூண்டுகிறது. இந்த வகையில் சமூகத்திற்கு வேண்டிய அறக்கருத்துக்களைப் போதிக்கிறது.

இவ்வாறு இந்த தத்துவவளர்ச்சிக்கு உபநிடதங்கள் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளன. இதனால் இந்த தத்துவ வளர்ச்சிக்கு உபநிடதங்கள் நிலைக்களனாக விளங்குகின்றன எனக் கூறலாம்.

(37) சங்கரர் கூறும் மாயைக்கும் சைவசித்தாந்தம் கூறும் மாயைக்கும் இடையே உள்ள வேற்றுமைகளை ஆராய்க.

சங்கரர் உபநிடதங்களில் இடம்பெற்ற ஒருமைக்கோட்பாட்டை விளக்கும் நோக்குடன் பிரமம் மட்டுமே உண்மை. உலகமும், சீவர்களும் வெறும் தோற்றம் என்ற முடிவுக்கு வந்தார். இதனால் உலகம், சீவர்கள் யாவும் தோற்றம் என்பதை விளக்க மாயை என்ற கொள்கைக்கு இடம் கொடுத்தார். சங்கரரது பிரமம், ஆன்மா, பிரபஞ்சம் பற்றிய கருத்துக்களை விளக்கிக் கொள்வதற்கு மாயை பற்றிய அறிவு அவசியமானது. மாயை என்ற சொல்லை சங்கரர் பல்வேறு அர்த்தங்களிற் பயன்படுத்தினாலும் இறுதியில் அதனை உள்பொருள் எனவும் சொல்ல முடியாது. இல்பொருள் எனவும் சொல்லமுடியாது. இரண்டுக்கும் இடைப்பட்டது. அது சத்தும் அல்ல. அசத்தும் அல்ல. சதசத்லிலக்ஷணம் என்று கூறுகிறார். சைவசித்தாந்திகளும் தமது தத்துவத்தில் மாயைக்கு இடம் கொடுக்கின்றனர். ஆனால் அவர்கள் கூறும் மாயை சங்கரர் கூறும் மாயையில் இருந்து முற்றிலும் வேறுபட்டது. சைவசித்தாந்திகள் மாயையை நித்தியமான உள்பொருள் ஆகக் கொள்கின்றனர்.

சங்கரர் பிரமம் மட்டுமே உண்மை என்பதை விளக்குவதற்கு உலகம் ஒருதோற்றம். அது உண்மையல்ல என்று நிறுவுகிறார். பிரமத்திற்கு வேறான உலகம் உள்பொருளாயின் இரண்டு பொருட்களின் உண்மை இடம் பெற்றுவிடும். அத்துடன் உலகம் எதில் இருந்து தோன்றியது? உலகத்திற்கும் அதற்குக் காரணமாகஉள்ள மூலப்பொருளுக்குமிடையே காணப்படும் தொடர்பு என்ன? உலகம் எவ்வாறு தோன்றியது? போன்ற வினாக்களுக்கு சங்கரர் விடை கூறல்வேண்டும். ஆனால் இதற்கு விடைகூறுவது, சங்கரைப் போன்ற ஒருமைவாதிகளுக்கு இலகுவான தொன்றல்ல. எனவே சங்கரர் உலகமே ஒரு மாயையான தோற்றம். அது பிரமத்திடம் இருந்து தோன்றியது. பிரமம் எத்தகைய மாறுதலுக்குட் உட்படாமலே, கயிறு பாம்பாகத் தோற்றுவது போலப் பிரமமும் உலகமாகத் தோற்றுகிறது. காரணமாகிய பிரமம் மட்டுமே உண்மை. காரியமாகிய உலகம் உண்மையல்ல. என்று கூறுகிறார். மேலும் சடப் பொருளாகிய உலகம் சித்துப்பொருளாயிக பிரமத்திடம் இருந்து தோன்றியது. மாறுதலடைகின்ற உலகம் மாறுதலடையாத பிரமத்திடம் இருந்து தோன்றியது. பகுதிகளை உடைய உலகம் பகுதிகளற்ற பிரமத்திடம் இருந்து தோன்றியது எனக் கூறும்போது பிரமத்திற்கும், உலகத்திற்கும் இடையேயுள்ள தொடர்பு எமது சிற்றறிவுக்கு விளங்காத ஒன்று எனக் கூறுவார்.

மேலும் சங்கரரது கருத்துப்படி பிரமம் குணங்குறிகளுக்கு அப்பாற்பட்ட நிர்க்குணப்பிரமமாக இருக்கும் நிலையே உண்மைநிலை. அது குணங்குறிகளோடு சேரும்போது சகுணப்பிரமம் ஆகிறது. சகுணப்பிரமத்திற்கு சங்கரர் கொடுக்கும் பெயர் ஈஸ்வரன் ஆகும். இங்கு குணங்குறி என்ற அர்த்தத்தில் சங்கரர் மாயை என்ற சொல்லையே பயன்படுத்தியுள்ளார். எனவே பிரமத்தை ஈஸ்வரனாக்குவது மாயை ஆகும். ஈஸ்வரனுக்குரிய தொழில் உலகத்தைத் தோற்றுவித்தல் ஆகும். அதாவது இங்கு உலகம் உண்மையாகப்படவில்லை. அதுவெறும் தோற்றமே. இத்தோற்றத்தினால் எந்தப் பயன்பாடும் கூறப்படவில்லை. மேலும் இத்தோற்றத்தைச் செய்கின்ற ஈஸ்வரனுக்கும் சங்கரர் குறைந்த இடத்தையே கொடுக்கிறார். நிர்க்குணப்பிரமம் ஒன்றுதான் உண்மை. ஒன்றுபலவாகத் தெரிவதெல்லாம் வெறும் மாயை என்று கூறுகிறார்.

சைவசித்தாந்திகளது உலகக் கொள்கை சங்கரரது கொள்கையினின்றும் முற்றிலும் வேறுபட்டது. அவர்கள் இறைவன் ஆன்மா போல உலகமும் உள்பொருள் என்று கூறுவர். உலகம் ஒருவனால் படைக்கப்பட்ட உள்பொருள். உலகப்படைப்பிற்கு இறைவனே நிமித்த

காரணன். ஆன்மாக்கள் அநாதியாக மலத்தினுற் பீடிக்கப்பட்டு, சிற்றறிவுடையனவாய்; பற்றுவைத்துக் கர்மங்களைச் செய்து பல பிறவிகளுக்கும் உட்படுவதனுல், அவை பிறவியினின்றும் விடுபட்டுத் தமது உயர் குறிக்கோளாகிய மோக்ஷத்தை அடைவதற்கு இவ்வுலகம் இறைவனுகப் படைக்கப்பட்டது என்று கூறுவர். உலகம் சடப்பொருள், எனவே அதன் தோற்றத்திற்கு மூலமாக உள்ள பொருளும் ஒரு சடப்பொருளாகவே இருத்தல் வேண்டும் என்ற சத்காரியவாதக் கொள்கைப்படி மாயை என்ற சடப்பொருளில் இருந்தே சடவுலகம் தோன்றியது என்று கூறினர். சைவசித்தாந்திகளைப் பொறுத்த மட்டில் உலகம் உள்ளபொருள். இதன்தோற்றத்துக்குக் காரணமான மாயையும் உள்ளபொருள். உலகமும் ஆன்மாக்களின் ஈடேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்டு, பயன்பாட்டு நோக்கில் படைக்கப்பட்ட பொருள். ஆனல் சங்கரரது கருத்துப்படி உலகம் உண்மையல்ல, வெறுந்தோற்றம். கயிறு பாம்பாகத் தெரிவது போன்ற வெறும் தோற்றம். இறைவனுக்கும் உலகுக்குமிடையேயுள்ள தொடர்பு சிற்றறிவுக்குப் புலனுகாத ஒன்று. உலகமும் பயன்பாடு கருதித் தோற்றுவிக்கப்பட்ட பொருள் அல்ல.

சங்கரர் மாயை உள்பொருளாகிய பிரமத்தை மறைத்து, இல்பொருளாகிய உலகத்தைத் தோற்றுவிப்பதாகக் கூறி, அதற்கு ஆவரணம், விசேஷபம் என்ற இரு சக்திகளும் உண்டென்று கூறுகிறுர். மாயை ஆவரண சக்தியினுல் பிரமத்தை மறைத்து, விக்ஷேப சக்தியினுல் உலகத்தைத் தோற்றுவிக்கிறது. சைவசித்தாந்தத்தில் மாயை உலகப்படைப்புக்கு முதற் காரணமாகவும், இறைவனுக்கு ஒரு சக்தியாகவும், ஆன்மாக்களுக்குத் தனு, கரணம், புவனம் போகங்களைக் கொடுப்பதாகவும் உள்ளது. இதனை சிவஞானசித்தியார் பாடல் பின்வருமாறு கூறுகிறது.

நித்தமாய் அருவாய் ஏகநிலையதாய் அகிலத்திற்கோர்
வித்துமாய் அசித்தாய் எங்கும் வியாபியாய் விமலனுக்கோர்
சக்தியாய் புவனபோகந் தனுகரணமும் உயிர்க்காய்
வைத்ததோர் மலமாய் மாயை மயக்கமும் செய்யுமன்றே

அதாவது மாயை நித்தியமான உள்பொருள், உருவமற்றது, ஒன்றே ஆனது, உலகத்திற்கு முதற் காரணமாக உள்ளது. அறிவற்ற சடப்பொருள், எங்கு வியாபித்துள்ள பொருள், இறைவனுக்கு ஒரு சக்தியைப் போன்றது, ஆன்மாக்களுக்கு உலகம், அனுபவத்திற்குரிய விடயங்கள் உடல், கருவி கரணங்கள் அனைத்தையும் கொடுக்கிறது. ஆனலும் என்றிலிருந்து ஆன்மாவுடன் மாயை தொடர்புடையதாக உள்ளதோ அன்றிலிருந்தே அது ஆன்மாவுக்கு மயக்க அறிவைக் கொடுப்பதனுல் அது மலம் என்று அழைக்கப்படுகிறது.

சங்கரர் மாயைப் பல்வேறு கருத்துக்களில் விளக்குகிறுர். ஆன்மக்கோட்பாட்டில், ஒரே ஒரு ஆன்மாதான் உண்டு. அது தான் பிரமம், அப்பிரமமே பலசீவர்களாகத் தோற்றுகிறது எனக் கூறுகிறுர். இவ்வாறு பிரமத்தைச் சீவர்களாக்குவது அவித்தை பிரமம் பிரமமாக நிற்கும் நிலையில் அவித்தைக்கு இடமில்லை. ஆனல் பிரமம் அவித்தையோடு சேரும்போது அது பல சீவர்களாகிறது. வானத்தில் உள்ள சந்திரன் பல நீர்நிலைகளிற் பட்டுப் பலவாகத் தோன்றுவது போல பிரமத்திற்பிரதி பிம்மம் அவித்தையிற் பட்டுப் பலசீவன்களாகத் தோன்றுகிறது என பிரதிபிம்ப வாதத்தின் மூலம் விளக்குகிறது. மேலும் உலகம் முழுவதும் பரந்து காணப்படும் வெளி பல்வேறு தடுப்புக்களினுல் தடுக்கப்படும் போது பலவாகத் தெரிகிறது. இதேபோல ஒன்றுக உள்ள பிரமம் பலசீவன்களாகத் தோன்றுகிறது. தடுப்புக்கள் யாவும் நீங்கும்போது எங்கும் காணப்படுவது ஒரேவெளி, அதேபோல அவித்தையினுல் பலவாகத் தோன்றும் ஆன்மா, அறிவினுல் மீண்டும் ஒன்றே ஆகிறது என அவச்சேதவாதத்தின் மூலம் விளக்குகிறுர். இவ்வாறு பிரமத்தைச் சீவர்களாக்கும் அவித்தை மாயையோடு கூடி இருக்கும்போது மாயை என்றே அழைக்கப்படுகிறது. அது பிரிந்து பிரமத்தைப் பாதித்து சீவர்களாக்கும் நிலையில் மட்டுமே அவித்தை என்ற பெயரைப் பெறுகிறது. மாயை சாத்வீககுணத்தினுல் மட்டும் ஆனது. அது பிரமத்தைப் பாதித்து ஈஸ்வரனுக்குகிறதே அன்றி மீண்டும் ஈஸ்வரனைப் பாதிப்பதில்லை. ஆனல் அவித்தை பிரமத்தைப் பாதித்துச் சீவர்களாக்குவதுடன் சீவர்களையும் பாதித்து நிற்கிறது. அவித்தை சாத்வீகம்,

முக்குணங்களும்
இராஜஸம், தாமஸம் என்ற முக்குணங்களினால் ஆனது. அதாவது கலங்கிய
சீவர்களைப் பாதித்து அவற்றையும் வேறுபடுத்துகின்றன. தெளிந்த நீரில் விழும்
நீரில் விழும் சந்திரனின் பிம்பம் கலங்கியதாகவும், அவித்தையின் இயல்புக்
பிரதிபிம்பம் தெளிவானதாக இருப்பதைப்போல சங்கரர் கொள்கை. இவ்வாறு
கேற்ப ஆன்மாவிலும் வேறுபாடுண்டு என்பது அது மாயையின் ஒரு பிரிவு
பிரமத்தை சீவர்களாக்குவது அவித்தை எனவும், சீவர்களின் சீவத்துவம்
எனவும் கூறும் சங்கரர் பல சீவர்களும் உண்மையல்ல, என்கிறார்.
நீங்கிய நிலையில் அது மீண்டும் பிரமமே ஆகிறது

சைவசித்தாந்திகள் அநேகாத்மாக்களின் உண்மையை ஏற்றுக்
கொள்பவர்கள். ஒவ்வொரு ஆன்மாவும் தனிப்பட்டது. அவை செய்த
கர்மத்தின் பயனாக மாயையில் இருந்து உடல், கருவி, கரணங்களைப் பெற்று
இயங்குகின்றன. ஆன்மாவுக்கு ஒரு சிறிது அறிவைக் கொடுப்பதே மாயை
என்பர். அதாவது ஆணவமலத்துடன் மட்டும் கூடிய கேவலாவத்தை நிலையில்
ஆன்மாவுக்கு அறிவுஇல்லை. சகலமலங்களோடும் கூடிய சகலாவத்தை
நிலையில் அறிவு உண்டு. ஆன்மா தானாக எதையும் அறியாது. அது
அறிவித்தால் அறியும் தன்மை உடையது. பொறிகளின் மூலமாகவும், அந்தக்
கரணங்களின் மூலமாகவுமே அது விடயங்களை அறிகிறது. பொறிகளையும்,
அந்தக் கரணங்களையும் ஆன்மாவுக்குக் கொடுத்ததே மாயை. இவ்வறிவைத்
துணையாகக் கொண்டே கர்மபலன்களை அனுபவித்துப் பக்குவமடையும் காலத்தில்
ஆன்மீகசாதனங்களைப் பின்பற்றி இறைவனது அருளைப்பெற்று ஆன்மா வீடு
பேறடைகிறது. எனவே ஆன்மா மோட்சத்தை அடைய மாயையே துணை
புரிகிறது. இதனை உமாபதி சிவாச்சாரியார்

"விடிவாமளவும் விளக்கனைய மாயை
வடிவாதி கன்மத்து வந்து" என்ற திருவருட் பயன் பாடலில்

விளக்கியுள்ளார்.

சங்கரரது கொள்கைப்படி மாயை பிரமத்தைப்போல
உள்பொருளுமல்ல, மலடிமகன் முயற்கொம்பு, ஆகாயத்தாமரை போல்
இல்பொருளும் அல்ல. எனவே சத்தும் அல்ல, அசத்தும் அல்ல, சதசத்
விலக்கணம் மாயையை வசனங்களினால் விளக்கமுடியாது. அது
"அநிர்வசனீயம்" என்று கூறுகிறார். சைவசித்தாந்திகளின் கருத்துப்படி
மாயை உள்பொருள். உலகத்திற்கு முதற்காரணமாக உள்ளது. இறைவனுக்கு
ஒரு சக்தியைப் போன்றது. ஆன்மாக்களுக்குத் தனு கரண புவன போகங்களைக்
கொடுப்பது.

இவ்வாறு மேற்கூறப்பட்ட கருத்துக்களைத் தொகுத்து
நோக்கினால் சங்கரர் கூறும் மாயை, சைவசித்தாந்தம் கூறும் மாயையில்
இருந்து வேறுபட்டதென்பதை அறிந்து கொள்ளலாம்.

730

ய

ாறு
வு
வம்

றுக்

ற்று

யில்

க்

வத்
லத்தில்

க்கு
கு ளைக்